மலர்களிலே அவள் மல்லிகை

இந்துமதி

17 FEB 1988

மலர்களிலே அவள் மல்லிகை...

பாரீஸ் கார்னரின் கோடியில் இருந்த ஆயில்ஸ் கூட்டுறவு வங்கியின் வாசலில் சாப்பாட்டுக் கூடைகள் சேர ஆரம்பித்தன. வெயிலில் டாலடிக்கும் எலர்சில்லர் காரியர்கள், அதன் பளபளப்புடன் போட்டி போட்டுத் தாழ்வு மனப்பான்மையுடன் புழுங்கும் பித்தளைக் காரியர்கள், அந்தத் தாழ்வு மனப்பான்மைக்குக் கூட ஒரு தகுதி வேண்டுமென்று நினைத்து அழுது வடிகின்ற அலுமினியக் காரியர்கள், சுற்றப்பட்ட வாழையிலைச் சுருள்கள், அவற்றைச் சுமந்து கொண்டு வந்த சிவப்பும் பச்சையுமான முரட்டு நூல் புடவைகள், அவற்றின் கறுப்பு உடம்புகள். கறுப்பில் சற்று அடர்ந்த கறுப்பு, மெலிந்த கறுப்பு, சாம்பல் கறுப்பு... வரிசையில்லாமல் வெற்றிலைக்க றையும், புசையிலைச் சாறும் படிந்த காவிப் பற்கள், கண்ணாடி வளையல்கள்...

ஆயில்ஸ் கூட்டுறவு வங்கி வாசல் கலகலப்பாக இருக்கிறது. பிசியாக இருக்கிற மாதிரி கோபுரத்தைப் பார்ப்பையும் பரபரப்பையும் கொஞ்சமாகத் தன் லைட்டு தள்ளி வைத்துக் குறைந்

கொண்டிருந்தது. எல்லா டிபார்ட்மெண்டுகளும் மெல்ல மெல்ல அடங்கிக் கொண்டிருந்தன. கம்யூட்டர் மெஷின்களின் பஞ்ச்சிங் சத்தம் இறங்கிக் கொண்டே வந்தது. ஒவ்வொரு மேஜையாகக் காலியாக ஆரம்பித்து, டாய்லெட் வாசலில் க்யூவாக நீண்டது.

கொலேட்டரின் எதிரே உடம்பும், ஆபீசுக்குக் கிளம்பு முன் சண்டை போட்ட அப்பாவிடம் மனமுமாக நின்று கொண்டிருந்தாள் வித்யா. அப்பா ஆபீசுக்குப் போனாரோ, இல்லை, லீவு போட்டுவிட்டு 'உர்உர்' ரென்று உறுமிக்கொண்டிருக்கிறாரோ? அப்படிச் செய்யக் கூடியவர்தான் அவர். அப்பாவை நினைத்தபோதே வித்யாவின் மனசெல்லாம் வெறுப்பு வழிந்தது. அம்மா விடமிருந்த அனுதாபம் அதிகமாகியது. ஆனால் அம்மாதான் ஆரம்பத்திலிருந்தே அவரது அநாவசியமான மிரட்டலுக்கும்,வேண்டாத அதிகாரத்துக்கும் அதிகமாகப் பயந்து, பணிந்து போய் அவரை இப்படி வெறியேற்றி விட்டுவிட்டாள் என்றும் தோன்றியது. அப்பா தன்னிடமிருந்த மூன்று விஷயங்களுக்கு எல்லாரையும் பணிய வைத்து விடுவார். வைத்து விட்டார். கண்களை உருட்டி விழித்துப் பார்க்கும் மிரட்டல், உடம்பில் விசிறத் துடித்துக் கொண்டு நிற்கும் பெல்ட், பாங்க் பாலன்ஸில், பர்சில் பிதுங்கிக் கொண்டிருக்கும் பணம்...

அடிமைகள்! அடிமைகள்!

'அப்பா, என்னை உங்களால் வாங்க முடியலையே. இதற்கெல்லாம் அடிமையாக்க முடியலையே...'

கத்தைக் கார்டை எடுத்துச் செருகி மெஷினை ஆன் பண்ணினாள். எரர் லைட் சிவப்பாக முழித்துப் பார்த்தது. எங்கோ தவறு பண்ணியிருக்கிறாள். எங்கே? காலையிலிருந்தே இந்தச் சிவப்பு இப்படித்தான் அடிக்கடி முழித்து அவளைப் பார்க்கிறது. வித்யாவுக்கு அப்பாவின் கோபக் கண் ஞாபகத்திற்கு கொண்டு, பயப்படலையே' என்று

தப்பு' என்று பார்க்கக் குனிந்தாள். இந்த மாதிரித் தப்பு பண்ணும்போதெல்லாம் எரியும் விளக்கு வாழ்க்கைக்கும் கிடைத்திருந்தால், உடனே நின்றுவிடும் மெஷின் மாதிரி அடுத்துச் செய்யப் போகும் செய்கைகள் எல்லாம் செய்ய முடியாமல் நின்று போகுமானால், அப்பா எப்போதோ திருந்தியிருப்பார்.

டேபுலேட்டரை நிறுத்திவிட்டு, அவள் பக்கத்தில் வந்து நின்றாள் ஷோபா. வித்யா நிமிர்ந்து அவளைப் பார்த்துவிட்டுக் குனிந்து தவறைக் கண்டுபிடித்துக் கார்டுகளை வரிசைப்படுத்தி எடுத்துப் போட்டு மெஷினை ஆஃப் பண்ணினாள். மணி பார்த்தாள். ஒன்றடிக்க ஐந்து நிமிஷங்கள்.

"எனக்கு இன்னைக்குக் காரியர் வராது ஷோபா, கான்டீன்தான்."

"ஏண்டி?"

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லை."

இப்படி அவள் அடிக்கடி பொய் சொல்ல வேண்டி நேர்கிறது. அப்பா வீட்டை அமர்க்களப் படுத்தும் போதெல்லாம் காரியர் வராது. ஒரு நாளெல்லாம் கூட அடுப்பே பற்ற வைக்காமல் இருந்ததுண்டு. அப்போதெல்லாம் 'அம்மா ஊரில் இல்லை, உடம்பு சரியில்லை, உறவுக்காரர் வீட்டிலே விசேஷம்...' இப்படி ஏதாவது ஒன்று. பொய் சொல்லும் போதெல்லாம் வித்யாவுக்குத் தன் மீதே கோபம் வரும். 'நீ ஒரு ஹிப்போக்ரிட். இந்தப் போலி கௌரவம் உனக்கும்தானே வேண்டியிருக்கு? 'நோ. இது டீஸன்ஸி' — அவள் தன்னை உடனே சமாதானப்படுத்திக் கொண்டு விடுவாள்.

கார்டை "மெயினை ஆஃப் பண்ணலையா?" என்று கேட்டுக் கொண்டே போய் ஆஃப் பண்ணினாள் ஷோபா. ட்யூப் லைட்டுகள் உடனே அணைந்தன. ஃபானின் வேகம் குறைந்து கொண்டே வந்தது. வித்யா வெளியே வந்த

போது எல்லாரும் நாற்காலிகளை ஓரமாக நகர்த்தி விட்டு டிபன் பாக்ஸுடன் தரையில் வட்டமடித்தாயிற்று. ஊறுகாய், வடை, சாப்பாத்தி, எலுமிச்சை சாதம் எல்லாவற்றையும் பங்கிட்டுக் கொண்டாயிற்று. கம்மென்று எல்லாம் கலந்த ஒரு மணம். வெங்காய சாம்பார் யாரிடமோ... அதன் வாசனை தூக்கலாய்த் தெரிந்தது.

"ஏன் நிற்கிறே வித்யா? கீழே போய் காரியரைக் கொண்டு வரலையா?"— மீனா கேட்டாள்.

"எனக்கு இன்னைக்குக் கான்டீன் சாப்பாடு."

அடுத்த கேள்வியின் பொய்யைத் தவிர்க்க அறையை விட்டு நகர்ந்து விட்டாள் வித்யா.

பஞ்சிங் மெஷின் ரூமில் டெலிபோனைப் பார்த்ததும் அம்மாவுக்குப் போன் பண்ணிவிட்டு நிலைமையைத் தெரிந்து கொள்ள வேண்டும் போலிருந்தது. 'இன்னமும் அழுது கொண்டிருக்கிறாளோ, என்னமோ?' ஷோபா கூட இருந்தால்—அப்போது டெலிபோன் ஆபரேட்டரும் லஞ்சுக்குப் போயிருப்பாள் என்ற நினைவும் வரவே பேசாமல் படியிறங்கினாள்.

"என்னவோ போல் இருக்கியே வித்யா...என்ன விஷயம்?"

"ஒன்றுமில்லை...தலைவலி. காலையிலேயே ஆபீசுக்கு வர வேண்டாம்னு பார்த்தேன்."

"பேசாமல் லீவு போட்டுவிட்டு ஒரு தூக்கம் தூங்கி எழுந்து, ஏதாவது சினிமாவுக்குப் போயிருக்கலாமே!"

"சினிமாதானே?" என்று கேட்ட வித்யா, மனசுக்குள் சிரித்துக் கொண்டாள்: 'எங்க வீட்டிலேயே தினமும் கன்டினுயஸ் பர்ஃபாமென்ஸ்தானே நடக்கிறது...அதுவும் தமிழ் சினிமா மாதிரி சலித்துப்போன காட்சிகள்...'

முதல் மாடியிறங்கியதும் ஷோபா விடை பெற்றுக் கொண்டாள். அவளுக்குத் தினமும் சித்தப்பாவுடன் தான் சாப்பாடு. அவள் சித்தப்பாவும் அதே ஆபீசின் ஒரு பிரிவில் மானேஜர். அவர் மூலமாகத்தான் வித்யாவுக்கும் இந்த வேலை கிடைத்தது.

அவள் பக்கத்து பில்டிங்கில் இருந்த கான்டீனுக்குப் போனாள். உள்ளே நாலைந்து ஆங்கிலோ — இந்தியப் பெண்கள் பேசியபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். எல்லாம் ஸ்டெனோகிராபர்கள். அவர்களில் அழகாக இருந்த மிஸ் ஷீலா மாத்யூஸ் இவளைப் பார்த்துச் சிரித்தாள். வித்யாவும் இலேசான புன்னகையோடு நிறுத்திக் கொண்டாள். அவளைத் தாண்டிப்போய்க் கோடியில் கடைசி நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். அப்போது ஜன்தப்பம் மட்டும் இருந்தது. அந்தக் கான்டீனில் எல்லாமே மோசமாக இருக்கும். ஜன்தப்பம் இன்னும் மோசம். சாதம் சாப்பிடப் பிடிக்கவில்லை. 'பாவம்! தங்கைகளும், தம்பியும் சாப்பிடாமலேயே ஸ்கூலுக்குப் போயிருப்பார்கள்.' நிஜமாவே அப்போது அவளுக்குத் தலை வலிக்கிற மாதிரி இருந்தது. ஒரு கப் காபி மட்டும் ஆர்டர் பண்ணினாள்.

அப்பாவின் ஹிட்லர் தனத்திற்கு வீட்டில் எல்லாரும் அடங்கிப் போகும்போது, அவளுக்கு மட்டும் எதிர்க்கும் தைரியம் எப்படி வந்தது? வித்யாவும் பயந்து, அடங்கி, அடி வாங்கி கொண்டு, மனசுக்குள் வெறுத்துக் கொண்டு, மீறத் துடித்துக் கொண்டு தானிருந்தாள். காலேஜில் நுழைகிற வரை மனசுக்குள் இருந்த தைரியம் வெளியே வரவில்லை. திடீரென்று ஒரு நாள் உதறிக் கொண்டு, உலுப்பி விட்ட மாதிரி தன்னை வெளிக் காட்டியது. கல்லூரி பீஸ் கட்ட அப்பாவைப் பணம் கேட்டாள்.

"எவ்வளவு?" — உறுமல்.

சொன்னாள்.

"இந்தா... தொலைச்சுக்கோ. பணத்துக்கு மட்டும் தானே உங்களுக்கு அப்பாவேணும். அழுதுக்கோங்கோ...."

அவள் முகத்திலே விழுந்த நோட்டுகள் பறந்தன. ஒரு நோட்டின் நுனி கண் மூலையில் பட்டு உறுத்திற்று. நீர் தளும்ப ஆரம்பித்தது.

வித்யா குனிந்து பணத்தைப் பொறுக்கவில்லை. தம்பி, தங்கைகள் பொறுக்குவார்கள்— ஏன் முந்தின முறைவரை விதிறி எறியப்பட்ட பணத்தைப் பொறுக்கிக் கொண்டு வந்த வள்தான் அவளும். ஆனால் இந்தத் தரம் இது சகஜமாகத் தோன்றவில்லை. நடு ரோடில் உடம்பில் உடையில்லாமல் நிற்க வைத்த மாதிரிக் கூசியது. அப்பாவையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

"என்னடீ முறைக்கிறே?"

"மனுஷத் தன்மைன்னு ஒண்ணு இருக்கே. உங்களுக்குத் தெரியுமா?"

அதை அவள் சத்தம்போட்டுச் சொல்லவில்லை. கோபத்தில் முகம் விகாரமாகவில்லை. கோபமோ, வெறுப்போ முகத்தை விகாரமாக்கிக் கத்திப் பேசி, அசிங்கமான முறையில் வெளிப்படுத்துவது அவளுக்குப் பிடிக்காது. உள்ளே நெருப்புக் கொழுந்தாகப் பற்றி எரிந்து கொண்டிருக்கும், அதன் ஒரு நாக்கின் நுனி கூட வெளியில் எட்டிப் பார்க்காது. கண்களில் மட்டும் தணலாக ஒரு சூடர் ஒரு நிமிஷ நேரம் வந்து நின்றுவிட்டு அணைந்து போகுமே தவிர கட்ட விழ்ந்து கொட்டாது.

அதெல்லாம் சேர்த்து அவருக்கு முகம் விகாரமாகியது. கண்களில் சிவப்புக் கொழுந்து பறந்தது. வாய் கோணிற்று. பேச்சு தடுமாறியது. முதன் முறையாகத் தன்னை நோக்கி அம்பு பாய்வதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நிதானமாகப் பாய்ந்தாலும் அம்பு அம்புதானே?

"என்னடீ சொன்னே?"

வித்யா இன்னும் நிதானமானாள். தாழ்ந்த குரலில் மெதுவாகக் கேட்டாள்:

"அடிக்கப் போறீங்களா?"

இரண்டாவது அம்பும் ஆழமாகப் பாய்ந்தது. அந்த அவமதிப்பில்—சுலபமான அவமதிப்பில் ஆடிப் போய்விட்டார் அவர். ஆவேசம் அடங்கி வெறுப்பாக மாறியது.

"ஏ! என் முன்னே நிக்காதே போ... உள்ளே போயிடு..."

வித்யா உள்ளே வந்து விட்டாள். காலேஜுக்குப் போகக் கட்டிக் கொண்டிருந்த புடவையை அவிழ்த்துப் பழசைக் கட்டிக் கொண்டாள். அம்மா அவளை ஒரு புதுப் பார்வை பார்த்தாள். அதில் ஒரு மதிப்பு தெரிந்தது.

"என்னம்மா பார்க்கிறே?"

அம்மா ரகசியமாகக் கெஞ்சினாள். இதமாகச் சொல்லிப் பார்த்தாள்:

"படிப்பைப் பாழாக்கிக்காதேடீ...அப்பா காலிலே விழுந்து, கெஞ்சிக் கேட்டாவது திரும்பப் பணத்தை வாங்கிக் கட்டிவிட்டு, ஒழுங்காகப் போடி...!"

வித்யா சிரித்தாள். அந்த மாதிரிச் சிரிப்பு ஒரு நல்ல பதில். சில சமயங்களில் கேள்விக்கும் அதே சிரிப்புத்தான். அந்தச் சிரிப்பில் எத்தனை பேச்சுக்களைத் தவிர்க்க முடிகிறது. நல்ல வசதியான சிரிப்பு.

"ஏய் ராஜி, ஏய் விஜி!" —கூடத்தில் அப்பாவின் கத்தல் கேட்டது.

அவளையே அதிசயமாகப் பார்த்துக் கொண்டு. உள்ளுக்குள் 'நம்ம அக்காவுக்கா இவ்வளவு தைரியம்?' என்று பாராட்டிக் கொண்டு அப்பா மேலே என்ன செய்வாரோ

என்ற பயத்தில், பேசாமல் நின்று கொண்டிருந்த தங்கைகள் இரண்டு பேரும், ''இதோ வரோம்ப்பா...'' என்று ஓடினார்கள்.

''மெதுவாகப் போங்கோ'' என்று சொல்லிவிட்டு ஜன்னல் வழியாகக் கூடத்தைப் பார்த்தாள் வித்யா.

அவர்கள் இரண்டு பேரும் அறையில் சிதறிப் பயந்து கொண்டிருந்த நோட்டுக்களை அடுக்கிச் சில்லறைகளைப் பொறுக்கிக் கொடுப்பது தெரிந்தது.

''அப்பா... இந்த அடிமைத்தனம்தானே உங்களுக்குத் திருப்தியாக இருக்கு?' —வித்யா மனசுக்குள் குமைந்தாள்.

அன்றிலிருந்து காலேஜுக்கு முற்றுப்புள்ளி விழுந்தது. அவள் அப்பாவின் காலில் விழுந்து கெஞ்சவுமில்லை. காலேஜுக்குப் போகவுமில்லை.

சில சமயங்களில் திடீரென்று காலேஜ் ஞாபகம் வரும், எல்லாக் கஷ்டங்களுக்கும் மீட்சியாக இருந்தது அது ஒன்றுதான்.

வகுப்பை கட் பண்ணிவிட்டு 'ட்ரைவ் இன்' னுக்குப் போனது. அந்த நேரத்தில் கிடைக்கக்கூடிய போண்டாவையும் பாத்தையும் அலுக்காமல் சாப்பிட்டது—ப்ளூ டைமண்டில் உட்கார்ந்து பொழுதைப் போக்கியது— இனிமேல் அப்படியெல்லாம் எங்கே போக முடியப் போகிறது?

திரும்ப எந்தத் தேவைக்கும் அப்பாவிடம் போய் நிற்கக் கூடாது என்ற பிடிவாதம் அவளிடம் ஏற்பட்டது. ஒரு புடவை, ஒரு ஜாக்கெட், ஒரு சினிமா, ஒரு ரூபாய்க் காசு...! இல்லவே இல்லை. இந்தத் தேவைகளைச் சரிக்கட்ட, தன் மனசுக்குள் இருந்த நியாயமான கர்வத்தை வளர்த்துக் கொள்ள, அப்பாவின் அகங்காரத்தை உடைக்க எதற்கும் அவர் கையை எதிர்பார்க்காமல் தன் சம்பளம் என்றிருந்து செலவு பண்ண —அவள் வேலை தேடினாள்.

அந்த 5 அடி 4 அங்குல உயரத்திற்கு—தேவையான, பார்வைக்கு இதமான வளைசலுடன் கூடிய உடம்பிற்கு—மலையாளத்து மண்ணை ஞாபகப்படுத்தக்கூடிய நிறத்திற்கு—அகலமான கண்களுக்கு—அழகான மூக்கிற்கு—லாவகமான வெள்ளைப் பற்களுக்கு—சுத்தமாகப் பேசும் ஆங்கிலத்திற்கு—குரலில் தெறிக்கும் குளுமைக்கு—வேலை கிடைப்பது கஷ்டமாக இல்லை.

முதல் முதலாக ஒரு டைப்பிஸ்ட் வேலைக்கு அப்ளிகேஷன் போட்டாள். 'இன்டர்வ்யூ'விற்கு வரச் சொல்லிக் கார்டும் வந்தது. வித்யா அப்போதுதான் மூன்று மாதங்களாக டைப்-ரைட்டிங் கிளாசுக்குப் போக ஆரம்பித்திருந்தாள்.

மவுண்ட் ரோட்டிலிருந்த அந்த ஆபீசுக்குப் போனபோது அவளுக்கு முன் நாலைந்து பெண்கள் நாற்காலியில் உட்கார்ந்திருந்தனர். வித்யாவும் அட்டெண்டரிடம் தன் கார்டைக் கொடுத்து அனுப்பினாள். உடனே மானேஜர் வரச் சொல்வதாக அவனே வந்து சொன்னான். வித்யா மானேஜரின் அறைக்குள் நுழைந்தாள். 'வெளியே இத்தனை பேர் காத்துக் கொண்டிருக்கும்போது நம்மை மட்டும் உடனே கூப்பிட்டு விட்டானே' என்ற ஆச்சரியம்.

உள்ளே மேஜை எதிரே உட்கார்ந்திருந்த ஒரு ஹிட்லர் மீசை, அதாவது மானேஜர் அவளைப் பார்த்துச் சிரித்தான். உட்காரச் சொன்னான். பின் அவளைப் பற்றின ஆராய்ச்சியில் இறங்கினான்.

அவன் ஒரு ஸிந்தியாகவோ, மார்வாடியாகவோ இருக்க வேண்டும்.

ஒரு கடிதம் 'டிக்டேட்' பண்ணினான். அவள் 'ஷார்ட் ஹாண்ட்' தெரியாது என்றதும், 'நெவர் மைண்ட்' என்று நிதானமாக, வார்த்தை வார்த்தையாகச் சொல்லிக் கொண்டு போனான். இரண்டு பாரா கடிதம். சின்னதுதான்.

டைப்ரைட்டிங் மெஷின் அவனுக்கு எதிர் அறையில்—அதாவது அவன் அறைக் கதவு திறந்திருந்தால் டைப் அடிப்பவர்களை நன்றாகப் பார்க்கும் வசதியுடன் இருந்தது. அவள் கதவைத் திறந்துதான் வைத்துக் கொண்டிருந்தான்.

வித்யா மெஷின் எதிரில் ஸ்டூலில் உட்கார்ந்தாள். 'எனக்கு நேரத்தைப் பற்றிக் கவலை இல்லை. சுத்தமாக, தவறில்லாமல் அடித்துக் கொண்டு வந்தால் போதும்!' என்று ஹிட்லர் மீசை சொன்னது நினைவுக்கு வந்தது. நிதானமாக அடிக்க ஆரம்பித்தாள்.

அடித்து முடித்ததும் மெஷினிலிருந்து காகிதத்தை உருவி, மானேஜரிடம் கொடுத்தாள்.

"இந்தச் சின்னக் கடிதத்தில் பத்து தப்பு போட்டிருக்கிறாயே?"

"எஸ்" என்று அழுத்தினாள், அதற்காக வருத்தப்படாத குரலில்.

"யூ டைப் லைக் எ லர்னர்...!"

"ஐயாம் எ லர்னர்."—பளிச்சென்று பதில்.

அவன் அதை லேசான சிரிப்புடன் ரசித்தான்.

"எவ்வளவு சம்பளம் எதிர்பார்க்கிறாய்?"

"இருநூறுக்குக் குறையாத ஒரு தொகையை."

அவன் உதட்டைப் பிதுக்கினான். சிரிப்பு நின்றது. மற்ற அப்ளிக்கேஷன்களையெல்லாம் காட்டினான். ஒரு சாதாரண டைப்பிஸ்ட் வேலைக்கு ஒரு பி.ஏ. ஒரு பி.காம். ஒரு எம்.எஸ்ஸி. கூட. எல்லாம் கேட்டிருப்பது குறைந்த சம்பளம் தான்.

வித்யாவுக்கு வருத்தமாக இருந்தது. 'நிறையப் படித்திருக்கிறார்கள். சம்பளம் குறைவாகக் கேட்கிறார்கள். அவன் ஏன் என்னைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?' வித்யா

வுக்குத் தெரிந்தது. அவள் தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டதுண்டு. அலட்சியமாக வேலை நேரத்தைக் கேட்டாள். அவள் சொன்னான்:

"காலை பத்திலிருந்து மாலை ஆறு மணிவரை."

"ஆறு மணி வரைக்குமா?"

"ஏன்?"

"ஆறு என்றால் வீட்டுக்குப் போய்ச் சேர ஏழாகிவிடும்."

"ஓ.கே. உனக்காக ஐந்தாக்குகிறேன். ஆனால் நீ கேட்கும் சம்பளம்தான் அதிகமாக இருக்கிறது."—பேரம் மாதிரி பேசினான்.

வித்யாவின் அலட்சியம் அதிகமாயிற்று.

"ஸாரி ஸார்! இதற்கும் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்ய என் பெற்றோர் சம்மதிக்க மாட்டார்கள்."

அவன் தன் வீட்டு டெலிபோன் நம்பரை ஒரு சின்னக் காகிதத்தில் எழுதிக் கொடுத்தான்.

"நூற்றைம்பது ரூபாய் தருகிறேன். நாளைக் காலை எட்டு மணிக்குள் எனக்கு போன் பண்ணு."

வித்யா அதை வாங்கிக் கொண்டாள்.

"நான் நாளைக்குப் போன் பண்ணுகிறேன்."

"இங்கே நீ நிறைய நேரம் டைப் அடிக்கலாம். உன் 'ஸ்பீடும் பிக்-அப் ஆகும். பின்னால் சம்பளமும் கூடும். இதையெல்லாம் உன் பெற்றோர்களிடம் எடுத்துச் சொல்லு!"

"ஆகட்டும்!"

வெளியே வந்ததும் தன் கையில் இருந்த காகிதத்தைக் கிழித்து எறிந்தாள் வித்யா.

அது அந்த ஹிட்லர் மீசை எழுதிக் கொடுத்த டெலிபோன் நம்பர்.

2

வீட்டுக்கு வந்ததும் அம்மாவிடம் ஹிட்லர் மீசை சொன்னதை ஒன்று விடாமல் சொன்னாள் வித்யா. ஒரே சிரிப்பு.

அப்பா இல்லாதபோது இந்த மாதிரிச் சிரிப்புச் சத்தம் கேட்பது வழக்கம்தான். வெகு நாட்களாக மூடியிருந்த கதவைத் திறந்து வைக்கிற மாதிரி, அப்பா, வீட்டுக்கே ஒரு பெரிய கதவு கோவில் கதவு. சந்தோஷம், கேலிப் பேச்சுக்கள், விளையாட்டுகள் எதையும் உள்ளே விடாமல் தடுத்து நிறுத்தி விடுகிற கோட்டைக் கதவு.

"அப்போ வேலைக்குப் போகப் போறதில்லே, இல்லையா?"—அம்மா நிம்மதியாக அந்தச் சிரிப்பு மாறாமல் கேட்டாள்.

"இந்த வேலைக்குப் போகப் போறதில்லை."

அந்த 'இண்டர்வ்யூ' இந்தச் சிரிப்போடு நின்றுவிட்டது; அடுத்ததாக ஒரு பெரிய கம்பெனியில் 'ரிசப்ஷனிஸ்ட்' வேலைக்கு மனுப் போட்டாள். அந்த மானேஜர் ஆங்கிலோ இந்தியன். முப்பத்திரண்டு வயசு இருக்கலாம். ஆறடி உயரத்தில், பார்க்க அழகாக இருந்தான். முகத்தில் 'துரு துரு' வென்ற புத்திசாலித்தனம் தெரிந்தது. அது பேச்சிலும் வெளிப்பட்டது. அழகாகச் சிரித்தான். நேராக மனதுக்குள் பாயும்படி பார்த்தான். வேலையைத் தவிர வேறு விஷயங்களைப் பற்றியும் பேசினான். வித்யாவுக்கு அவனைப் பிடித்திருந்தது. அதனாலேயே இந்த வேலை கிடைத்தாலும் வேண்டாம் என்று முடிவு செய்து கொண்டாள். ஆடுகிற நாற்காலியின் மேல் நிற்கிற மாதிரி இது. ஆடிக்கொண்டே இருக்கும். என்னதான் சமாளித்தாலும் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் கீழே தட்டிவிடும் என்று பயந்தாள்.

அவள் கிளம்பும்போது அறைக்கதவுவரை கூட வந்து 'ஸ்மார்ட் கேர்ல்' என்று முதுகில் தட்டிக் கொடுத்தான்.

வீட்டுக்கு வந்த பின்னாலும் வித்யாவின் முதுகு குறு குறுத்துக் கொண்டிருந்தது. இரண்டு நாட்கள்வரை அவன் சிரிப்பும், பேச்சும், உயரமும், பார்வையும் மனசைவிட்டு நகர மாட்டோம் என்று பிடிவாதம் பிடித்தன.

அப்படியே நான்கு நாட்கள் போன பின்னால் அவனிடமிருந்து 'அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர்' வந்தது. அதில்கூட அவன் சிரிப்பு ஒட்டிக் கொண்டிருக்கிற மாதிரி தோன்றியது. அவன் ஒரு நல்ல ரசிகனாக இருக்க வேண்டும். அவளுக்குச் சரியாக இலக்கியம் பேசிய எந்த ஆணையும் அவள் இதுவரை சந்தித்திருக்கவில்லை. இவன் முதல் மனிதன். திருமணமானவன்! ஆங்கிலோ இந்தியன். அந்த உயரம், சிரிப்பு, பேச்சு...பேச்சு!

வித்யா அந்த 'அப்பாயின்ட்மெண்ட் ஆர்டரை' மூலையில் தூக்கிப் போட்டாள். அவன் நினைவையும் போட முயன்றாள். அதற்குப் பின்னாலும், இதே மாதிரி இரண்டு 'இண்டர்வ்யூக்கள்'. வீடு தேடி வந்த ஆர்டர்களைக் கிழித்துப் போட்டாள்.

கடைசியாகத்தான் இந்த பாரீஸ் கார்னர் ஆபீஸ் 'இண்டர்வ்யூ.'

பார்த்தவுடனேயே அவளுக்கு அந்த சூழ்நிலை பிடித்திருந்தது. அங்கே வேலை செய்த ஆண்கள், ஆபீஸ், பைல், வீடு, பெண்டாட்டி என்ற அதே சுழலைத் தவிர, வேறு எதிலும் விருப்பமற்றவர்களாகத் தோன்றினார்கள். பெண்கள் நிறையப் பேர் வேலை செய்தார்கள். அவர்களும் சாதாரண மானவர்களாக இருந்தார்கள்.

அப்போதே 'டைப்' அடித்துக் கையில் கொடுக்கப்பட்ட ஆர்டரை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தபோது அம்மா

வியந்தாள். இவ்வளவு சீக்கிரம் ஒரு வேலையைத் தேர்ந்தெடுத்துவிடுவாள் என்று அம்மா நினைக்கவில்லை.

"நீ இப்போ வேலைக்குப் போய் என்ன ஆகணும்?" என்று கேட்டாள். "இது ஒரு பெரிய ரகளையாகப் போறதுடீ வித்யா. உன்னோடயும், அந்தத் துர்வாசரிடமும் அகப்பட்டுக் கொண்டு நான்தான் தவிக்க வேண்டியிருக்கு" என்று பரிதாபத்துடன் பார்த்தாள்.

"துர்வாசர் கேட்டால் எனக்குத் தெரியாதுன்னு சொல்லிடு. என்னைக் கேக்கட்டும். நான் பதில் சொல்லிக்கறேன்."

விஷயம் தெரிந்ததும் வேகமான, ஒரு பெரிய அலையாக அடித்தது அப்பாவிடமிருந்து. அதில் வித்யா அடித்துக் கொண்டு போய்விடவில்லை. இன்னும் நன்றாக அழுத்தமாகக் கால் ஊன்றி நிற்கக் கற்றுக் கொண்டாள். ஒரு வெள்ளைக் காகிதத்தை எடுத்துத் தன் மனத்தில் இருந்ததை எழுதி, அவர் மேஜை மேல் வைத்துவிட்டு நின்றாள். அவரோட நேரில் பேசுவதைவிட, இப்படி எழுத்தில் பேசுவது சுலபம் என்று நினைத்தாள்,

'அப்பா,

வீட்டிலேயே மூலையில் அடைந்து கிடக்க என்னால் முடியாது. பொழுது போவதற்காகத் தெருவிலுள்ள ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கி அரட்டை அடிக்க முடியாது. சினிமாத் தியேட்டர்களை முற்றுகையிடப் பிடிக்காது. பத்திரிகைகளைப் படித்துக் கொண்டு மத்தியான நேரத்தில் தூங்கி நேரத்தை ஓட்டுவதென்பது என்னைப் பொறுத்தவரை நடக்காத காரியம். விவித்பாரதிக்காக ரேடியோவிற்கு எதிரில் தவம் கிடக்க முடியாது. இதையெல்லாம் தவிர்க்க, என் தேவைகளை நானே கவனித்துக்கொள்ள வேலைக்குப் போகிறேன். அது உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால்.... இது உங்கள் வீடு. "வீட்டை விட்டுப் போ" என்று சொல்லி விடுங்கள். நான் போய் விடுகிறேன்..."

படித்து முடித்த அப்பா, அம்மாவிடம் உறுமினார்:

"கேட்டியா, உன் பெண் பேசறதை? அவளை நீ தான் இப்படிக் கெடுத்திட்டே. வேலைக்குப் போக ஆரம்பிச்ச முழுசாக ஒரு நாளாகலை. அதற்குள் வீட்டை விட்டுப் போறாளாமே!... எவ்வளவு திமிர் இருந்தால் இப்படி எழுதிக் கொடுத்திருப்பாள்? சீ! என் பொண்ணாடி. நீ? இனிமேல் நீ எனக்குப் பொண்ணுமில்லை. நான் உனக்கு அப்பனுமில்லை. உன்னைப் பத்தின எதுவும் என்னைப் பாதிக்காது. உன் நல்லதில் எனக்கு அக்கறையும் இல்லை. கெட்டதில் கவலையுமில்லை. உன் மூஞ்சியிலே முழிக்கவே பிடிக்கலை. என் கண் முன்னாலே வராதே. போ."

அதே மாதிரி அவர் இருந்தும் காட்டினார். வித்யா அதற்காக வருத்தப்படவில்லை. ஆனால் வித்யாவைச் சாக்காகத் திட்டுவதை—அவளைப் பார்த்தால் முகம் கடுகடுப்பதை—'என் பொண்ண எனக்கு அடங்கலை' என்று உறவுக்காரர்களிடம் சொல்வதை—தேவையானபோது ஆயிரம் ஐந்நூறு என்று தாராளமாகத் திருப்பிக் கிடைக்காத பணமாகக் கொடுத்து 'சுப்பிரமணியன் ரொம்ப நல்லவராச்சே' என்று அவர்களிடம் பெயர் தட்டிக் கொண்டு போவதை—வீட்டில் சண்டை போட்டுத் தன் சுய உருவத்தைக் காட்டுவதை—அடிப்பதை—அடி பணிய வைப்பதை—எதையும் நிறுத்தவில்லை அவர்.

அவருக்கு நண்பன் என்று சொல்லிக்கொள்ள யாருமில்லை. அவரோடு சிநேகமாக இருப்பது என்பதே காலைச் சுட்டுக்கொள்ளாமல் நெருப்பின் மேலே நடக்கிற மாதிரித் தான். அவரிடம் பணம் இருக்கிறது. நிறையவே இருக்கிறது.

அதற்கு எல்லாரையும் அடக்கிவிட முடியும் என்ற நம்பிக்கை. அடங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அன்று காலை அவர் நடந்து கொண்டதை நினைத்துப் பார்த்தாள் வித்யா. ஒன்றுமில்லாத ஒரு சின்ன விஷயத்தை எப்படிப்

பெரிசு படுத்தினார்! அவர் எதிரில் தனக்கு வந்த ஒரு சிநேஹிதியின் ஃபோன்காலுக்கு அவளுடைய தங்கை அரை மணி நேரம் பேசினது, சிரித்தது எல்லாம் அவருக்குப் பெரிய தப்பாகத் தோன்றியிருக்கிறது. கத்தினார். தங்கைக்காகப் பரிந்து கொண்டு போகாமல் வித்யாவால் இருக்க முடியவில்லை. அவளைப் பார்த்ததும் அப்பாவின் ஆத்திரம் அதிகமாகியது,

"உங்க அக்கா ஆடறது போறும். அவளைப் பார்த்து நீயும் கத்துக்காதே. ஒழுங்கா இருக்கிற வழியைக் கத்துக்கோ!"

வித்யா பல்லைக் கடித்துக் கொண்டாள்: 'ப்ளீஸ் வித்யா பொறுமையா இரு' என்று தன்னைத்தானே கெஞ்சிக் கொண்டாள். ஆனால் அம்மாவினால் அப்படி இருக்க முடியவில்லை.

"அநாவசியமாக வித்யாவை ஏன் இப்படிக் கரிச்சுக் கொட்டணும்? அவளுக்கு நீங்க என்ன செய்யறேள்? எதுக்காக வீண் வம்புக்கு இழுக்கணும்?"

அப்பாவுக்குத் தேவை இதுதான். இந்தச் சின்னத் தூண்டல் போதும். பாட்டிலைத் திறந்ததும் வெளிவந்த பூதமாகக் கிளம்பி விட்டார்.

"உன்னாலேதாண்டி என் மூத்த பொண்ணு கெட்டா. இப்போ இவர்களையும் பாழாக்கிடாதே. இவர்களாவது என் சொல்லைக் கேட்டு, கட்டுப்பட்டு நடக்கட்டும்."

"இப்போ வித்யா என்ன கெட்டுப் போயிட்டா?"

"என்ன கெடலை?"

"தானே நாலு காசு சம்பாதிச்சு, உங்க கையை எதிர் பார்க்காமல் இருக்காளே—அந்த ஆத்திரம் உங்களுக்கு. உங்க பணத்துக்கு மதிப்புத் தராமல் நடந்துக்கறாளே, அந்தக் கோபம். எல்லாரையும் மாதிரி அவளும் உங்க காலடியிலே வந்து விழலையே என்ற எரிச்சல்... அது அவளைப் பார்த்தா நெருப்பா வெளியே வர்றது...."

அவரது மூர்க்கத்தனத்தைக் கன்னங்களிலே இறக்கிக் கொண்டு விரல் விரலாகக் கம்பளிப்பூச்சி ஊர்ந்த இடம் மாதிரி தடித்துப் போன இடங்களைத் தடவிக் கொண்டே உள்ளே வந்து சேர்ந்தார்கள் இரண்டு பேரும். வித்யாவுக்கு அழுகை வரவில்லை... அம்மா அழுதாள்.

"நீ ஏண்டி என் வயத்துலே வந்து பொறந்தே? இப்படி அடி வாங்கிச் சாகிறதுக்கா?" என்று அழுதாள். அவளுக்கு ஆறுதல் சொல்கிற மாதிரி தன்னைத்தானே தேற்றிக் கொண்டாள்:

"இப்படியே நம் காலம் போய் விடாது வித்யா. நமக்கும் ஒரு நாள் விடியும்."

அம்மாவை நினைத்தபோது வித்யாவுக்குக் கஷ்டமாக இருந்தது. அம்மாவின் அழகுக்கு இன்னொருத்தனாக இருந்திருந்தால் அவள் காலடியிலேயே கிடந்திருப்பான். அவள் பாதத்தை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டிருப்பான். அந்த அழகு கூடவா அப்பாவின் கண்களில் படவில்லை! எப்படிப்பட்ட அழகு அம்மா! ஒரு வேளை அதுதான் — அப்பாவை உறுத்துகிறதா? இப்படியெல்லாம் பண்ணச் சொல்லி அலைக்கழிக்கிறதோ...?

நீங்கள் ஒரு நாள் மனம் மாறி, அன்பாக நடந்து கொள்வீர்கள் என்று அம்மா எதிர் பார்க்கிறாளே... அவளுக்கு உங்கள் மீது எத்தனை அன்பு இருக்கிறது! அது ஏன் உங்களுக்குப் புரியவில்லை? எதுதான் உங்களுக்குப் புரிந்திருக்கிறது? வெறும் பண்ம் சம்பாதிக்கும் இயந்திரமாக இருப்பது உங்களுக்கு வெறுத்துப் போய்விட வில்லையா? அதுதான் திருப்தியாக இருக்கிறதா? என்ன பிறவி அப்பா நீங்கள்? இனிமேலா திருந்தி நடக்கப் போகிறீர்கள்? இருபது வருஷங்களாக இதே மாதிரி இருந்து பழகிவிட்ட நீங்களா இனிமேல் மாறப் போகிறீர்கள்? சிரித்துப் பேசப் போகிறீர்கள்?'

"என்ன வித்யா இது? எதிரே காபி ஆறிப் போறது. அப்படி என்ன யோசனை?"— ஷோபா வந்து, அவள் எதிரில் நின்று கொண்டு கேட்டாள்.

"ஷோபாவா?"

"ஆமாம். கார்த்தாலேருந்து நீ ஏண்டி. என்னவோ மாதிரி இருக்கே? என்ன கஷ்டம் உனக்கு?"

"ஒண்ணுமில்லே. போகலாமா?" — வித்யா நாற்காலியைப் பின்னால் நகர்த்திவிட்டு எழுந்தாள்.

"காபி ஆறிப் போய் விட்டதே. வேறே வரவழைக்கட்டுமா?"

"வேண்டாம் ஷோபி. பிடிக்கலை. வா. போகலாம்."

காண்டீன் படிகளில் இறங்கி வரும்போது, திரும்பக் கேட்டாள் ஷோபா:

"என்ன வித்யா கஷ்டம் உனக்கு? என்கிட்டே சொல்லக் கூடாதா?"

வித்யா சிரித்தாள். 'எனக்கு என்னடி கஷ்டம்? காபி குடிக்கலேன்னா, மனசுலே கஷ்டம்னு அர்த்தமா?"

அந்தச் சிரிப்பு திருப்திகரமாக இருக்கவே, ஷோபா மேலே வற்புறுத்தாமல் விட்டு விட்டாள்.

'எவ்வளவு சுலபமாக இவளைச் சமாளித்துவிட முடிகிறது?' என்று ஷோபாவை நினைத்து, மனசுக்குள் சிரித்துக் கொண்டாள் வித்யா. அவளுக்கு யாரிடமும் எதையும் சொல்லிப் பழக்கமில்லை. வெளியில் சொல்லி, ஆறுதலைத் தேடிக் கொள்வதென்பது எவ்வளவு போலித்தனமான விஷயம். அது உண்மையாகவே ஆறுதல்தானா? அதனால் மனப்பாரம் குறைகிறதா? அந்த நிமிஷத்தில் மனம் இலேசாகிறது என்றாலும் அது தற்காலிகமான ஒரு நிம்மதி என்பது வித்யாவின் எண்ணம். அவள்தான் யாரிடமும் எதையும்

சொல்ல மாட்டாளே தவிர, எல்லாரும் வந்து அவளிடம் எல்லாவற்றையும் சொல்லுவார்கள். நம்பிச் சொல்வார்கள். அவள் முகத்தைப் பார்த்தவுடனேயே அவர்களுக்கு அந்த நம்பிக்கை வந்து விடுகிறது. ஒரு தரம் பேசிவிட்டால் எல்லார் மனசும் தராளமாகத் திறந்து கொண்டு விடுகிறது. சில சமயம் ஆறுதலாக நாலு வார்த்தைகள் சொல்லுவாள். அவளுக்குத் தான் அந்த ஆறுதல் தேவையாக இருக்கவில்லையே தவிர, மற்றவர்கள் அதை எதிர்பார்க்கும் போது தரத் தவறுவ தில்லை.

அவள் இந்த வேலையில் சேர்ந்து ஆறு மாதங்களாகி விட்டன. எல்லாரிடமும் பேசினாலும், யாரும் அவள் மனசை நெருங்கினது கிடையாது...எல்லாருக்கும் நடுவில் எப்படித் தனியாக இருப்பது என்பது அவளுக்குத் தெரியும். அங்கே வித்யாவை புரிந்து கொள்ள யாராலும் முடியாது. யாரும் அதற்கு முயற்சி செய்ததுமில்லை. வித்யாவிடம் தங்களுடன் இல்லாத ஒரு தனித்தன்மை உண்டு என்பது எல்லாருக்கும் தெரியுமே தவிர, அது என்ன என்பது தெரியாது. மற்றவர்கள் தன்னைப் புரிந்து கொள்ளவில்லையே என்று அவள் கவலைப் பட்டது மில்லை. அவள் எல்லாரையும் புரிந்து கொண்டிருந் தாள். அது சாதாரணப் பழக்கத்திற்குப் போதுமானதாக இருந்தது.

ஷோபாதான் அவளுக்குக் கொஞ்சம் நெருங்கின சிநேகிதி என்று பெயர். மற்ற யாரிடமும் அவள் அதிகம் பேசுவது கிடையாது. 'எத்தனை அபத்தமான பேச்சுக்கள்! புடவைகள், நகைகள், சினிமா, காதல், கல்யாணம் வளை காப்பு, குழந்தை, தொட்டில்—வேறு எதுவுமே கிடையாதா? எந்தச் சிந்தனைகளுமே இருக்காதா? இப்படி மட்டுமே இருக்க எப்படி முடிகிறது இவர்களால்? இதோடு திருப்தி அடைந்து விட முடிகிறது? இவர்களிடம் எந்தப் புத்திசாலித்தனமுமே கிடையாதா?'

ஷோபாவிடமிருந்தும் அதேமாதிரிப் பேச்சுகள் வெளிப்பட்டாலும் அது மட்டுமே வெளிப்படுவதில்லை. சில சமயங்களில் வித்யாவை நெருங்கியும் வருவாள். அவளுக்குச் சமமாகவும் பேசுவாள். அந்தச் சில சமயங்களுக்காக மட்டுமேதான் வித்யா அவளோடு பழகினாள். அவளை மதித்தாள்.

இரண்டு பேரும் ஆபீஸ் கட்டடத்திற்கு வந்து 'லிஃப்டில்' ஏறினார்கள். காலையிலிருந்து காலியான வயிறு, தலையில் இலேசான சுற்றல், லிஃப்டின் மெதுவான ஏற்றம் எல்லாம் சேர்ந்து வித்யாவை என்னவோ செய்தன. சமாளிக்கப் பார்த்தாள். காலை லிஃப்டில் அழுத்தி நிறுத்திக் கொண்டாள். முடியவில்லை.

'காலுக்கடியில் யார் பள்ளம் தோண்டுகிறார்கள்? வெப்பு, நீல விளக்குகள் ஏன் மங்கலாகிக் கொண்டே வருகின்றன? எப்படி இவ்வளவு இருட்டு வந்தது? திடீரென்று லிஃப்ட் மட்டும் தனியாகக் கழன்று பறக்கிறதே? அங்கே எதிரில் கையில் பெல்ட்டுடன் நிற்பது யார்? அப்பாவா? அவர் எப்படி இங்கே வந்தார்? உடனே அவரும் மறைந்து விட்டாரே! ஐயோ, என்ன இருட்டு....' அதற்கு மேல் வித்யாவுக்கு எதுவும் தெரியவில்லை.

3

நான்கு நாற்காலிகளை நீளமாகச் சேர்த்துப் போட்டு அதில் படுக்க வைத்திருந்தார்கள் வித்யாவை. எல்லா மெஷின்களும் நின்று போயிருந்தன. 'விர்விர்' என்ற ஃபான்களின் முனகல், காற்றில் அசைந்த காலண்டரின் ஓரத் தகடு சுவரில் போடும் கீறல் ஓசை, மேஜைகளின் மேல் பேப்பர் வெயிட்டைத் தள்ளிவிட்டுப் பறக்கத் துடிக்கும் காகிதங்களின் சுதந்திரப் போராட்டம், எங்கோ

ஒலிக்கும் டெலிபோனின் இலேசான இனிமை, ஜன்னலின் மேல் வந்து உட்கார்ந்த ஒரு காகத்தின் வறட்டுக் கத்தல் இவற்றைத் தவிர செக்ஷன் நிசப்தமாக இருந்தது. செக்ஷன் சூபர்வைசர் தன் அறையிலிருந்து வந்து, வித்யாவின் எதிரே நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள். நாற்பது வயசுக்கு மேலும் ஒண்டிக் கட்டையாகவே நின்று விட்ட அவள் முகத்தில் அதன் கடுப்பு எப்போதும் அட்டையாக ஒட்டிக் கொண்டிருக்கும். அதுகூட அப்போது கொஞ்சம் தணிந்த மாதிரி தோன்றியது. அதனால் அவளிடம் எல்லாருமே கொஞ்சம் நெருங்கி சாதாரணமாகப் பேச ஆரம்பித்தனர்.

"ஆபீசுக்கு வந்தநிலிருந்தே அவள் என்னவோ போல் தான் இருந்தாள் மேடம்."

"காலையிலிருந்தே தலைவலி லீவு கூடப் போடலாம்னு பார்த்தேன், என்றாள் லஞ்சுக்குப் போகும்போது."

"எழுந்ததும் வீட்டுக்கு வேண்டுமானாலும் அனுப்பி விடுங்களேன் மேடம்."

கொக்கிகளைக் கழற்றி, ப்ளவுஸைத் தளர்த்தி, முகத்தில் தண்ணீர் தெளித்துச் சில நிமிடங்களில் அவளை எழுப்பி உட்கார வைத்து விட்டனர். யாரோ அவள் கையில் காபி டம்ளரைத் திணித்தார்கள். வேறு வழியின்றி வித்யா அதைக் குடித்து முடித்தாள். டம்ளரை பக்கத்து ஸ்டூலில் வைத்த போது, அவர்களையெல்லாம் நிமிர்ந்து பார்க்க என்னவோ போலிருந்தது.

"ஹௌ டூ யு ஃபீல் நௌ?"

"ஒன்றுமில்லை மேடம், ஐயாம் ஆல்ரைட்."

"அப்படியே படுத்துக் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கோ."

"நோ மேடம், ஐயாம் ஆல்ரைட்."

"வீட்டுக்குப் போறதானாலும் போ, வித்யா."

அவள் தலையாட்டினதும் சூபர்வைசர் தன் அறைக்குப் போய் விட்டாள். டாய்லெட்டுக்குப் போய் முகத்தைக் கழுவி, ஹாண்ட் பாகிலிருந்த காம்பேக்டை எடுத்துக் கொஞ்சம் பவுடரை ஒற்றிக் கொண்டாள். ஐப்ரோ பென்சிலால் புருவங்களுக்கு மத்தியில் சின்னதாகக் கறுப்புப் பொட்டு. தலையை லேசாக வாரிக் கொண்டு வெளியே வந்தபோது தெளிவாக இருந்தாள்.

சூபர்வைசரின் அறைக்குப் போய் சொல்லிக் கொண்டாள்.

ஆபீசை விட்டு வெளியே வந்தாள், கூலிங் கிளாசை எடுத்து மாட்டிக் கொண்டாள். 'சுள்' ளென்று அடித்த வெள்ளை வெயில் நீல நிறமாகி உலகமே குளிர்ச்சியாகி விட்ட மாதிரி தோன்றியது. பர்மா பஜார் வழியாக, டெர்மினசை நெருங்கியபோது பஸ் ஒன்று நாலைந்து தலைகளுடன் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. அதில் ஏறி இடப் பக்கமாகக் கடைசி நீள ஸீட்டில் ஓரமாக உட்கார்ந்து கொண்டாள்.

டைம் கீப்பர் கூண்டுக்குப் பக்கத்தில் கண்டக்டர்களும், டிரைவர்களும் கையில் சிகரெட் புகைய பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. வயதில் சின்னவனாக, வெள்ளை வெளேரென்றிருந்த ஒரு கண்டக்டர் மட்டும் அவள் உட்கார்ந்திருந்த ஜன்னலின் எதிரே பிளாட்பாரத்தில் வந்து ஸ்டைலாக நின்று கொண்டு பாதி எரிந்த சிகரெட்டை வாயில் வைத்துக் கொண்டான்.

வித்யா எதிர்ப் புக்கம் பார்ப்பதைப் போல் மெதுவாக— அந்த மெதுவில் தன் அலட்சியத்தைத் தெரிவித்து விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். பஸ்ஸுக்குள் பாதிக் கண்கள் அந்தக் கண்டக்டருடையதைவிட மோசமாக உடலில் மேய்ந்தன. வித்யாவுக்கு இது சகஜமாகிவிட்ட விஷயம். அதனால் அந்தப் பார்வைகளினால் பாதிக்கப்படாவிட்டாலும் அவளுக்குச் சீக்கிரம் பஸ் கிளம்பினால் தேவலை என்று தோன்றியது. ஆனால் பஸ் கிளம்ப இன்னும் ஐந்து நிமிடங்களாவது ஆகும் என்பது தெரிந்தது. அங்கிருந்து மயிலாப்பூர் குளத்தங்கரைக்குப் போய்ச் சேரக் குறைந்தது இருபது நிமிடங்களாவது வேண்டும். ஆக மொத்தம் இருபத்தைந்து நிமிடங்கள். பஸ் கிளம்பினதும் வேறு எங்கும் நிற்காமல் நேராக மைலாப்பூர் குளத்தங்கரையில் போய் நிற்கக் கூடாதா?

மேலும் நாலைந்து பெண்கள், சாப்பாடு கூடைக்காரிகள், காலேஜ் ஸ்டூடண்ட்ஸ், பஸ்ஸின் எல்லா ஸீட்டுகளும் நிரம்பி, நிற்கவும் ஆரம்பித்தாயிற்று.

டிரைவர் வந்து எஞ்ஜினை ஆன் பண்ணினான். வித்யாவை முறைத்துக் கொண்டு நின்ற அந்தக் கண்டக்டர் கடைசி முறையாகப் புகையை நன்றாக உள்ளுக்கிழுத்து, சிகரெட்டை தூக்கி எறிந்துவிட்டு ஏறிக் கொண்டதும் பஸ் கிளம்பியது. முதலில் வித்யாவிடம் தான் வந்து டிக்கெட் கேட்டான் அவன். டிக்கெட்டைக் கொடுக்கும் போதும், காசு வாங்கிக் கொள்ளும் போதும் அவன் அவள் விரல்களை வேண்டுமென்றே தீண்டியது அவளுக்குப் புரிந்தது. அதை அவள் ஒரு பெரிய விஷயமாக நினைக்காமல், முகத்தைச் சுளிக்காமல், அவனை முறைத்துப் பார்க்காமல், 'தவறிப் போய்ப் பட்டதாகவே நான் எடுத்துக் கொள்கிறேன்' என்று சொல்வதைப் போல் சாதாரணமாக வெளியே பார்க்க ஆரம்பித்துவிட்டாள்.

தினமும் பார்த்துப் பார்த்துச் சலித்துப் போயிருக்க வேண்டிய அதே காட்சிகள், கட்டடங்கள். ஆனால் வித்யாவுக்குச் சலிக்கவில்லை. தன் வாழ்க்கையின் அன்றாட திகழ்ச்சிகளின் சுவாரஸ்யமான ஒரே விஷயம் இந்த பஸ் பிரயாணம் தான் என்று நினைத்தாள் அவள்.

பஸ் ஒவ்வோர் இடமாக நின்று நிதானமாக ஒடியது. ஒவ்வொரு ஸ்டாப்பிங்கில் நிற்கும் போதும் கண்களில் படும்

சினிமா போஸ்டர்கள்—நடிகைகள் எல்லார் முகத்திலும் சிரிப்பு. ஒரே மாதிரியான சிரிப்பு. கண்ணாடி எதிரே நின்று அழகாக இருக்கிறதா என்று விதம் விதமாகச் சிரித்துப் பார்த்து, திருப்தியாக இருக்கிற சிரிப்பை அப்படியே முகத்தில் பிரிண்ட் போட்டுக் கொண்டு விடும் வழக்கமான சிரிப்பு. வித்யா பஸ்ஸுக்குள் பார்த்தாள். யார் முகத்தில் அந்தச் சிரிப்பு இருக்கப் போகிறது? பின் அவர்களால் மட்டும் எப்படி அப்படிச் சிரிக்க முடிகிறது? ஒருவேளை முன்னால் ஒரு காமிராவைக் கொண்டு வந்து நிற்க வைத்தால் பஸ்ஸில் இருக்கும் எல்லார் முகத்திலும் மே போஸ்டரில் பார்த்த அவர்களின் காமிரா சிரிப்பு வந்து விடுமோ?

'என் முகத்திலும் வருமா? காமிரா இல்லாமலே அந்த மாதிரி முடியாதா என்ன? திடீரென்று அவளுக்குச் சிரிப்பே மறந்துவிட்ட மாதிரி ஓர் உணர்வு. உண்மையாகவே அவள் வாய்விட்டுச் சிரித்து வெகு நாட்களாகி விட்டன. அப்போது நன்றாகச் சிரிக்க வேண்டுமென்று தோன்றியது. உடம்பு குலுங்கச் சிரிக்க வேண்டும். அதில் மனசில் பாரமாக நிற்பதைக் கரைத்துக் கொண்டு இலேசாகி விட வேண்டும். திடீரென்று ஒரு பெண் காரணமில்லாமல் அப்படிச் சிரித்தால் என்ன ஆகும்? ஒன்று, கண்டக்டர் பஸ்ஸை நிறுத்தச் சொல்லி அவளைக் கீழே இறக்கி விட்டுவிடுவான். அல்லது கிழ்ப்பாக்கத் திற்குத் திருப்பச் சொன்னாலும் சொல்லுவான். இப்போது தூரத்திலிருந்தே அவள் உடம்பைத் துளைபோடும் கண்கள் அப்போது கிட்டே வந்து சூழ்ந்து கொண்டு... வித்யா சிரிக்க வில்லை. சிரிப்பும் வரவில்லை.

மிட்லண்ட் அருகே பஸ் பெரிய குலுக்கலுடன் நின்றது. டிரைவர் கிளப்பிப் பார்த்தும் கிளம்பவில்லை. ப்ரேக் டவுன். எல்லாரும் கீழே இறங்கினார்கள். சத்தியமூர்த்தி பவன் வாசலில் பிளாட் பாரத்தில் ஒரமாக நின்ற வித்யாவுக்கு எரிச்சல் வந்தது.

டாக்ஸியில் போயிருந்தால் இத்தனை நேரம் அம்மாவை ஒரு டம்ளர் போர்ன்விடா கரைத்துக் கொடுக்கச் சொல்லிக் குடித்துவிட்டு, தலையணையைப் போட்டுக் கொண்டு படுத்திருக்கலாம். தூங்கிப் போய்க்கூட இருக்கலாம். திரும்ப பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டு நிற்பதைவிட ஒரு டாக்ஸி பிடித்தால் என்ன? வித்யா காலி டாக்ஸி வருகிறதா என்று பார்த்தாள். எத்தனை டாக்ஸிகள் ஓடினால் என்ன? எல்லாம் எங்கேஜ்ட்.

மனசுக்குள்விருந்த எரிச்சல் அதிகமாயிற்று. 'சி! ஒரு டாக்ஸி கூடவா காலியாக வராது?'— அவள் பார்க்க ஆரம்பித்தாள்.

அவளை உரசுகிற மாதிரி பிளாட்பாரம் ஓரமாக வந்து நின்றது ஒரு வெள்ளை அம்பாசிடர் கார்.

"ஹலோ, வித்யா!"

ஹரி! வித்யா காரின் அருகே போய்க் குனிந்து ஜன்னல் வழியாக அவனைப் பார்த்து 'ஹலோ' என்றாள்.

"எங்கே?"

"வீட்டுக்குத்தான்..."

"கெட் இன்.'

"நோ, ப்ளீஸ்.'"

"கெட் இன் ஐ ஸே." — அவன் கதவைத் திறந்து விட்டான். அவளால் மறுக்க முடியவில்லை. அதற்கு மேல் அங்கே நின்று கொண்டிருக்கவும் முடியாதென்று தோன்றவே முன் பக்கக் கதவைத் திறந்து ஏறிக் கொண்டாள். அவன் பக்கத்தில் உட்கார்ந்ததுமே கார் முழுசும் இலேசான அமெரிக்க செண்டின் மணம் பரவி இருப்பதை உணர்ந்தாள். நல்ல வாசனை.

"எத்தனை நாள் கழிச்சு உன்னைப் பார்க்கறேன். எப்படி இருக்கே?"— அவன் கேட்டான்.

"ஐயாம் ஸாரி பேன். அனிதா எப்படி இருக்கிறாள்? காலேஜுக்குப் போகிறாளா?"

"ஓ. எஸ். நீ ஏன் திடீர்னு காலேஜை விட்டு நின்னுட்டே? உடனே நானும் அனிதாவைக் காலேஜில் ட்ராப் பண்றதை விட்டுட்டேன் தெரியுமா?"

"ஐ ஸீ..."

"வாட் ஈஸ் தி யூஸ் ஆஃப் மை கோயிங் தேர்?"

வித்யா அதற்குப் பதில் சொல்லவில்லை. அவனும் பதிலை எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை.

கார் எலியட் ரோட் வலது பக்கத்தில் திரும்புவதைக் கவனித்தவள், "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"ட்ரைவ் இன். ஒரு கப் காபி மட்டும் சாப்பிட்டு விட்டுப் போகலாம்."

"நான் வீட்டுக்குத்தானே போகணும்னு சொன்னேன்."

"வெறும் காபி மட்டும், ப்ளீஸ்...."

வித்யா பேசாமலிருந்து விட்டாள். டிரைவ் இன் மரத் தடியில் நிறுத்தின ஹரி, சும்மாயிருக்கவில்லை. பக்கத்துக் கார்களில் அவனை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த நண்பர்களையெல்லாம் தன் காருக்கு வரவழைத்தான். வித்யாவை அறிமுகப் படுத்தினான். 'இந்த அழகிய பெண் என்னுடன் வந்திருக்கிறாள். பார்த்துக் கொள்ளுங்கள்' என்று காட்டுவதற்காகவே, அவர்களைப் பொறாமைப்பட வைப்பதற்காகவே, நேராக வீட்டுக்குப் போகாமல் அவளை ட்ரைவ் இன்னுக்கு அழைத்து வந்த மாதிரி பட்டது வித்யாவுக்கு. அப்படித் தான் இருக்க வேண்டும். ட்ரைவ் இன்னிற்கு வந்து கொண்டிருந்தவன், வழியில் அவளைப் பார்த்து விட்டு லிஃப்ட் கொடுக்கிற சாக்கில் இங்கே அழைத்துக் கொண்டு வந்திருக்கிறான். 'ஷீ ஈஸ் மை கேர்ல்' என்று பெருமை

யடித்துக் கொள்ளவே இந்த அறிமுகம். அது இல்லை என்று அவனை அங்கேயே உடைக்க வேண்டுமென்று தோன்றியது வித்யாவுக்கு. ஆனால் பேசாமல் இருந்து விட்டாள்.

"இந்த ஹரி வெறும் தண்ணீர்ப் பாம்பு. காலின் மேல் ஏறினாலும் கடிக்காமல் ஓடிவிடும்."

காபி வந்தது. அப்போது அது நேவையாக இருக்கவே மறுக்காமல் குடித்தாள். திரும்பி வரும் போது ஹரி கேட்டான்:

"நீ வேலையில் சேர்ந்துவிட்டதாக அனிதா சொன்னாள்."

"ஆமாம்."

"எங்கே?"

வித்யா கம்பெனி பெயரைச் சொன்னாள்.

"எங்க கம்பெனியிலேயே ஒரு ரிசப்ஷனிஸ்ட் வேலை காலியிருக்கு. சரியானா ஆளா கிடைக்கலை. நீ வந்து விடேன் வித்யா?" —குரலில் எத்தனை ஆர்வம்!

"நோ, தாங்க்ஸ். இந்த வேலையே எனக்குப் பிடிச்சிருக்கு."

அதைக் கேட்டதும் அவன் முகம் ஒரு நிமிஷம் வாடி, பின் பளிச்சிட்டது.

'ஹரி, எனக்குத் தெரியும். உன்னோட கம்பெனியிலே ரிசப்ஷனிஸ்டே கிடையாது. நான் 'சரி'ன்னு தலையாட்டியிருந்தால் அந்த வேலையை நீயாக ஏற்படுத்தி எனக்குக் கொடுத்துடுவே: தினமும் என்னைப் பார்த்துக் கொண்டு, சந்தர்ப்பம் கிடைத்தால் இந்த மாதிரி லிஃப்ட் கொடுக்கிறேன் என்று காரில் ஏற்றிக் கொண்டு, ரெஸ்டாரெண்ட், ரெஸ்டா ரெண்டாய் அழைத்துக் கொண்டு போய், 'இவளோடுதான் நான் இப்போ சுத்தறேன்' என்று மற்றவர்களை நம்ப வைத்து...'

வஸ் வரும்போது அவன் மெதுவாகக் கேட்டான்:

"வித்யா, நான் உன்கிட்டே தனியாப் பேசணுமே?"

"எதைப் பத்தி?"

"உனக்குத் தெரியாதா?"

தெரியாது!"

குளத்தங்கரை வந்துவிட்டது.

இங்கேயே விட்டாப் போறும்."

அவன் காரை ஓர் ஓரமாக நிறுத்தினான். அவள் கீழே இறங்கி தாங்க்ஸ் சொன்னாள்.

"தனியாகப் பேசணும் என்றேனே?"

"பார்க்கலாம் மிஸ்டர் ஹரி. நானே உங்களுக்குப் போன் பண்றேன்."

வித்யா திரும்பிப் பார்க்காமல் மேலே நடந்தாள். அவன் காரை ஸ்டார்ட் பண்ணும் ஒசை கேட்டது.

'மடையன் தனியாகப் பேசணுமாம். 'ஐ லவ் யூ!' சொல்லணுமா?'

அவள் 'கேட்'டைத் திறந்தவுடனேயே கார் ஷெட்டைப் பார்த்தாள். உள்ளே கார் இல்லை. அப்பாவும் இல்லை. நிம்மதியாக உள்ளே போனாள். அம்மா ஃபில்டரைத் தட்டிக் கொண்டிருப்பது கேட்டது. முகத்தைப் பார்த்தாள். அழுது கொண்டிருக்கவில்லை என்பது தெரிந்தது. அப்படியானால் அப்பா காலையிலேயே ஆபீசுக்குப் போய் விட்டிருக்க வேண்டும். அவளைப் பார்த்ததும் அம்மா கேட்டாள்:

"ஏன் சீக்கிரம் வந்துட்டே?"

"தலைவலியாயிருந்தது. பர்மிஷன் போட்டுட்டு வந்துட்டேன்."

"உனக்கும் சேர்த்து காபி கலக்கட்டுமா?"

"வேண்டாம்."

"கொஞ்சம் சாப்பிடேன். சூடாக சாப்பிட்டால் தலைவலி சரியாகப் போயிடும்."

"வேணாம்மா."

அம்மா தனக்கு மட்டும் காபியைக் கலந்து கொண்டாள் டபராவில் விட்டு ஆற்றிக் கொண்டே சொன்னாள்:

"இன்னிக்கு ரமணி வந்திருந்தான்."

வித்யா கொடியிலிருந்த தன் டவலை உருவியபடி அம்மாவைப் பார்த்தாள். தனக்குள் பேசிக்கொள்கிற குரலில், ஆனால் அம்மா காதிலும் விழும்படி சொன்னாள்:

"ஒரே புழுக்கமாக இருக்கு. குளிக்கணும்..." என்றாள். அம்மாவின் பேச்சைத் தவிர்க்க அது ஒன்றுதான் வழி.

அவள் குளிக்கப் போனாள்.

4

உடம்பில் நீர் நெளி நெளியாக வழிந்து ஓடுவதைப் பார்த்துக் கொண்டே இருந்தாள் வித்யா. சளைக்காமல் செம்பு செம்பாகத் தண்ணீரை மொண்டு கொட்டிக் கொண்டிருந்தது கை. கிணற்று நீரின் அத்தனை சிலு சிலுப்பும் அப்போது அவளுக்கு வேண்டியதாயிருந்தது. சோப்புப் பெட்டியிலிருந்து சோப்பை எடுத்தாள். அதன் நுரையும் வாசனையும் உடம்பில் குழைந்தது.

'ரமணி வந்திருந்தான்.'

அதற்குப் பதிலை எதிர்பார்த்த அம்மாவின் முகம், அதைக் காதில் வாங்கிக் கொள்ளாத மாதிரி அவள் குளிக்க வந்துவிட்டதால் அது வாடிய வாட்டம். அவள் அங்கே ஒரு விநாடி நின்றிருந்தால்கூட அம்மா மேலே பேச்சை இழுத்துக் கொண்டு போயிருப்பாள். அணுமார் வாலாக நீளும். அதை தவிர்த்து விட்டதில் அம்மாவுக்கு எத்தனை ஏமாற்றம்?

அம்மா அடிக்கடி ரமணியைப் பற்றி நல்ல விதமாக அவள் காதில் விழும்படி சொல்லிக் கொண்டுதான் இருக்கிறாள். அதன் நோக்கம் வித்யாவுக்குப் புரிந்தது. வீட்டுக்கு யார் வந்தாலும் அம்மா அவளிடம் சொல்லிக் கொண்டிருப்பதில்லை. கூடத்து அலமாரியில் வைத்திருக்கும் மலை வாழைச் சிப்பியிலிருந்தும், கிளாஸ்கோ பிஸ்கட் பாக்கெட்டிலிருந்தும், வாழை இலையில் சுருட்டப்பட்ட மல்லிகைப் பொட்டலத்திலிருந்தும் அவளாக 'இன்னைக்கு யாரும்மா வந்திருந்தது' என்று கேட்டால், கோபாலபுரத்திலிருக்கும் அத்தை, அடையாறு மாமா, தாம்பரத்து பெரியம்மா என்று யாரை யாவது சொல்லுவாள். சில சமயம் வித்யாவைத் தேடிக் கொண்டு அவள் சிநேகிதிகள் யாராவது வந்திருந்தால்கூடச் சொல்ல மறந்து விடுவாள். அதே சிநேகிதி திரும்பி வரும் போது, அவளைப் பார்த்தவுடன் தான் ஞாபகத்துக்கு வரும். ''சொல்ல மறந்து விட்டேனே வித்யா. இவள் அன்னைக்குக் கூட வந்திருந்தாள்'' என்பாள். அதே அம்மா, ரமணி வந்து போவதை மட்டும தவறாமல், மறக்காமல், அவள் ஆபீஸிலிருந்து வந்தவுடனேயே முதல் விஷயமாகச் சொல்லி விடுகிறாள். 'அவன் எதுக்காக வரான்? உனக்காகத்தானே வரான். இதைப் புரிஞ்சுக்க மாட்டேன்றியே வித்யா?' என்று கேட்கிற மாதிரி.

அம்மாவுக்கு தான் படும் கஷ்டங்கள் எல்லாம் வித்யா படக் கூடாதே என்ற ஆதங்கம். முன்பின் தெரியாத இடமாக, ஒரு நிமிஷ நேரத்தில் பெண் பார்த்துவிட்டு, அவள் அழகை மட்டும் பார்த்துத் தலையசைத்துவிட்டுப் போகும்

யாரோ ஒருவனிடம் அவளைப் பிடித்துக் கொடுத்தால், தன்னைப் போலவே அவளுடைய வாழ்க்கையும் முடிந்து போய்விடுமோ என்று பயந்தாள். அதுவும் வித்யா வாழ்க்கையில் தேடும் விஷயங்களே தனியாக இருந்தன. மாதம் ஒரு புடவையிலும், ஒரு முழம் மல்லிகைப் பூவிலும் ஒரு நிரைப் படத்திலும் திருப்திப் பட்டுக் கொண்டு, கணவனைச் சந்தோஷப் படுத்தி விடக்கூடிய பெண்ணில்லை அவள். அவளால் சாதாரணமாகச் சமையல், சாப்பாடு, கணவன், குழந்தை, வீடு என்றிருக்க முடியாது. அவளைப் புரிந்து கொண்டவனால்தான் அவளை ஏற்றுக்கொள்ள முடியும். எல்லோராலும் முடியாது.

ரமணி இவளை நன்றாகப் புரிந்து கொண்டிருப்பதாக அம்மா நினைத்தாள். வித்யாவை அவன் சந்தோஷமாக வைத்துக்கொள்வான் என்பதில் அவளுக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. வித்யாவின் பார்வைக்கு—பேச்சுக்கு—சரி என்று தலையாட்டக்கூடிய சம்மதத்திற்கு எத்தனை நாளாகக் காத்துக் கொண்டிருக்கிறான் ரமணி. எப்படி ஏங்கிக் கொண்டிருக்கிறான்! ஆனால் வித்யா? அவள் புரிந்துகொள்ளவில்லையே அவனை என்று மனசுக்குள் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அம்மா ரமணியைப் பற்றி அடிக்கடி நல்லவிதமாகச் சொல்லிப் பார்த்தாள். அவன் வந்து போவதை ஒவ்வொரு தரமும் சொல்லி வித்யாவின் மனத்தைப் புரிந்துகொள்ள முயற்சி செய்தாள். வித்யாவோ ஒவ்வொரு தரமும் இதே மாதிரிதான். பதில் சொல்லாத ஒரு மௌனத்தில் நழுவிக் கொண்டிருந்தாள். சாமர்த்தியமாகத் தன் பதிலைத் தட்டிக் கழித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் ரமணி எதற்காக வருகிறான் என்பது அவளுக்குப் புரிந்துதான் இருந்தது. அது மட்டுமில்லை. அவனைப்பற்றி அம்மா என்ன நினைக்கிறாள், என்ன எதிர்

பார்க்கிறாள்' அப்பா என்ன நினைத்தார், இப்போது என்ன நினைக்கிறார் என்ற எல்லாமே அவளுக்குத் தெரிந்திருந்தது.

ஐந்து வருடங்களுக்கு முன்னால், முதல் முதலாக ரமணி வீட்டுக்கு வந்திருந்தானே, அப்போதே அவள் அவனைத் தெரிந்து கொண்டு விட்டாள். அவளைப் பார்த்த அந்தப் பார்வையின் பளபளப்பில், பேசின பேச்சின் மென்மையில் அவன் மனம் அப்படியே பளிச்சிட்டதை அவள் புரிந்து கொண்டு விட்டாள்.

ரமணி அப்பாவின் ஊர்க்காரன். அவனுடைய அப்பா, அப்பாவிற்குத் தெரிந்தவர், தஞ்சாவூருக்குப் பக்கத்தில் ஏதோ ஒரு கிராமம். பெரிய மிராசுதார் குடும்பம். பி. இ. பட்டத்தை வாங்கிக் கொண்டு சென்னைக்கு வந்து ஒரு தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்ந்தான். பெரிய பதவி முதன் முதலாக அப்போது தான் வீட்டுக்கு வந்திருந்தான்.

தயங்கி வாசலில் நின்று கொண்டு "சுப்ரமண்யம் இருக்காரா?" என்று வித்யாவிடம்தான் கேட்டான்.

"இருக்கார். பூஜையில் இருக்கிறார். கொஞ்சம் உட்காருங்களேன்."

அவன் உள்ளே வந்து உட்கார்ந்தான். தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான். வித்யாவும் தான் சுப்ரமண்யத்தின் பெண்தான் என்பதைத் தெரிவித்தாள்.

அம்மா அவனைப் பார்த்ததும் ஊரில் உள்ளவர்களை யெல்லாம் விசாரித்தாள். காபி கொண்டு வந்து கொடுத் தாள்.

"அப்பா வர்றவரைக்கும் பேசிண்டு இரு வித்யா" என்று சொல்லிவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கப் போய் விட்டாள்.

ரமணி அவள் படிப்பைப் பற்றிக் கேட்டான். தங்கை தம்பியின் படிப்பைப் பற்றி விசாரித்தான். அவனால்

வித்யாவின் முன்னால் சுலபமாகப் பேச முடியவில்லை. அடிக்கடி அவளைத் திருட்டுத்தனமாகப் பார்த்தான். அவளைப்போல் நேரிடையாகத் தன்னால் ஏன் பார்க்க முடிய வில்லை என்று தன்னையே கேட்டுக் கொண்டான். பதில் கிடைத்தது. தான் அவள் முன்னால் அவள் அழகில் விழுந்து விட்டது புரிந்தது.

மேலே பேச விஷயமில்லாமல் போகவே மேசையின் மீதி ருந்த புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்தான்.

"நீங்க யாருடைய புக்ஸ் எல்லாம் படிப்பீர்கள்?"— வித்யா பேச்சை சுவாரஸ்யமாகத் திருப்ப முயற்சி செய் தாள்.

"இண்டரில் ஷேக்ஸ்பியர் படிச்சது. அதற்குப் பின்னால் வேறு எந்தப் புத்தகத்தையுமே தொட்டுப் பார்க்க முடியலை."

"ஏன்?"

"நேரம் எங்கே கிடைக்கிறது?"

தன் பதில் அவளை ஏமாற்றிவிட்டது என்பதை உணர்ந்து கொண்டான். 'நீங்கள் என்ன புத்தகங்களெல்லாம் படிப்பீர்கள்?' என்று கேட்கப்பட்ட அந்தக் கேள்வியின் ஆர்வத்திலிருந்து அவளுக்கு இலக்கியத்தில் விருப்பமிருப்பது புரிந்தது. அந்த நேரத்தில் தானும் நிறையப் புத்தகங்கள் படித்தவனாக, இலக்கியம் தெரிந்தவனாக இருக்கக் கூடாதா என்று நினைத்தான். அதன் பின்னாலும் வித்யாவிடம் பேச விஷயமில்லாமல் போகும் போதெல்லாம் அதே வருத்தம் அடிக்கடி ஏற்படுவதுண்டு. இலக்கியத்தில் விருப்பமுள்ள வனாக இருந்திருந்தால் அவளோடு இன்னும் சுலபமாக, அதிக நேரம் பேச முடிந்திருக்கும் என்பதுதான் அந்த வருத் தத்துக்குக் காரணம். 'எத்தனை புத்தகங்கள் படிக்கிறாள் அவள்' என்று நினைத்து வியந்தான். எத்தனை தெளிவாக, தீர்க்கமாகப் பேசுகிறாள் என்று சந்தோஷப்பட்டான்.

அன்று அப்பா அவனோடு ஒரு மணி நேரத்திற்கு மேல் பேசிக் கொண்டு இருந்தார். அவன் விடைபெற்று எழுந்த போது, "அடிக்கடி வாப்பா. இதை உன் வீடு மாதிரியே நினைத்துக் கொள்" என்றார். வித்யாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்பா அந்த மாதிரி யாரிடமும் இதுவரை சொன்னதில்லை. அவருக்குப் பிடித்திருக்க வேண்டும்.

அப்பாவுக்கு ஒருவனைப் பிடிக்க வேண்டுமானால் அவனிடம் சில தகுதிகள் இருக்க வேண்டும். அவன் ஸைட் பர்ன்ஸ் வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. மீசை கூடாது. தலையைப் 'பம்'மென்று வளர்த்துக் கொண்டு இருக்கக் கூடாது. பெண்கள் துணியில் ஷர்ட் போட்டுக் கொள்ளக் கூடாது. சிகரெட் பிடிக்கக் கூடாது. ரமணி அந்த மாதிரி யெல்லாம் இருந்தான்.

ரமணி போனதும் அப்பா அவனை ஓகோ என்று ஆரம்பித்தார்: "எத்தனை பணமிருக்கு. நன்னா படிச்சு மிருக்கான். நல்ல வேலை. கை நிறையச் சம்பளம் வாங்கு றான். ஆனாலும் எவ்வளவு அடக்கம் பையனுக்கு" என்று புகழ்ந்தார். நினைத்தபோதெல்லாம் அவனுக்குப் போன் பண்ணி வீட்டுக்கு வரவழைத்தார். அவன் மாம்பலத்தில் ஓர் அறை எடுத்துக் கொண்டு தங்கியிருந்தான். "பாக்டரியி லிருந்து வந்ததும் ரூமிலே என்னப்பா பண்ணப் போறே? இனமும் இங்கேதான் வாயேன்" என்று கூப்பிட்டார்.

ரமணி அடிக்கடி வர ஆரம்பித்தான். அப்பாவைத் தேடிக்கொண்டு வந்தவன், அவளைத் தேட ஆரம்பித்தான். அவள் எங்கேயாவது வெளியே போயிருந்தால் கூட வரும் வரையில் காத்திருந்து, பார்த்துவிட்டுத்தான் போவான். ரமணிக்கு வித்யாவின் அழகு மட்டுமில்லை; அவளது புத்தி சாலித்தனம், மனத்தில் பட்டதை மறைக்காமல் பளிச்சென்று பேசும் புத்திசாலித் தன்மை எல்லாமே பிடித்திருந்தது.

அவளது ஒவ்வோர் அசைவிலும், ஒரு தனி அழகு இருப்ப தாகப் பட்டது. வித்யாவுக்கும் ரமணியைப் பிடித் திருந்தது.

ரமணி நல்லவன். அவள் இதுவரை பார்த்த எத்த னையோ ஆண்களைவிட அவன் நல்லவன். புடவைக்கு அப் பால் பார்க்கும் பார்வை அவனிடம் இல்லை. பார்த்த இரண்டு நாட்களுக்கெல்லாம் போன் பண்ணி, "ஐ லவ் யூ மிஸ் வித்யா. இன்னைக்கு தேவிக்கு வர்றீங்களா?" என்று மடத்தனமாகக் கேட்கவில்லை. அவன் மனசு பளிச்சென்று தெரிந்தாலும் — அதைப் பார்வையில், பேச்சில் வெளிப்படுத்தினாலும், வாய் விட்டு ரமணி இன்னும் எதையும் கேட்கவில்லை. அதனா லேயே அவளுக்குச் சமமாக அவனால் பேச முடியவில்லையே தவிர, மற்றவர்களிடமிருந்து இவன் கொஞ்சம் வேறுபட்ட வன்தான். அதை அவளால் மறுக்க முடியவில்லை.

ரமணி நல்ல உயரம். ஆறடிக்கு இருப்பான். பளிச்சென்ற முகம், சாதாரணமான, ஆனால் ஆழமானவன், அமைதி யானவன் என்பதைக் காட்டும் முகம். ரமணி அழகில் சேர்த்திதான். இந்தித் திரைப்படக் கதாநாயகர்களைப் போன்ற அழகில்லா விட்டாலும், அழகுதான். சுமாரான அழகு. ஆனால் இதெல்லாம் ஒரு நல்ல நண்பனாக இருப் பதற்கு மட்டுமே உதவும் என்று நினைத்தாள் வித்யா. அதற்கு மேல் அவனை நினைக்க முடியவில்லை. அவனோடு நெருங்கிப் பழக முடியவில்லை. எதனால் அந்த நெருடல் என்று அவளுக்குத் தெரியவில்லை.

ரமணி மட்டுமில்லை, ஷோபா, பக்கத்து வீட்டுப் பெண், கல்லூரியில் கூடப் படித்த ரீது, ப்ரெமி, சத்தி, அனிதா யாரிடமும் அவளால் நெருங்கிப் பழக முடிந்ததில்லை. தன்னை விலக்கி நிறுத்திக் கொண்டு பேச அவளால் முடிந்தது. எதிலும் ஓர் ஒட்டாத தன்மை அவளுக்கு ஏற்பட்டு விட்டிருந்தது.

ரமணிக்குக் குடும்ப நிலைமை எல்லாம் தெரியும். எத்தனையோ நாட்கள் அப்பா அவன் எதிரிலேயே அம்மாவைப் படுத்தி இருக்கிறார். அவனே கூட சமாதானப்படுத்தி இருக்கிறான். வித்யா கல்லூரியைவிட்டு நின்று விட்டதற்காக அம்மாவைப் போலவே அதிக வருத்தப்பட்டான் அவன்.

"நீ தப்பாக நினைக்கலேன்னா நான் பணம் கட்றேன் வித்யா. படிப்பைப் பாழாக்கிக்காதே" என்று கெஞ்சினான்.

வித்யா சிரித்துக் கொண்டே மறுத்து விட்டாள். அவள் அப்படி மறுத்ததில் அவனுக்கு இன்னும் வருத்தம்.

அப்பாவுக்கு வித்யாவின் மேலிருக்கும் வெறுப்பு, குடும்பத்தில் அவர் நடந்து கொள்ளும் விதம் எல்லாவற்றையும் அவன் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறான் என்பதாலேயே, அம்மா ரமணியைப் பற்றி அதிகம் நினைத்தாள். அவன் தங்களுக்கு ஓர் ஆதரவாக எதிர் பார்ப்பதும் நினைப்பதும் நியாயமாகப் பட்டது வித்யாவுக்கு. 'நான் அம்மாவாக இருந்தாலும் இதையே நினைப்பேன் போலிருக்கு' என்று எண்ணிப் பார்த்த போது அவளுக்குச் சிரிப்பு வந்தது.

"வித்யா, இன்னுமா குளிச்சு முடிக்கலை?" — அம்மா பாத்ரூம் கதவைத் தட்டினாள்.

"இதோ வந்துட்டேன்."

"ரமணிகிட்டேயிருந்து போன் வந்திருக்கு."

"நான் குளிக்கறேன்னு சொல்லேன்."

"நீ வர்ற வரைக்கும் லைனின் இருக்கானாம். சீக்கிரமாக வா."

அதற்கு மேல் வித்யா அதிக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. புடவையைச் சுற்றிக்கொண்டு வந்து ஹாலுக்

குப் போய் மேஜையின் மேல் வைத்திருந்த ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ..."

"வித்யாவா? இன்னிக்கு மத்தியானம் உன் ஆபீசுக்கு வந்திருந்தேன்."

"ஐ...ஸீ."

"நீ எப்போதோ கிளம்பிப் போய் விட்டதாகச் சொன்னார்கள்."

"ஆமாம். ரெண்டு மணிக்கெல்லாம் கிளம்பி வந்துட்டேன்."

"ஏன் வித்யா?"

"உடம்பு சரியில்லே."

"என்ன உடம்பு?"

"வழக்கமான உடம்புதான். வீடு சரியில்லை. அதனாலே மனசும் சரியில்லை."

"இன்னிக்கு மத்தியானம் வீட்டுக்கும் வந்திருந்தேன், அம்மா எல்லாம் சொன்னாள். நீ அப்பா கண்ணில் படாமல் இருக்கக் கூடாதா வித்யா? அவ்வளவு பெரிய வீட்டில் இடமா இல்லை? ரொம்ப அடிச்சுட்டாரா வித்யா?...கேள்விப் பட்டதுமே உன்னைப் பார்க்கணும்னு தோணித்து. ஆபீசுக்கு வந்தால் நீ இல்லை."

வித்யா ஒன்றும் சொல்லவில்லை.

"ஆபீசிலிருந்து வீட்டுக்கு வர இத்தனை நாழியா வித்யா?"

"நடுவிலே பஸ் பிரேக்டவுன். அதனாலேதான் லேட்."

"பஸ் பிரேக்டவுனா? நான் உன்னை டிரைவ் இன்னில் யாருடனோ பார்த்தேனே?"

வித்யாவுக்கு எரிச்சல் வந்தது. 'பார்த்தீங்களா இல்லையா? பின் ஏன் லேட்' என்ற கேள்வி எதற்கு?— எரிச்சலைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

"யார் வித்யா அது?"

'ரமணி, இது என்ன கேள்வி? இதைக் கேட்க எப்படிப் பட்ட உரிமை? யார் கொடுத்தது அது? நான் என்ன உங்க மனைவியா? அப்படியேயிருந்து நீங்க இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தாலும் என்னால் பதில் சொல்லியிருக்க முடியாது!'

அவளுக்கு அவனைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்க வேண்டுமென்று தோன்றியது.

"அவரா? ஹி இஸ் மை ஃபிரண்ட். பேர் ஹரி. வெரி இண்டரஸ்டிங் பர்ஸன். லிட்ரேச்சர் பற்றி என்னமாய்ப் பேசறார் தெரியுமா?"

இப்போது ரமணி பேசவில்லை.

"நாளைக்கு ஆபீசுக்கு வரேன்னு சொல்லியிருக்கார்."

".....?"

"அவர் யார் தெரியுமா ரமணி? ஜே.கே. இண்டஸ்ட் ரீஸ்லோட லாஸ்ட் சன்."

"ஐ—ஸீ...'

வித்யாவுக்கு மேலே என்ன சொல்வதென்று தெரிய வில்லை. அவனுக்கும் பேச விஷயமில்லை. "ஓ...கே. வித்யா வச்சுடட்டுமா?"

"ஏன் வீட்டுக்கு வரலையா?"

"இல்லை."

வித்யா ஒரு நிமிஷம் பேசாமலிருந்தாள். அவள் அடி பட்ட விஷயம் தெரிந்த உடனேயே துடித்துக் கொண்டுவரும் ரமணி, அவளைப் பார்க்காமல் ஒருநாள்கூட இருக்க முடிய

ரமணி, இன்று வரவில்லை என்கிறான். வித்யா புரிந்து கொண்டாள்.

ரமணியின் இந்தப் பொறாமைக் குணம் வித்யாவுக்குத் தெரிந்ததுதான். அவளுக்குப் பிடிக்காததும்கூட. அந்த வெறுப்பு இப்போது கொஞ்சம் அதிகமாகியது.

5

அட்டெண்டர் வந்து வித்யாவை பிராஞ்ச் மானேஜர் கூப்பிடுவதாகச் சொன்னான். வித்யா மெஷினை நிறுத்தி விட்டுப் போனாள். படியிறங்கும் போதெல்லாம் 'மானேஜர் எதற்காகக் கூப்பிட வேண்டும்?' என்ற கேள்வி நெருடிக் கொண்டே இருந்தது. இதுவரை அவர் இப்படிக் கூப்பிட்டது கிடையாது. வித்யா அவரை ஒரு தரம்தான் பார்த்திருக் கிறாள். முப்பத்தைந்து வயசிருக்கலாம். கண்ணாடிக்குள் விருந்து பார்க்கும் பார்வை ஆழமாக இருக்கும். நல்ல கறுப்பு. வெறும் வெள்ளைப் பாண்ட்; வெள்ளைச் சட்டை. தினமும் அதேதான்.

'அவர் எதற்காக இப்போது என்னைக் கூப்பிட வேண்டும்?' காலையிலிருந்து என்ன செய்தோம் என்று நினைத்துப் பார்த்தாள். எந்தத் தப்பும் நேர்ந்ததாகத்தெரிய வில்லை. 'நேற்று, அதற்கு முந்தின நாள்...ஊஹூம். ஒன்றும் நடக்கவில்லையே. எதற்கு இப்போது கூப்பிடுகிறார்? என்னை மட்டும் ஏன் கூப்பிட வேண்டும்?'

படியிறங்கி இடது பக்கத் திருப்பத்தில் கடைசி அறை, ஏர்கண்டிஷன் செய்யப்பட்டு, அழகான கர்ட்டன் தொங்கும் அறை. வித்யா அட்டெண்டரிடம் சொல்லி அனுப்பிவிட்டு, வாசலிலேயே நின்றாள், எம். சிவகுமார் என்ற கருப்பு

போர்டில் வெள்ளை எழுத்துக்கள். அதைத் திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டு நின்றாள். உள்ளே வரச் சொன்னதும் போனாள்.

"ஹலோ, வித்யா!"

நிமிர்ந்தாள்.

ஹரி!

'நேற்று விளையாட்டிற்கு ரமணியிடம் டெலிபோனில் ஹரி மறுநாள் ஆபீசுக்கு வரப் போகிறான் என்று சொன்னது உண்மையாகுமென்று அவள் நினைக்கவில்லை. வந்திருக்கிறான். ஏன் கூப்பிட்டு அனுப்பியிருக்கிறான்?'

வித்யா எதையும் வெளிக்காட்டாத இலேசான சிரிப்புடன் அவனைப் பார்த்து "ஹலோ" என்று தலையாட்டிவிட்டுச் சிவகுமாரிடம், "குட் மார்னிங் சார். கூப்பிட்டீர்களாமே!" என்று கேட்டாள்.

"உட்காருங்கள் மிஸ் வித்யா. ஹரி உங்களைப் பார்க்க வேண்டுமென்றான் வரச் சொன்னேன்" என்றார் சிவகுமார்.

"குமார் என் ஃபிரண்ட். வி ஆர் வெரி க்ளோஸ் ஃபிரண்ட்ஸ், வித்யா."

"ஐ.. ஸீ...."

"அவன் கிட்டே பர்மிஷன் கேட்டுட்டேன். நீ என் கூட வெளியிலே வர்றே."

"வெளியிலா? இப்பவா? ஸாரி மிஸ்டர் ஹரி. நான் மெஷினை அப்படியே நிறுத்திவிட்டு வந்திருக்கிறேன்."

"தட்ஸ் ஆல் ரைட் மிஸ் வித்யா. நீங்க போய்விட்டு வாங்க. நான் வேறே யாரையாவது பார்த்துக்கச் சொல்றேன்."

"இல்லை சார்... வேண்டாம்."

"அனிதாதான் உன்னை அழைத்துக்கொண்டு வரச் சொன்னாள். அவளுக்கு நல்ல டெம்பரேச்சர். நான் உன்னைப் பார்த்ததாகச் சொன்னேன், உடனே உன்னைப் பார்க்க வேண்டுமென்கிறாள். நான் இப்போதே அழைத்துக் கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்."

வித்யா ஹரியின் முகத்தைப் பார்த்தாள். பொய் சொல்வதாகத் தெரியவில்லை. ஆனாலும் அவனோடு போக அவளுக்கு இஷ்டமில்லை. 'போனால்...என்ன? என்ன பண்ணி விடுவான் இவன்?' என்ற தைரியமும்கூட வரவே, "ஓ...கே... மிஸ்டர் ஹரி" என்றாள்.

"நீங்க திரும்பி ஆபீசுக்கு வரணும் என்பதில்லை, மிஸ் வித்யா. காலையில் வந்தால் போதும்."

"தேங்க்யூ சார்."

சிவகுமாரின் அறையைவிட்டு வந்ததும், வித்யா ஹரியை காருக்குப் போகச் சொல்லிவிட்டு செக்ஷன் சூபர்வைசரிடம் சொல்லிக் கொண்டு ஹாண்ட்பாக்குடன் கிளம்பினாள். காரில் ஏறிக் கொண்டபோது சில கண்கள் அவளை ஒரு மாதிரிக் கவனிப்பதைப் பார்த்து அலட்சியப் படுத்தினாள். வேண்டுமென்றே நன்றாக உட்கார்ந்து அலட்சியத்தைத் தெரியப் படுத்தினாள். ஹரி காரைக் கிளப்பினான்.

"வித்யா, நீ இன்றைக்கு ரொம்ப அழகாயிருக்கே..."

காற்றில் முன் நெற்றியில் பறந்த தலை முடியை ஒதுக்கிக் கொண்டே 'தாங்க்ஸ்' சொன்னாள்.

"நேரே எங்கே போகலாம்!"

வித்யா திரும்பி ஹரியைப் பார்த்தாள்.

"இது என்ன கேள்வி? அனிதாவைப் பார்க்க...."

"ஐயாம் ஸாரி வித்யா. அனிதா இப்போது காலேஜில் இருப்பாள். உன்னை வெளியில் அழைத்துக் கொண்டு வர வேண்டும், உன்னோடு தனியாகப் பேச வேண்டுமென்பதற்காக அப்படி ஒரு பொய் சொன்னேன்."

வித்யாவினால் அவன் சாமார்த்தியத்தைப் பாராட்ட முடியவில்லை. அதை ஒரு சாமர்த்தியமாக நினைக்கக் கூட முடியவில்லை. மனசுக்குள் கோபம் வந்தது. அதை அடக்கிக் கொண்டாள்.

"நிறைய சினிமா பார்ப்பீர்கள் போலிருக்கிறது!"

"ஏன்?"

"அதில் வரும் வில்லன்களையெல்லாம் ரொம்ப பிடிக்குமோ? அதே மாதிரி நடந்து கொள்கிறீர்களே. அடுத்து என்ன, கார் மலை உச்சிக்குப் போகப் போகிறதா 'க்ளைமாக்'ஸுக்கு?"

ஹரி சிரித்தான்: "நன்றாகப் பேசுகிறாய் வித்யா."

"தாங்க்ஸ்."

"எங்கே போகலாம்?"

"நேராக என்னை நேற்று இறக்கிவிட்ட அதே இடம். வீட்டுக்காவது சீக்கிரம் போகலாம்."

"உன்னோடு கொஞ்சம் பேசணும் என்றேனே வித்யா?"

"என்ன பேசப் போகிறீர்கள்?"

"நிதானமாக ஆரம்பத்திலிருந்து சொல்லணும். அதற்கு ஒரு நல்ல இடமாகத் தேர்ந்தெடு முதலில்."

"ஏன் இவ்வளவு ப்ளான் பண்ணின நீங்கள் இடம் செலக்ட் பண்ணாமலா வந்திருப்பீர்கள்?"

"யூ ஆர் டூ க்ளவர் வித்யா. காந்தி மண்டபம்."

"காந்தி மண்டபமா?"

"வேண்டாமென்றால் ஏதாவது ரெஸ்டாரெண்ட்."

வித்யா யோசித்தாள். 'இந்த ஹரியை இதோடு கத்தரிக்க வேண்டும். அவளை அவனுக்குக் காட்ட வேண்டும். அவனது முட்டாள்தனத்தை உணரும்படி செய்ய வேண்டும். காதல் என்று அவன் தப்பாக நினைத்துக் கொண்டிருப்பதை உடைக்க வேண்டும். அதற்கு இப்போது ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஏன் விட வேண்டும்?'..."ஒ...கே. மிஸ்டர் ஹரி" என்றாள்.

கார் மவுண்ட் ரோடில் ஒரு ரெஸ்டாரெண்டிற்குள் நுழைந்தது. வித்யாவிற்கு அந்த ரெஸ்டாரெண்ட் மிகவும் பிடித்தது. ஆனால், ஹரி கூட வந்ததுதான் பிடிக்கவில்லை. அதை அவள் காண்பித்துக் கொள்ளவில்லை. 'இவனைச் சாமர்த்தியமாகச் சமாளிக்க வேண்டும்' என்று நினைத்துக் கொண்டாள். ஹரி கட்லெட் ஆர்டர் பண்ணினான்.

"என்னவோ பேச வேண்டுமென்றீர்களே ஹரி?"

"புரியாத மாதிரி கேட்கிறாயே.. வித்யா. நான் என்ன பேசப் போகிறேன் என்பது தெரியாதா?..."

வித்யா கோடியில் உட்கார்ந்து சிகரெட் பிடித்துக் கொண்டிருந்த ஒரு வட இந்தியப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஹரி பேசினான்:

"வித்யா, நீ என்னைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறாய். கேவலமானவனாக எண்ணுகிறாய். நான் அப்படிப்பட்டவன் இல்லை. என்னிடம் ஒரே ஒரு பலவீனம்தான் உண்டு. அழகான எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் விழுந்து விடுகிறேன். அதிகப் பணம், அதிகச் செல்வம் இரண்டும் எனக்குள் ஏற்படுத்தின பலவீனம் இது. அதுவும் உன்னைப் பார்த்த பின்னால், நின்று போய்விட்டது வித்யா. நீ எனக்குக் கிடைத்தால் நான் ரொம்ப மாறி விடுவேன். பொறுப்புள்ளவனாக ஆகிவிடுவேன்."

வித்யா அவனைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தாள்.

"நீங்கள் இந்த மாதிரி இருப்பதே நன்றாக இருக்கிறது ஹரி. எதற்காக வீணான பொறுப்புக்களையெல்லாம் இழுத்துப் போட்டுக்கொண்டு மாற நினைக்கிறீர்கள்?"

"வித்யா!"

வித்யாவின் குரலில் தொனி மாறியது: "ப்ளீஸ் ஹரி. என்னைப் புரிந்து கொள்ள முயலுங்கள். நானும் உங்களை விரும்புகிறேன். ஆனால் காதலிக்கவில்லை. காதல் என்பது மகத்தான விஷயம். அது ஒரு அழகான அனுபவம். அதை இப்படிக் கெடுக்காதீர்கள்...ஹரி. வெறும் உடம்பைப் பற்றின விஷயமில்லை அது. அதற்கெல்லாம் அப்பாற்பட்ட ஏதோ ஒன்று என்று நான் நினைக்கிறேன். வெறும் ஸெக்ஸ், காதலாகி விடாது ஹரி."

"வித்யா.....!"

"என்னைக் கொஞ்சம் புரியவைக்க விடுங்கள். உங்களுக்கு என் மீது ஏற்பட்டிருப்பது காதல் இல்லை ஹரி.... வெறும் ஸெக்ஸ். என் உடம்பின் மேல்—அதன் அழகான நிறத்தின் மேல்— வளைவுகளின் மீது ஏற்பட்டிருக்கிற கவர்ச்சி. ஒரே ஒரு நாள் இதெல்லாம் உங்களுக்குக் கிடைத்துவிடுமானால்,—ஒரு ராத்திரி அனுபவத்தில் உங்கள் காதல் முடிந்து போய் விடும். இல்லை என்று நீங்கள் இப்போது தலையாட்டலாம். ஐ நோ யு ஹரி. என்னை உங்களிடம் கொடுத்து இதை என்னால் நிரூபிக்க முடியும். ஆனால் நான் அதை விரும்பவில்லை. காதல் என்பது இரண்டு பக்கத்திலிருந்தும் ஒரே சமயத்தில் ஏற்படக்கூடிய ஒரு இனிமையான உணர்ச்சி. ஒரே ஒரு பார்வையில் கூட அது ஏற்பட்டு விடலாம். அந்த ஒரு விநாடி நேரத்தில் மனசுக்குள் ஏற்படும் அனுபவம்தான் காதல். அதன் பின் நடப்பது எல்லாம் அதைத் தொடர்ந்ததன் காரணமாக நிகழும் சாதாரண நிகழ்ச்சி

கள். அந்த ஒரு வினாடி அனுபவம் இருக்கிறதே, நட் ஈஸ் சம்திங் கிரேட். அது உங்களிடம் எனக்கு ஏற்படவில்லை. இனி மேலும் ஏற்படாது. உங்களுக்குள்ளும் அது நிகழ வில்லை. ஸோ, லெட் அஸ் பி பிரண்ட்ஸ் ...நண்பர்களாக இருப்போம். அதுதான் நமக்குள் சாத்தியம் ஹரி. என் ரசனைக்கு அது கூட உங்களிடம் சாத்தியமில்லை. ஆனாலும் நான்—"

"ப்ளீஸ் வித்யா. ஸ்டாப் இட். நீ ஒருத்திதான் புத்திசாலி, மற்றவர்கள் எல்லாம் முட்டாள்கள் என்று நினைக்க வேண்டாம். நீதான் உலகத்திலேயே அழகி என்ற நினைப்பும் வேண்டாம். உன்னைவிட அழகிகளை என்னால் உன் முன் கொண்டு வந்து நிறுத்த முடியும்."

அவன் முகம் சிவப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள். மனசுக்குள் சிரித்தாள்: 'மடையா, உன்னையே நீ இன்னும் புரிந்து கொள்ளவில்லை. முதலில் உன்னைப் புரிந்து கொள்ள முயற்சி செய். பின் மற்றவர்களை, அவர்களுக்குப் புரிய வைக்கலாம்.'

ஹரி ஆர்டர் பண்ணின கட்லெட் வந்தது. வித்யா அதை நிதானமாகச் சாப்பிட ஆரம்பித்தாள். அவன் தன்னுடையதைத் தொடக் கூட இல்லை.

"ஏன் சாப்பிடவில்லையா?" அவள் கேட்டாள்.

"நோ...தாங்க்ஸ்."

அவள் சாப்பிட்டு முடிக்கும்வரை பேசில்லை. ஹரி ஸ்டுவர்டைக் கூப்பிட்டுப் பில் தரச் சொன்னான். அந்த ஸ்டுவர்ட் அவர்களைக் கீழ்க்கண்ணால் ஒரு தரம் பார்த்து விட்டு பில்லைக் கொடுத்தனுப்பினான்.

எழுந்து வெளியே போகக் கிளம்பியபோது ரமணி கதவைத் திறந்து கொண்டு ரெஸ்டாரெண்டுக்குள்ளே வருவதை வித்யா பார்த்து விட்டாள். கூட இரண்டு பேர். ஹரியையும், வித்யாவையும் பார்த்ததும் ரமணியின் சிரிப்பு

நின்றது. கண்களின் பளபளப்பு மாறிவிட்டது. எதையோ கேட்க வாயெடுத்துவிட்டுப் பேசாமலிருந்தான். அந்தச் சந்திப்பைச் சாதாரணமாக்க வித்யா பாடுபட வேண்டியிருந்தது:

"ரமணி, மீட் மிஸ்டர் ஹரி. ஹரி இவர் ரமணி. என் உறவுக்காரர்."

இருவரும் கை குலுக்கிக் கொண்டார்கள். ரமணி தன் கூட வந்திருந்தவர்களை அறிமுகப்படுத்தினான். மேலே பேச ஒன்றுமில்லாமல் போகவே, "ஸோ, ஸீ யூ மிஸ்டர் ரமணி" என்று சொல்லிவிட்டு நகர்ந்தான் ஹரி. வித்யா ரமணியிடம் விடை பெற்றுக் கொள்ள நிமிர்ந்த போது அவன் அவளைத் தாண்டிக் கொண்டு போய்விட்டான். அகலமான அவன் முதுகுதான் அவள் கண்ணில் பட்டது.

அவனது அந்தச் செய்கை வித்யாவுக்குத் தன் மனசைக் கல்லால் அடித்த மாதிரி வலித்தது. அந்த வலி நெஞ்சைவிட்டு வயிற்றில் இறங்கியது.

'ரமணி, நீங்கள் தப்பாக ஏதோ நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படியெல்லாம் ஒன்றுமில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்களேன்...'

அவன் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் அவன் செய்கையிலிருந்தே தெரிகிறதே! வித்யா வெளியே வந்து விட்டாள். ஹரி கார் ஹாரனை அழுத்தினான். வித்யா அவனிடம் வந்து, "நீங்கள் போங்கள் ஹரி. நான் டாக்ஸியில் போய்க் கொள்கிறேன்" என்றாள்.

"ஓ...கே" என்று காரைக் கிளப்பிக் கொண்டு போய் விட்டான் அவன். அவனது கோபம் கார் போன வேகத்தில் தெரிந்தது.

வித்யா மெதுவாக நடந்து வெளியே வந்தாள். டாக்ஸியில் போகப் பிடிக்கவில்லை. 'இவ்வளவு சிக்கிரம் வீட்டுக்குப் போய் என்ன செய்வது? பேசாமல் வீடுவரை நடந்தே

குறிப்புதவிநூல்

போனால் என்ன? அப்போதைய மன நிலைக்கு நடை ஒரு நல்ல ரிலீப்:'

வித்யா எதிர்ப் பக்கம் ரோடைக் கடந்து நடக்க ஆரம்பித்தாள். அவள் மனம் ரமணியிடம் இருந்தது. அவனைச் சுற்றிக் கொண்டிருந்தது.

'ரமணி, உனக்குக்கூட இதே பார்வைதானா? ஒரு பெண்ணை ஒரு ஆணுடன் சேர்த்துப் பார்த்தால், கொஞ்சம் வித்தியாசமாக வேறு எதுவும் நினைக்கத் தோன்றாதா? அதே நினைவுதானா? ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் நடுவில் இந்த உறவு மட்டும்தான் ஏற்பட முடியுமா? ஏற்பட வழியுண்டா? அந்த ஒரு உறவிருந்தால் தான் அவள் அவனோடு வெளியே வருவாளா? ஓட்டலுக்கு, சினிமாவுக்குப் போவாளா? ரமணி, நீ கூடவா அப்படி நினைக்கிறாய்? நீயுமா அதே மாதிரி பார்க்கிறாய்? நீ விஷயம் தெரிந்தவன் என்று நினைத்தேனே, நீயுமா ரமணி? நீ கூடவா?"

வித்யா வீட்டுக்கு வந்தபொழுது வாசலில் ரமணியின் கார் நின்று கொண்டிருந்தது. அவள் உள்ளே நுழையும் போது ரமணி கிளம்பிக் கொண்டிருந்தான். வித்யாவைப் பார்த்தான். ஒன்றும் கேட்கவில்லை. வேகமாக வெளியே போய் விட்டான்.

578253

'இவ்வளவுதானா நீ?'— என்ற கசப்புடன் உள்ளே வந்தாள்.

894.8113 PER

"காபி இருக்காம்மா?"

அம்மாவிடமிருந்து பதிலில்லை. டங்கென்று கையில் இருந்த வெண்கல உருளியைப் பக்கத்து மேடையில் வைக்கும் சத்தம் மட்டும்தான் கேட்டது. வித்யா காபி இருக்கிறதா என்பதைத் திருப்பிக் கேட்டாள். அதே மவுனம்தான் பதிலாகக் கிடைத்தது. அவள் வெளியே வந்து விட்டாள்.

அன்று முழுவதும் அம்மா அவளிடம் பேசவே இல்லை.

PUBLIC LIBRARY

6

ரமணி அம்மாவிடம் எல்லாவற்றையும் சொல்லியிருக்க வேண்டும். ஹரியையும், அவளையும் டிரைவ் இன்னில் பார்த்தது, நேற்று பாம்ஹூஹட்டிற்கு வந்திருந்தது. எல்லாவற்றையும். ரமணி மாதிரியே அம்மாவும் அதைத் தப்பாகத் தான் எடுத்துக் கொண்டிருக்கிறாள். அதனால்தான் இந்த பேசாமடைந்தைத்தனம். அம்மாவாக வாய் திறந்து கேட்கட்டும். 'அப்படியில்லை அம்மா. நீங்கள் தப்பாக நினைத்துக் கொண்டு விட்டீர்கள்' என்று சொல்லிப் புரிய வைக்கலாம். ஆனால் அம்மா புரிந்து கொள்வாளா? நம்புவாளா? நம்பா விட்டாலும் உண்மை உண்மைதானே!

வித்யா நினைத்த மாதிரியே அம்மா அவள் சொன்னதை நம்ப மறுத்தாள். காலையில் வித்யா சாப்பிட உட்கார்ந்து கொண்டாள். வழக்கமாக உட்காருகிற மாதிரி தங்கைகளோடு உட்கார்ந்து கொண்டாள்.

"ராஜி, விஜி உங்களுக்கு அப்புறமா சாதம் போடறேன். எழுந்து போங்கோ" என்று அவர்களை அனுப்பி விட்டாள் அம்மா.

வித்யா தனக்கு விசாரணை நடக்கப் போவதைப் புரிந்து கொண்டு தன்னை அதற்குத் தயார்ப் படுத்திக் கொண்டாள். 'நடந்ததை அப்படியே சொல்லி விடலாம். எதற்காகப் பயப்பட வேண்டும்?' என்று நினைத்துக் கொண்டாள்.

"இந்த விஷயம் அப்பாவுக்குத் தெரிந்தால் என்ன ஆகும் தெரியுமாடி?"

சாதத்தோடு கேள்வியும் வந்து விழுந்தது. வித்யா சாதத்தைத் தொட்டாள். நல்ல சூடு. சாதம் கையில் ஒட்டிக் கொண்டு விட்டது. உதறிக் கொண்டே, "எந்த விஷயம்?" என்று அம்மாவைப் பார்த்தாள்.

"என்ன நெஞ்சு தைரியம்டி உனக்கு? எந்த விஷயம்னு என்னையே திருப்பிக் கேக்கறியே?"

"எந்த விஷயம்னு தெரிஞ்சாத்தானேம்மா பதில் சொல்ல முடியும்!"

"நீ எவனோ ஒருத்தனோட ஹோட்டல் ஹோட்டலா சுத்தற விஷயம்."

வித்யாவின் மனசில் அந்த வார்த்தைகள் அம்பாகக் குத்திக் கொண்டன.

"அம்மா?"

"என்னடி அம்மா? ரமணியைப்பத்தி நான் பேச்செடுத்த போதெல்லாம் நழுவினது இதனாலே தானா? அப்பாவோட சண்டை போட்டது, ஆபீசுக்குப் போறேன்னு கிளம்பினது, வீட்டைவிட்டுப் போறேன்னு பயமுறுத்தினது எல்லாம் அவனுக்காகத் தானே?"—அவள் மனசில் மேலே மேலே நெருப்புத் துண்டுகள் வந்து விழுந்தன. சூடு தாங்காமல் வித்யா உள்ளுக்குள்ளேயே அழுதாள்.

'அம்மா, நான் என்ன சொல்லி என்ன பிரயோஜனம்! இதெல்லாம் இல்லைன்னு சொன்னால் நீ நம்பப் போறியா? நம்ப மாட்டாய். இப்போது நான் எது சொன்னாலும் நீ கேட்கப் போறதில்லை. கேட்டுக்கொள்ள உன்னாலே முடியாது!'

"அப்பா அன்னைக்குச் சொன்னது சரியாத்தானே இருக்கு! மூத்த பொண்ணைக் கெடுத்தது போதும், இவளையும் கெடுத்துடாதேன்னாரே. நான் உன்னை நம்பினேன். நீ என்னை ஏமாத்திட்டே...."

வித்யாவின் கண்களில் நீர் தளும்பியது:

"ப்ளீஸ். இப்படியெல்லாம் பேசாதேம்மா. நான் சொல்றதைக் கொஞ்சம் கேளேன். பொறுமையாகக் கேளேன்."

"உன்னைப்பத்திக் கேட்டதெல்லாம் போறும். இனி மேலி எதையும் கேட்க நான் தயாரில்லை. ஒன்று சொல் லுறேன், நீ கேட்டுக்கோ. இது மானமாக வாழ்ந்த குடும்பம். நீ அதையெல்லாம் குலைச்சுடாதே. உனக்குக் கீழே இரண்டு பேர் இருக்கான்றதை ஞாபகம் வச்சுக்கோ. உன் நல்லது கெட்டது உன்னோட போயிடாது."

வித்யா கையை உதறிக் கொண்டு எழுந்து விட்டாள். பஸ்லில் வரும் போதெல்லாம் அம்மாவின் வார்த்தைகள் மனசில் அடிகளாக விழுந்து கொண்டேயிருந்தன.

'எவனோ ஒருத்தனோட ஹோட்டல் ஹோட்டலா சுத்தறது...'

'அப்பாவோட சண்டை போட்டது, ஆபீசுக்குப் போறேன்னு ளம்பினது எல்லாம் அவனுக்காகத் தானே?'

'மானமா வாழ்ந்த குடும்பம் இது. நீ எல்லாத்தையும் குலைச்சுடாதே...'

'மைகாட்! உண்மையைத் தெரிஞ்சுக்காமல் எத்தனை பேச்சுக்கள்! நாக்குக் கொடுக்கிலிருந்து கொட்டின விஷ கள். மனச அதில் நீலம் பாய்ஞ்ச போச்சே. அம்மா... அம்மா, நீயா இப்படியெல்லாம் விஷமாக நெஞ்சில் இறக்கற? நெருப்பாகச் சுடற? என்னைப் புரிஞ்சுக்கோமா...ப்ளீஸ், என்னை நம்பும்மா...'

கண்டக்டர் அவளருகில் வந்து பஸ்ஸின் வெளிப் பக் கத்தில் தட்டினான். வித்யா விழித்துக் கொண்டு பார்த்தாள். பாரீஸ் கார்னர் வந்துவிட்டது. எல்லாரும் இறங்கி விட்டார்கள். அவளும் இறங்கி நடந்தாள். ஆபீசுக்குள் நுழையும்போதே ஷீலா மாத்யூவின் அழகான சிரிப்பு. இனிமை யான குட்மார்னிங் வித்யாவுக்கு மனசைப் பஞ்சால் துடைத்து விட்ட மாதிரி இருந்தது. வலி கொஞ்சம் குறைந்தது. லிஃப்டில் போகும்போது ஷோபாவின் சித்தப்பாவும் கூட

வந்தார். ஷோபா அன்று ஆபீசுக்கு வரமாட்டாள் என்பதைத் தெரிவித்தார். அன்று அவளைப் பெண் பார்க்க வருகிறார்களாம். 'ஷோபா கூடவா ஒரு நிமிஷம் பார்த்து விட்டுப் போய் உடனே சம்மதித்து ஏற்பாடு பண்ணும் கல்யாணத்துக்கு ஒப்புக்கொள்கிறாள்? அந்த ஒரு நிமிஷப் பார்வையில் எதைத் தெரிந்துகொள்ள முடியும்? அவன் அழகாக இருக்கிறானா, இல்லையா என்பது மட்டும் தெரிந் தால் போதுமா? வேறு எதுவும் தெரிய வேண்டாமா? ஷோபா, எப்படி முடிந்தது உன்னால்?'—ஒரு நிமிஷ அநுதாபத்தை அவளுக்காக ஒதுக்கிவிட்டுத் தன் பிரச்னைக்கே மீண்டும் திரும்பி விட்டாள்.

கொலேட்டரின் எதிரே போய் நின்றாள். ஷோபா வராததால் டேபுலேட்டரையும் அவளே கவனித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. 'எவனோ ஒருத்தனோட ஹோட்டல் ஹோட்டலா சுத்தற விஷயம்...' மனசில் அடித்த அம்மாவின் பலமான அடிகள்...அதன் வலி எட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தது.

வித்யா உதறித் தள்ளிவிட்டு ஒயரைச் சரிபார்த்துச் செருகிக் கொண்டிருந்தாள். கொலேட்டரில் கார்டுகளை வைத்துப் பிரித்து அடுக்கினாள். திரும்ப டேபுலேட்டரின் பக்கத்தில் வந்து நின்றாள்.

'எவனோ ஒருத்தனோட ஹோட்டல்.'

'நோ.' வித்யா உதட்டைக் கடித்துக் கொண்டாள். 'சி! திரும்பத் திரும்ப இதென்ன நினைவு?' வாட்டர் கூலரிலிருந்து தண்ணீர் பிடித்துக் குடித்துவிட்டு மெஷின் எதிரே வந்து நின்றாள்.

கொலேட்டரை ஆன் பண்ணினாள்.

"வித்யா, உலக்கு போன்."

மெஷினை ஆஃப் பண்ணிவிட்டு பஞ்சிங் மெஷின் சுமிற்குப் போய் ரிஸீவரை எடுத்தாள்.

ரமணி!

"வித்யா?"

"ம்....."

"இன்னிக்கு சாயங்காலம் உன்னாலே பீச்சுக்கு வர முடியுமா?"

"பீச்சுக்கா? எதுக்கு?"

"உன்னோட தனியாகப் பேசணும்?"

"தனியாகப் பேசணுமா?"

"ஆமாம்."

"எந்த பீச்சுக்கு?"

"காந்தி சிலைக்கு எதிரே, மணலில்."

அவளுக்கும் தனியாக ரமணியிடம் பேச வேண்டும் போலிருந்தது. அதனால் சரி என்றாள்.

"எத்தனை மணிக்கு?"

"சரியாக ஐந்தரை, ஓ.கே.?"

வித்யா மத்தியானமும் சாப்பிடவில்லை. எதுவும் உள்ளே இறங்க மறுத்தது. 'எவனோ ஒருத்தனோட ஹோட்டல் ஹோட்டலா...! ஹரி, நீ எனக்கு எப்படிப்பட்ட சொற்களைத் தேடித் தந்திருக்கிறாய் பார்த்தாயா? எல்லாம் உன்னால் வந்ததுதானே? ஆபீசில் இருந்தவளை வந்து அழைத்துக் கொண்டு போனாயே! அவன் கூப்பிட்டால் ஏன் போக வேண்டும்? போனதில் என்ன தவறு? ஆனால் தவறு எங்கே, எதில் நேர்ந்தது? யார் மேல் தப்பு இப்போது? எது தப்பு? எது சரி?'

மாலை ஐந்தரைவரை இதே நினைவு. ஐந்தடித்ததும் வித்யாதான் முதலாவதாக ஆபீசை விட்டுக் கிளம்பினாள். பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருக்கவில்லை. டாக்ஸி பிடித்தாள். வழியெல்லாம் ரமணியிடம் பேச வேண்டியதைப் பற்றியே யோசித்தாள். அவனைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாளோ, அதையெல்

லாம் சொல்லிவிட வேண்டுமென்று நினைத்தாள். எதையும் மறைக்கக் கூடாது. மறந்துவிடக் கூடாது. நேற்று ஹரியிடம் சொன்ன மாதிரி எல்லாவற்றையும் சொல்லி விட வேண்டும்.

காந்தி சிலைக்குப் பக்கத்தில் அவள் இறங்கியபோது ரமணி அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். டாக்ஸிக்குப் பணம் கொடுக்க பான்ட் பாக்கெட்டிலிருந்து அவன் பர்ஸை எடுப்பதற்குள் வித்யா கொடுத்து விட்டாள். இருவரும் பேசாமலேயே மணலில் இறங்கி நடந்தார்கள். இன்னும் மஞ்சள் வெயில் சரியவில்லை. மேற்கே வானத்தில் திட்டுத் திட்டாக, பட்டை பட்டையாக அது மறையும் சிவப்பு. அதன் பக்கத்தில் நல்ல வெள்ளையில் சின்னச் சின்ன மூட்டைகளாக நகரும் துண்டு மேகம். வானம் பார்க்க அழகாக இருந்தது. தண்ணீருக்கு அருகில் வரிசையாக ரொம்ப தூரத்திற்குப் பரப்பப்பட்டிருந்த கட்டுமரங்கள். அந்தக் காட்சி, வெளிநாடுகளில் கடற்கரை மணலில் ஸன் பாத் எடுக்க வரிசையாகப் படுத்துக் கொண்டிருப்பார்களே, அதை நினைவு படுத்தியது. அதே நினைவு அவனுக்கும் ஏற்படுகிறதா என்று கேட்க வேண்டும் போலிருந்தது. ஆனால் கேட்கவில்லை.

"இங்கே இதன் மேலேயே உட்கார்ந்து கொள்ளலாமா?" ரமணி கேட்டான். வித்யா சரி என்று தலையாட்டினாள். இருவரும் உட்கார்ந்து கொண்டார்கள்.

"ஏதாவது சாப்பிடுகிறாயா வித்யா?"

வித்யா மறுக்கவில்லை. அவன், பக்கத்தில் போன முறுக்கு, மிளகுவடையைக் கூப்பிட்டு வாங்கினான். தன் கையிலிருந்த புத்தகத்தை இரண்டு பேருக்கும் நடுவில் வைத்து அதன் மேல் அவற்றை வைத்தான்:

"எடுத்துக் கொள் வித்யா."

அவள் ஒரு முறுக்கை எடுத்துக் கடித்துக் கொண்டே கேட்டாள்:

"நேத்திக்கு என்னை ரெஸ்டாரெண்டில் பார்த்ததை அம்மாகிட்டே சொன்னீர்களா?"

ரமணி பேசாமல் வடையைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"ரமணி, உங்ககிட்டே ஒண்ணு கேட்கலாமா?"

அவன் நிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்தான்?"

"இப்போ இங்கே நம்மைப் பார்க்கிறவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்?"

அவனிடமிருந்து பதில் இல்லை. அவள் எதை சொல்ல முயற்சிக்கிறாள் என்று அவன் யோசிப்பதாக அவகளுக்குப் பட்டது.

"சொல்லுங்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்?"

"வித்யா..."

"நாம் ரெண்டு பேரும் காதலர்கள். ஜாலியாகப் பேசிக் கொண்டிருக்க—இருட்டினதும் அந்த இருட்டை—தனிமையை உபயோகப்படுத்திக் கொள்ள இங்கே வந்திருக்கிறோம் என்றுதானே நினைத்துக் கொள்வார்கள்?"

அவன் கையிலிருந்த பாதி வடையைத் தூக்கி எறிந்தான்.

"ஆனால் உண்மை அதுதானா ரமணி? பார்க்கிற பார்வைக்கும் உண்மைக்கும் ரொம்ப வித்தியாசமிருக்கிறது ரமணி. நினைக்கிற நினைப்புக்கும் நிஜத்துக்கும் நிறைய தூரமிருக்கிறது ரமணி."

"வித்யா,..."— அவன் குரலில் ஒரு நடுக்கம் தெரிந்தது; தப்பு செய்து விட்ட நடுக்கம்.

"நாம் பார்க்கிற பார்வை சரி. நினைக்கிற நினைப்பு தான் நிஜம் என்றிருக்கக் கூடாது. ஏன் மாறுபட்டு இருக்கக் கூடாது என்பதை யோசிக்க வேண்டும்."

"வித்யா நீ...என்ன சொல்றே?"

"இப்போது யாராவது நம்மைப் பார்த்துவிட்டு நாளைக்கு அப்பாகிட்டே போய் 'உங்க பொண்ணையும், இன்னொரு பையனையும் பீச்சிலே பார்த்தேன். பார்த்த நெலமை சரியில்லே. பொண்ணைக் கொஞ்சம் கண்டிச்சு வையுங்க'ன்னு சொன்னால் என்ன ஆகும்?"

"வித்யா, ப்ளீஸ், என்னை மன்னிச்சுடு. நேத்திக்கு நான் அவசரப்பட்டு அம்மாகிட்டே சொல்லிட்டேன்."

"நான் ஹரியோட ரெஸ்டாரெண்டுக்குப் போனது மட்டும்தானே உங்களுக்குத் தெரிஞ்சது. ஏன் போனேன், என்ன பேசினேன் என்று ஏதாவது உங்களுக்குத் தெரியுமா? தெரிஞ்சிருந்தா அம்மாகிட்டே சொல்லியிருப்பீங்களா? ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் சேர்த்து பார்த்தவுடனேயே இதுதான் என்று நிர்மானிக்க உங்க மனசெல்லாம் எப்படித் துணியறது?"

ரமணியின் தலை இன்னும் குனிந்து விட்டது:

"இதையெல்லாம் நான் உங்கக்கிட்டே சொல்லணும் என்கிற அவசியமில்லை ரமணி. உங்க மனசிலே ஏற்பட்டிருக்கிற சந்தேகத்தைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. நீங்கள் எதை வேண்டுமானாலும் என்னைப் பற்றி நினைத்துக் கொள்ளலாம். அது என்னைப் பாதிக்கப் போவதில்லை. ஆனால் பாதிக்கக் கூடிய ஒரு நபர்கிட்டே நீங்கள் போயிருக்கிறீர்கள். அந்த மனசிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். என்னை...நான்... இன்னைக்குக் காலையிலிருந்து எதுவும் சாப்பிடவில்லை ரமணி. என்னாலே எந்த வேலையும் செய்யமுடியலை. நான் வாங்கப் போகும் இந்த ஒருநாள் சம்பளம் தண்டம். எல்லாம் உங்களால்தான் ரமணி. எதையும் யோசிச்சுப் பார்க்காமல் அவசரப்படும் உங்கள் குணத்தால், பொறாமைப்படும் உங்கள் மனசால், அநாவசியமான சந்தேகத்தால்தான். 'எவனோ ஒருத்தனோட ஹோட்டல் ஹோட்டலா... 'மைகாட்! நானா? நானா?

—ம்மா கேட்ட அந்தக் கேள்வி உங்களால் தானே? என்னால் மறக்க முடியுமா ரமணி?''

வித்யா வெடித்து அழுகையில் உடைந்து போனாள். கைக்குட்டையால் வாயை இறுக்கிக் கொண்டு சத்தம்வராமல் அழுதாள். அதைப் பார்த்ததும் ரமணியின் மனசும் உடைந்தது.

அவள் கண்களைத் துடைத்து அழுகையை நிறுத்த வேண்டும் போலிருந்தது. அவளை மடிமேல் போட்டுக் கொண்டு மன்னிப்புக் கேட்கத் துடித்தான். அதையெல்லாம் ''ஐயாம் ஸாரி வித்யா...'' என்ற ஒரே வார்த்தையில்—அதன் முழுதழுப்பில் முழுசாக வெளிப்படுத்தினான்:

''ஐயாம் வெரி ஸாரி. இரண்டு நாளாக உன்னை அவனோடு பார்த்ததும் என் மனசே உடைஞ்சு போச்சு வித்யா. உனக்குத் தெரியாது. நான் உன் மீது அளவு கடந்த ஒரு அன்பை வைத்து விட்டுத் தவிக்கிறேன். உலகத்தில் உள்ள எல்லாவற்றையும்விட உன்னை மேலாக நினைக்கிறேன். நீ எனக்குக் கிடைக்காமல் போய் விட்டால் நான் உள்ளுக்குள் உடைந்து போய்விடுவேன் வித்யா. அதன் பின் என்ன ஆவேன் என்பது எனக்கே தெரியாது. அந்த மாதிரி மூர்க்கமாய் உன்னை நேசிக்கும்போது அவனோடு சேர்த்துப் பார்த்ததும், நீ சொன்ன மாதிரி ஒரு பொறாமை—எங்கே நீ அவனுக்குச் சொந்தமாகி விடுவாயோ என்ற பயம்— நீ அவனைத்தான் நேசிக்கிறாயோ என்ற ஏமாற்றம் எல்லாம் சேர்த்து என்னை ஒரு பொறாமைக்காரக் குழந்தையாக்கி விட்டது, கேவலமாக நடக்க வைத்து விட்டது. ஐயாம் ஸாரி வித்யா, தயவு செய்து என்னை மன்னித்து விடு:''

அவனது உருக்கமான அந்த வார்த்தைகளைக் கேட்டு வித்யா பதில் சொல்ல முடியாமல் சமுத்திரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அது மணலோரம் அலையாக ஓடி வந்து இரைந்து விட்டு உள்ளே ஓடிக் கொண்டிருந்தது. வெளியே போக ஒரு வழி தேடித் தவிப்பதைப் போலிருந்தது.

அதற்கு மீட்டி இல்லை.

7

அன்று கடற்கரையில் கூட்டம் இல்லை. டிசம்பர் மாத நெருக்கத்தில் இலேசான குளிர். அமாவாசை போய் நாலு நாளாகிவிட்டதைக் காட்டும் மூளி நிலா. அதன் மக்கல் வெளிச்சம். 'உன்னைவிட நாங்கள் பளபளக்கிறோம் பார்' என்று பெருமையாக மின்னும் நட்சத்திரங்கள். வெள்ளை அலைகளின் நுரை நுனி வெள்ளியாகச் சுருட்டிக் கொண்டு வந்தது. எத்தனை புரளல்! வித்யா அந்த மனநிலையிலும் அதை ரசித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். எதிரே ரமணி இருப்பதையும் மறந்துவிட்டு—அவன் சொன்னது எதுவும் ஞாபகமில்லாமல் சின்னக் குழந்தை மாதிரி குளிருக்கு உடம்பை ஒடுக்கிக்கொண்டு ஒரு மௌனத்தில் கரைந்து கொண்டிருந்தாள். அந்த இடத்தில் அதே மாதிரி வாழ்நாள் முழுவதும் உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும் போலிருந்தது. ஆனால் தனியாக உட்கார வேண்டும். கூட யாரும் இருக்கக் கூடாது. யாரும் வேண்டாம். 'மனிதர்கள்! மனிதர்கள்!! வேண்டாமே'—வித்யா உதட்டைப் பற்களால் அழுத்திக் கொண்டாள்.

'எங்கேயாவது ஆப்பிரிக்காவில் போய் ஏன் பிறக்காமல் போய்விட்டோம்? காடுகளில் திரிந்து கொண்டு, மிருகங்களைப் பார்த்துக் கொண்டு, கிடைத்ததைச் சாப்பிட்டுக் கொண்டு எத்தனை சந்தோஷமாக இருக்கலாம்! இங்கு வந்து பிறந்து...நமக்கு நாகரிகம் வளர்ந்திருக்கிறதாம். யார்

சொன்னது? வாழ்க்கை வசதிகளில் நான் நாகரிகம் இருக்கிறதென்றால் அது வளர்ந்திருப்பது நிஜம்தான். ஆனால் உள் மனசில் அது இல்லை. மனம் இன்னும் அதே கற்காலத்திலதான் இருக்கிறது. அதை மறைக்க, மறுக்க, மறந்துபோக நாம் எதையெதையோ செய்து கொண்டிருக்கிறோம். வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறோம். ஆளுக்குத் தகுந்த வேஷம். இடத்திற்கு ஏற்ற வேஷம். எல்லாம் ஏமாற்றல். ஏமாற்றி, ஏமாந்து கொண்டு...

ரமணி பேசாமல் உட்கார்ந்திருந்த வித்யாவையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்த அரை இருட்டில், இலேசான மக்கல் மஞ்சளில் அவள் முகம் அழகாயிருந்தது. கண்களின் ஈரம், எங்கோ பார்த்துக் கொண்டிருந்த பார்வை, அதன் பளபளப்பு.—'வித்யா, நீ ஒரு தனித்தன்மையான சுபாவம் கொண்ட பெண். உன்னைப் புரிந்து கொள்வது கஷ்டம்தான். உன்னைப் புரிந்து கொள்ள முடியாத வெறும் மனிதன் நான். சாதாரணமான ஆசைகளோடு சேர்ந்த சாதாரண மனிதன். எனக்கு இயந்திரங்கள் தெரியும். இந்த வருட லாபம் எவ்வளவு என்று பார்க்கத் தெரியும். மார்க்கெட்டை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்கத் தெரியும். அதற்கு மேலே தாண்டி வேறெங்கும் என் யோசனை போனதில்லையே வித்யா? ஆனால் நீ எனக்கு மனைவியானால் உன்னை எப்படி வைத்துக்கொள்ள வேண்டும்—எந்தெந்த விதத்தில் சந்தோஷப்படுத்த வேண்டும்—எதையெல்லாம் வாங்கிக் கொடுக்க வேண்டும்—எங்கெல்லாம் அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்ற சராசரித்தனமான யோசனைகள் எனக்கு வந்திருக்கிறதே தவிர, உன்னை மாதிரி என்னால் யோசிக்கவே முடிவதில்லை. எனக்குத் தெரிகிறது என்னை. நீ என்னிடம் பார்க்கும் குறைகளை நானும் பார்க்கிறேன். ஆனால் வித்யா, நீ எனக்கு வேண்டும். நீ மட்டும்தான் வேண்டும். நீ இல்லாவிட்டால் எனக்கு ஒன்றுமே இல்லை. உன்னைப் பார்த்த நிமிடத்திலிருந்து இதை நான் எனக்குள் வளர்த்துக் கொண்டுவிட்டேன். நீ

நிச்சயமாக எனக்குத்தான் என்ற நம்பிக்கையை உன் அம்மாவும், அப்பாவும்கூட தங்கள் செய்கைகளினால் வளர்த்துவிட்டுவிட்டார்கள். இனி உன் நினைவில் மட்டுமே நிறைமும் துளிர்விட்டுக் கொண்டிருக்கும் செடி நான். நீ இல்லையென்று ஆகிவிட்டால்—நீ அதற்குத் தண்ணீர் ஊற்றாவிட்டால் வாடி வதங்கி அழிந்து...

'நோ! என்னால் அந்த மாதிரியெல்லாம் யோசிக்கக்கூட முடியவில்லை. ப்ளீஸ் வித்யா, என்னைப் புரிந்து கொள்ளேன். நான் உன் மீது வைத்திருக்கும் அன்பைப் பாரேன். அந்த அன்பின் காரணமாக, வெறும் பொறாமையால் ஏதாவது தப்புப் பண்ணியிருந்தால் மன்னித்துவிடேன். உன்னால் முடியும் வித்யா. உன் மனசின் சுரத்தை நான் பார்த்திருக்கிறேன். யாராவது கஷ்டப்பட்டால் நீ உருகும் உருகல் எனக்குத் தெரியும். அந்த மாதிரி மனசுக்கு யாரையும் மன்னிக்கத் தெரியும். எதையும் மறந்துவிட முடியும். இதையெல்லாம் என்னால் சொல்ல முடியவில்லை வித்யா. சொல்லத் தெரியவில்லை. உன்னைப்பற்றி நான் நினைப்பதையெல்லாம் உனக்குச் சொல்லிட வேண்டும் என்று தவிக்கிறேனே, இந்தத் தவிப்பை மட்டுமாவது புரிந்துகொள் வித்யா...!'

ரமணி அவளிடம் மனசுக்குள்ளேயே பேசி, தனக்கு அவள் மீதிருக்கும் மூர்க்கத்தனமான அன்பை வெளிக்காட்டப் பாடுபட்டுக் கொண்டிருந்தான். மேலே பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்ற ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருந்தான். பேசிக் கொண்டிருந்த பேச்சை விட்டு விலகி வித்யா எங்கோ போய்க் கொண்டிருப்பதை உணர்ந்து அவளைத் திரும்பத் தன் அருகே கொண்டு வர நினைத்தான்.

"வித்யா" என்று மெதுவாகக் கூப்பிட்டான். அவள் திரும்பி அவனைப் பார்த்தாள்.

"என்ன யோசனை?"

"ஒன்றுமில்லை ரமணி. தனியாக இங்கே இப்படியே உட்கார்ந்து கொண்டிருக்க மாட்டோமா என்றிருக்கிறது."

"உனக்கு ஏன் எப்போதும் தனியாகவே இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது? எனக்கு அப்படித் தோன்றுவதில்லை வித்யா. நான் தனியாக இருக்கும் போதுகூட உன்னை என் பக்கத்திலே உட்கார வைத்துப் பார்ப்பேன்...."

"ரமணி..."

"அஞ்சு வருஷமா உன்னை எனக்குள் வைத்து ஆராதனை பண்ணிக்கொண்டு வருகிறேனே, இதுவரை அதை எப்போதாவது சொல்லியிருக்கேனா வித்யா? இப்போது சொல்லுகிறேன். எல்லாவற்றையும் சொல்ல நினைக்கிறேன் இனிமேலும் தயங்கிக் கொண்டே நாட்களைத் தள்ளிப்போட நான் இஷ்டப்படவில்லை வித்யா. உன் மனசைத் தெரிந்து கொண்டு மேலே..."

"ரமணி, இது நடக்காமலும் போகலாம் என்று நீங்கள் நினைத்துப் பார்க்கவில்லையா?"

"என்னால் முடியவில்லை வித்யா. அப்படி நினைக்கக் கூட என்னால் முடியாது..."

"ரமணி...நாம் இரண்டு பேரும் எல்லா விதத்திலும் வேறுபட்டவர்கள். உங்கள் நினைவு மனசின் போக்கு, எண்ணங்களின் ஓட்டம் இவற்றிலிருந்து நான் தள்ளி நிற்கிறேன். நாம் ஒருவருக்கொருவர் எத்தனை மாறுபட்டவர்கள் என்பதாவது தெரிகிறதா?"

"வித்யா...?"

"உங்களை அநுசரிக்கக் கூடிய, ஒத்துப்போகக் கூடிய, உங்கள் மென்மையான மனசின்படி நடந்துக் கொள்ளக்கூடிய ஒரு அழகி உங்களுக்குக் கிடைப்பாள் ரமணி."

"வேண்டாம் வித்யா. எனக்கு நீ கிடைத்தால் போதும். உன்னாலேயே நீ சொன்ன அத்தனையும் முடியும்."

"முடியாது ரமணி. எனக்கு எதிலும் ஓர் ஒட்டாத தன்மை ஏற்பட்டு விட்டது. நான் எங்கோ, எதிலோ மிதந்து கொண்டிருக்கிறேன். நான் கீழே இறங்கி நிஜவாழ்க்கைக்கு வரவே ரொம்ப நாளாகும் ரமணி."

"அதுவரை காத்துக் கொண்டிருக்கிறேன் வித்யா. எத்தனை நாளானாலும், வருஷமானாலும் பரவாயில்லை."

"நோ..." —வித்யாவின் குரல் நடுங்கியது: "வேண்டாம் ரமணி. தயவு செய்து வேண்டாம். நம் வாழ்க்கை நிம்மதியாக இருக்காது. நம்மால் சந்தோஷமாக இருக்க முடியாது வேண்டாம்."

"பரவாயில்லை வித்யா. எப்படியிருந்தாலும் நீ என்னுடன், என் பக்கத்தில் இருந்தால் போதும்."

வித்யா வேதனையோடு சிரித்தாள். "மனிதர்கள் வாழ்வதே நிம்மதிக்காகவும், சந்தோஷத்துக்காகவும் தானே! அதுவே வேண்டாம் என்றால்...?"

ரமணி பதில் சொல்ல முடியாமல் தவித்தான்.

"எனக்கு உன்னை மாதிரி பேசத் தெரியாது வித்யா. ஒன்று மட்டும்தான் சொல்லத் தெரிகிறது; நீதான் என் வாழ்க்கை, நிம்மதி, சந்தோஷம், எதிர்காலம் எல்லாம்."

வித்யாவுக்கு எரிச்சல் வந்தது. அதை அடக்கிக் கொண்டு கேட்டாள்:

"என்னைப்பற்றி நினைத்துக்கூடப் பார்க்கவில்லை இல்லையா, ரமணி?"

"வி...த்...யா?"

"நான் என்ன நினைக்கிறேன், என் ஆசைகள் என்ன வாக இருக்கும் என்பதிலெல்லாம் அக்கறையே இல்லை, இல்லையா ரமணி?"

அவன் தடுமாறிப் போனான். "டோன்ட்... டோன்ட் யூ லைக் மீ வித்யா?"

"லைக்கிங் இஸ் சம்திங் டிஃபரண்ட் ஃப்ரம் லௌவிங்... எனக்கு உங்களைப் பிடித்திருக்கிறது என்பதிலிருந்து உங்களைக் காதலிக்கிறேன் என்பது வித்தியாசப்பட்ட தில்லையா ரமணி?"

ரமணி கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டான். இதற்கு என்ன பதில் சொல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. அவள் தன்னைக் காதலிக்கவில்லை என்பது உள் மனசுக்குத் தெரிந்திருந்தாலும் அந்த உண்மை நேராக முகத்தைத் தாக்கும்போது கஷ்டமாக இருந்தது.

"நேற்று ஹரியிடம் இதையே தான் சொன்னேன். கொஞ்சம் மாற்றிச் சொன்னேன். 'நீ எனக்கு ஒரு நண்பனாகக்கூட இருக்க முடியாது' என்பதைத் தெளிவு படுத்தினேன்."

"நான் நண்பனாக இருக்கலாம் என்கிற அனுமதியை எனக்குக் கொடுக்கிறாயா வித்யா? என்னை ஒரு நண்பனாக மட்டுமே நினைக்கிறாயா?"— அவன் குரல், கண்கள் எல்லாமே லேசான அழுகையைக் காட்டின. வித்யா பேசாமலிருந்தாள். ரமணி திடீரென்று அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான். அதை வித்யா எதிர்பார்க்கவில்லை. ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தாள். அவன் கண்கள் ஈரத்தில் மினுமினுத்தன. அந்த மினுமினுப்புக்கு அடியில் ஒரு சோகம் தலை தூக்கியது. அவன் குரல் நடுங்கியது; உதடுகள் நடுங்கின; வார்த்தைகளில்கூட ஒரு நடுக்கம்:

"ப்ளீஸ் வித்யா, தயவு செய்து என்னை விட்டு விடாதே. ப்ளீஸ்...நீ இல்லாமல் என்னால் வாழவே முடியாது...ப்ளீஸ்..."

அந்த வார்த்தைகள், அவனது உருகல்கள் எல்லாம் அவளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்தன. 'ரமணி, நீ ஏன் என்னை இவ்வளவு நேசிக்கிறாய்? அப்படி என்னிடம் என்ன பார்த்தாய்? நீ வித்தியாசமாக எடுத்துக் கொள்ளும்படி நான் எதுவும் பேசினதுகூட இல்லையே ரமணி. எவ்வளவு ஜாக்கிரதையாக நடந்து கொண்டேன். அப்படியிருந்துமா?' அவள் அம்மாவை நினைத்துக் கொண்டாள்; "அம்மா, ரமணிக்கு நான் சரி என்று சொன்னால் நீ சந்தோஷப்படுவாயா?' அப்பாவை நினைத்தாள்; தங்கைகளை, தம்பியை நினைத்துப் பார்த்தாள்; ரமணியைப் பார்த்தாள், கடைசியாகத் தன்னை நிறுத்திப் பார்த்தாள்; 'வித்யா, உன்னைக் கொஞ்சம் மறந்துவிட்டு இவர்களையெல்லாம் பாரேன். பின் உன்னால் எப்படி ஒரு சுயநலமான முடிவுக்கு வரமுடியும்?'

"வித்யா, ப்ளீஸ்... 'உன்னை நான் விட்டுவிட மாட்டேன்' என்று ஒரு வார்த்தை சொல்லேன்..."

மறுபடியும் ரமணியின் கெஞ்சல். ரமணியின் கையை உதறிவிட்டு எழுந்து ஓடவேண்டும் போலிருந்தது வித்யாவுக்கு. ஆனால் முடியவில்லை. பேசாமல் இருந்தாள். ஒரு நிமிடம் அந்த இருட்டில் அவன் முகத்தில் எதையோ தேடினாள். பின் தலையைக் குனிந்து கொண்டு "ம்" என்ற அந்த பதில் அவளை மீறிக் கொண்டு வந்து விட்டது. அந்தச் சம்மதத்தில் ரமணி சந்தோஷப் பட்டான். சொல்ல முடியாத சந்தோஷம். பேச முடியாத சந்தோஷம் தன் கைக்குள்ளிருந்த அவள் கைகளை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டான்.

"தேங்க்யூ வித்யா."

சாதாரண ஒரு விஷயத்திற்கு நன்றி சொல்கிற மாதிரி சொன்னான். வித்யா தன் கைகளை இழுத்துக் கொண்டாள். அவளுக்கு அப்போது நன்றாக அழ வேண்டும் போலிருந்தது. அந்த அழுகையில் தன்னை, தன் மனசை, அதன் சில ஆசைகளைக் கரைத்துக் கொண்டுவிட வேண்டும் போலிருந்தது. ஆனால் அழுகை வரவில்லை.

"அப்புறம் மாறிவிட மாட்டாயே வித்யா? மாட்டேன் என்று சொல்லிவிட மாட்டாயே?"

ரமணியின் குழந்தைத்தனமான கேள்விகள். வித்யா அவனைப் பார்த்துச் சிரித்தாள். வேதனையாகச் சிரித்தாள்:

"இதற்கு எந்தப் பதில் என்னிடமிருந்து வந்தால் உங்களுக்குத் திருப்தியாக இருக்குமோ அந்தப் பதில்."

'ரமணி, எத்தனை சுயநலம்! மனிதர்கள்! மனிதர்கள்! நான் வெறுப்பதில் என்ன தப்பு? வெறுத்துக் கொண்டாலும் அவர்களுக்கு நடுவில் அவர்களில் ஒருத்தியாகத்தானே இருக்க வேண்டியதிருக்கிறது! பின் ஏன் வெறுக்க வேண்டும்? சலித்துக் கொள்ளாமல், வெறுப்பில்லாமல் எல்லாவற்றையும் ரசிக்கக் கூடியவளாக இருந்துவிட்டால்...? அப்படித்தான் இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் நிம்மதியாக இருக்க முடியும்?'

"என்ன யோசனை வித்யா?"

"ஒன்றுமில்லை. மணி என்ன ஆச்சு?"

அந்த இருட்டில் கைக் கடிகாரத்தின் சின்ன முட்களில் மணி பார்ப்பது கஷ்டமாக இருந்தது. ரமணி முகத்துக்கு அருகே கொண்டுபோய், வெளிச்சம் படும்படி கையைத் திருப்பிக்கொண்டு, கண்களை இடுக்கியபடி பார்த்தான்:

"எட்டரை..."

"எட்டரையா? ஐயோ, அம்மா பயந்து கொண்டிருப்பாளே. அப்பா வந்து விட்டிருப்பாரே..."—வித்யா புடவையைச் சரிப்படுத்திக்கொண்டு எழுந்தாள். செருப்பைப் போட்டுக் கொண்டாள். காரில் உட்கார்ந்து கிளம்பும்போது கார் லைட்டைப் போட்டுத் திரும்ப சரியாக மணி பார்த்தாள். எட்டு நாற்பத்தைந்து. அவள் அப்பாவை நினைத்துப் பயந்தாள்.

"நான் உன்னைத் தெருக் கோடியில் இறக்கிவிட்டுப் போகிறேன்."

"ஏன், வீட்டுக்கு வரலையா?"

"வேண்டாம், நீ என்கூட இருந்தது தெரிந்தால் அப்பா கோபம் அதிகமாகும். ஆபீசில் வேலை என்று சொல்லிவிடு."

அவனை வற்புறுத்த விரும்பவில்லை அவள். தெருக் கோடியிலேயே இறங்கிக் கொண்டாள். வீட்டை நோக்கி நடக்கும் போது, ஒவ்வோர் அடியிலும் அப்பா மனசில் நின்று 'வா, வா, உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்' என்று உறுமினார்.

கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனபோது மணி ஒன்பது ஐந்து.

அவள் மனசைத் திடப்படுத்திக் கொண்டாள்.

8

வீடு நிசப்தமாய் இருந்தது. இந்த மௌனம் அவளுக்குப் பழக்கமில்லை. அடி வயிற்றைக் கவ்வும் மயான மௌனம். அவளுக்காகவே வெகு நேரம் காத்திருந்துவிட்டுப் பின் அவள் வந்தவுடன் விடை பெற்றுக்கொள்ளப் போவதைப்போல் நிற்கும் மௌனம். வித்யா 'கேட்'டைத்

திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். அப்பா உள்ளே யிருக்கிறார். 'அமைதியே நீ போ. அப்பா உள்ளே இருக்கிறார். போய் (விடு,')

'இன்று என்ன நடந்தாலும் பேசாமல் இருக்க வேண்டும். எதிர்த்துப் பேசக் கூடாது. பொறுமையாய் இருக்க வேண்டும் பல்லைக் கடித்துக் கொண்டு...முகத்தைக் கோணாமல், தைரியமாய், தெளிவாய் நிற்க வேண்டும்.'

வித்யா, அப்பாவைத் தவிர்த்துக் கொண்டு, பின்பக்கமாக உள்ளே போய்விட முயன்றாள்; முடியவில்லை.

"இந்தப் பக்கமாகவே வா!"—அப்பா!

இன்று உறுமல் அதிகமாகவே இருந்தது. அவர் நின் றிருந்த வழியாகவே உள்ளே நுழைந்தாள்.

"இப்போ மணி என்ன?"

வித்யா கையிலிருந்த பையை மேஜை மீது வைத்தாள்.

"சொல்லுடி, மணி என்ன?"

கையைத் திருப்பி மெதுவாக ரிஸ்ட் வாட்சைப் பார்த் தாள்.

"ஒன்பது. பட் இது ∴பைவ் மினிட்ஸ் ஃபாஸ்ட்."

அப்பாவின் முகம் மாறுவதை அவளால் கவனிக்க முடிந்தது. அவர் பாயத் தயாராக இருந்து பதுங்கினார்.

"ஒன்பது மணிக்குத்தான் ஒரு பொண்ணு வீட்டுக்கு வருவாளா? எங்கே போனே இத்தனை நேரம்?"

கையிலிருந்த வாட்சைக் கழற்றி மேஜைமேல் வைத்தாள். எதிரே இருந்த கண்ணாடியில் முகம் வியர்த்துப் போய் இருப்பது தெரிந்தது. கர்ச்சீப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

"சொல்லுடி, எங்கே போனே?"

அவர் பாய்வதற்குத் தயாராகி விட்டது தெரிந்தது. ஒங்கி ஓர் அறை கன்னத்தில், முதுகில், தலையில்...அவ்வளவு தான். அடங்கிப் போய் விடுவார். பின் உறுமிக் கொண்டே இருப்பார். இரையைத் தப்பிக்கவிட்ட புலி மாதிரி!

'இன்று இவரிடம் அடிபடக் கூடாது. தன்னை அடிக்க இவருக்கு உரிமையில்லை என்று சொல்லிவிட வேண்டும்.'

"ஆபீசில் கொஞ்சம் வேலை இருந்தது."

"பொய்யா சொல்றே? ஆபீசுக்கு போன் பண்ணிக் கேட்க மாட்டேன்னு நெனைச்சியா? அஞ்சு மணிக்கு மேலே எங்கே போனே? எவன் கூடச் சுத்தினே?"

"அப்பா!"

"அப்பா! உனக்கு நான் அப்பா? ஊர் சுத்தற கழுதைக்கு நான் அப்பா? சீ, உனக்குத்தான் வெட்கம், மானம் இல்லை. எனக்கு இருக்கேடி..."

வித்யா உதட்டைக் கடித்துக் கொண்டாள். இதற்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்பதுபோல் நின்றிருந்தாள்.

"ஆபீஸ் வேலை உனக்கு சௌகரியமாக இருக்கு. தினமும் விதம் விதமா டிரஸ் பண்ணிண்டு ஊர் சுத்த, கண்ட வனோட ஓட்டலுக்குப் போக...எல்லாத்துக்கும் வசதியாக இருக்கு இல்லே?"

"....."

"என்னடி முழிச்சுப் பார்க்கிறே? நேத்து எவன்கூட ஓட்டலுக்குப் போனே? ராமசுந்தரம் பார்த்துவிட்டு வந்து சொல்றான் இன்னிக்கு ஆபீஸ்லே. மானம் போறதேடி உன்னாலே. இதைவிட நீ சாகலாமே. எனக்கு ஒரு பொண்ணே பிறக்கலேன்னு நான் நெனைச்சுப்பேனே... போடி....போ! செத்துத் தொலை. எனக்கு அடங்காத பெண், என்ன பெண்?"

அப்பா அடிப்பதற்குக் கையை ஓங்கினார். அம்மா குறுக்கிட்டாள். அப்பா அவளைப் பிடித்துக் கொண்டார்.

"உன்னாலேதாண்டி எல்லாம் வந்தது. நீதான் இவளைக் கெடுத்துட்டே."

"அப்பா! என்னைச் சொல்லுங்கோ. அம்மாவை எதுவும் சொல்லாதிங்க..."

"யாரு உனக்கு அப்பா? ஏ! இனிமே உன் வாயாலே அப்படிக் கூப்பிடாதே. நான் உனக்கு அப்பா இல்லை. நீ எனக்கு வந்து பிறந்ததே பாவம். ஒரு நிராத வயிற்றெரிச்சல். என்னிக்கு இது அடங்கப் போறதோ..."

"சேக்ரமே என்னைத் தொலைச்சிடுங்கோ. ரமணி என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறாராம். பண்ணி வெச்சிடுங்கோ."

"உனக்குக் கல்யாணம் ஒரு கேடா? இத்தனை நாளா, நானா உனக்கு எல்லாம் செய்தேன்? சம்பாதிக்கிற நிமிர் இருந்ததில்லை? அதே மாதிரி கல்யாணமும் பண்ணிக்கோ. எவனை வேண்டுமானாலும் பண்ணிக்கோ. எத்தனை கல்யாணம் வேண்டுமானாலும் பண்ணிக்கோ!"

"சரி, பண்ணிக்கறேன்."

"என்ன சொன்னே?"—அப்பா கோபத்தில் சீறினார். கையை மிக வேகமாக ஓங்கினார். நல்ல பலம் அவருக்கு. கன்னத்தில் விழுந்த "பளார்" மண்டை முழுவதும் எதிரொலித்தது. 'ஜிவ்'வென்று தலைக்குள் சூடான ரத்தம் பாய்வதுபோல் இருந்தது. எதிரே இருந்த எல்லாரும் சுற்றுகிற மாதிரி தெரிந்தது. கண்கள் இருட்டில் அமுங்கின. பக்கத்தில் இருந்த கதவைப் பிடித்துக் கொண்டாள். நிதானத்திற்கு வரும்வரை பொறுத்திருந்தாள்.

"ஸ்டாப் இட் ஐ ஸே...அடிக்க மட்டும்தான் நீங்கள் எனக்கு அப்பாவா? அதையும் விட்டுவிடுங்களேன். எல்லாத்தையும் விட்ட மாதிரி?"

"அடிப்பேன். இந்த வீட்டில் நீ இருக்கிறவரை அடிப்பேன்."

"சரி. நான் இந்த வீட்டில் இல்லை. இனிமேல் அடிபட்டுக்கொள்ள, பேச்சுக் கேட்டுக்கொள்ள என் மனசில் இடமில்லை. உடம்பிலும் தெம்பில்லை. நான் போய் விடுகிறேன்."

"யாரைடி மிரட்டறே... போயேன். தாராளமாப் போ... நீ இந்த வீட்டில் இல்லையே என்று யாரும் அழலை."

விதியா உள்ளே வந்து ஒரு சூட்கேஸை எடுத்தாள். தன் அலமாரியைத் திறந்தாள். ஒவ்வொன்றாய் எடுத்துப் பெட்டியில் அடுக்கினாள். ஞாபகமாய் தான் சம்பாதித்து வாங்கினவற்றை மட்டும் எடுத்தாள். ஐந்தாறு புடவைகள், சில ஜாக்கெட்டுகள், டூத் பிரஷ், ஹேர் க்ரீம், பிரஷ், பேனா, பேப்பர்...

அம்மா பின்னால் வந்து நின்றாள்.

"எங்கேடி போகப் போறே?"

"தெரியலை."

"ஏன், அவன் வரச் சொன்னானா? அதை நம்பிக் கொண்டு போனால் கடைசியிலே நடுத் தெருவிலே தாண்டி நிப்பே! உனக்கு எவ்வளவு தைரியம்? ம்... உன்னால இப்படி நினைச்சவுடனே கிளம்பிட முடியறது, இல்லை? நான் எவ்வளவு வருஷமா இதே மாதிரி அவஸ்தைப் பட்டுண்டு இங்கேயே இருந்திருக்கேங்கறது மறந்து போச்சு இல்லை? என்னாலே போக முடியுமா? எவனோ ஒருத்தன்—நாலு நாள் உன்கூட சுத்தினவன்—இந்த வீட்டுலே இருந்த உன்

னுடைய இருபது வருஷ வாழ்க்கையை உதறிவிட்டுப் போற அளவுக்குப் பெரிசாப் போயிட்டான், இல்லை?"

"அம்மா... அம்மா..." —வித்யா அவள் தோளில் தன்னைச் சாய்த்துக்கொண்டு அழுதாள்: "நீகூட ஏம்மா என்னைக் கொட்றே? எவனும் என்னை வரச் சொல்லலை. ஒருத்தனோட ஒரு பெண்ணைச் சேர்த்துப் பார்த்தால் இது தான் பேசலாம் என்பதில்லையாம்மா? நீ கூட வாம்மா இப்படி? என்னைப்பத்தி உனக்குக்கூடவா தெரியாமல் போய் விட்டது?"

அம்மா கண்களை துடைத்துக் கொண்டாள். வித்யா வைப் பிடித்துக் கொண்டாள். அவள் முகத்தைத் தடவிக் கொடுத்தாள்.

"ரமணி தப்பாகப் புரிஞ்சுண்டு உன்கிட்டே வந்து சொல்லியிருக்கார். இத்தனை நாழி ரமணிகிட்டே தாம்மா பேசிண்டு இருந்தேன். ஹரிகிட்டே —அது தாம்மா நேத்து ஓட்டலுக்கு அழைச்சுண்டு போனானே அவன் —அனிதா வோட அண்ணா..."

"அனிதாவோட அண்ணாவா? இங்கே வருவாளே, அந்த அனிதாவா?"

"ஆமாம்மா. அவன்கிட்டே பேசினதை எல்லாம் ரமணி கிட்டே சொன்னேன்."

"அதை ஏண்டி நீ காத்தாலை என்கிட்ட சொல்லலை?"

"நீ எங்கேம்மா என்னைப் பேச விட்டாய்? மேலே மேலே நீதான் பேசிண்டு போனே. எனக்குப் பதில் சொல்லக்கூட இடம் கொடுக்கலையே."

"நீ ஏண்டி இப்படி ஒரு அசாதாரணமான பெண்ணாக வந்து பிறந்து தொலைச்சே? சாதாரணமாக எல்லாரையும் போல இருந்து தொலைக்கக் கூடாதா?"

கொஞ்ச நேர அழுகை. கொஞ்ச நேர அமைதி. இப் படியே இரண்டு பேரும் உட்கார்ந்திருந்தார்கள். மணி

பதினொன்று அடித்ததும் "சாப்பிட வா" என்று அம்மா கூப்பிட்டாள்.

"வேண்டாம், பசியில்லை" என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குப் போய்ப் படுத்துக் கொண்டாள் வித்யா. வெறும் படுக்கைதான். தூக்கம் வரவில்லை. உடம்பு முழுவதும் ஊமை வலி. மனம் அதைவிட வலித்தது. தலையணை நனைந்தது.

தினமும் அவளும், அவள் தங்கை ராஜியும்தான் அந்த அறையில் படுத்துக் கொள்வார்கள். ராஜி அவளுக்குத் தங்கையாக இருந்தாலும் ஒரு நெருக்கமான சிநேகிதி மாதிரி தான் இரண்டு பேருக்குமிடையே பழக்கம். வித்யா அழுவது தெரிந்ததும் அவளுக்குப் பக்கத்தில் வந்து கழுத்தைக் கட்டிக் கொண்டாள் ராஜி. கண்களைத் துடைத்தாள். காதருகில் வந்து "அழாதேக்கா. நீ அழுதால் நானும் அழுவேன்" என்று பயமுறுத்தினாள். அந்தச் சின்னப் பொண்ணுக்கு முன் வித்யா குழந்தையானாள்.

"ராஜி, நான் போறேம்மா....நான் இருக்கிறது யாருக்கும் பிடிக்கலைம்மா."

"அப்படியெல்லாம் சொல்லாதே அக்கா. எனக்காக நீ இருக்கணும், எங்களை யெல்லாம் விட்டுவிட்டுப் போகாதே அக்கா. நாங்க இல்லையா அக்கா உனக்கு?"

"ரா...ஜி" அவளைத் தன்னோடு சேர்த்துக் கட்டிக் கொண்டாள் வித்யா.

"நீ ரமணியைக் கல்யாணம் பண்ணிண்டு போ அக்கா நானும் உன்னோட வந்துடறேன். எனக்கு இந்த வீடு பிடிக்கலை. எப்போ பார்த்தாலும் சண்டை."

ராஜியின் விசும்பலைத் தாங்க முடியாத வித்யா. 'எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இந்தக் கல்யாணத்தை முடித்துக் கொண்டு அம்மாவையும், குழந்தை களையும் கூட அழைத்துக்கொண்டு போய்விட வேண்டும்' என்று நினைத்துக் கொண்டாள். 'அப்பா எப்போ மனசுமாறி

வருகிறாரோ, அப்போதுதான அவாகளைத் திரும்ப அனுப்ப வேண்டும்!

"ராஜி...தூங்கும்மா. நீ, விஜி, அம்மா எல்லாருமே என்னோட வரலாம். அழாமல் சமர்த்தா தூங்கணும். நன்னாப் படிக்கணும். அதுதான் முக்கியம்" என்று தங்கையைச் சமாதானப் படுத்தினாள்.

காலையில் வீடு வழக்கத்தைவிட நிசப்தமாக இருந்தது. முதல் நாள் முழுவதும் ஒன்றும் சாப்பிடாதது, உடம்பில் விழுந்த அடிகள், மனத்தில் நிம்மதியில்லாதது எல்லாம் சேர்ந்து வித்யாவை அதிகக் களைப்பாகக் காட்டின.

"ஆபீசுக்கு வேணும்னா லீவு போட்டுடேன் வித்யா" என்றாள் அம்மா.

'வீட்டில் உட்கார்ந்தால் மன வேதனைகள் இன்னும் அதிகமாகும்' என்று நினைத்த வித்யா, ஆபீசுக்குக் கிளம்பி விட்டாள்.

அவள் கிளம்பியபோது டெலிபோன் அடித்தது. அப்பா தான் எடுத்தார்.

"யாரு, ரமணியா? நீ இனிமேல் போன் பண்ண வேண்டாம். வீட்டுக்கும் வர வேண்டாம், புரிகிறதா?"

ரிஸீவர் பதிலுக்குக் காத்திருக்காமல் வைக்கப்பட்டு விட்டது. வித்யாவுக்குக் கஷ்டமாக இருந்தது. அப்பாதான் ரமணியை 'அடிக்கடி வீட்டுக்கு வாப்பா' என்று வரச் சொன்னது. ரமணி நல்ல பையன் என்று புகழ்ந்தது. இப்போது அவரே நீ இனிமேல் வீட்டுக்கு வர வேண்டாம் என்று மனுஷத்தன்மை இல்லாமல் சொல்வது. அப்பாவின் பச்சோந்தித்தனம் அவளுக்கு வெறுப்பையும் கொடுத்தது.

"பாவம், ரமணி' என்று நினைத்துக்கொண்டே பஸ் ஸ்டாப்பிற்குப் போனாள். பஸ் தயாராக மூச்சிரைக்க

நின்று கொண்டிருந்தது. அவள் ஆபீசுக்கு வந்து செக்ஷனுக்குள் நுழைந்தவுடனேயே ரமணி போனில் கூப்பிட்டான்.

"ஐ யாம் ஸாரி வித்யா. நேற்று என்னால்தானே உனக்கு அத்தனை அடிகளும், பேச்சுக்களும்...ஐ யாம் ரியலி ஸாரி..."

"ஃபர்கெட் இட், ரமணி."

"அம்மாவுக்கு இப்போதுதான் போன் பண்ணினேன். நீ ஆபீசுக்குக் கிளம்பிப் போனதும் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் தகராறாம். உன் கல்யாணத்தை அவர் நடத்த முடியாதென்று சொல்லிவிட்டாராம்."

வித்யாவுக்குச் சலிப்பாக இருந்தது. ஆபீசுக்கும் துரத்திக் கொண்டு வரும் அதே பேச்சு...எதிலிருந்தும் தப்பித்துக் கொள்ளத்தான் முடிவதில்லை. எதை விட்டும் விலகவும் முடியவில்லை. ஆனால் கொஞ்ச நேரம் மறக்கலாம் என்று பார்த்தால் அது முடிகிறதா?

"இதையெல்லாம் நேரே பேசிக் கொள்ளலாமே..."

"நான் இனிமேல் உன்னை எங்கே பார்க்க முடியப் போகிறது? அப்பா என்னை வீட்டுக்கு வரக்கூடாது என்று சொல்லிவிட்டார்."

"தெரியும், வாரத்தில் ஒரு நாள் நான் உங்கள் அறைக்கு வருகிறேன். அப்போது எல்லாவற்றையும் பேசலாம்..."

"என்றைக்கு வருவாய்?"

"அதை அப்புறமாக போன் பண்ணிச் சொல்கிறேனே..."

"சரி, வித்யா..."

போனை வைத்துவிட்டுத் திரும்பினாள் வித்யா. ஷோபா வந்து கொண்டிருந்தாள். அவள் முகம் பளிச்சென் றிருந்ததைக் கவனித்தாள் வித்யா. 'பையனை இவளுக்கும்,

இவளைப் பையனுக்கும் பிடித்துவிட்டது போலிருக்கிறது' என்று நினைத்துக் கொண்டே ஷோபாவைத் தனியாக அழைத்துக் கொண்டு போய்க் கேட்டாள். வித்யா நினைத்த மாதிரியேதான். கல்யாணத்திற்கு நாள் கூடப் பார்த்தாயிற்றாம்.

"அடுத்த வாரத்திலிருந்து நான் ஆபீசுக்கு வரமாட்டேன் வித்யா. அவர்கள் வேலையை விட்டுவிடச் சொல்லி விட்டார்கள்..."

"ஐ. ஸீ. கங்கிராஜுலேஷன்ஸ்..." என்றாள்.

திடீரென்று மனத்துக்குள் ஓர் இடைவெளி விழுந்தாற் போல் இருந்தது. அந்த ஆபீஸில் அவளைச் சற்று நெருங்கிய ஒருத்தியும் பிரிந்துவிடப் போவதை நினைத்து வருத்தப் பட்டுக் கொண்டே மெஷின் எதிரில் போய் நின்றாள். பதினோரு மணிவரை நிமிரக்கூட நேரம் கிடைக்கவில்லை.

கமார் பதினோரு மணி இருக்கும் பியூன் வந்து மானேஜர் சிவகுமார் கூப்பிடுவதாகச் சொன்னபோது, அவளுக்கு உடனே ஹரியின் நினைவு வந்தது. போகப் பிடிக்கவில்லை. ஆனால் போய்த்தான் ஆக வேண்டும். 'சே! என்ன வேலை? என்ன வாழ்க்கை?' என்று சலித்துக் கொண்டே போனாள்.

அறையினுள் ஹரி இல்லை. சிவகுமார் மட்டும் தனியாகத்தான் இருந்தான்.

"உட்காருங்கள், மிஸ் வித்யா?"

வித்யா உட்கார்ந்து கொண்டாள்.

சிவகுமார் நேராக விஷயத்திற்கு வந்தான். 'சுடர்' என்றொரு பத்திரிகை வருகிறதே, நீங்கள் படித்திருக்கிறீர்களா வித்யா?"

"ஓ.எஸ். வாரம் தவறாமல் படிக்கிறேன். ஏன் சார்?"

"அந்தப் பத்திரிகை ஆபீஸிலிருந்து எனக்கு போன் வந்தது. அவர்கள் வேலையிலிருக்கும் பெண்களைப்பற்றி வாரா வாரம் எழுதுகிறார்களாம். 'இந்த முறை உங்கள் ஆபீஸ் பெண்களில் யாரையாவது சஜஸ்ட் பண்ணுங்கள் சார். பேட்டி கண்டு எழுதுகிறோம்' என்றார்கள். எனக்கு உடனே உன் ஞாபகம்தான் வந்தது. சஜஸ்ட் பண்ணினேன். மத்தியானம் மூன்று மணிக்கு போட்டோ கிராஃபரையும் நிப்போர்ட்டரையும் அனுப்புகிறேன் என்றார்கள். யூ ப்ளீஸ் பி ரெடி..."

வித்யாவுக்கு இது கொஞ்சம் ஆச்சரியமான செய்தியாக இருந்தது. அவள் தவறாமல் 'சுடர்' படிக்கிறவள். அவளுக்குப் பிடித்த பத்திரிகை. அதில் அவளுடைய பேட்டி வருவதில் அவளுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அதனால் எந்தச் சிணுங்கலும் இன்றி ஒப்புக் கொண்டு திரும்பினாள்.

பேட்டி! இண்டர்வ்யூ! தன்னை ஒரு பத்திரிகையில் இருந்து பேட்டி காண வரப் போகிறார்கள்! போட்டோ வரும். சில கேள்விகள் கேட்பார்கள். அவள் பதில் சொல்ல வேண்டும். ஒரு வழக்கமான பேட்டியின் பதில்களாக இருக்கக் கூடாது, பயப்படாமல்... தைரியமாக...

"உங்கள் பெயர்?"

"வித்யா!"

"உங்கள் பொழுதுபோக்கு என்ன? புத்தகங்கள் படிப்பதுண்டா?"

"உண்டு. ஆனால் பொழுதைப் போக்க அல்ல. சீரியஸாகப் படிக்கிறேன். பொழுது போக்கு—ராத்திரியில் மொட்டை மாடியில் நின்று கொண்டு வானத்தைப் பார்ப்பது."

"உங்களுக்கு நீங்கள் பார்க்கும் இந்த வேலை பிடித்திருக்கிறதா?"

"நோ! ஆனால் வெளியே வாழ்க்கை இதைவிட போரடிக்கிறது. அதனால் இது தேவலாம்.

"நீங்கள் திருமணமானவரா?"

"அதிர்ஷ்டவசமாக—இல்லை."

"திருமணத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயம்?"

"அது எங்களுக்குத் தப்பித்துக் கொள்ளக் கிடைத்திருக்கிற ஒரே வழி. 'மியர் எஸ்கேப்.' ஆனால் அதுவும் சிறைதான். ஐ மீன்—இது என் கருத்து..."

"நீங்கள் வாரம் தவறாமல் 'கூடர்' படிப்பதுண்டா?"

"சில வாரம் படிப்பதுண்டு. சில வாரம் பார்ப்பதுண்டு."

"உங்கள் அபிப்பிராயம்?"

"இட்ஸ் குட்..."

உங்களுக்குச் சிநேகிதர்கள் (பாய் ∴பிரண்ஸ்) உண்டா?'

"ஓ எஸ். சங்கர். சதீஷ், ஹரி..." (ஹரி சந்தோஷப் பட்டுக்கொள்வான்.)

ரமணி? வித்யா ஒரு முறை உடம்பைக் குலுக்கிக் கொண்டாள். வாட்டர் கூலரில் ஒரு டம்ளர் ஐஸ் வாட்டரைப் பிடித்துக் குடித்தாள். நல்ல கற்பனை. 'கற்பனையிலிருந்து கூடத் தன்னால் வாழ்க்கையில் இருந்து விலக முடிய வில்லையே...' என்று முனகிக் கொண்டாள். எதிரில் இருந்த மெஷினில் தவறைச் சுட்டிக் காட்டும் சிவப்பு விளக்கு பளிச் செனஎரிந்தது. அவள் சரிப்படுத்தப் போனாள்.

மூன்று மணி சுமாருக்கு அவளுக்குச் சிவகுமாரிடமிருந்து அறைக்கு வரச்சொல்லித் தகவல் வந்தது. வித்யா போன போது போட்டோகிராஃபரும் இன்னும் யாரோ ஒரு மனிதரும் உட்கார்ந்திருந்தார்கள்.

"மிஸ் வித்யா" என்று அறிமுகப்படுத்தினான் சிவகுமார்.

"வித்யா, மீட் மிஸ்டர் சங்கர். இவருடைய கதைகளையெல்லாம் நீ 'கூடர்'ரில் படித்திருக்கலாம்."

"சங்கரா! அவளுக்கு அவனுடைய 'அக்கினிக் கனவு' தான் உடனே ஞாபகத்திற்கு வந்தது. எத்தனை தரம் அவள் அதைப் படித்திருக்கிறாள். அந்த எழுத்தை வரி வரியாக எப்படி ரசித்திருக்கிறாள். அதில் வரும்— நந்தினியை, கிருஷ்ணனை மறக்க முடியுமா? இன்னும் காகித மலர்கள், நட்சத்திரங்களை கீழே பார்க்கின்றன..... அந்த சங்கரா? அவனா (அவரா?) இத்தனை சின்னவராக, அழகானவராக, வெள்ளை வெளேரென்று...என்ன உயரம்!

'சட்'டென்று அந்த ஆங்கிலோ இந்தியன் நினைவில் வந்து போனான். அவள் இரண்டாம் தடவையாக இண்டர்வ்யூவுக்குப் போன போது அவளைக் கேள்விகள் கேட்டானே— அவன். அவளைச் சிரிப்பால், பேச்சால் அலைக்கழித்து இரண்டு நாட்கள்வரை அவள் மனசில் ஒட்டிக் கொண்டு நகர மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தவன்...அந்த ஆங்கிலோ இந்தியன்—அவன் நினைவு இப்போது ஏன் வருகிறது?

இந்த சங்கர் கிட்டதட்ட அவனை மாதிரியே இருந்தான். அதே மாதிரி சிரித்தான். நேராக மனசுக்குள் பாய்ந்து தைக்கும் சிரிப்பு. கொஞ்ச நேரம் அதிலிருந்து மீள முடியாமல் நிறுத்தும் சிரிப்பு.

வித்யாவும் பதிலுக்குச் சிரித்தாள். தான் அவளை மாதிரியே சிரிக்க முயலுவதை நினைத்து ஒருமுறை மனத்துக்குள் சிரித்துக் கொண்டாள்.

9

வித்யாவை ஜன்னல் பக்கத்தில் நிற்கச் சொல்லி போட்டோகிராஃபர் ஒரு ஸ்நாப் எடுத்துக் கொண்டு போனார்.

"மிஸ் வித்யா, இஃப் யூ டோன்ட் மைண்ட் நாம் ஏதாவது ஒரு ரெஸ்டாரெண்டுக்குப் போய்ப் பேசலாமா? என்று கேட்டான் சங்கர்.

"ரெஸ்டாரெண்டா..."

"ஆமாம் பேட்டி என்றால் வழக்கமான கேள்வி-பதில்கள் என்று நீங்கள் நினைத்துக் கொண்டுவிட வேண்டாம். நீங்கள் சொல்வதைத்தான் எழுதுவோம் என்றாலும், உங்களை முழுசாக அப்சர்வ் பண்ணினால்தான் என்னால் எழுத முடியும். இதை ஒரு ஃபார்மல் இன்ட்டர்வ்யூவாக நடத்த எனக்குப் பிடிக்கவில்லை. இந்தப் பேட்டிக்கு அப்பாற்பட்ட நிறைய விஷயங்களைப் பேசினால்தான் உங்களை என்னால் புரிந்து கொள்ள முடியும். உங்களைப் பற்றி மூன்று பக்க மேட்டர் எழுதும் போது உங்களைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம்" —பேசிய அவனது குரலின் தொனி பேசப்பட்ட விதம், முகத்தின் பாவமற்ற தன்மை எல்லாம் வித்யாவுக்குப் பிடித்திருந்தது. 'இவனோடு ரெஸ்டாரெண்ட் என்ன, இமயமலைவரைகூடப் போகலாம்' என்ற நம்பிக்கை அவள் மனத்தில் விழுந்தது. அவள் சிவகுமாரைப் 'போகட்டுமா?' என்று பார்த்தாள்.

"போகலாம்" என்ற அனுமதி கிடைத்ததும் அவள் சங்கரோடு லிஃப்டில் இறங்கி வந்தாள். அவன் கார் கதவை அவளுக்காகத் திறந்து விட்டான். அவள் உட்கார்ந்ததும் முடி விட்டுச் சுற்றி வந்து டிரைவிங் ஸீட்டில் உட்கார்ந்து கொண்டான்.

"எங்கே போகலாம் மிஸ் வித்யா?"

"நீங்களே சொல்லுங்கள்."

"இங்கே பக்கத்தில் பாலிமார் ரெஸ்டாரெண்ட் இருக்கிறது. இந்த நேரத்தில் நிறையக் கூட்டமாக இருக்கும். டிரைவ்-இன் போகலாமா?"

அவளுக்கு ஹரியின் நினைவு வந்தது. வேண்டாமென்று தலையாட்டினாள்.

"பூனம்?"

"ஒ. கே..."

சங்கர் காரைக் கிளப்பினான். வித்யா அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே, "நான் உங்கள் கதைகள் எல்லாவற்றையும் படித்திருக்கிறேன். எத்தனையோ தரம் படித்திருக்கிறேன். ஒவ்வொரு இடமும் அப்படியே ஞாபகமிருக்கிறது" என்றாள்.

"ஈஸ் இட்!"— அவன் அவளைத் திரும்பிப் பார்க்காமல் பதில் சொன்னான்.

"உங்களுக்குச் சொந்த ஊர் மதுரையா?"

"ஏன்?"

"இல்லை, உங்கள் கதைகளில் மதுரை முழுவதையும் நான் பார்த்து விட்டேன். மதுரைக்குப் போக வேண்டுமென்ற ஆசை எனக்கு ரொம்ப நாளாக உண்டு. ஆனால் இதுவரை போனதில்லை. கோயில் சிற்பங்களை, வைகையை, விசாலமான தெருக்களைப் பார்த்ததில்லை. இப்போது அந்தக் குறையே எனக்கில்லை. மதுரையை, அதன் அழகை—வைகையை, அதன் ஓட்டத்தை முழுசாக நேரில் பார்த்து விட்ட திருப்தி உங்கள் கதைகளிலிருந்து எனக்கு ஏற்பட்டு விட்டது."

இப்போது அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான். நேராக அவள் கண்களுக்குள் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"என்னுடைய 'அக்கினிக் கனவு' படித்திருக்கிறீர்களா?"

"ஓ. எஸ் ..."

"அதில் உங்களுக்கு எந்த காரெக்டர் பிடிக்கும்?"

"நந்தினி!" — உடனே பதில் வந்தது வித்யாவிடமிருந்து.

சங்கரின் பார்வை ஒரு நிமிடம் அவள் மீதே நிலைத்தது. இப்போது அவன் முகத்தில் சிரிப்பில்லை. பார்வையில் அலட்சியமில்லை. வித்யாவை பார்த்திலிருந்து, அவள் அழகு, வயசு எல்லாவற்றையும் தெரிந்து கொண்டதிலிருந்து 'இவள் அழகு வேண்டுமானால் அசாதாரணமானதாக இருக்கலாம். ஆனால் இவள் ஒரு சாதாரணப் பெண்ணாகத்தான் இருப்பாள்' என்று நினைத்தான். அந்த நினைப்பு இந்தப் பதிலில் மாறிப்போய் விட்டது.

'நந்தினி!'

அவன் எப்போதோ பதினெட்டு வயசுப் பையனாக மதுரையில் இருந்தபோது— காலேஜில் படித்துக் கொண்டிருந்தபோது, எதிர் வீட்டிலிருந்த நந்தினி! தங்கமாய்ப் பளபளக்கும் அவள் உடம்பு, கரிக் கருப்பாக, வளைசல் வளைசலாக கால் முட்டியை எட்டும் அவளது கூந்தல்— பெரிது பெரிதான அகலமான அவளது கண்கள்-முகத்தில் கீறி ரத்தம் வரவழைத்த மாதிரி வெற்றிலை சிவப்புப் படிந்த உதடுகள்— அவளது முழு உருவமும் அவன் மனத்தில் இப்போதும் வந்து நின்றது. அவன் எம்.ஏ. சேர சென்னைக்குக் கிளம்பினபோது வீட்டில் யாரும் இல்லாத நேரமாகப் பார்த்து வந்து, 'என்னையும் உன்கூட அழைச்சுண்டு போ சங்கர்—' என்று கெஞ்சினது, அவன் 'வீட்டுக்கு போ நந்தினி, யாராவது பார்த்தால் தப்பாக நெனைச்சுக்கப் போறா...!' என்று அந்த வயசுப் பயத்தில் கிராமத்துப் பழக்கத்தில் மனச படபடக்க அவளை அதட்டியது, 'போறேன் சங்கர், என்னை மறந்து

டாதே...' என்று ரொம்ப துணிச்சலாக அதிக உரிமையுடன் அவள் அவனை ஒரே இழுஇழுத்து அவன் உதட்டில் அழுத்தி முத்தமிட்டது, அவன் உடம்பு பதற அவளைப் பிடித்துத் தள்ளினது, 'உனக்கு என்னைப் பிடிக்கலே இல்லை?' என்று கேட்டு கண் கலங்க அவன் மனத்தையும் கலக்கிவிட்டுப்போன நந்தினி...!

ராத்திரியானால் அவள் வீட்டு வாசலில் விதவிதமான வண்டிகள் வந்து நிற்கும். ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு வண்டி. பக்கத்து ஊர் மைனர்களின் செண்ட் தெரு முழுவதுமே மணக்கும். அவள் வீட்டிலிருந்து பாட்டுச் சத்தம் கேட்கும். (என்ன குரல் நந்தினிக்கு! இப்போதும் அவளின் இனிமையான குரல் நன்றாக ஞாபகமிருந்தது) சலங்கைச் சத்தம் கேட்கும். ராத்திரி வெகு நேரம்வரை சிரிப்புச் சத்தம் கேட்கும். மாடி ஜன்னல் கம்பிகளில் முகத்தைத் தேய்த்துக் கொண்டு பார்த்துக் கொண்டிருப்பான் சங்கர். படிப்பில் மனது போகாது. அந்த வீணை இசையில், குரல் இனிமையில் குழைந்து கொண்டிருப்பான். அம்மா வந்து, "ஜன்னல் கதவை இழுத்து மூடிவிட்டுப் படிடா. இல்லாவிட்டால் கீழே வந்து படுத்துத் தூங்கு" என்று சிடுசிடுத்து விட்டுப் போவாள். அம்மாவுக்கு மட்டும்தானா? அந்தத் தெருப பெண்களுக்கே அவளைப் பிடிக்காது, அவளைப் பிடிக்காமல் இருக்கலாம். அந்தப் பாட்டும் குரலும் கூடவா பிடிக்காமல் போகும்!

அந்த நந்தினி அவன் எம்.ஏ. பரீட்சை எழுதிவிட்டு லீவிற்குப் போனபோது இல்லை. எதிர் வீட்டிலிருந்து சலங்கைச் சத்தத்திற்கும் பாட்டுக்கும் பதிலாக, விடியற்காலையில் தேவாரமும், திருவாசகமும் கேட்டது. நல்ல கட்டைத் தொண்டையில் கணீரென்று கேட்டது. யாரோ ஓர் ஓதுவார் கிழவர் மட்டும் கண்ணில் பட்டார். நந்தினி எங்கே? தயங்கித் தயங்கி இரண்டு நாட்களுக்கப்புறம் அம்மாவிடம் கேட்டான். அம்மா ரொம்ப அலட்சியமாகப் பதிலளித்தாள்: "அந்த மாதிரி

ஜென்மங்களுக்கு என்ன முடிவு ஏற்படணுமோ, அதுதான் அவளுக்கும் ஏற்பட்டது. உடம்பு கொள்ளாத வியாதி. கடைசியிலே தெருவே நாற்றமெடுத்துச் செத்தாள். கொள்ளி போடக் கூட நாதியில்லை. தர்மக் கொள்ளிதான்."

அந்த உடம்புக்கா வியாதி? அவளுக்கா? நந்தினி, உனக்கா? இரண்டு வருஷத்துக்கு முன்பு அவள் முத்தம் இட்ட உதடு அப்போது நெருப்புப்பட்ட மாதிரி எரிந்தது. ஒரு நிமிஷ நேரம் அவளது அணைப்பிலிருந்த உடம்பு முழுதுமே எரிந்தது! 'சங்கர் என்னை மறந்துடாதே...' என்று அவள் கெஞ்சின கெஞ்சல், அந்தக் குரலில் இருந்த தாபம்...அவளை அவனால் மறக்கவே முடியவில்லை. அந்த நினைவை அவன் கதை யாக்கினது—எல்லார் மனத்திலும் அவள் மோக நெருப்பை மூட்டிவிட்டது—கடைசியில் அவளே அதில் எரிந்துபோனது...

நந்தினி!

அந்த காரெக்டரைப் பிடிக்கக்கூடிய ஒரு பெண்! நிச்சய மாக இந்த வித்யா அசாதாரணமானவள்தான். அவன் கதை களைப் படிக்கும் பெண்களே குறைவு. அதிலும் இந்த வயசுப் பெண்கள் இன்னும் குறைச்சல். அப்படியே படித்தாலும் புரிந்து கொள்பவர்களே இல்லை. புரிந்து கொண்டாலும் ஏற்றுக் கொள்பவர்கள் ஒரிரண்டு பேர்கள்கூட இருக்க மாட்டார்கள். அப்படியிருக்கும்போது இந்த வித்யா எல்லாம் படித்திருக்கிறேன் என்கிறாளே—வரிக்கு வரி எல்லா நாவல் களும் ஞாபகமிருக்கிறது என்கிறாளே! அனுபவித்துப் படித் திருப்பது அவள் பேச்சிலிருந்தே தெரிகிறதே! முக்கியமாக அந்த நந்தினியின் காரெக்டர்—அவன் கதைகளிலேயே அவனுக்குப் பிடித்த காரெக்டர்—அது. அவளைப் பிடித் திருக்கிறது என்கிறாளே இந்த வித்யா!

சங்கர் அவளை இப்போது வேறு விதமாகப் பார்த்தான். அவன் பார்வையில் முதலில் இருந்த அலட்சியம் இப்போது ஓடிப்போய் விட்டது.

நந்தினி! அந்த ஒரு பதில் போதும். வித்யாவைப் பாதி புரிந்து கொண்டு விட்டான் அவன்.

பூனம் ரெஸ்டாரென்ட்டின் உள் பக்கமாய், கடைசி மூன்று பேர்கள் உட்காரக்கூடிய மேஜையில் போய் உட்கார்ந் தார்கள் அவர்கள்.

"என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்ற அவனது கேள்விக்கு அநாவசியமான பிகு எதுவுமில்லாமல் அவள் மெனு கார்டைப் பார்த்து ஆர்டர் பண்ணினது அவனுக்குப் பிடித்திருந்தது.

"உங்கள் கதைகளைப் படித்துவிட்டு அவை எழுதப்பட்ட விதங்களிலிருந்து—உங்களுக்குக் கிடைத்திருக்கக் கூடிய அனு பவங்களை ஊகித்து அறிந்து கொண்டு, உங்களுக்குக் கிட்ட தட்ட ஐம்பது வயசாவது இருக்க வேண்டும் என்று முடிவு பண்ணியிருந்தேன் நான்" என்று சொல்லி விட்டுச் சிரித்தாள் வித்யா. பற்கள் வரிசையாக, நல்ல வெள்ளையில் பளிச்சிட் டதைக் கவனித்தான் சங்கர்.

"அனுபவங்களுக்கு வயசு ஒரு கணக்கா? ஆனாலும் எல்லாமே அனுபவப்பட்டுத்தான் எழுதப்பட்டது என்று சொல்ல முடியுமா, மிஸ் வித்யா!"

"முடியாதுதான். ஆனால் அந்த மாதிரி எழுத்துக்கு நிச்சயமாக ஒரு அனுபவம் இருந்திருக்க வேண்டும். அது நேரடியான சொந்த அனுபவமாகத்தான் இருக்க வேண்டு மென்பதில்லை. யாருக்கோ ஏற்பட்ட அனுபவங்களாகக்கூட இருக்கலாம். அவற்றைக் கேள்விப்பட்டுப் பார்த்தும் இருக்க லாம். அதன் பாதிப்புகள் மனதில் தங்கிப் போயிருக்கலாம். அந்தப் பாதிப்பின் மூலம் பிறக்கும் எழுத்து தனியாகத் தெரியும். பவர்ஃபுல்லாக அமையும். அப்படிப்பட்ட எழுத்துத் தான் உங்களுடையது."

சங்கர் மெதுவாகச் சிரித்தான். மனதிற்குள் ஒரு பூரிப்பு. அபூர்வமான பூவைப் பார்த்த பூரிப்பு. அழகான இயற்கைக்

காட்சியை ரசித்த பூரிப்பு. பச்சை வயல்களுக்கு நடுவில் வரப்பின் மேல் பறவைகளின் கத்தலைக் கேட்டுக் கொண்டே ஏற்றத்தையும், கவலை ஒட்டும் மாடுகளையும் கஞ்சிக் கூடைகளைச் சுமந்த பெண்ணையும், அவள் கருப்புக் கால்களில் சத்தமிடும் தண்டையையும் கொலுசையும் பார்த்துக் கொண்டே நடந்து வந்த பூரிப்பு—நீர் வீழ்ச்சியின் பக்கத்தில் நின்று அதன் நீர்த் துளிகள் சின்னத் தூறலாக உடம்பில் தெறிக்கும்போது ஏற்படும் பூரிப்பு—மனத்திற்குத் திருப்தியாக ஒரு கவிதையை எழுதி முடித்த பூரிப்பு. அதை மறைத்துக்கொள்ள, தன் சந்தோஷத்தை நன்றாக அநுபவிக்க அவனுக்கு அப்போது ஒரு சிகரெட் தேவையாக இருந்தது.

"டூ யு மைண்ட் ஸ்மோக்கிங்?"—அவன் சிகரெட் பாக்கெட்டைப் பிரித்துக்கொண்டே கேட்டான்.

"நோ... பட்"

"என்ன சொல்லுங்கள், லெட் அஸ் பி ஃபிராங்க் மிஸ் வித்யா..."

"எனக்கு சிகரெட் வாசனை பிடிக்காது. வயிற்றைப் புரட்டுகிற மாதிரி இருக்கும்."

சங்கர் சிகரெட் பிடிக்கவில்லை. அதற்குள் அவள் ஆர்டர் பண்ணின கட்லெட் வந்தது. அவள் நாப்கின்னை விரித்துக் கொண்டு சாப்பிடலாமா என்று கேட்டுச் சாப்பிட ஆரம்பித்தாள். கட்லெட்டை வெட்டிக் கொண்டே சங்கர் பேச்சை ஆரம்பித்தான்.

"நீங்கள் என்ன புத்தகங்களெல்லாம் படிப்பீர்கள்?"

"தமிழிலா, இங்கிலீஷிலா?"

"இரண்டிலும்தான்."

வித்யா சொன்னாள். கேட்கக் கேட்கச் சங்கருக்கு சந்தோஷம் அதிகமாகியது. இந்த மாதிரியான ஒரு பெண்ணைத்தான் அவன் தேடிக் கொண்டிருந்தான். அழகானவளாக, இலக்கியம் தெரிந்தவளாக, புத்திசாலியாக போலித்தனம் எதுவுமில்லாதவளாக, சுத்தமான ஆங்கிலம் பேசுபவளாக...

'சங்கர், நீ சந்திக்க ஆசைப்பட்ட பெண் இவள்தானா? இதோ, உன் எதிரில் உனக்குச் சமமாகப் பேசிக்கொண்டு, கட்லெட் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் இந்தப் பெண்தானா? இன்னும் பேசேன். எல்லாவற்றையும் பற்றிப் பேசேன். அவளை—அவளுக்குள் இருக்கும் அவளைத் தூண்டிப் பார்த்துப் புரிந்து கொள்ளேன். இவள்தானா பாரேன்...'

அவன் சங்கீதத்தைப் பற்றிப் பேசினான். வினையாட்டைப் பற்றிப் பேசினான். சினிமாவைப் பற்றிக் கேட்டான். அவளுக்கு மதுரை சோமுவைப் பிடித்திருந்தது. எம்.எஸ்.வின் 'ரங்கபுர விகாரா', எம்.எல்.வி.யின் 'பாற்கடல் தனிலே,' உஷா அய்யர், எல்விஸ்ப்ரிஸ்லி, பீட்டில்ஸ் எல்லாரையும் ரசிக்கத் தெரிந்திருந்தது. சத்யஜித்ரேயின் படங்களை அவள் ரசித்தவிதம், டேவிட் லீனின் படங்களில் வரும் சில வழக்கமான காட்சிகள், கார்லோ பாண்டியின் படத்தைப் பற்றின விமரிசனங்கள், சோபியா லாரனின் இயற்கையான அலட்டிக்கொள்ளாத நடிப்பு—சங்கர் ஒரு முழு திருப்தியுடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

அவனுக்கு டைரி எழுதுகிற பழக்கம் உண்டு. டைரி என்றால் இன்னைக்கு வெங்காய சாம்பார் சாப்பிட்டேன். ஷேவ் பண்ணிக் கொண்டேன், ஆபீசுக்குப் போனேன் என்று எழுதுவதில்லை. அவனுடைய டைரியில் ஒவ்வொரு பக்கமுமே கவிதைகள். அந்த மாதிரி எழுதுவான். எதிலும் மாறுபட்டு இருக்கவேண்டும் என்று நினைக்கிறவன். அதே வித்தியாசத்தைப் பிறரிடமும் தேடுகிறவன். தேடின எல்லாரிடமிருந்தும் ஏமாற்றத்தைப் பதிலாகப் பெற்றுக்கொண்டவன். பின் அந்தத் தேடல் அர்த்தமில்லாததாக ஆகிவிடவே நிறுத்திக் கொண்டவன். முக்கியமாகப் பெண்கள்! இந்த இருபது, இருபத்தைந்து வயசுகள் இருக்கிறதே வெறும்

அழகுகள், அலங்காரங்கள், பேசிப் பார்த்தால் பூஜியங்கள். வெறும் சினிமா பைத்தியங்கள். ஹெரால்ட் ராபின்ஸ் பைத்தியங்கள், சேஸ் பைத்தியங்கள். ராஜேஷ்கன்னா பைத்தியங்கள். அப்புறம் சத்ருகன்ஸின்ஹா பைத்தியங்கள். தமிழ்ப் புத்தகங்களா என்று முகத்தைச் சுளிக்கிற பைத்தியங்கள்...இப்படிப் பார்த்துப் பார்த்து, மனத்துக்குள் சிரித்துச் சிரித்து அலுத்துப் போனவன். அந்த அலுப்பில் என்றோ ஒரு நாள் ரேடியோவில் பேசினபோது 'இலக்கியம் படிக்கும் புத்திசாலியான பெண்ணே, நீ எங்கே இருக்கிறாய்?' என்று வெறுப்பில் கேட்டான். அது அப்போது ஞாபகத்திற்கு வந்தது. போய் அதை அடிக்க வேண்டும். அல்லது அவற்றின் கீழே 'இருக்கிறாள், வித்யா என்ற பெயரில்' என்று திருத்தி எழுத வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். நடு நடுவில் பேட்டி சம்பந்தமான கேள்விகளை நாசூக்காகக் கேட்டான். இது பேட்டிக்கான கேள்வி என்பது தெரியாமல் கேட்டான்.

அவள் அதற்குக் கொடுத்த மாறுபட்ட பதில்கள் அவனுக்குப் பிடித்திருந்தன. வழக்கமாக அவன் இந்த மாதிரிப் பேட்டிக்கெல்லாம் வருவதில்லை. அவன் ஒரு கவிஞன். கதாசிரியனே தவிர ரிப்போர்ட்டர் இல்லை. அன்று சந்தர்ப்பம் காரணமாகத்தான் வித்யாவைப் பேட்டி காண வந்திருந்தான். அப்படி வந்ததைத் தன் அதிர்ஷ்டமாக நினைத்தான். 'இவளையா உடலழகு மட்டும்தான் என்று நினைத்தேன்?' என்று வருத்தப்பட்டுக் கொண்டான்.

'என்னுடைய எல்லா ரசனைகளையும் உன்னிடம் பார்க்கிறேன். ஏன், நான் என்னையே உன்னில் பார்த்த மாதிரி இருக்கிறது. எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது வித்யா. புத்திசாலித்தனமான ஒரு பெண்ணை புடவை, நகைகளைத் தவிர மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசும் பெண்ணை, இலக்கியம் தெரிந்த நல்ல ரசனையுள்ள

ஒரு பெண்ணைச் சந்திக்கப் போகிறோமா என்று பார்த்த பெண்களிடமெல்லாம் இவற்றைத் தேடி ஏமாந்து கடைசியில் உன்னிடம் கண்டுபிடித்தேனே. இந்த டிசம்பர் 15-ஐ என்னால் மறக்கவே முடியாது வித்யா. உன்னையும்தான்...'

அவன் காபியை ஸ்பூனால் கலக்கிக் கொண்டே கேட்டான்:

"நீங்கள் ஏதாவது எழுதியிருக்கிறீர்களா வித்யா?"

"நானா?"

"என்ன, அப்படிக் கேட்கிறீர்கள்? உங்களால் நிச்சயம் எழுத முடியும். நன்றாக எழுத முடியும். எழுதிப் பாருங்கள் வித்யா."

அவள் சிரித்தாள். "நல்ல எழுத்தைப் புரிந்துகொண்டு ரசிக்கத் தெரிகிறது. அது போதும் என்று நான் நினைக்கிறேன்."

"அந்த நல்ல ரசனை இருப்பதால்தான் சொல்கிறேன். உங்களால் எழுதவும் முடியுமென்று..."

எப்போதோ காலேஜ் மாகஸினுக்காக இரண்டு மூன்று கவிதைகள் எழுதியிருக்கிறேன். என் எழுத்து அதோடு நின்று விட்டது.

"கவிதைகளா? இப்போது அந்த மாகஸின்களெல்லாம் உங்களிடம் இருக்கிறதா?"

"ம்...எங்கேயோ பீரோவின் அடியில் இருக்கிறது."

"தேடி எடுத்து வையுங்கள். அடுத்த தரம் உங்களைச் சந்திக்கும்போது அவற்றை என்னிடம் கொடுங்கள். படித்துப் பார்க்கிறேன்."

"ஓ! நீங்கள் படிக்கும்படி அவற்றில் ஒன்றுமில்லை."

"அதை நீங்களே எப்படிச் சொல்லலாம்? படித்துவிட்டுப் பின் நான்தானே முடிவு செய்ய வேண்டும்...'

சிரித்துக் கொண்டே வித்யா கைக் கடிகாரத்தைப் பார்த்தாள். அவனும் மணி பார்த்தான். ஆறரை. இத்தனை சீக்கிரம் ஆறரையாகி விட்டதா? மூன்று மணி நேரம் எப்படி ஓடிவிட்டது!

"இந்தப் பேட்டியை எழுதி முடித்த பின் உங்களுக்குக் காட்டுகிறேன் வித்யா. எங்கே வந்தால் உங்களைப் பார்க்கலாம்? ஆபீஸா, வீடா?"

"ஆபீசுக்கே வாருங்கள். வீட்டுக்கு வேண்டாம்."

"ஓ.கே. அநேகமாக இதை இன்று ராத்திரியே எழுதி முடித்து விடுவேன். முடிந்தால் நாளைக் காலையில் போன் பண்ணிவிட்டு வருகிறேன்."

இரண்டு பேரும் எழுந்தார்கள். வெளியில் வந்ததும், "உங்களை எங்கே டிராப் பண்ண வேண்டும்?" என்று கேட்டான் சங்கர்.

"இங்கேயிருந்து வீடு கிட்டேதான். நான் நடந்தே போய்விடுவேன்."

"ஓ.கே. குட் நைட். முடிந்தால் நாளைக்குப் பார்க்கலாம்" என்று கையசைத்துவிட்டுப் போனான் அவன்.

அன்று இரவு டைரியில் அவளைப்பற்றி எழுதினான்:

'மிஸ் வித்யா,

'எனக்கு உங்களைப் பிடித்திருப்பதற்குக் காரணம் என்னைப் புரிந்து கொண்டு, தன்னைப் புரிய வைத்து என்னோடு பேச முடிந்த முதல் பெண் நீங்கள் என்பதால் தான்.

என் டைரியின் பக்கங்களோ—என் தேடலோ வீணாய்ப் போவது இல்லை!'

என்று எழுதி முடித்து, டைரியை மூடி வைத்துவிட்டு அவளுடைய பேட்டியை எழுத ஆரம்பித்தபோது டெலிபோன் அடித்தது. எழுந்து போய் எடுத்தான்.

"மிஸ்டர் சங்கர்?" —அந்தக் குளுமையான குரலை அவனால் அடையாளம் கண்டு பிடித்துக் கொள்ள முடிந்தது.

வித்யா தான் அது.

10

வீட்டுக்குப் போன வித்யா ஒரு தனிச் சந்தோஷத்தில் மிதந்து கொண்டிருந்தாள். இத்தனை நாட்களாக, இந்த இருபது வருடங்களில் அவள் அனுபவித்தே இராத ஒரு புதுச் சந்தோஷம். சங்கரோடு பேசின பேச்சுக்களைத் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்தாள். அவள் பார்த்த எந்த மனிதனும் அவளிடம் இலக்கியம் பேசினதில்லை. மற்ற எந்த விஷயங்களைப் பற்றியும் விவாதித்ததில்லை. அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, உடம்பைப் பார்த்துவிட்டுக் கிட்டே நெருங்கினவர்கள்தான் எல்லாரும். மனத்தின் அருகில் யாரும் எட்டிக் கூடப் பார்த்தது கிடையாது.

அந்த ஆங்கிலோ-இந்தியன், அவளை இன்ட்டர்வ்யூ பண்ணினவன்-ஓரளவு பேசினான். அவன் கூட சங்கரைப் போல் இவ்வளவு விஷயம் தெரிந்து ஆழமாகப் பேசவில்லை. நுனிப் புல் மேய்கிற பேச்சு. உட்கார்ந்து அசை போட்டுப் பார்த்தால் ஒன்றுமில்லை என்று புரிந்துவிடும் பேச்சு. மனத்தைத் தொடுகிற பேச்சில்லை. இந்த சங்கர் முதல் மனிதன்! அவள் மனத்தின் அருகில் நெருங்கி வந்தவன்.

அம்மாவிடம் வந்து அவனைப் பற்றியும், 'கூட'ரில் தன் பேட்டி வெளி வரப் போவதையும் போட்டோவோடு மூன்று பக்கங்களுக்கு வரப் போவதையும் சொன்னாள். அம்மாவுக்குச் சந்தோஷம். தங்கைகளும், தம்பியும் மாறி மாறிக் கேள்வி

களாகக் கேட்டார்கள். வித்யா நிதானமாகப் பதில் அளித்தாள். அவர்களைத் திருப்திப் படுத்துகிற பதிலாகச் சொன்னாள்.

"சங்கரை நேரில் பார்ப்பேன் என்று நான் நினைக்கவே இல்லை அம்மா. கதைகளைப் படித்துவிட்டு அவரைப் பார்த்தபோது ஏமாற்றமாக இல்லை. சிலபேர் கதைகளில் வேறாகவும் நேரில் பார்க்கும்போது வேறாகவும் இருப்பார்கள். அந்த டபிள் பர்ஸனாலிடி சங்கர்கிட்டே இல்லை. அவர் வயசைத் தவிர வேறு எதுவும் ஏமாற்றவில்லை."

"என்ன வயசிருக்கும் அவனுக்கு?"— அம்மா அவளைத் திருப்தி படுத்தக் கேட்டு வைத்தாள். அவள் 'கூடரும் படிப்பதில்லை; சங்கரையும் தெரிந்தவளில்லை. வித்யாவுக்கு எழுத்தில் இருக்கும் பைத்தியத்தையும், புத்தகங்களில் இருக்கும் மோகத்தையும் தெரிந்து கொண்டிருப்பவளாதலால், அவளுக்காகவே கேட்கப்பட்ட கேள்வி அது. அதற்குப் பதிலைக்கூட அம்மா எதிர்பார்க்கவில்லை.

"நான் ஐம்பது.... ஐம்பதிதஞ்சு வயச இருக்கும்னு நெனைச்சேன். மு ப் ப து தா ன் இருக்கும். உயரமா, வெள்ளை வெளேர்னு ஜம்முனு இருக்கார்."

பெண்ணின் பேச்சைக் கேட்டு அம்மா சிரித்தாள்:

"போறும், உன் சங்கரின் புகழ். கேட்டுச் சலிச்சுப் போச்சு. எழுந்து சாப்பிட வா."

'உனக்கென்ன தெரியும், அவர் எழுத்தைப்பத்தி?' என்று மனதிற்குள் முணுமுணுத்துக் கொண்டே வித்யா சாப்பிடப் போனாள். சரியாகச் சாப்பிட முடியவில்லை. சாப்பிட்டதாக பெயர் பண்ணிவிட்டு எழுந்துவிட்டாள்.

அவன் மாகளின்களைத் தேடி எடுத்துக் கொண்டு வரச் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. புத்தக அலமாரியைத் திறந்து, அடுக்கப்பட்ட புத்தகங்களுக்குக் கீழே எங்கோ

அடியில் கிடந்த மாகளின்களைக் கண்டுபிடித்து எடுத்தாள். அந்தக் கவிதைகளைப் படித்துப் பார்த்தாள். இப்போது படிக்கும்போது அவை மிகவும் நன்றாக இருப்பதாகத் தெரிந்தது. முன்பு எழுதியவற்றுக்கு இப்போது வேறு வேறு அர்த்தங்களும் கிடைத்தன. 'இவற்றை நானா எழுதினேன்?' என்று அவளே சந்தோஷப்பட்டுக் கொண்டாள். பரவாயில்லை, சங்கரிடம் காண்பிக்கக் கூடிய கவிதைகள் தான் என்ற தைரியம் வரவே மறுநாள் ஆபீசுக்குக் கொண்டு போக அந்த மாகளின்களை மேஜையின் மேல் எடுத்து வைத்தாள்.

அலமாரியிலிருந்த சங்கரின் புத்தகங்களை எடுத்துப் புரட்டினாள். அக்கினிக் கனவில் தனக்குப் பிடித்த சில இடங்களைத் திரும்பப் படித்தாள். நந்தினி! எப்படிப்பட்ட காரெக்டர் இது! அந்த மாதிரி ஒரு பெண்ணை அவர் உண்மையிலேயே சந்தித்திருப்பாரா? நந்தினி ஆசைப்படும் அந்தக் கிருஷ்ணன் இவராகவே இருக்குமோ? ஏன் இருக்காது? இருக்கலாம். புத்தகங்களைத் திரும்ப அலமாரியிலேயே வைத்து மூடிவிட்டுக் கதையில் வரும் கிருஷ்ணனையும் நேரில் பார்த்த சங்கரையும், ஒப்பிடத் தொடங்கினாள். எத்தனையோ ஒற்றுமைகள். இவர்தான் கிருஷ்ணனாகத் தன்னை மாற்றிக் கொண்டிருக்கிறார். இவரேதான். சந்தேகமேயில்லை. இதைக் கண்டு பிடித்ததும் திரும்பச் சங்கரைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அவனுக்குப் போன் பண்ணியாவது பேச வேண்டும் என்று தோன்றியது.

அப்பா எங்கோ வெளியே போயிருந்தார். வித்யா அவசரமாக டைரக்டரியைப் புரட்டிச் 'சுடர்' ஆபீஸ் நம்பரைத் தேடினாள். அங்கு போன் பண்ணிச் சங்கரின் வீட்டு நம்பரைத் தெரிந்து கொண்டு; அதைச் சுற்றினாள். எடுத்தது சங்கர்தான். குரலிலிருந்தே கண்டு பிடித்து விட்டாள்.

"மிஸ்டர் சங்கர்?"

"எஸ்...!"

"வித்யா, ஹியர்."

"வித்யா!"—அவன் குரலிலிருந்தே அவளை எதிர் பார்க்காதது தெரிந்தது.

"சொல்லுங்கள்."

என்ன சொல்ல முடியும்? எதற்காக போன் பண்ணினதாகச் சொல்ல முடியும்? அவள் பதிலைத் தேடினாள். ஒன்றும் கிடைக்கவில்லை. எதுவும் நல்ல காரணமாகத் தோன்றவில்லை. அதனால் கொஞ்சம் தடுமாறிப் போனாள்.

"ஒன்றுமில்லை. சும்மாத்தான்..."

"ஒன்றுமில்லையா?"— சங்கர் சிரித்தான்: என் நம்பர் எப்படிக் கிடைத்தது?"

"கூடருக்குப் போன் பண்ணித் தெரிந்து கொண்டேன்!"

"ஓ!"

"என் போனை நீங்கள் எதிர்பார்க்கவில்லையா?"

"எதிர்பார்க்கவில்லை."

"இப்போதான் உங்கள் அக்கினிக் கனவை எடுத்துத் திரும்பப் புரட்டிப் பார்த்தேன். அந்தக் கிருஷ்ணனைப் படித்தபின் உடனே உங்களுக்கு போன் பண்ண வேண்டுமென்று தோன்றியது, பண்ணினேன்."

கிருஷ்ணனுக்கும் அவனுக்குமுள்ள சம்பந்தத்தை அவள் புரிந்து கொண்டு விட்டாள் என்பதைத் தெரிந்து கொண்டான் சங்கர்.

"யு ஆர் டூ க்ளெவர் மிஸ் வித்யா."

வித்யா சிரித்தாள். சந்தோஷமாகச் சிரித்தாள்.

"என்னுடைய பழைய காலேஜ் மாகஸின்களையெல்லாம் எடுத்து வைத்திருக்கிறேன் மிஸ்டர் சங்கர். பரவாயில்லை. உங்களிடம் காட்டக்கூடிய கவிதைகளாகத்தான் எழுதியிருக்கிறேன். நாளைக்கு ஆபீசுக்குக் கொண்டு வருகிறேன்."

"நானும் இனிமேல்தான் உங்கள் பேட்டியை எழுத ஆரம்பிக்கப் போகிறேன். முடித்து எடுத்துக் கொண்டு நாளைக்கு ஆபீசுக்கு வரலாமா?"

"ஓ எஸ்...யு ஆர் ஆல்வேஸ் வெல்கம்."

"ஓ...தேங்க்ஸ் மிஸ் வித்யா."

"குட் நைட் மிஸ்டர் சங்கர்—"

"குட் நைட்..."

போனை வைத்துவிட்டுப் போய்ப் படுத்துக் கொண்டாள் வித்யா. தூக்கம் வரவில்லை, 'எப்போது நாளக்காலை வரும்? ஆபீசுக்குப் போகப் போகிறோம்' என்ற தவிப்பில் இருந்தாள். கடிகாரத்தின் 'டிக்டிக்' சத்தத்தை, சுவர்க்கோழி நிறுத்தாத கத்தலை, சுற்றியிருந்த இருட்டை ரசித்தபடி படுத்துக் கொண்டிருந்தாள். 'இந்தச் சுவர்க்கோழி எங்கே இருந்துகொண்டு இப்படிச் சத்தம் போடுகிறது? அதையேன் பார்க்க முடிவதில்லை? எப்படியிருக்கும் அது! இருட்டு எவ்வளவு அழகாக இருக்கிறது?' என்று எதை எதையோ நினைத்துக் கொண்டாள். ஹால் கடிகாரம் ஒன்று, இரண்டு, மூன்று என்று அடித்துக் கொண்டு போவதை எண்ணிக் கொண்டே வந்தாள். நாலடிக்கும்வரை எண்ணினவளுக்கு ஐந்தடித்தது தெரியாது; தூங்கிப் போய்விட்டாள்.

மறுநாள் அவள் பஸ் ஸ்டாப்வரை கூடப்போகவில்லை. எதிரே ரமணி காரில் வருவது தெரிந்தது. அவளருகில் வந்து தும் காரை நிறுத்திக் கதவைத் திறந்து விட்டான் அவன். வித்யா ஏறிக்கொண்டாள். அவன் காரைத் திருப்பினான்.

"நேத்து சாயங்காலம் மூணரை மணியிருக்கும், உன் ஆபீசுக்கு வந்து இருந்தேன் வித்யா, நீ இல்லை."

"நேத்திக்கு நான் எங்கே போயிருந்தேன் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

"எனக்கெப்படித் தெரியும்? நீயே சொல்லு."

வித்யா கூடரில் வரப்போகும் தன் பேட்டியைப் பற்றிச் சொன்னாள். சங்கரைப் பற்றி அம்மாவிடம் பேசின அதே உற்சாகத்தோடு பேசினாள்.

"அவரை நேரில் பார்ப்பேன் என்று நான் நினைக்கவே யில்லை ரமணி. அவருடைய கதைகளையெல்லாம் நீங்கள் படிச்சதே இல்லையே! படிக்கணும் ரமணி. எப்படி எழுதறார் தெரியுமா? பேச்சும் அதே மாதிரி தான். எத்தனை விஷயம் தெரிஞ்சிருக்கு அவருக்கு. எல்லாப் புத்தகங்களும் படிச்சிருக் காரி. கிட்டத்தட்ட மூணு மணி நேரம் பேசினோம். காலேஜ் மாகஸினில் வந்த என் கவிதைகளைப் பற்றிச் சொன்னேன். படிக்கணும்னார். எடுத்துண்டு போறேன்."

"ஐ...ஸீ..."

"போட்டோவோட இந்த வாரச் கூடரிலேயே என் பேட்டி வரப் போகிறது ரமணி."

"குட்... கங்கிராஜுலேஷன்ஸ்...வித்யா."

"நேத்திக்கு ராத்திரி அவருக்கு போன் பண்ணினேன். உன் பேட்டியைத்தான் எழுதிண்டு இருக்கேன்... நாளைக்குக் காலையில் முடிச்சுக்கொண்டு வந்து காட்றேன்னு சொன்னார்."

"ஐ...ஸீ..."

ஐ...ஸீ, ஓகே என்று ஒரு வார்த்தைப் பதில்களாக அவன் சாதாரணமாகச் சொல்லிக் கொண்டு வருவதை அப்போதுதான் கவனித்தாள் வித்யா... அவளுடைய சந்தோஷம், உற்சாகம் எல்லாமும் அடங்கிப் போய் விட்டது. அவனை வெறுமையாகப் பார்த்தாள்.

'நான் எத்தனை சந்தோஷத்தோட சொல்லிக் கொண்டு வரேன்! நீங்க கடனுக்குப் பதில் சொல்ற மாதிரி ஐ...ஸீ., ஓகேன்னு முணகறீங்களே!' என்று கேட்டுவிட வேண்டும் போல் இருந்தது. ஆனால் கேட்கவில்லை. அவளும் பேசாமல் மௌனமாக வெளியே பார்த்துக் கொண்டு வர ஆரம் பித்தாள்.

'இதைக் கேட்டுக் கொள்ளும் பொறுமை கூடவா உங்களிடம் இல்லை ரமணி?' அவளுக்கு வருத்தமாக இருந்தது;

சில நிமிஷங்கள் ரமணியும் பேசாமல் இருந்தான், மவுண்ட் ரோடைத் தாண்டி சென்ட்ரலை நெருங்கிக் கொண் டிருந்தபோது, "சாயங்காலம் உன்னாலே கொஞ்சம் சீக்கிரம் வரமுடியுமா வித்யா? நான் உன் ஆபீசுக்கு வந்து உன்னை 'பிக்அப்' பணணிக்கறேன். எங்கேயாவது வெளியே போக லாம்" என்று கேட்டான்.

"நேத்திக்கே ஆபீசை விட்டுச் சீக்கிரம் கிளம்பிவிட் டேன். இன்னைக்கும் அப்படிக் கிளம்பினால் செக்ஷன் சூபர் வைஸர் என்ன சொல்லுவாளோ?.... எதற்கும் உங்களுக்கு லஞ்சுக்கு அப்புறம் போன் பண்ணிச் சொல்றேனே!"

"ஓ....கே...வித்யா, வர ட்ரை பண்ணு."

வித்யா தலையாட்டினாள். அவளை ஆபீஸ் வாசலில் இறக்கிவிட்டு "போன் பண்ண மறக்காதே!" என்று சொல்லி விட்டுப் போய்விட்டான் ரமணி.

அதற்குள் கூடரில் அவளது பேட்டி வரப் போகும் விஷ யம் ஆபீஸ் முழுவதுக்கும் தெரிந்துவிட்டது. சந்தோஷமாக வந்து அதைத் தெரியப்படுத்திவிட்டுப் போனவர்கள் பலர். சந்தோஷப்படாமல் கடனுக்குச் சந்தோஷம் என்று சொன்ன வர்கள் பலர். பொறாமையோடு வந்து அதை மறைக்க முடி யாமல் பேச்சில் கொட்டிவிட்டுப் போனவர்கள் பலர். எதற்கும் வித்யா அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

எதையும் பொருட்படுத்தவில்லை. எல்லாருக்கும், எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரி சிரிப்பு, பதில்.

பதினோரு மணிக்குச் சங்கரிடம் இருந்து போன் வந்தது.

"நீங்கள் ஃப்ரீயாக இருக்கிறீர்களா மிஸ் வித்யா? இப்போது வந்தால், பதிது நிமிஷம் பேச முடியுமா?"

"ஓ..எஸ். வாருங்கள்."

"உங்கள் போட்டோ கூட வந்துவிட்டது. அதையும் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி போனை வைத்து விட்டான்.

பத்தாவது நிமிஷத்துக்கெல்லாம் சிவகுமார் அவளை அறைக்கு வரச் சொல்லி போனில் கூப்பிட்டான். வித்யா செக்ஷன் சூபர்வைஸரிடம், சிவகுமார் கூப்பிடுவதைச் சொல்லி அனுமதி வாங்கிக் கொண்டு கிளம்பினாள். சரி என்று தலையாட்டும்போது செக்ஷன் சூபர்வைஸரின் முகம் அவ்வளவாகச் சரியாக இல்லை என்பதைக் கவனித்துக் கொண்டு, சீக்கிரம் திரும்பி வந்துவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டு படியிறங்கினாள் வித்யா.

சிவகுமாரின் அறையில் நுழைந்ததுமே "ஹலோ" என்று சிரித்தான் சங்கர். பளிச்சென்ற சிரிப்பு. இருக்கிற இடத்தை நிறைவாக்குகிற சிரிப்பு. அவனைப் போலவே அவனுடைய சிரிப்பும் தனியாக இருக்கிறது என்று எண்ணிக் கொண்டே சிவகுமாருக்கும் 'குட்மார்னிங்' சொல்லிவிட்டு அவனெதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

"யு லுக் ஒண்டர்ஃபுல் இன் திஸ் போடோகிராப், மிஸ் வித்யா..." என்று புகைப்படத்தை அவளிடம் நீட்டினான் சிவகுமார்.

"தேங்க்யூ சார்" என்றபடி வாங்கிப் பார்த்தாள் அவள். உண்மையாகவே அழகாகத்தானிருந்தாள்.

அதற்குள் சிவகுமாருக்கு ஏதோ போன் வரவே "நீங்கள் பேசிக்கொண்டிருங்கள் மிஸ்டர் சங்கர், இதோ...ஐந்தே நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியே போய் விட்டான்.

"எங்கே அந்த மாகஸின்ஸ்?" என்று மறக்காமல் கேட்டு வாங்கிப் பார்த்தான் சங்கர்.

'தோப்பில் தனி மரம்' என்ற பெயரில் அவள் ஆங்கிலத்தில் எழுதியிருந்த கவிதை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதிலிருந்து அவளைப் பற்றி அவனால் இன்னும் கூட ஏதோ புரிந்து கொள்ள முடியும் என்று தோன்றவே, "இது என்னிடமே இருக்கட்டும் வித்யா" என்று மாகஸீனை வாங்கி வைத்துக் கொண்டான்.

"இதைத் தமிழ்ப்படுத்தி எங்கள் பத்திரிகையில் போடலாமென்று பார்க்கிறேன்."

"இதையா? ஓ! தட் சஸ் டூ மச்."

"நான் தகுதியில்லாத யாரையும், எதையும் புகழ்வதில்லை வித்யா. அந்தப் போலித்தனமான பேச்சுக்கள் எனக்குப் பிடிக்காதது? வராததும்கூட..."

"அப்படியானால் நிஜமாகவே தோப்பிலுள்ள தனி மரம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?"

"தனியான எதுவுமே எனக்குப் பிடிக்கும்" என்றான் அவன். அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"உங்களிடம் ஒரு நிச்சயமான பேனா இருக்கிறது வித்யா. இனிமேல் அதை நீங்கள் உபயோகிக்க வேண்டும். நிறைய எழுத வேண்டும். நன்றாக எழுத உங்களால் முடியும். புரிகிறதா?"

"சரி" என்று தலையாட்டினாள் வித்யா.

அவன் அவளுடைய பேட்டியை எடுக்கத் தொடுத்தான். படித்ததும், பேசாமல் திருப்பிக் கொடுத்தாள்.

"என்ன?"

LIBRARY PUBLIC NEMARA 2001

"உங்கள் எழுத்துக்கு என் விமரிசனமா?"—வித்யா கேட்டுவிட்டுச் சிரித்தாள். அதை அவளுடைய மாகளிலுக்குள்ளேயே வைத்துக்கொண்டான் சங்கர்.

"நீங்கள் ஒரு தரம் என் வீட்டுக்கு வர வேண்டும் வித்யா."

"உங்கள் வீட்டுக்கா! எங்கேயிருக்கிறது உங்கள் வீடு?"

"காந்தி நகரில்! என்றைக்கு உங்களுக்குச் சௌகரியம் படுமென்று சொல்லுங்கள்? நானே வந்து அழைத்துக் கொண்டு போகிறேன்."

"சனிக்கிழமை எனக்கு அரை நாள்தான். ஆபீஸ் விட்டவுடன் வந்தால் போகலாம்."

"ஓ. எஸ். ஒரு மணிக்குத்தானே ஆபீஸ் முடிகிறது? வந்து விடுகிறேன்."

சிவகுமார் திரும்பி வந்ததும் சொல்லிவிட்டுக் கிளம்பினான் சங்கர்.

"ஸீ யு தென் ஆன் ஸாடர்டே"

வித்யா தலையாட்டினாள்.

கொலேட்டரின் எதிரே வந்து நின்றாள். மனசு அங்கு இல்லை.

'தனி மரம்!'—அந்தக் கவிதை நன்றாக இருக்கிறது என்றாரே, முடிந்தால் தமிழ்ப்படுத்தி எங்கள் பத்திரிக்கையில் பிரசுரிக்கலாம் என்றாரே—பிரசுரமாகுமா? நிஜமாகவா நான் நன்றாக எழுதியிருக்கிறேன்? மேலே நிறைய எழுத வேண்டும். உங்களிடம் ஒரு நிச்சயமான பேனா இருக்கிறது என்று சொல்லிவிட்டுப் போகிறாரே, எழுத முடியுமா? எழுதிப் பார்த்தால் என்ன?'

நினைவைக் கலைக்கிற மாதிரி அவளை செக்ஷன் சூபர்வைஸர் கூப்பிட்டாள். மெஷினை நிறுத்திவிட்டு வித்யா அவளது அறைக்குள் போனாள்.

"வித்யா, மூணு நாளா நீ வேலையைக் கவனிக்கறதே இல்லை. இப்படி அடிக்கடி சிவகுமார் கூப்பிடுகிறார் என்று போய்விட்டால் எப்படி? ஆபீஸ் விட்டதும் நீ போய் அவரோடு எத்தனை நேரம் வேண்டுமானாலும் பேசு, எங்கே வேண்டுமானாலும் போ, வேலை நேரத்தில் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டாமா?"

கொஞ்ச நேரத்துக்கு முன் குளிர் காற்றுப்பட்ட அதே முகத்தில் இப்போது நெருப்பு வந்து விழுந்தது. பேசாமல் திரும்ப வந்து தன்னிடத்தில் நின்று கொண்டாள் வித்யா.

'ஆபீஸ் விட்டதும் நீ அவரோடு எத்தனை நேரம் வேண்டுமானாலும் பேசு. எங்கே வேண்டுமானாலும் போ.'

எத்தனை விஷமத்தனமான வார்த்தைகள்! படித்தவர்களும், படிக்காதவர்களும் இந்த மாதிரி விஷயங்களில் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள். எத்தனை வயதானாலும் என்ன? மனசு மட்டும் பிஞ்சாகத்தான் இருக்கிறது. இவர்களுக்கெல்லாம்—ஏதேதோ நினைத்துக் கொண்டே ரமணிக்கு போன் பண்ண வேண்டும் என்பதையே மறந்து போனாள்.

ஆபீஸ் விட்டுக் கிளம்பும் போதுகூட ஞாபகம் வரவில்லை.

11

ஜன்னல் ஓரத்தில் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தாள் வித்யா. தென்னை ஓலைகளின் வழியாகத் தெரிந்த முக்கால் நிலவு அழகாயிருந்தது. வானம் தெளிவான நீலத்தில் பளிச்சிட்டது. ஒரு பிசிறு வெள்ளை மேகம்கூட இல்லை. வித்யா எழுந்து, ஜன்னல் கம்பிகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு கண்ணுக்கெட்டிய தூரம்வரை தேடினாள். ஊஹூம்! ஒரு

துண்டு மேகத்தைக்கூடப் பார்க்க முடியவில்லை. எத்தனை நல்ல நீலம்! நேவி ப்ளூ என்பார்களே, அந்தக் கருத்த நீலம். அதில் கும்பல் கும்பலாகக் குவிந்து கிடந்த நட்சத்திரங்களின் சிமிட்டல் மட்டும்தான். ஜன்னலுக்குப் பக்கத்திலிருக்கும் பவழ மல்லிகை, 'நான் பூத்திருக்கிறேன்' என்பதைத் தெரியப் படுத்தியது. வித்யா ஆழமாக மூச்சை உள்ளுக்கிழுத்தாள்; 'அப்பா! அந்தச் சின்னப் பூவுக்கு எத்தனை வாசனை?'

திரும்பப் படுக்கையில் படுத்துக் கொண்டாள். அன்றைய நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாய் நினைத்துப் பார்த்தாள்.

ரமணி!

திடீரென்று அவனுக்கு போன் பண்ணாதது ஞாபகத்துக்கு வந்தது. 'இதை நிச்சயமாக அவர் தப்பாகத்தான் எடுத்துக் கொண்டிருக்கப் போகிறார். விஷயங்களைத் தெளிவோடு ஆராய்ந்து பார்க்கும் பொறுமையும், பக்குவமும் ரமணிக்கு என்றுமே இருந்ததில்லை.' வித்யா அப்போது தன்னைத்தானே ஆராய்ந்து பார்க்கலானாள்:

'ரமணிக்கு போன் பண்ண வேண்டுமென்பது எப்படி மறந்து போயிற்று? உண்மையான அக்கறையும் ஆர்வமும் ஒரு விஷயத்தில் இருந்தால் மறந்து போகுமா? அப்படியானால் ரமணியின் விஷயத்தில் அவை எனக்கு இல்லையா? பின் ஏன் மறந்து போயிற்று? எப்படி மறக்க முடியும்?

'ஐயாம் ஸாரி ரமணி. வெரி ஸாரி. நாளைக்குக் காலையில் ஆபீசுக்குப் போனதும் முதல் வேலை உங்களுக்குப் போன் பண்ணுவதுதான்!

'ஒருவேளை இன்று மாதிரியே ரமணி நாளைக் காலையிலும் ஆபீசுக்குப் போகும் நேரத்தில் வரலாம். அப்போது சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடலாம். முடிந்தால் நாளைக்கு 'பர்மிஷன்' கேட்டுக் கொண்டு

ரமணியுடன் வெளியே போக வேண்டும். இன்னும் சில விஷயங்களை அவருக்கு தெளிவுபடுத்தியாக வேண்டும். என்னை இன்னும் நன்றாகப் புரிய வைக்கவேண்டும். புரிந்து கொள்ள முடியுமா ரமணியால்? இன்னும் எத்தனை வருஷங்கள் பழகினாலும் அவன் தன்னைப் புரிந்து கொள்ளப் போவதே இல்லை' என்றுதான் தோன்றியது.

'காலையில் எவ்வளவு சந்தோஷத்துடன் நான் விஷயங்களைச் சொல்லிக் கொண்டு போனேன்! கேட்டுக் கொண்ட விதத்தில்—திருப்பிப் பதில் சொன்ன வார்த்தைகளில் எத்தனை அலட்சியம்! நான் பேசினதெல்லாம் உங்களுக்குத் தெரியாத, பிடிக்காத விஷயங்களாகவே இருக்கட்டும். ஆனால் நமக்குள் வளர்ந்திருப்பதாகப் பெருமைப் பட்டுக் கொள்கிறோமே, அந்த நாகரிகத்துக்காகக்கூடக் கேட்டுக் கொள்ளக்கூடாதா ரமணி? நீங்கள் எத்தனை நாட்கள் உங்கள் தொழிற்சாலையைப் பற்றி, இயந்திரங்களைப் பற்றி கிடைத்த லாபத்தைப் பற்றி, உங்களுக்கு இருக்கும் ஷேர்களைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறீர்கள்! இதெல்லாம் எனக்குத் தெரிந்த விஷயங்களா? நான் கேட்டுக் கொண்டிருக்கவில்லையா? உங்களிடம் அந்தப் பொறுமை இல்லையென்பது தெரிந்துவிட்ட பின்னால் நான் பேசுவேனா ரமணி? மாட்டேன். இனிமல் எழுத்தோ எழுத்தாளர்களோ என் வாயால் உங்களிடம் வரமாட்டார்கள். வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நிலா இப்பொழுது தள்ளி ஜன்னலுக்கு நேராக வந்திருந்தது. வெளிச்சமாக உள்ளே வெகு சுலபமாக நுழைந்து கொண்டிருந்தது. 'இதற்குத்தான் எத்தனை உரிமை' என்று வித்யா ஆச்சரியப்பட்டாள். ரமணி தன்னிடம் எடுத்துக் கொண்டுவிட்ட உரிமையை நினைத்துப் பார்த்தாள். இதே மாதிரிதான். அனுமதி கூடக் கேட்காமல் வளர்ந்துவிட்ட உரிமை. நெருங்கிச் சொந்தம் கொண்டாடுகிற உரிமை...

அவள் தூங்கியபோது நிலவு ஜன்னலைவிட்டு இன்னும் மேலே ஏறிப் போய்விட்டிருந்தது.

காலையில் ஆபீசுக்குக் கிளம்பிய வித்யா, தெருக் கோடியில் இரண்டு நிமிஷங்கள் நின்று ரமணியின் கார் வருகிறதா என்று பார்த்தாள். வராததிலிருந்து ரமணிக்குக் கோபம் என்பது புரிந்தது. குளத்தங்கரைக்குப் போய் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

ஆபீசுக்குப் போனதும் ஆபரேட்டரிடம் ரமணியின் நம்பரைக் கொடுத்து 'கனெக்ட்' பண்ணச் சொன்னாள். ரமணியின் குரல் 'ஹலோ' என்றதும், "சூட்மார்னிங் ரமணி" என்று ஆரம்பித்தாள்.

"சூட்மார்னிங் வித்யா"

"ஸாரி ரமணி. என்னால் நேற்று போன் பண்ண முடியவில்லை."

"தட்ஸ் ஆல்ரைட் வித்யா."—அவன் குரலில் ஓர் அலுப்புத் தெரிந்தது.

"நேற்று நிறைய வேலை இருந்தது. அதில் உங்களுக்கு போன் பண்ண வேண்டும் என்பதே மறந்து போய் விட்டது."

"எனக்கு போன் பண்ண வேண்டுமென்பது, நினைவில் வைத்துக் கொள்கிற அளவுக்கு அவ்வளவு முக்கியமான விஷயமாக உனக்குப் படவில்லை?"

"அப்படியில்லை ரமணி..."

"உண்மையான அக்கறை இருந்திருந்தால் மறந்திருக் குமா வித்யா?"

அந்த உண்மை மனசில் தைத்தது. பதில் சொல்ல முடியவில்லை பேசாதிருந்தாள்.

"ஓ...கே. வித்யா. லீவ் இட்..."

"இன்னைக்கு மூணு மணிக்கு உங்களால் இங்கே வர முடியுமா ரமணி?"

"உன்னால் முடியுமா?"

"முடிய வைத்துக் கொள்கிறேன்."

"உன்னால் வெளியே வர முடியுமானால் நான் வருகிறேன்."

"சரியாக மூன்று மணிக்கு என் ஆபீசுக்கு வந்து விடுங்கள்."

"சரி...வித்யா!"—அவள் குரலில் பழைய தொய்வு இல்லாததை அவள் கவனித்துக் கொண்டாள்.

'ரமணி, நீங்கள் ஒரு குழந்தை!'

எப்படியோ செக்ஷன் சூபர்வைஸரிடம் சொல்லி பர்மிஷன் வாங்கிக்கொண்டு சரியாக மூன்று மணிக்கு வெளியே வந்துவிட்டாள் வித்யா. ரமணி காரில் அவளுக்காக காத்துக் கொண்டிருந்தான். அவள் ஏறினதும் காரைக் கிளப்பினான்.

"எங்கே போகலாம் வித்யா?"

"எங்கே வேண்டுமானாலும் போகலாம்."

"ப்ளூ டைமண்ட் போகலாமா?"

"பிக்சரா? எங்கேயாவது உட்கார்ந்து பேசும்படியான இடத்துக்குப் போகலாமே...."

"அப்படியானால் ஏதாவது ஏ.ஸி. ரெஸ்டாரெண்ட்தான் சரி."

"ஐ டோண்ட் மைண்ட்."

அவர்கள் சொர்காவிற்கு வந்து, ஏ.ஸி. ரூமில் இடது பக்கத்தில் கடைசி மேஜையில் உட்கார்ந்து கொண்டார்கள்.

"என்ன சாப்பிடுகிறாய்?"—ரமணி மெனு கார்டைப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"எனக்கு ஐஸ்க்ரீம் மட்டும் போதும்."

ரமணி இரண்டு சாக்லேட் ஐஸ்க்ரீம்களும் காபியும் ஆர்டர் பண்ணினான்.

"அப்புறம்..." என்று வித்யாவைப் பார்த்தான்.

"சொல்லுங்கள்."

"என்னிடம் என்ன இருக்கிறது சொல்ல?"

"நான் திரும்பத் திரும்ப அந்தக் கதை இந்தக் கதை என்று ஆரம்பிப்பேன். உங்களுக்குப் பிடிக்காது."

"கதைகளை விட்டால் பேசுவதற்கு வேறு விஷயங்களே இல்லையா, வித்யா!"

"எனக்கு இலக்கியத்தில் ஆர்வம் அதிகம். அதனால் அதைப்பற்றிப் பேசுகிறேன். உங்களுக்கு உங்கள் தொழிற் சாலையின்மேல் ஆர்வம் அதிகம். நீங்கள் அதைப் பற்றிப் பேசுகிறீர்கள். இரண்டையும் விட்டுவிட்டுப் பொதுவாக பேசலாமென்றால் உங்களுக்குப் பிடித்தது, எனக்குப் பிடிப்பதில்லை; எனக்குப் பிடித்ததில் உங்களுக்கு அக்கறையில்லை. இப்போது புரிகிறதா ரமணி, நாம் ஒருவருக்கொருவர் எவ்வளவு வேறுபடுகிறோமென்பது."

"நம்மால் எல்லாரையும் மாதிரி சாதாரணமாக இருக்க முடியப்போவதில்லையா வித்யா?"

"ஏன், எல்லாரையும் மாதிரி சாதாரணமாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறீர்கள்? நாம் கொஞ்சம் வேறாகத்தான் இருப்போமே!"

"நான் ரொம்ப சாதாரணமானவன் வித்யா — அவன் அதைக் கொஞ்சம் அழுத்திச் சொன்னதாகப் பட்டது வித்யாவுக்கு. 'கொஞ்சம் இறங்கி வந்து என் லெவலுக்குப் பேசு' என்கிற மாதிரி. அதற்குள் ஐஸ்க்ரீம் வந்தது. இரண்டு பேருமே அதைச் சுவைத்துக்கொண்டு கொஞ்ச நேரம் பேசாமலிருந்தார்கள். ரமணிதான் திரும்பப் பேச்சை ஆரம்பித்தான்:

"நேத்து சாயந்திரம் நான் அம்மாவோடு பேசிக் கொண்டிருந்தேன்:"

"ம்..."

"வித்யா இந்தக் கல்யாணத்துக்கு சம்மதித்தது பற்றி ரொம்ப சந்தோஷம். எத்தனை சீக்கிரம் முடியுமோ அத்தனை சீக்கிரம் இந்தக் கல்யாணம் நடந்தாக வேண்டும். நீதான் ஏற்பாடு பண்ணவேணும். உன்னை நான் என் கூடப் பிறந்தவளாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். வித்யாவின் அப்பாவைப் பற்றித்தான் உனக்கு நன்றாகத் தெரியுமே! அதனால் நீயே உன் அப்பா அம்மாவுக்கு லெட்டர் போட்டு வரவழைத்து, அவர்களிடம் பக்குவமாகச் சொல்லி, இவரை வந்து பார்க்கச் சொல்' என்றாள். நான் உன்னைக் கேட்டுக்கொண்டு கடிதமெழுதலாம் என்றிருக்கிறேன்..."

வித்யா மௌனமாக இருந்தாள்.

"என்ன வித்யா பேசாமலிருக்கிறாய்?"

"என்னைக் கேட்க இதில் என்ன இருக்கிறது ரமணி?"

"இல்லை, வித்யா. உனக்கு இப்போது கல்யாணத்தில் இஷ்டமிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொண்டுதான் என்னால் எதுவும் செய்ய முடியும்."

"சில விஷயங்கள் நம் விருப்பங்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பதில்லை ரமணி. நான் வீட்டை விட்டுப் போனாலே பாதிச் சண்டைகள் ஓயுமென்று அம்மா நினைக்கிறாள். அதிலும் உண்மையிருக்கிறது ரமணி. அப்பா என்னைத்தான் வெறுக்கிறாரே தவிர, மற்றவர்கள் மேல் அவ்வளவு வெறுப்பில்லை. அதனால் அந்த வீட்டை விட்டு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் வெளியே வருவது நல்லது."

"ஸோ, இந்தக் கல்யாணத்தை நீ ஒரு எஸ்கேப்பாகத் தான் நினைக்கிறாயா வித்யா?"

"எல்லாமே நமக்கு ஒரு எஸ்கேப்தான் ரமணி. யோசித்துப் பாருங்கள், நான் சொல்வது புரியும்."

"நான் அப்படி நினைக்கவில்லை வித்யா. இதை ஒரு பிளஷராக நினைத்துத்தான் ஏற்றுக்கொள்கிறேன்."

"அந்த சந்தோஷம்கூட உங்கள் கஷ்டங்களிலிருந்து உங்களுக்குத் தற்காலிகமாகக் கிடைக்கும் ஒரு விடுதலை தானே?"

ரமணி அலுத்துப் போனான். "அப்படியானால் அம்மாவை வரவழைக்கலாமா வித்யா?"

வித்யா தலையாட்டினாள். ஒரு நிமிஷ யோசனைக்குப் பின் கேட்டாள்: "அன்று பீச்சில் நான் சொன்னதையெல்லாம் திரும்ப யோசித்துப் பார்த்தீர்களா ரமணி?"

"ஏன், எதற்காகத் திரும்பித் திரும்பி யோசிக்கச் சொல்கிறாய்?"

"எதையும் செய்வதற்கு முன் நன்றாக யோசித்துத் தெளிவு படுத்திக் கொண்டு விடுவது நல்லதில்லையா?"

"எந்த யோசனைகளின் முடிவிலும், எதற்காகவும், யாருக்காகவும் என் மனசு மாறப்போவதில்லை வித்யா. எனக்கு வாழ்க்கை என்று ஒன்றிருந்தால் அது உன் கூடத் தான். இல்லாவிட்டால் நான் இப்படியே இருந்துவிட்டுப் போய்விடுவேன்."

அவனுடைய அந்தத் தீவிரமான அன்பு அவளைக் கஷ்டப்படுத்தியது.

"அப்பா இந்தக் கல்யாணத்தை நடத்தி வைப்பார் என்று நினைக்கிறீர்களா?"

"அவர் முடியாது என்று பிடிவாதம் பிடித்தால் நாமே நடத்திக் கொள்ளவேண்டியதுதான். வேறு என்ன செய்ய முடியும் வித்யா?"

"அவ்வளவு சுலபமாக முடித்துக் கொண்டு விடுகிற சூழ் நிலையில் நாம் இரண்டு பேருமே இல்லை ரமணி. இதில் எத்தனையோ விஷயங்கள் அடங்கி இருக்கின்றன. உங்கள் அப்பா அம்மா—சமூகம்— முக்கியமாக என் தங்கைகளின் எதிர்காலம் எல்லாப் பிரச்னைகளும் இதில் அடங்கியுள்ளன."

"என் ஆசைக்கு என் அப்பாவும், அம்மாவும், ஒரு போதும் மறுப்புத் தெரிவிக்க மாட்டார்கள். அது எந்த விஷயமாலாலும் சரி ஒரே பிள்ளை என்று அவர்கள் எனக்குக் கொடுத்திருக்கும் சலுகைகள் அதிகம். இந்தச் சமூகம்...? வித்யா, நீயா சமூகத்தைக் கண்டு பயப்படுகிறாய்? நம் மனசுக்குச் சரி என்று படுகிறதை, எதற்கும் பயப்படாமல் செய்ய வேண்டுமென்று சொல்லுவாயே நீயா?"

"ஆமாம், நான்தான். வேறு எதற்காகவும் இல்லை இதனால் என் தங்கைகளின் எதிர்காலம் பாதிக்கப்படக் கூடாது, ரமணி. அதைத்தான் நான் எதற்கும் முதலாகவைத்து யோசிக்கிறேன். குருட்டுத்தனமான எந்த முடிவுக்கும் வர முடியாமல் இருக்கிறேன். நான் ஒரே பெண்ணாகவோ, கடைசிப் பெண்ணாகவோ இருந்திருந்தால் என் வாழ்க்கையையே வேறு விதமாக அமைத்துக் கொண்டிருப்பேன். இப்போது நிறைய விஷயங்களை யோசித்து, எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ள வேண்டியதாக இருக்கிறது."

"முதலில் அப்பாவும் அம்மாவும் வந்து உன் அப்பாவைப் பார்த்துப் பேசட்டும். அவர் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். அப்புறம் இதைப் பற்றியெல்லாம் யோசிக்கலாம்."

"இன்னும் ஒரு விஷயம்: இந்தக் கல்யாணம் நடந்த பின்னால்கூட நான் வேலைக்குப் போய்க் கொண்டுதான் இருப்பேன். அதை நீங்கள் தடுக்கக் கூடாது. இதில் எனக்கு ஒரு சந்தோஷம் இருக்கிறது. ஒரு நிம்மதி கிடைக்கிறது. அதுவுமில்லாமல் என்னுடைய முந்நூறு ரூபாய் சம்பளத்தை நம்பி எங்கள் குடும்பம் இருக்கவில்லை. ஆனால் எதற்கும்

அப்பாவிடம் போய் நிற்க விடாத சில சின்னச் சின்னத் தேவைகளை இது பூர்த்தி செய்கிறது. அம்மாவுக்கும், தங்கைகளுக்கும் உதவியாக இருக்கிறது. இதை நிறுத்திவிட முடியாது ரமணி."

ரமணி யோசித்தான்: "உண்மையைச் சொல்வதானால் நீ வேலைக்குப் போவதில் எனக்கு இஷ்டமில்லை வித்யா. ஆனால் இப்படிச் சொல்கிறபோது என்னால் மறுக்க முடியாது. உன் இஷ்டம்."

"ஆரம்பத்திலிருந்தே அம்மா இந்த விஷயத்தில் அதிக அக்கறை காட்டியது அவளை மாதிரி என் வாழ்க்கையும் முடிந்துவிடக் கூடாதே என்ற பயத்தினால்தான். நீங்கள் என்னை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்று அம்மா நினைக்கிறாள். அதனால் என்னை நிம்மதியாக வைத்துக் கொள்வீர்கள் என்பது அம்மாவின் எண்ணம். மேலும் எங்கள் குடும்ப விஷயம் முழுசும் தெரிந்து கொண்டிருப்பதினால் எங்களுக்கெல்லாம் ஆதரவாக இருப்பீர்கள் என்று எதிர் பார்க்கிறாள்."

"அவள் அப்படி எதிர்பார்ப்பதில் எந்தத் தப்பும் இல்லையே, வித்யா..."

வித்யா பேசாமலிருந்தாள். காபிக் கோப்பையில் சர்க்கரைக் கட்டியை எடுத்துப் போட்டு அது கொஞ்சம் கொஞ்சமாக நனைந்து கொண்டே வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். காபி தன் மண் நிறத்தை வெள்ளைச் சர்க்கரையில் கொஞ்சம் கொஞ்சமாகப் பரப்பிக் கொண்டிருந்தது பார்க்க அழகாக இருந்தது. அதனால் இன்னும் ஒரு கட்டியைக்கூட எடுத்துப் போட்டு முழுசும் நனைந்ததும் ஸ்பூனால் எடுத்து பிளேட்டில் வைத்தாள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த ரமணிக்கு அவள் செய்கை குழந்தைத் தனமாகப் பட்டது.

"வித்யா, சொல்ல மறந்து விட்டேனே! இந்தச் சனிக்கிழமை சாயங்காலம் நான் கல்கத்தாவுக்குப் போகிறேன். ஏழு மணிக்கு ப்ளேன். திரும்பி வரப் பத்து நாளாகும்."

"என்ன திடீரென்று?"

"அங்கே திங்கட்கிழமை ஒரு கான்ஃபெரன்ஸ். அதை அட்டண்ட் பண்ணி விட்டுத் துர்க்கா பூருக்குப் போகிறேன். அங்கே நிறைய வேலை இருக்கிறது."

"ஐ ஸீ..."

"கல்கத்தாவிலிருந்து உனக்கு ஏதாவது வேண்டுமா வித்யா?"

"ஒ. நோ. ஒன்றும் வேண்டாம் ரமணி, தாங்க்யூ"

"சனிக்கிழமை அநேகமாக நான் ஒரு மணிக்கெல்லாம் தொழிற்சாலையிலிருந்து வந்து விடுவேன். நேராக உன் ஆபீசுக்கு வந்து உன்னை பிக்அப் பண்ணிக் கொள்கிறேன். வீட்டுக்குப் போய்க் கொஞ்சம் நேரம் பேசிக் கொண்டிருக்கலாம். ஐந்து மணிக்கு மேல் நான் சூழக்குப் போய் ஒரு போர்ட்டுக்குப் போகச் சரியாக இருக்கும்."

"சனிக்கிழமையா....?"

"ஏன் வித்யா?"

"நான் அன்று சங்கரின் வீட்டுக்கு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அவர் ஆபீசுக்கு வந்து என்னை அழைத்துக் கொண்டு போகிறேன் என்றார்."

"ஓ..." என்ற ரமணி, அதன் பின் எதுவும் பேசவில்லை.

12

சிங்கர் சரியாக ஒரு மணிக்கு வந்து விட்டான். காரில் போகும்போது "கங்கிராஜுலேஷன்ஸ் வித்யா" என்றான்.

"எதற்கு?"

"உன் கவிதை 'தோப்பில் தனி மரம்' பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. இன்னும் இரண்டு நாட்களில் உனக்கு எங்கள் ஆபீசிலிருந்து லெட்டர் வரும்."

"உண்மையாகவா?"

சங்கர் அவளைத் திரும்பிப் பார்த்து இலேசாகச் சிரித்தான்: "அதை நீ எப்போது எழுதினாய்?"

"ஒரு வருஷத்துக்கு முன். பி.ஏ. முதல் வருஷம் படித்துக் கொண்டிருந்த போது" என்ற வித்யா, மனத்திற்குள் சிரித்துக் கொண்டாள். அவனுடைய உங்கள், நீங்கள் எல்லாம் நீ...உன் என்றாகி விட்டிருந்தது. அது அவளுக்குப் பிடித்திருந்தது.

"நீ ஏன் படிப்பை நிறுத்தி விட்டாய்?"

வித்யா அதற்கு உடனே பதில் சொல்லவில்லை. ஒரு நிமிஷம் பேசாமலிருந்தாள்.

"ஐயாம் ஸாரி வித்யா. நான் பர்ஸனலாகக் கேள்வி கேட்டு விட்டேன் போலிருக்கிறது. பதில் சொல்ல வேண்டாமென்று நினைத்தால் விட்டுவிடு."

"நோ, நோ. இதற்குப் பதில் சொல்ல வேண்டுமானால் என்னைப் பற்றி முழுசும் சொல்லியாக வேண்டும்."

"அவசியமில்லை வித்யா. உன்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தில் நான் அந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. இவ்வளவு புத்திசாலியாக இருக்கும் நீ, படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்ட வருத்தத்தில்தான் கேட்டேன்."

"ஓ! நீங்கள் கேட்டதில் எந்தத் தவறும் இல்லை. நான் என்னைப்பற்றி உங்களிடம் சொல்லிக் கொள்ளலாமென்று தான் நினைக்கிறேன். நான் யாரிடமும் எதையும் சொன்னதில்லை. சொல்கிற அளவுக்கு யாரும் என் மனசை நெருங்கினதும் கிடையாது. நீங்கள் நெருங்கி

வந்திருக்கிறீர்கள். மனம் விட்டு கூறுகிறேன். உங்களிடம் சொல்வதால் எனக்கும் ஒரு ஆறுதல். ஆனால் இப்போது எல்லாவற்றையும் சொல்ல முடியாது. நேரம் கிடைத்து, தனியான சந்தர்ப்பமும் கிடைத்தால் அப்போது சொல்கிறேன்..."

"உன் கவிதையிலிருந்து என்னால் ஓரளவு எல்லாவற்றையும் புரிந்து கொள்ள முடிகிறது."

வித்யா அவனைத் திரும்பிப் பார்த்தாள். உள்ளுக்குள் தெறும் எதையோ அவள் தடுத்து நிறுத்தப் பாடுபடுவது அவனுக்குப் புரிந்தது; அவளது அந்த வருத்தமான முகம் அவனைக் கஷ்டப்படுத்தியது. மெதுவாகப் பேச்சை மாற்றினான்.

"நான் எழுதச் சொன்னேனே, ஏதாவது எழுதினாயா வித்யா?"

அவள் 'இல்லை' என்று தலையாட்டினாள்.

"உன்னிடம் ஒரு கூர்மையான பார்வை இருக்கிறது. நீ ரசிக்கும் சின்னச் சின்ன விஷயங்களையெல்லாம் எழுத்தில் கொண்டு வர வேண்டும். அது உன்னால் முடியும். எழுது வித்யா..."

அவன் கெஞ்சுகிற மாதிரிச் சொன்னான்.

"எனக்கும் நீங்கள் சொன்னதைக் கேட்ட பின்பு என்னால் எழுத முடியுமென்றுதான் தோன்றுகிறது. எழுதுகிறேன் சங்கர். எழுத்தில் உங்களையும் மிஞ்சி விடப் போகிறேன் பாருங்கள்."

அவள் சிரிப்பு அவனுக்குத் திருப்தியாக இருந்தது.

"அதை நான் வரவேற்கிறேன் வித்யா. நீ நிச்சயமாக எல்லாரையும் மிஞ்சும்படி எழுதுவாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது."

"என் முகத்துக்கு எதிரேயே புகழ்கிறீர்களே, சங்கர்!"

"நான் போலியாகப் புகழுவேன் என்று நீ நினைக்கிறாயா வித்யா?"

"இல்லை, விளையாட்டிற்குச் சொன்னேன்" என்று மறுத்தாள் அவள்.

கார் அடையாறு பிரிட்ஜில் போய்க் கொண்டிருந்தது.

"உங்கள் வீட்டில் யாரெல்லாம் இருக்கிறார்கள்?" என்று கேட்டாள்.

"நான், அம்மா, அப்பா."

"அவ்வளவுதானா?"

"ஆமாம்."

"நான் தயங்காமல் பர்ஸனல் கேள்விகளில் இறங்கப் போகிறேன். உங்களுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லையா?"

சங்கர் சிரித்துக்கொண்டே "இல்லை" என்று தலையாட்டினான்!

"அப்படியானால் எப்போது!"

"அம்மா அடிக்கடி கேட்டுத் தொந்தரவு படுத்தும் கேள்வி இது. என்னை மாட்ச் பண்ணக்கூடிய ஒரு புத்திசாலியான பெண்ணை நான் இன்னும் சந்திக்கவில்லை அம்மா, என்று சொல்லித் தள்ளிக்கொண்டே வருகிறேன். நான் இப்படி இருப்பதில் ரொம்ப வருத்தம் அவளுக்கு."

கார் காந்தி நகர் இரண்டாவது மெயின் ரோடில் திரும்பி ஒரு பெரிய பங்களாவினுள் நுழைந்தது. வாசலில் வரிசையாக அசோக மரங்கள் நான்கு. ஒரு பெரிய விசிறி வாழையைச் சுற்றிப் பச்சை பெட்ஷீட் விரித்த லான், அதன் இதற்கு மூலையில் பெரிதான ஒரு பிக்னிக் கலர் குடை. கீழே நாலு கூடை நாற்காலிகள், நடுவில் ஒரு டீபாய். கார் லானை அரை வட்டமடித்து, போர்ட்டிகோவில் போய் நின்றது. வாசல் சுவரின் ஒரு பக்கம் 'ப்ராஸோ' பளபளப்பில்

எஸ். சுந்தரராஜன் என்ற பெயர்ப் பலகை. அதன் கீழே எஸ். சங்கர் என்ற கருப்பு போர்டு.

சுந்தரராஜன் அவனுடைய அப்பாவாக இருக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள் வித்யா! காரை விட்டு இறங்கியதும், "வா, வித்யா முதலில் அப்பாவுக்கு அறிமுகப் படுத்தி வைக்கிறேன்" என்று அந்த காம்பௌண்டினுள் இருந்த இன்னொரு கட்டடத்துக்கு அவளை அழைத்துக் கொண்டு போனான் சங்கர்.

"அதுதான் அப்பாவின் ஆபீஸ். அவர் ஆடிட்டர். எல்லா சினிமா நடிகர் நடிகைகளையும் பார்க்க வேண்டுமென்று உலகுக்கு ஆசையா? காலையில் வந்து இங்கே நின்றுகொண்டு விடு. அப்பாவைத் தேடி வரும் பிளிமவுதையும், பெண்ணையும் பார்..." வித்யா சிரித்தாள். இரண்டு பக்கங்களிலும் குரோட்டன்ஸ் செழித்திருந்த ஒரு செம்மண் பாதையில் நடந்து போனார்கள். கொஞ்சம் தள்ளி உதிர்ந்து விடந்த மகிழம்பூ வாசனை மூச்சை முட்டியது.

"இந்த வீட்டில் எனக்கு ரொம்பப் பிடித்த விஷயம் இந்தத் தோட்டம்தான் வித்யா. ஒவ்வொரு செடியாக, குருத்தாகப் பார்த்துக்கொண்டு ஒரு நாளெல்லாம்கூட நின்று கொண்டிருப்பேன்."

கட்டடம் நெருங்கினதும் யாரையோ வழியனுப்ப வெளியே வந்து ஒருவரைக் காட்டி, "அவர்தான் என் அப்பா" என்றான். பெரிய சங்கராக - அதே வெள்ளை, அதே உயரம். ஆனால் வழுக்கைத் தலை. தடித்த கருப்பு பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடியுடன் கம்பீரமாக நின்று கொண்டிருந்தார் அவர். பார்த்தவுடனேயே மதிப்பையும், மரியாதையையும் எழுப்புகிற உருவம். உள்ளே திரும்பிப்போக இருந்தவர் அவர்களைப் பார்த்ததும் நின்றார்.

"அப்பா...மிஸ் வித்யா. அன்னைக்கு நான் இன்டர்வ்யூ பண்ணினதாகச் சொன்னேனே..."

"ஓ!"—அவர் முகத்தில் தெளிவான சிரிப்பு. "தயவு செய்து உள்ளே வாருங்கள்" என்று தன் அறைக்கு அழைத்துக்கொண்டு போனார்.

கட்டடத்துக்குள் நுழைந்ததும் பெரிய ஹால். வரிசையாகப் போடப்பட்டிருந்த பத்துப் பதினைந்து டைப் ரைட்டர்கள் தட்டப்பட்டுக் கொண்டிருந்தன. ஒரு நல்ல ரிதம் காதில் விழுந்தது. அவரது அறைக்குப் போனதுமே எல்லா ஓசைகளும் அடங்கிவிட்டன. கிர்' ரென்று ஏர்கண்டிஷனர் ஓடும் சப்தம் மட்டும்தான். நன்றாக அலங்கரிக்கப்பட்ட அறை. சுவரில் அவரது நாற்காலிக்கு மேலே ஓர் அழகான ஓவியம் விடியற்காலை நேரத்து அழகைக் காட்டியது. அவர் உட்கார வைத்து கோகோ கோலா கொடுத்தார். நிறையப் பேசினார். எல்லாவற்றைப் பற்றியும் பேசினார். சங்கரின் இத்தனை அறிவுக்கும் இவரும் ஒரு காரணம் என்று தோன்றியது வித்யாவுக்கு.

"வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனாயா சங்கர்?"

"இல்லை. முதலில் உங்களுக்கு அறிமுகப்படுத்தி விடலாம் என்று இங்கே அழைத்துக்கொண்டு வந்தேன்."

"போம்மா, வீட்டில் இவனுடைய அம்மா இருக்கிறாள். இன்னும் நன்றாகப் பேசுவாள்" என்றார் சிரிப்பு மாறாமல். வந்ததிலிருந்து அந்த முகத்தின் சிரிப்பு அப்படியே இருப்பதைக் கவனித்தாள் வித்யா.

"எப்போதும் சிரித்துக் கொண்டேயிருக்கும் முகம் போலிருக்கிறது!'— மறக்க முடியாத குழந்தைச் சிரிப்பு.

வாசல்வரை வந்து "அடிக்கடி வாம்மா" என்று வழியனுப்பி வைத்தார்.

"உங்கள் அப்பா எப்படிப் பேசுகிறார் சங்கர்!"

"இன்னும் நீ அம்மாவைப் பார்க்கவில்லை. இவரை ஒன்றுமில்லை என்றாக்கி விடுவாள்."

சங்கர் சொன்ன மாதிரியே அவனுடைய அம்மாவும் கலகலப்பாக இருந்தாள். அப்பாவுக்கு நேர்மாறாக ஒல்லியாக, ஒரே வளைசலில் உடைந்து விடுகிற உடம்பு. மாநிறம். ஆனால் கண்களும், மூக்கும் இன்னொரு முறை பார்க்க வைக்கும் அமைப்பு. வாய் சிரித்துக் கொண்டே இருந்தது.

'இந்த வீடே சிரிக்கும் போலிருக்கிறது! நம் வீட்டில் நுழைந்தாலே ஒரு இறுக்கமும், புழுக்கமும் வந்து விடுகிறதே. இங்கே எப்படியிருக்கிறது! ஜில்லென்று காற்று வீசுகிற மாதிரி, நீர்வீழ்ச்சி கொட்டுகிற மாதிரி எத்தனை பேச்சு! என்ன சிரிப்பு!'

காபி, டிபன் சாப்பிட்டதும் சங்கர் மாடியிலிருந்த தன் அறைக்கு அழைத்துக் கொண்டு போனான். அவனது அறை முழுவதும் நீலத்தில் பளபளத்தது. சுவர், கர்ட்டன்கள், சோபா, மேஜை எல்லாமே நீலம். கீழே ஓர் ஓரமாக இடுப்பு உயரத்தில் கண்ணாடிக் கதவுகள் போட்ட அலமாரியில் அடுக்கப்பட்ட புத்தகங்கள். பால்கனிக்குப் போகும் வழியில் தொங்கும் வெட்டிவேர் தட்டி. சுவரில் ஆயில் வர்ணத்தில் வரையப்பட்ட சித்திரங்கள்.

வித்யா கிட்டே போய்ப் பார்த்தாள். கீழே எஸ். சங்கர் என்ற ஆங்கிலக் கையெழுத்து.

"உங்களுக்குச் சித்திரம்கூட வருமா?"

"அதுதான் சுவரில் பார்க்கிறாயே! எல்லாம் என் கை வண்ணங்கள்."

சங்கரை ஒரு புதுப்பெருமையுடன் பார்த்தாள் அவள்.

அவன் தன் மேஜை டிராயரைத் திறந்து ஒரு சித்திரத்தை எடுத்தான். தனியாக ஒரு பெண் ஒரு பொட்டல் வெளியில் மேட்டு நிலத்தில் நின்று கொண்டிருந்தாள். மலை ஜாதிப் பெண். அவள் பாவாடையும், மேலாடையும், காற்றில் பறந்து

கொண்டிருந்தது. அந்த முகம் நல்ல அழகு. அதில் ஏக்கமா, வருத்தமா, பொறுமையா, சாந்தமா என்று கண்டுபிடிக்க முடியாத ஒரு தனி பாவம். வர்ணங்களின் கலவையில் அவள் தனிமை இன்னும் எடுபட்டது.

"நான் எப்போதோ வரைந்தது இது. எனக்கு மிகவும் பிடித்த பெயின்டிங். எனக்கென்னவோ இதை உனக்குக் கொடுக்க வேண்டுமென்று தோன்றியது. எடுத்து வைத்தேன்."

வித்யா அதை வாங்கி ஒரு நிமிஷ நேரம் பார்த்துக் கொண்டேயிருந்தாள். தானே அந்த வர்ணக் கலவைகளின் நடுவில் - பொட்டல் வெளியில் - ஒரு மேட்டின் மீது ஏறி நின்று கொண்டிருக்கிற மாதிரித் தோன்றியது அவளுக்கு.

"பின்னால் திருப்பிப் பார் வித்யா."

திருப்பிப் பார்த்தாள். அவனது அழகான கையெழுத்தில் எழுதப்பட்ட அவளது கவிதை.

"அந்தக் கவிதைக்கும் இந்த வர்ணப்படத்துக்கும் தானே பொருத்தம்."

"வித்யா பதில் பேசவில்லை. எதுவும் பேச முடியவில்லை. பின் தன் பார்வையை அலமாரியிலிருந்த புத்தகங்கள் மீது திருப்பினாள். எத்தனை புத்தகங்கள்! கிட்டத்தட்ட ஆயிரத்துக்கும் மேல் இருக்கும். வித்யா மேலோட்டமாகப் பார்த்துக் கொண்டே வந்தாள். ஹக்ஸ்லி, ஜே. கிருஷ்ணமூர்த்தி, ஃப்ராய்ட், ஜப்பான் ஹைக்கூ கவிதைத் தொகுதிகள், எஸ்ரா பவுண்ட், ஜேம்ஸ் ஜாய்ஸ், காஃப்கா, கேமோ... எத்தனை புத்தகங்கள்!

பக்கத்திலிருந்த வீணை அவள் கண்ணில் பட்டது. அழகான மெருகு குறையாத தஞ்சாவூர் வீணை.

"நீங்கள் வீணை கூட வாசிப்பீர்களா?"

"ம்...கற்றுக் கொண்டு வருகிறேன். உனக்கு வாசிக்கத் தெரியுமா வித்யா?"

அவள் 'தெரியாது' என்று தலையாட்டினாள்.

"நீ வாசித்தால் இன்னும் பொருத்தமாக இருக்கும்."

அவள் சிரித்தாள்.

அவன் அலமாரியிலிருந்து தன் புத்தகங்களை எடுத்தான்; "உன்னிடம் என் புத்தகங்கள் எல்லாம் இருக்கிறதா வித்யா?"

"எல்லாம் இல்லை. அக்கினிக் கனவு மட்டும்தான இருக்கிறது."

அவன் மற்ற நான்கு நாவல்களையும் எடுத்துக் கொடுத்தான். மேலே இருந்த புத்தகத்தில்,

'வித்யாவுக்கு, அன்புடன்,
சங்கர்'

என்று எழுதிக் கொடுத்தான்.

"வா, வித்யா, கொஞ்ச நேரம் பால்கனியில் நிற்கலாம்."

பால்கனியின் பக்கத்தில் சரக்கொன்றை மரம் மஞ்சளாகப் பூத்துச் சொரிந்திருந்தது.

அவள் பால்கனி ஓரமாகக் கைப்பிடிச் சுவரின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

"நான் மட்டும் இந்த வீட்டில் இருந்தால் இந்தக் கைப்பிடிச் சுவரை விட்டு அசையக்கூட மாட்டேன்."

"நானும் இங்கேதான் உட்கார்ந்து கொள்ளுவேன். சில நாட்கள் ராத்திரி முழுசும்கூட அப்படியே உட்கார்ந்து கொண்டிருப்பதுண்டு."

அவர்கள் கீழே இறங்கி வந்து அவனது அம்மாவிடம் சொல்லிக் கொண்டு கிளம்பியபோது மணி ஐந்தாகிவிட்டது.

காரில் வரும்போது இருவரும் எதுவும் பேசவில்லை. சங்கர் பீச் ரோட் வழியாக ஓட்டிக்கொண்டு போனான். ஆல் இந்தியா ரேடியோவுக்கு எதிரில் வந்ததும், "இப்போதே வீட்டுக்குப் போக வேண்டுமா வித்யா?" என்று கேட்டான்.

அவள் மணி பார்த்தாள். ஐந்து இருபது.

"ஏழு மணிக்குள் போனால் போதும்."

"அப்படியானால் கொஞ்ச நேரம் பீச்சில் உட்கார்ந்து விட்டுப் போகலாமா?"

அவள் 'சரி' என்றதும் அவன் உள்ளே திரும்பிக் காந்தி சிலையின் வலது பக்கத்தில் காரை நிறுத்திப் பூட்டினான். இருவரும் காந்தி சிலைக்கு இடது பக்கமாகச் சமுத்திரத்தை நோக்கி நடந்தார்கள். வரிசையாக விடப்பட்டிருந்த கட்டு மரக் கட்டைப் பார்த்ததும், எனக்கு இதைப் பார்த்தால் எங்கோ மியாமியில் இருக்கிற மாதிரித் தோன்றுகிறது" என்றான் சங்கர்.

வித்யாவுக்கு ரமணியுடன் அன்று பீச்சுக்கு வந்தபோது அதே மாதிரி ஒரு இமேஜ்-வெளிநாட்டுக் கடற்கரையையும், அங்கே ஸன்பாத் எடுப்பவர்களையும் நினைவுபடுத்தியது ஞாபகத்துக்கு வந்தது. ஆச்சரியமாகவும் இருந்தது.

(சங்கர், நீங்கள் ஏன் இப்படி எல்லா விஷயத்திலும் என்னுடன் பொருந்திப் போகிறீர்கள்? எப்படி இந்த ஒற்றுமை? எப்படி சங்கர்?)

கட்டு மரக் கட்டைகளைத் தாண்டி அலை கொஞ்சம் வேகமாக வந்தால் காலை நனைக்கக்கூடிய இடத்தில் உட்கார்ந்து கொண்டார்கள்.

"என்ன வித்யா, பேசாமலிருக்கிறாய்?"

"நான் இன்னும் உங்கள் வீட்டிலேயே இருக்கிறேன் சங்கர். உங்களைப் பார்த்தால் எனக்கு ரொம்ப பெருமை

யாக இருக்கிறது. கூடவே ஒரு பொறாமையும் ஏற்படுகிறது. உங்கள் வீட்டின் சூழ்நிலை எனக்கு ரொம்ப ஆறுதலாக இருந்தது. உங்கள் அப்பா அம்மாவின் அன்பு, ஒற்றுமை, கலகலப்பான பேச்சு, எல்லாவற்றிற்கும் மேலாக அந்தச் சிரிப்பு...நான் அறிந்திருக்காதவை. எனக்குத் தெரியாதவை. நான் விரும்புகிற, ஆனால் கிடைக்காதவை."

"வித்யா, என்னால் உன் பேச்சிலிருந்து கவிதையிலிருந்து, எதிலும் ஒட்டாத உன் தன்மையிலிருந்து, நீ இருக்கக்கூடிய சூழ்நிலையை ஓரளவு புரிந்துகொள்ள முடிகிறது. முழுசும் புரிந்துகொள்ள வேண்டுமானால், சொல்ல நீ விருப்பப்பட்டால் என்னை நம்பித் தாராளமாகச் சொல்லலாம்."

வித்யா அப்பாவைப்பற்றி, அவருக்குத் தன் மீதிருக்கும் வெறுப்பைப் பற்றி, வீட்டில் நடக்கும் சண்டைகளைப்பற்றி, தன்னைப்பற்றி, ரமணியைப்பற்றி, நடக்கப் போகும் அந்தக் கல்யாணத்தைப்பற்றி எல்லாம் சொன்னாள். விவரமாகச் சொன்னாள். எதையும் மறைக்கவில்லை.

"இந்த இருபது வருடங்களில் நான் சந்தித்த அநுபவங்கள் எத்தனையோ சங்கர். என் மனசை யாரும் பார்த்ததில்லை. புரிந்து கொண்டதில்லை. எல்லாருக்கும் என் உடம்பு தெரிகிறது. அதன் நிறம் தெரிகிறது. அழகுகள் தெரிகின்றன. அதனால் எல்லாருக்கும் என்னைப் பிடிக்கிறது; பிடிக்காமலும் போகிறது. ரமணி மிகவும் நல்லவர்தான். படித்தவர்தான். ஆனால் அவருக்கும் வித்யா அழகான பெண், புத்திசாலியான பெண் என்பது மட்டும்தான் தெரியுமே தவிர, வேறு எதுவுமே தெரியாது. எதையும் தெரிந்து கொள்ளாமலேயே மூர்க்கத்தனமான அன்பை வளர்த்துக் கொண்டிருக்கிறார். என் விருப்பங்கள் அவருடைய விருப்பங்களிலிருந்து மாறுபடுகிறது. என் மனசு அவருடைய திலிருந்து எப்படியெப்படியோ வேறுபடுகிறது. எங்களுக்குள்

பேசக்கூட விஷயமில்லாமல் போய்விடுகிறது. இந்தக் கல்யாணம்...எங்கள் வாழ்க்கை எப்படியிருக்கப் போகிறதோ...? எனக்குப் பயமாக இருக்கிறது சங்கர்.''

அவன் பதில் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான். அவனால் அவளைப் புரிந்துகொள்ள முடிந்தது; முழுசாகப் புரிந்துகொள்ள முடிந்தது. அந்த வீட்டின் சூழ்நிலையை—அவளுடைய அப்பாவை—அம்மாவை—ரமணியை—எல்லாரையும் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிந்தது.

அவன் வானத்தைப் பார்த்தான். இலேசான இருட்டில் அங்கங்கே நட்சத்திரங்கள் மங்கலாகச் சிமிட்டிக் கொண்டிருந்தன. கொஞ்சம் தள்ளி வலது பக்கத்தில் அவன் தினமும் தவறாமல் பார்க்கும்—அவனுக்குப் பிடித்த மூன்று நட்சத்திரங்கள் கூட வந்தாகிவிட்டது. ஒன்றன் கீழ் ஒன்றாக, சின்னச் சாய்வுக் கோடாக மூன்று நட்சத்திரங்கள்! வி...த்...யா! மூன்று எழுத்துக்கள், மூன்று நட்சத்திரங்கள்' திடீரென்று அந்த ஒற்றுமை அவன் மனதில் பளிச்சிட்டது.

'வித்யா, வாழ்க்கையில் உனக்குத்தான் எத்தனை எரிச்சல்கள்!' என்று வேதனைப்பட்டான். அவளுக்காக மனத்திற்குள் வருத்தப்பட்டான். அது ஒன்றுதான் அவனால் முடிந்தது.

வித்யா சில நிமிஷங்களைப் பேசாமல் கடத்தினாள் தலைக்கு மேலே பறந்து போன விமானத்தின் சத்தத்தைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். சிவப்பும் நீலமுமான அதன் விளக்குகள் பளிச்சென்று தெரிந்தன. 'ரமணி, என் தலைக்கு மேலே நீங்கள் என்னைக் கடந்து போகிறீர்கள். நான் இங்கே மணலில் உட்கார்ந்து உங்களைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறேன்!'

சங்கர் சிகரெட் பாக்கெட்டை எடுத்து ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான். அந்தக் காற்றுக்கு நடுவே

அதைப் பற்ற வைப்பது சிரமமாக இருந்தது. வித்யா தன் கையைக் குவித்துக் காற்றைத் தடுத்து அவனுக்கு உதவினாள்.

''ஐயாம் ஸாரி வித்யா. உனக்கு இந்த வாசனை பிடிக்காது என்பது தெரிந்தும் பிடிக்கிறேன். இப்போது எனக்கு இது தேவையாக இருக்கிறது.''

''பரவாயில்லை. ஆனால் சங்கர், இதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொள்ளுங்களேன். ப்ளீஸ்...''

''ட்ரை பண்ணுகிறேன் வித்யா. எனக்கும் இந்த மாதிரி யாராவது சிகரெட் பிடிக்கும்போதெல்லாம் கட்டுப்படுத்த மாட்டார்களா என்று தோன்றுவதுண்டு. இதுவரை என்னை யாரும் கட்டுப்படுத்தியது கிடையாது. என்னால் இந்த விஷயத்தில் என்னை கட்டுப்படுத்திக் கொள்ள முடிவதும் இல்லை. இப்போது நீ தடுக்கிறாய். வேண்டாமென்கிறாய். விட்டு விடுவேன்.''

''ப்ராமிஸ்?''

''ப்ராமிஸ்!'' என்று கடைசித் தரமாகப் புகையை ஆழமாக உள்ளுக்கிழித்துத் தூக்கிப் போட்டான். அது அலையில் விழுந்து அணைந்தது.

அதற்குப் பின் அவர்கள் ஒன்றும் பேசவில்லை.

பின் கடற்கரை மணலை அழகாய்த் தடவி அதில் ஒரு சதுரம் போட்டு அதற்குள் சங்கர் என்று ஆங்கிலத்தில் எழுதினாள் அவள். அதைப் பார்த்த சங்கரின் முகம் இலேசான புன்னகையில் விரிந்தது.

வேகமாக ஓடிவந்த ஓர் அலை அவர்கள் கால்களை நனைத்து விட்டுத் திரும்பிக் கடலுக்குள் போயிற்று.

போகும்போது அவள் மணலில் எழுதின அவன் பெயரையும் அழித்துவிட்டுப் போயிருந்தது அலை.

13

திருக்கோடியில் வித்யாவை இறக்கிவிட்ட சங்கரால் நேராக வீட்டுக்குப் போக முடியவில்லை, பாரமாக மனத்தில் இருப்பதைக் கரைத்துக்கொள்ள வழி தேடினான். திரும்பிப் பீச்சுக்கு வந்தான். அவர்கள் உட்கார்ந்திருந்த அதே இடத்தில் உட்கார்ந்து கொண்டான். வானத்தில் தெரிந்த, அவனுக்குப் பிடித்த மூன்று நட்சத்திரங்களைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டேயிருந்தான். பின், அவளைப் போலவே மணலைத் தடவி, அதில் வித்யா...வித்யா என்று எழுதித் தானே அழித்துக் கொண்டிருந்தான். ஓடி வந்த அலைகளைப் பார்த்து 'நீங்கள் என்ன அழிப்பது? நானே அழித்து விடுகிறேன்' என்று சொல்லிக் கொண்டான்.

வித்யா!

'உனக்குத்தான் வாழ்க்கையில் எத்தனை எரிச்சல்கள்! உன்னைப் புரிந்து கொள்ளாத அப்பா, ஓரளவு உன்னைப் புரிந்து கொண்டிருக்கும் அம்மா, உன்மீது உயிரையே வைத்திருக்கும் தங்கைகள், அளவுக்கு மீறிக் காதலிக்கும் ரமணி...அவர்கள் யாருக்கும் உன் மனசு தெரியவில்லை. யாராலும் புரிந்து கொள்ளவும் முடியாது. நீ ஒரு நத்தை மனசுக்குள்ளேயே எல்லாவற்றையும் ஒடுக்கிக் கொண்டுவிடும் நத்தை. நீயாக உன்னை வெளிக் காட்டிக் கொள்வதில்லை உன்னை முழுசாய்ப் புரிந்து கொண்ட ஒரே மனிதனான என்னாலும் ஒன்றும் செய்ய முடியாத நிலை. விலகி நிற்க வேண்டிய நிலை. உன்னை ஏன் பார்த்தேன்? இதற்கா வித்யா? இதற்குத்தானா?'

அவன் திரும்ப சிகரெட் பாக்கெட்டையும், தீப்பெட்டியையும் எடுத்தான். இப்போது தீக்குச்சி அணையாமல் தடுக்க வித்யா இல்லை. அவனாகக் குனிந்து, கஷ்டப்பட்டு, நான்கு குச்சிகளை அணைய வைத்து, ஐந்தாவதில் சிகரெட்டைப்

பற்ற வைத்துக் கொண்டான். புகையை இதயம் முழுசும் இழுத்துக் கொண்ட போது சிகரெட் நுனி தன் கொள்ளிக் கண்ணைப் பிரகாசமாக்கிக் கொண்டது. புகையை வெளியே விட்டதும், 'ஸாரி வித்யா' என்று சொல்லிக் கொண்டான். ஒன்றன் பின் ஒன்றாக அவன் ஏழெட்டு ஸாரி சொல்ல வேண்டியதாய் இருந்தது. சிகரெட் பாக்கெட் காலியாகும் வரை அப்படியே உட்கார்ந்திருந்தான். காலிப் பாக்கெட்டைத் தூக்கி எறிந்து விட்டு எழுந்தான்.

வீட்டுக்கு வந்ததும் பால்கனிக்குப் போய்க் கைப்பிடிச் சுவரில் உட்கார்ந்து கொண்டான். 'அவள் உட்கார்ந்து விட்டுப்போன இடம்' என்ற நினைவில் வழக்கமாக உட்காரும் அந்த இடம் புதுசாகத் தெரிந்தது. 'எனக்குப் பிடித்த இந்த இடம் உனக்கும் ஏன் பிடிக்க வேண்டும்? எனக்குப் பிடித்த மற்ற எல்லா விஷயங்களும் உனக்கும் பிடித்திருக்கிறதே, இது ஏன்? எப்படி இந்த ஒற்றுமை?... எதற்காக?'

'உன்னை மாதிரி இன்னொரு பெண்ணை நான் எங்கே பார்க்கப் போகிறேன்? அழகு. அன்போடு சேர்ந்த புத்திசாலித்தனம் இதையெல்லாம் வேறு யாரிடம் பார்க்க முடியும்? நீ—நீதான் வித்யா! வாழ்க்கையை அதன் போக்கில் அனுசரித்து ஏற்றுக் கொள்ளும் அந்தக் குணம் உனக்கு எப்படி வந்தது? அதை எனக்கும் கற்றுக் கொடேன்...ப்ளீஸ்—'

எதிரே சிரித்த சரக்கொன்றை இப்போது வாடிப் போயிருந்தது. சங்கர் வானத்தைப் பார்த்தான். திட்டுத் திட்டாக, யானையாய், தேராய், முக்காடு போட்டுக் கொண்ட பெண்ணாய் நகரும் வெள்ளை மேகம். இன்று அதன் ஓட்டம் வேகமாக இருந்தது. நிலா வெளிச்சத்தில் தோட்டத்து மரங்களின் இலை ஓரங்கள் வெள்ளியாக மின்னின. மாடியிலிருந்து பார்த்தபோது அந்த நேரத்தில் தோட்டம் இன்னும் அழகாகத் தெரிந்தது.

'வித்யா, இப்போது இங்கே வந்து இந்தத் தோட்டத்தைப் பாரேன்...எவ்வளவு அழகாய் இருக்கிறது! இனிமேல் அழகான எதைப் பார்த்தாலும் எனக்கு உன் நினைவு வரும். நீ ஒரு நல்ல ரசிகை.'

அதற்குமேல் அங்கு உட்கார்ந்து கொண்டிருக்க முடிய வில்லை அவனால். எழுந்து உள்ளே வந்தான். டைரியைப் பிரித்து வைத்துக் கொண்டு எழுத உட்கார்ந்தான். 'எதை எழுதுவது?...எதை விடுவது?'

'அலைகளின் ஓலை பின்னால் கேட்க, கடற்கரை மணலை அழகாய்த் தடவி அதில் சங்கர் எழுதினபோதே நான் கரைந்து போனேன். உன்னை எனக்குப் புரிகிறது வித்யா. அறுபது வயதுக் கிழவனாகி நான் இதே பால்கனி சுவர் ஓரமாக ஈஸிச்சேரில் சாய்ந்து கொண்டிருக்கும் போதும் அசை போடக்கூடிய இனிமையான நினைவு! இது போதும் வித்யா!...' என்று எழுதி முடித்தான். 'போதுமா?' என்று தன் மனசையே கேட்டுக் கொண்டான். படுக்கையில் வந்து படுத்துக் கொண்டு அவளைப்பற்றி நினைத்துப் பார்த்தான். அவள் சொன்னதையெல்லாம் திரும்பத் திரும்ப அலசிப் பார்த்தான். அவளுடைய விட்டில் அந்தச் சூழ்நிலையில் தன்னை நிறுத்திப் பார்த்தான். வருவதை ஏற்றுக் கொள்வதைத் தவிர, வேறு எதுவும் அவளால் செய்ய முடியாது என்பதும் புரிந்தது. 'உன் கஷ்டங்கள் எனக்குப் புரிகின்றது வித்யா. அந்தக் கஷ்டங்களுக்கு நடுவில் அவற்றை அநுசரித்துப் போகத் தெரிய வேண்டும். அது உனக்குத் தெரிந்திருக்கிறது. உன்னைவிட வேறு யாருக்காவது அந்த அநுசரித்தல் இவ் வளவு நன்றாகத் தெரிந்திருக்குமா என்பது சந்தேகம் தான். ஒரு கஷ்டத்தைவிட்டு விலகிப் போய் நின்று கொண்டு மீண்டு விட்டோம் என்று சந்தோஷப்படுவதில் என்ன பெருமை இருக்க முடியும்?...அதன் உள்ளேயே இருந்து அதை உடைத்துக் கொண்டே வாழ்வதுதான் பெரிய விஷயம். அதை நீ நன்றாக உணர்ந்து கொண்டி

ருக்கிறாய். உன்னைப் பற்றி அதிகமாகத் தெரியத் தெரிய உன் மீது நான் வைத்துக் கொண்டிருக்கும் மதிப்பும் அதிக மாகிறது. யு ஆர் ரியலி க்ரேட் வித்யா.'

'இத்தனை அநுபவங்களை வைத்துக் கொண்டு பேசாமல் இருக்கிறாயே. எழுது வித்யா. நிறைய் எழுது. நம்மை - நம மனசின் அரிப்பைச் சொறிந்து கொள்ள அது ஒன்று தான் நல்ல வழி. இப்போது உன்னால் இன்னும் நன்றாக எழுத முடியும் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். எழுத்தில் என்னை மிஞ்சிவிடப் போவதாகச் சொன்னாயே... எழுத ஆரம்பித்தால் நிச்சயம் நீ என்னை மிஞ்சி விடுவாய். எழுது வித்யா... எழுத்தில் உன்னைக் கரைத்துக் கொள்ளப் பாரேன்...''

அவளை எப்படியாவது எழுத வைத்துவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டே வெகு நேரம் தூங்காமல் படுத்துக் கொண்டிருந்தான். கட்டிலுக்குப் பக்கத்தில் இணைக்கப்பட்டிருந்த ஸ்டாண்ட் மேலேயிருந்த டிரான் ஸிஸ்டரை ஆன் பண்ணினான், விவித பாரதியில் பர்வானா படத்தில் அவனுக்குப் பிடித்த பாட்டு; ஜிஸ் தின் ஸே மைனே தும்கோ தேகா...' இந்தப் பாட்டு அவளுக்கும் பிடிக்குமா என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் போலிருந்தது.

'இப்போது அவள் என்ன செய்து கொண்டிருப்பாள்? இதே மாதிரிப் படுக்கையில் படுத்துக் கொண்டு, ஜன்னல் வழியாகத் தெரியும் வானத்தைப் பார்த்துக் கொண்டிருப் பாள்! டிரான்ஸிஸ்டரில் விவிதபாரதி கேட்டுக் கொண்டிருப் பாள்; இதே பாட்டை அவளும் இப்போது கேட்டுக் கொண்டிருந்தால்?

'தினமும் ராத்திரி ஒன்பதரைக்கு விவிதபாரதி கேளேன் வித்யா. நான் தவறாமல் கேட்பேன். டிரான்ஸிஸ்டரை ஆன் பண்ணி வைத்துக் கொண்டுதான் எழுத ஆரம்பிப்பேன். எனக்கு எந்த இசையாவது காதில் விழுந்து கொண்டே யிருக்க வேண்டும். அப்போதுதான் எழுத வரும். நீயும்

தினமும் கேளேன். நான் கேட்கும் இதே பாட்டை நீ அங்கே கேட்டுக் கொண்டிருப்பாய் என்பதே எனக்குச் சந்தோஷமாக இருக்கும்.

"நான் படுக்கையில் படுத்துக் கொண்டு உன்னைப் பாற்த்தன்றி நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா வித்யா ?... புரியுமா? வேண்டாம்; புரிய வேண்டாம். இதை வேறு புரிந்து கொண்டு நீ கஷ்டப்பட வேண்டாம். உனக்கிருக்கும் கஷ்டங்களே போதும் வித்யா. இதற்கு மேலும் உன் மேல் பாரத்தை ஏற்றினால் நீ நசுங்கிப் போவாய்..."

விவிதபாரதியின் புரோக்கிராம்கள் கூட முடிந்து விட்டன. சங்கருக்குத் தூக்கம் வரவில்லை. டிரான்ஸிஸ்டரை அணைத்துவிட்டு எழுந்து விளக்கைப் போட்டான். சிகரெட் டிற்காக கேஸைத் திறந்து பார்த்தான். ஒன்று கூட இல்லை. தினமும் வேலைக்காரன் அதைப் பார்த்து நிரப்பி வைப்பது வழக்கம். இன்று மறந்துவிட்டான் போலிருக்கிறது. இன்றைக் குத்தானா மறக்க வேண்டும்? அவன் தன் பாண்ட் பாக்கெட், மேஜை டிராயர், தலையணை அடி எல்லா இடங்களிலும் தேடினான். ஒரே ஒரு சிகரெட் கூடக் கிடைக்கவில்லை.

தேவை அதிகமாக இருக்கிறபோது ஒன்று கூடக் கிடைக் காமற் போகிறதே—அதிலும் கூட ஒரு சந்தோஷம் இருப்ப தாக அவனுக்குப் பட்டது. அந்த சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும் போலிருந்தது. கதவைத் திறந்து கொண்டு பால் கனியில் வந்து நின்றான். நல்ல ஈரமான காற்று சில்லென்று உடம்பைத் தாக்கியது. முதலில் குளிராக இருந்தது. அந்தக் குளிரைப் பழக்கிக் கொண்டான். பத்து நிமிஷங்களுக்குப் பின் குளிர் தெரியவில்லை.

இப்போது ஏதாவது எழுத வேண்டும் என்று நினைத்துக் கொண்டே உள்ளே வந்து மேஜை விளக்கைப் போட்டுக் கொண்டு எழுத ஆரம்பித்தான். மனசுக்குள் கவிதை ஒன்று

நான்கு நாட்களாக வெளியே வர, கை காலை உதைத்துப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தது. வெறுமை என்ற தலைப்பில் நான்கு வரிகள் எழுதிவிட்டிருந்தான். மேலே எழுத வேண்டுமானால் சிகரெட் இருந்தால்தான் முடியும் என்று தோன்றியது. அந்த நினைவைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். 'நோ. சிகரெட் இல்லாமல் இதை எப்படி யாவது எழுதி முடித்துவிட வேண்டும்' என்று சொல்லித் தன்னை தானே வற்புறுத்திக் கொண்டான். மேலும் இரண்டு வரிகள். இன்னும் இரண்டு வரிகள். அடுத்த வரி, அதற்கும் அடுத்தது. கடைசியில் கவிதை முடிந்ததும் ஒரு தரம் படித்துப் பார்த்தான். உணர்ச்சிவேகம் தணிவதற்கு முன் எழுதப்பட்ட தால் வார்த்தைகள் வலுவாக வந்து விழுந்திருந்தன. கவிதையின் முடிவான கடைசி வரி அவனுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. நாளைக்குச் சரிப்படுத்தி கம்போஸிங்கிற்கு அனுப்பி விடலாம் என்று நினைத்துக் கொண்டே விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக் கொண்டான்.

குளிராக இருந்ததால் ஏர்கண்டிஷனரை ஆன் பண்ண வில்லை. மேலே ஃபான் மட்டும் சுற்றிக்கொண்டிருந்தது. ஜன்னல் கதவுகளை நன்றாகத் திறந்து வைத்திருந்தான். நிலா முழுசாக எரிந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடிந்தது. அவனுக்கு ஏனோ முழு நிலவு பிடிப்பதில்லை. மாட்டுக் கொம்பை ஒடித்து வானத்தில் விட்டெறிந்த மாதிரி இருக்கும் கால், அரை, முக்கால், என்ற பின்ன நிலவுதான் அழகா யிருப்பதாகத் தோன்றும். இன்று நிலவு முழுசாக அவன் கண்ணுக்கு நேராக வந்து நின்று முறைத்துக் கொண்டிருந்தது.

சங்கர் திரும்பிப் படுத்தான். எங்கோ பொத்தென்று மரத்திலிருந்து மட்டைத் தேங்காய் விழும் சப்தம் கேட்டது. உடனே பக்கத்து வீட்டு நாய் குரைத்தது. ஒரு நிமிஷத்துக் கெல்லாம் குரலை அடக்கிக் கொண்டுவிட்டது. தெருவில் கூர்க்கா ஒவ்வொரு காம்பௌண்டாகத் தட்டிக் கொண்டு

போனான். தோட்டத்து மா மரத்திலிருந்து 'க்ரீச் க்ரீச்' சென்று ஏதோ ஒரு பறவை உயிர் போகிற மாதிரி அலறியது. ஒரே ஒரு காகம் அதைத் தொடர்ந்து கரைவது கேட்டது. 'காக்கா கத்த ஆரம்பித்து விட்டதே...' சில நிலவு நாட்களில் இரவைப் பகலாக நினைத்துக் கொண்டு, காகம் கரைகிற வழக்கம்தான். இப்போது மணி என்ன இருக்கும்? சங்கர் ஸ்டாண்டிலிருந்து கைக் கடிகாரத்தை எடுத்து மணி பார்த்தான். பச்சை வெளிச்சம் நாலரை என்பதைக் காட்டியது. 'நாலரையாகி விட்டதா? மை காட்! என்று சொல்லித் கொண்டே கடிகாரத்தை வைத்துவிட்டுக் கண்களை மூடிக் கொண்டான்.

"வித்யா இத்தனை நேரம் தூங்கிக் கொண்டிருப்பாள். என்னைத் தூங்கவிடாமல் செய்துவிட்டு நீ மட்டும் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருப்பாய் இல்லையா, வித்யா? பாவம். அவளுக்குத் தூக்கத்தில்தானே நிம்மதி. எனக்கு இனிமேல் அது தூக்கத்தில் கூடக் கிடைக்காது போல இருக்கிறதே..."

காலையில் ஆறு மணிக்கெல்லாம் வழக்கப்படி விழிப்பு வந்துவிட்டது சங்கருக்கு. பாத்ரூம் கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டான். கண்கள் சிவந்து முகம் லேசாக உப்பியிருந்தது. எரிச்சல் அடங்க ஷவரின் கீழே வெகு நேரம் நின்று கொண்டிருந்தான். டிரஸ் பண்ணிக் கொண்டு கீழே இறங்கி வந்தபோது டைனிங் ஹாலில் அவனுடைய அப்பா, பிரெட் ரோஸ்ட்டைச் சாப்பிட்டுக்கொண்டே பேப்பரில் மூழ்கிப் போயிருந்தார்.

வித்யா அப்பாவைப் பற்றிச் சொன்னது நினைவில் நின்றது. அவரோடு அவன் எல்லா விஷயங்களைப் பற்றியும் பேசுவான். அவர் அவனுடைய புத்தகங்களையெல்லாம் படித்துவிட்டு விவாதிப்பார். அவருக்கு நல்ல ரசனை. நன்றாகப் பாடுவார். வீட்டில் ஓய்வாக இருக்கிற நாளில் ஒரு

கச்சேரியே நடக்கும். அவரது மோகனத்தையும், கல்பாணியையும் கேட்டுவிட்டுச் சங்கரன் அசந்து போயிருக்கிறான். அவர் அவனுடைய 'அக்கினிக் கனவைப்' படித்துவிட்டு, "சங்கர்! நீ என் பிள்ளை என்பதை மறந்துவிட்டுக் கொஞ்சம் தள்ளி நின்றேதான் இதைப் படித்துக் கொண்டு வந்தேன். எப்படிடா இந்த மாதிரி எழுதினே? சில இடங்களில் இதை எழுதியிருக்கிறது, 'நம்ம சங்கரன்' என்ற நினைவு வந்தபோது, எனக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது..." என்று பாராட்டினார். அவர் அந்த நந்தினியை கிருஷ்ணனைப் புரிந்து கொண்டு விட்ட தோனி, பேச்சில் வந்தது. ஆனால் வெளியில் சொல்லவில்லை.

அவர்கள் இரண்டு பேரும் எல்லாவற்றையும் பற்றிப் பேசுவார்கள். நல்ல நண்பர்களாகப் பேசிக் கொண்டிருப்பார்கள். அந்தரங்கமாகக்கூடப் பேசுவார்கள். அவர்கள் பேச்சில் ஹோமோசெக்ஸ், அடல்டரி எல்லாம் புகுந்து வெளி வரும். அப்பா—பிள்ளை என்ற நினைவே மறந்து போகும்.

அப்பாவிடம் அவனுக்கு அன்பு அதிகம். அதைவிட மரியாதை இன்னும் அதிகம். வேறு யாராவது அப்பாவிடம் இந்த மாதிரி ஒரு நண்பனாகப் பழகுவார்களா என்று நினைத்துப் பார்த்திருக்கிறான். இவ்வளவு விஷயங்களையும் பேசுவார்களா என்று சில நண்பர்களைக் கேட்டுக்கூடப் பார்த்திருக்கிறான். 'நீ இதை எல்லாம் அப்பாவிடமா பேசுவாய்?' என்று பார்த்த ஆச்சரியப் பார்வைகள்தான் பதில். அவனை நன்றாகப் புரிந்து கொண்டிருப்பவர் அவர்.

"குட்மார்னிங் டாட்" என்ற சங்கர், அவர் எதிரில் இருந்த நாற்காலியை நகர்த்திப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான். அவர் பேப்பரை மடித்துப் பக்கத்து நாற்காலியில் போட்டுவிட்டுத் திரும்பி குட்மார்னிங் சொன்னார். அவனுக்கும் டோஸ்டும் பாலும் வந்தன.

உள்ளேயிருந்து வந்த அம்மா, "சங்கர். ராத்திரி உன் ரூமில் ரொம்ப நாழி லைட் எரிஞ்சுதேடா, தூங்கவே இல்லையா?" என்று கேட்டாள்.

"எழுதிக் கொண்டு இருந்தேன்."

அம்மாவும் வந்து அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு வித்யாவைப் பற்றின பேச்சை ஆரம்பித்தாள்;

"எத்தனை சின்னப் பெண். எவ்வளவு அழகாகப் பேசுகிறது தெரியுமா?" என்று அப்பாவும் வித்யாவைப் புகழ்ந்ததும் சிரித்துக் கொண்டான். அம்மா மேலும் மேலும் அவளைப் பற்றி, அவள் குடும்பத்தைப் பற்றியெல்லாம் ஒரு தனி அக்கறையுடன் விசாரிக்க ஆரம்பிக்கவே, சங்கரால் அவள் நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடிந்தது. அம்மாவின் எண்ணத்தை உடைக்க வேண்டுமென்று சாதாரணமாக அவளைப் பற்றிச் சொல்லிக் கொண்டே வந்து அவளுக்குக் கல்யாணம் கூட நிச்சயமாகிவிட்டது என்பதைத் தெரிவித்தான்... 'அம்மா, நீ நினைக்கிற மாதிரி எதுவுமில்லை. அவள் ஒரு நல்ல சிநேகிதி அவ்வளவுதான்!' என்கிற தொனியில் ஓர் அலட்சியத்தைக் கலந்து பேசினான்.

எதையோ எதிர்பார்த்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்த அம்மா, அப்பா இரண்டு பேர் முகங்களும் தங்களுக்குக் கிடைத்த ஏமாற்றத்தை மறைக்க முடியாமல் திண்டாடின... சங்கர் பாலைக் குடித்து விட்டு நாப்கின்னால் வாயைத் துடைத்துக் கொண்டு, நாற்காலியைப் பின்னால் தள்ளிவிட்டு எழுந்தான்.

"வரேம்மா..." என்று சொல்லிக்கொண்டு காரில் ஏறின போது, அவன் மனசும் கஷ்டப்பட்டது.

'ஐயாம் ஸாரி அம்மா. இந்த விஷயத்தில் மட்டும் உன்னை என்னால் திருப்திப்படுத்த முடியாமல் ஆகிவிட்டது.'

காம்பௌண்டைத் தாண்டினதும், காரின் வேகம் அதிகமாகியது.

14

மேஜை மேல் இருக்கும் டெலிபோனைப் பார்க்கும் போதெல்லாம் சங்கருக்கு வித்யாவின் ஞாபகம் வரும். அது அடிக்கும் இனிமையான சத்தத்தில் 'அவளாக இருக்குமோ?' என்ற எண்ணம் எழும்பும். அவளைப் பார்த்து ஒரு வாரமாகிவிட்டிருந்தது. போனில்கூட பேச முடியவில்லை. ஆபீஸ் வேலை அந்த அளவிற்கு அவனை அமுத்திக் கொண்டிருந்தது. இன்றுதான் வேலைகளின் அழுத்தம் குறைந்து மற்ற விஷயங்களைப் பற்றி நினைத்துப் பார்க்கும் ஓய்வு கிடைத்தது.

உடனே மனம் அவளைத்தான் நினைத்துக் கொண்டது. ஆள் காட்டி விரல் அவள் டெலிபோன் நெம்பரைச் சுற்றத் துடித்துக் கொண்டிருந்தது. இரண்டு தரம் ரிஸீவரை எடுத்து, இரண்டு, மூன்று, ஐந்து என்று அவள் ஆபீஸ் நம்பரில் பாதியைச் சுற்றிவிட்டு வைத்துவிட்டான். போன் பண்ணி என்ன பேசுவது? அவள், 'என்ன விஷயம் சங்கர்?' என்று கேட்டால் என்ன பதிலைச் சொல்ல முடியும்? அன்று அவன் சொன்ன மாதிரி 'சும்மாத்தான் பண்ணினேன்' என்று சொல்லலாமா? சி! வேண்டாம். இது என்ன பலவீனம்? — தன் மனசைக் கட்டுப்படுத்திக் கொண்டு வேலையைக் கவனித்தான். ஆனாலும் உள் மனசில் நின்று கொண்டிருந்த வித்யா நகரவில்லை. 'எனக்கு போன் பண்ணுங்களேன்' என்று கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் மறுத்துக் கொண்டிருந்தான். மேஜை மேலே இருந்த அந்தச் சின்னக் கருப்புக் கருவியின் மீது அவனுக்குக் கோபம் வந்தது.

'டியர் மிஸ்டர் கிரஹாம்பெல்... இதை ஏன் கண்டு பிடித்தீர்கள்?'... என்று டெலிபோனைக் கண்டு பிடித்தவர் மேல் எரிச்சல் பட்டான்.

'என் மீது ஏன் கோபப்படுகிறாய்?' என்று கிரஹாம் பெல் திருப்பிக் கேட்கிற மாதிரி உடனே டெலிபோன் அடித்தது; எடுத்தான்

வித்யா!

"ஹலோ!" என்று சொல்லும்போதே 'தாங்க்யூ மிஸ்டர் கிரஹாம்பெல்' என்று நன்றி சொல்லி, அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

"நாளைக்கு உங்களுக்கு லீவுதானே சங்கர்? என்ன செய்யப் போகிறீர்கள்?"

"லீவு நாட்களில் எனக்கென்று ஒரு இடம் இருக்கிறது வித்யா. அங்கே போய் ஒரு தனியான மரத்தடியாகப் பார்த்து உட்கார்ந்து கொண்டிருப்பேன். சில நாட்களில் கையில் புத்தகத்துடன் போவேன். சில நாட்கள் வெள்ளைக் காகிதமும் பேனாவும் துணைக்கு வரும்."

"நாளைக்கு எது துணைக்கு வருகிறது?"

"தெரியவில்லை."

"நா வரலாமா?"

"ஓ...எஸ்."

"எந்த இடம் அது?"

"சொல்ல மாட்டேன். வந்து பார். உனக்கு ரொம்பப் பிடிக்கக் கூடிய இடம்தான்."

அப்படியா? எத்தனை மணிக்குப் போவீர்கள்?"

"நான் எப்போது வேண்டுமானாலும் போவேன். எத்தனை நாழி வேண்டுமானாலும் இருப்பேன். நாளைய புரோக்கிராம், உன் சௌகரியத்தைப் பொறுத்தது."

"ஒன்பது மணி."

"ஓ... எஸ். உன் வீட்டு அட்ரசைச் சொல் வித்யா. நான் உன் வீட்டுக்கே வந்து அழைத்துக் கொண்டு போகிறேன்."

"மைகாட்! வீட்டுக்கா? எங்க வீட்டு விஸ்வாமித்திரருக்கும் நர்ஸைக்கு லீவு என்பதை மறந்து விட்டீர்களா?"

"ஓ! மறந்து விட்டேன். அப்படியானால் நீ என் வீட்டுக்கு வருகிறாயா, வித்யா?"

"சரியாக ஒன்பது மணிக்கு உங்கள் வீட்டு காலிங் பெல்லை அழுத்துவேன், சரியா?"

"ஓ...கே..."

வித்யா சொன்னது மாதிரியே ஒன்பது மணிக்கு வந்து விட்டாள். அன்று அவள் வழக்கத்தைவிட அழகாயிருந்த மாதிரிச் சங்கருக்குத் தோன்றியது. தலைக்குக் குளித்திருக்க வேண்டும். ஈரம் காயப் பின்னல் போடாமல், ஒரு நீல நைவான் ஸ்கார்ஃபினால் கட்டிக் கொண்டிருந்தாள். பொட்டு, புடவை, செருப்பு, ஹாண்ட் பாக் எல்லாம் நீலம்.

காரில் போய்க் கொண்டிருந்தபோது சங்கர் கேட்டான்:

"உனக்குப் பிடித்த நிறம் நீலமா வித்யா?"

அவள் தன் புடவையைப் பார்த்துக் கொண்டாள்:

"ஏன், இன்று எல்லாமே நீலத்திருப்பதால் கேட்கிறீர்களா?"

"அதனால் மட்டுமில்லை. முதல் நாள் நான் உன்னைப் பார்த்தபோது டார்க் ப்ளூ. அதற்கு அடுத்த நாள் காப்பர்-சல்பேட் நீலத்திலிருந்தாய். எங்க வீட்டுக்கு வந்தபோது நேவி ப்ளூ. இன்று இந்த வெளிர் நீலம்."

வித்யா சிரித்தாள்: "எனக்கு இன்னும் எத்தனை நீலப் புடவைகள் இருந்தாலும் அலுக்காது சங்கர். கடைக்குப் போனால் யாருக்காக இருந்தாலும் என் கை உடனே நீலத்தைத்தான் எடுக்கும். அம்மாகூட நீலப் பிசாசு என்று திட்டுவாள்!"

சங்கர் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

"எதற்குச் சிரிக்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை. நான் என் அறையை நினைத்துக் கொண்டேன்."

"அதை அன்றே கவனித்தேன். நீங்கள்கூட ஒரு நீலப் பிசாசுதான் என்பதைப் புரிந்து கொண்டேன்."

அவன் காரின் வேகத்தை அதிகப்படுத்தினான்.

"எங்கே இருக்கிறது உங்கள் ஹாலிடே ரெஸார்ட்?"

"இந்த கார் எங்கே நிற்கப் போகிறதோ அங்கே!"

வித்யா உதட்டைப் பிதுக்கினாள், சொல்லாவிட்டால் போங்களேன்; நிற்கும்போது தெரிகிறது என்கிற மாதிரி.

செடிகளும், மரங்களும், பறவைகளின் சப்தங்களும் சேர்ந்த ஒரு செம்மண் பாதையின் முடிவில் போய் நின்றது கார். காரை விட்டு இறங்கிச் சுற்றிப் பார்த்தாள் வித்யா.

"நீங்கள் மதுமதி பார்த்திருக்கிறீர்களா சங்கர்? இந்த இடத்தைப் பார்க்கும்போது அந்தப் படம் ஞாபகத்தில் வரவில்லை?"

சங்கர் சிரிப்புடன் கார் கண்ணாடிகளை ஏற்றிவிட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டிருந்தான். வேலி போட்டுத் தடுத்திருந்த பக்கத்திற்கு அப்பால் வளர்ந்து செழித்திருந்த மரங்களைப் பார்த்தாள் வித்யா. அந்த இடத்தில் இப்போது அடர்த்தியான மழை பெய்தால் எவ்வளவு அழகாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள். சங்கர் கார் சாவியை பாண்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு அவள் பக்கத்தில் வந்து நின்றான்.

"உள்ளே போகலாமா வித்யா?"

இரண்டாகப் பிரிந்திருந்த பாதைகளின் ஒரு பக்கத்தில் நடந்தார்கள். பாதையின் ஆரம்பத்தில் 'வாகனங்களும் நாய்களும் உள்ளே அனுமதிக்கப்பட மாட்டாது' என்று போர்டு பெரிசாகப் போடப்பட்டிருந்தது.

"கொஞ்சம் நில்லுங்கள் சங்கர்" என்றாள் வித்யா.

அவன் நின்று அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"என்ன?"

"உங்களை உள்ளே அனுமதிக்க மாட்டார்களாம். இந்த போர்டைப் பாருங்கள்."

அவனுக்குச் சிரிப்பு வந்தது: "நான் வழக்கமாக வந்து கொண்டிருப்பவன். இந்த போர்டை மறந்து விட்டு உன்னை அழைத்துக் கொண்டுவந்து விட்டேனா? இப்போது எப்படி உள்ளே அழைத்துக்கொண்டு போவது என்பதுதான் என் பிரச்னை."

இரண்டு பேரும் சிரித்துக் கொண்டே போர்டைத் தாண்டினார்கள்.

சீர்க்கஸ் கூடாரமாகத் தங்களை விரித்துக் கொண்டிருந்த மரங்கள், நீண்டிருந்த மரங்கள், குள்ளமான மரங்கள், கிளைகளே இல்லாமல் கோபுரமாக உயர்ந்திருந்த மரங்கள், கை கையாக நீட்டிக் கொண்டிருந்த மரங்கள், பூக்களைத் தாங்கிக் கொண்டு சிரிக்கும் மரங்கள், கீழே உதிர்த்துவிட்டு, 'உங்களுக்காகத்தான் பெட்ஷீட் விரித்திருக்கிறேன், இங்கே உட்கார்ந்து கொள்ளுங்களேன்' என்று கெஞ்சுகிற மாதிரி மரங்கள், சிவப்பு பெட்ஷீட், மஞ்சள் பெட்ஷீட், பச்சையிலை பெட்ஷீட், சருகு பெட்ஷீட்....கத்தரித்து விடப்பட்ட செடிகள் கூண்டுப் புதர்கள், பளீரென்று கண்ணில் அடிக்கிற வைலட்டில், மஜந்தாவில், ரோஸ் நிறத்தில் போகன் வில்லா வளைவுகள்...

வித்யா குழந்தை மாதிரிக் கண்களை அகட்டிப் பார்த்துக் கொண்டு வந்தாள். கூலிங் கிளாஸ் பார்வையை விரிக்கும் எத்தனை விதமான பச்சை! கிளிப்பச்சை, கரும்பச்சை, நீலம் கலந்த பச்சை, மஞ்சளில் இழைந்த பச்சை, சிவப்பில் சேர்ந்த பச்சை, காபிக்கொட்டைப் பச்சை, வெளிர்ப் பச்சை...

எத்தனை பசுமை! எவ்வளவு குளிர்ச்சி! ஜிட்டுத் திட்டாக எங்காவது திருட்டுத்தனமாகத் தன்னை நுழைத்துக் கொண்டு விடுகிற சூரியன்.

"எத்தனை அழகு சங்கர்" என்று அந்த அழகில் நனைந்து கொண்டு வந்தாள் வித்யா.

ஓரிடத்தில் சின்ன மரப்பாலம் அழகாகக் கட்டப் பட்டிருந்தது.

"அந்தப் பாலத்தின் மேலே ஏறிப் போகலாமே...!—" அவளது குழந்தைத் தனத்தை ரசித்தான் அவன். பாலத்தின் மேல் நின்று பார்த்தாள் வித்யா. கீழே ஒரு சின்ன வாய்க் காலாகத் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்திருக்க வேண்டும். இப்போது அதன் பள்ளம் மட்டும்தான் தெரிந்தது. பாலத்தை விட்டு இறங்கினதும் சங்கர் சொன்னான்:

"இந்தச் சின்ன மரப்பாலம் நம்மை ஒரு நிமிஷம் குழந்தைகளாக்கி விட்டது பார்த்தாயா வித்யா?"

"இந்த மாதிரிச் சின்னச் சின்ன ஆசைகளை ஏற்படுத்தத் தான் சின்னச் சின்ன விஷயங்கள். இதைக் கட்டியவர்களின் சைகாலஜி வீணாகவில்லை பார்த்தீர்களா?"

மரப்பாலத்தைத் தாண்டியவுடன் ஒரு மரத்தைக்காட்டினான் சங்கர். ஒரு பெரிய அரசமரம். அதன் நடுவில் துளை போட்டுச் செருகின மாதிரி ஒரு பனைமரம் வளர்ந்திருந்தது.

"இது எப்படி சங்கர்?"

"நான் இங்கு வரும் போதெல்லாம் இதையே யோசிப்பதுண்டு வித்யா. எப்படி இந்த மாதிரி வளர்ந்திருக்க முடியுமென்பது புரியவில்லை.

அவள் அந்த மரத்தைச் சுற்றி வந்து பார்த்தாள்.

"ஹௌள ஒண்டர் சங்கர்!" என்று வியந்து கொண்டே மேலே நடந்தாள்.

ஒன்றாகக் கட்டப்பட்டிருந்த செயற்கைக் குளத்தையும் அதில் மிதந்து கொண்டிருந்த வாத்துக்களையும் தாண்டிப் போனதும் மூன்று கரடிகள் அடைக்கப்பட்டிருந்த கூண்டு ஒன்று இருந்தது. கூண்டிற்கு நீலமும், பச்சையும், சிகப்புமாய் மூவர்ண பெயிண்ட் அடித்திருந்தது. தூரத்தில் இருந்தே உலவிக் கொண்டிருக்கும் கரடிகளையே பார்த்துக் கொண்டு வந்தாள் வித்யா. உலவும் கரடிகளை நீலத்திற்கு வரும்போது நீலமாய். பச்சையைக் கடக்கும்போது பச்சையாய், சிவப்பில் நிற்கும் போது சிவப்பாக மாற்றிக் கொண்டிருந்தது கூண்டு. அதைச் சங்கருக்குக் காட்டினாள். அவனும் நின்று கவனித்தான். உலவும் கரடிகள் கூண்டின் நிறத்தினால் ஒரு விநாடி நிறம் மாறித் தெரியும் அதிசயத்தை அவன் இதுவரை கவனித்ததில்லை

"இதை நான் கவனித்ததே இல்லை வித்யா. நீ காட்டின பின்புதான் எனக்கும் இந்த நிமிஷ மாற்றம் கண்ணில் படுகிறது."

இரண்டு பேரும் கூண்டின் அருகே போய்ப் பார்த்தார்கள். கிட்டே போனதும் அப்படித் தெரியவில்லை, திரும்பத் தூரத்தில் போய் நின்று கொண்டார்கள். உலவும் கரடிகள் நிறம் மாறின.

"என் கண்ணிலிருந்து தப்பிவிட்ட விஷயங்கள் உன் கண்ணிலிருந்து தப்ப முடியவில்லை" என்றான் சங்கர்.

அடுத்தடுத்து ஒவ்வொரு கூண்டிலும் ஒவ்வொரு மிருகம்.

கொஞ்ச தூரத்தில் ஒரு பெரிய பஞ்சவர்ணக் கிளி தன் அழகான வர்ணத்தோடு ஒரு கூண்டில் தனியாகக் கிடந்தது. கீழே போடப்பட்டிருந்த பச்சை மிளகாய்களை, பழங்களை அது தொட்டுக்கூடப்பார்க்கவில்லை. 'என்னை இப்படி

அடைத்து வைத்துவிட்டு யாருக்கு வேண்டும் அதெல்லாம்?" என்று கோபித்துக் கொண்டிருந்தது. 'கீச்கீச்' என்ற வறட்டுக் கத்தல். இன்னொரு கிளிக்காகவோ?

"எல்லாவற்றையும் இப்படி ஒற்றையாக அடைத்து வைத்திருக்கிறார்களே வித்யா. இந்தப் பசுமைக்கு நடுவில் இவற்றின் தனிமை எத்தனை கொடுமையான விஷயம்! பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. இதன் கத்தலைக்கேட்டுச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை" என்றான் சங்கர்.

வித்யாவிடமிருந்து பதிலில்லை. அந்தக் கிளியையே ஒரு வருத்தத்தோடும், வேதனையோடும், ஏக்கத்தோடும் பார்த்துக் கொண்டு நின்றாள். பின் ஒரு சின்னப் பெரு மூச்சோடு அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

"இந்தக் கூண்டுகளையெல்லாம் உடைத்துப் போட்டு. எல்லாவற்றையும் வெளியே விடலாம் போல் ஒரு வேகம் வருகிறது."— சங்கர் சொன்னான்.

"வெளியே வந்தால் இன்னொரு கூண்டு காத்துக் கொண்டிருக்கும். ஒன்றை உடைத்துக் கொண்டு வந்தால் இன்னொன்றை அமைத்துக் கொள்கிறோம். அல்லது அமைந்து விடுகிறது. நிரந்தரமான விடுதலை என்பதே கிடையாது சங்கர். நாமும் கூண்டுக்குள்ளேதான் இருக்கிறோம். அவற்றின் கூண்டு கண்களுக்குத் தெரிகிறது. நம் கூண்டு மனசுக்குப் புரிகிறது."

இருவரும் மற்றொரு கோடிவரை வந்துவிட்டார்கள். எதிரே பெரிய நிழலை விரித்துக் காசுகாசாக இறைபட்டுக் கொண்டிருந்த இலையிடுக்கு வெளிச்சத்தைக் காட்டி, "வழக்கமாக நான் உட்காரும் இடம் இதுதான்" என்றான் சங்கர். இரண்டு பேரும் அந்த மரத்தடிக்குப் போனார்கள். அவன் தன் கையிலிருந்த டைரியைக் கீழே போட்டு விட்டுப் பக்கத்தில் உட்கார்ந்தான். வித்யா நின்றபடி சுற்றிப்

பார்த்தாள். ஆலமரத்தடி கயிற்று ஊஞ்சல்களும், அதில் விளையாடிக் கொண்டிருந்த பளிச்சிடும் வர்ண உடைகளும், கரடிக் கூண்டும், குரங்குக் கூண்டும், ஒற்றைக் கிளியும் தொலைதூர காமிரா காட்சிகளாகத் தெரிந்தன. அவர்களுக்கு எதிரில் சில அடி தூரத்தில் சங்கிலியில் கட்டப்பட்டிருந்த யானை, புல்லைத் தின்று கொண்டிருந்தது. வித்யா அவனுக்கு எதிரில் மரத்தில் சாய்ந்து உட்கார்ந்தாள். வித்யா தான் அந்த மௌனத்தைக் கலைத்தாள்:

"என்ன சங்கர், பேசாமலிருக்கிறீர்கள்?"

"இப்படியே உட்கார்ந்து கொண்டிருந்துவிட்டு எழுந்து போகலாம் போலிருக்கிறது."

வித்யா மெதுவாகச் சிரித்துக் கொண்டே கீழேயிருந்த அவன் டைரியை எடுத்தாள்: "என்ன புத்தகம் இது?"

"புத்தகமில்லை. என் டைரி. இதில் உன்னைப் பற்றிக்கூட எழுதியிருக்கிறேன்."

"அப்படியா, நான் பார்க்கலாமா?"

"தாராளமாக....."

வித்யா பக்கங்களைப் புரட்டிக்கொண்டே போனாள். சில பக்கங்களில் கவிதைகள், கவிதைகளாக வேண்டிய சில வரிகள். தன்னைப் பாதித்த சில விஷயங்கள், பாதிக்கத் தவறிய விஷயங்கள். ஒரு சிற்றமுள்ள இளைஞனின் தெளிவான சிந்தனைகள் - கடைசியாக அவளைப் பற்றின வாசகங்கள்வரை படித்து முடித்தாள்.

"இப்படியெல்லாம்கூட டைரி எழுத முடியும் என்பது எனக்கு இப்போதுதான் தெரிந்தது சங்கர். இதன் பக்கங்கள் எல்லாமே கவிதைகளாக இருக்கின்றன."

"உனக்கு டைரி எழுதுகிற பழக்கமில்லையா வித்யா?"

"யாரிடமும் மாட்டிக் கொள்ள நான் இஷ்டப்பட வில்லை" என்று சிரித்தாள் அவள். திரும்ப டைரியின் பக்கங் களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டே கேட்டாள்:

"யார் இந்தச் சுகுமாரன், சங்கர்? அவரைப் பற்றி நிறைய எழுதியிருக்கிறீர்கள். அவர் கடிதங்களில் சில வரி களைக் கூடக் குறித்து வைத்திருக்கிறீர்களே...?"

"சாருலதா என்ற பெயரில் எழுதுவது இந்த சுகுமாரன் தான். தஞ்சாவூரில் இருக்கிறான். நான் தஞ்சாவூருக்குப் போயிருந்தபோது அவனைச் சந்தித்தேன். நீ தஞ்சாவூருக்குப் போயிருக்கிறாயா வித்யா?"

"ஓ. எஸ். எனக்கு மிகவும் பிடித்தமான ஊர் அது."

"அப்படியா? சுகுமாரனையும் பார்த்திருக்க வேண்டும். இன்னும் பிடித்துப் போயிருக்கும்."

"அப்படியா?"

"வெரி இன்டரஸ்டிங் பர்ஸன்; ஹவுல் சர்ஜனாக இருக்கிறான். இங்கே எப்போதாவது வருவான். வந்தால் எங்க வீட்டில்தான் தங்குவான். உனக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன்."

"உங்கள் டைரியின் அதிகப்பக்கங்களை அவர் கடிதங்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறதே..."

"ஒரு கடிதத்தைக்கூட எப்படி எழுதுவான் தெரியுமா? ஒவ்வொரு வரியும் அவன் புத்திசாலித் தனத்தைக் காட்டும்."

"சாருலதா என்ற பெயரில் வந்திருக்கிற கதைகள் எல்லாவற்றையும் படித்திருக்கிறேன். நன்றாகவே எழுதி யிருக்கிறார்."

தஞ்சாவூரில் சுகுமாரனைச் சந்தித்தைப் பற்றிச் சொன்னான் சங்கர். இன்னும் தன் நண்பர்களைப் பற்றி, ஆபீசைப் பற்றி, எழுத்தைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கடைசியாக அந்த இடத்தைவிட்டு எழுந்து வேலி ஓர மாக நடந்தார்கள்.

வித்யாவுக்கும் ஏதோ ஒரு கிராமத்தின் களத்து மேட்டில் நின்று கொண்டிருக்கும் உணர்வு ஏற்பட்டது.

"இந்த இடத்தை, இங்கே நாம் பார்த்த இந்தக் காட்சி களை நீங்கள் எழுத்தில் கொண்டு வரவேண்டும் சங்கர்."

காரில் திரும்பிக் கொண்டிருந்தபோது சொன்னாள்:

"இந்த மாதிரி ஒருநாள் கூட நான் இருந்ததில்லை சங்கர். இந்த நாளை என்னால் மறக்கவே முடியாது."

அவளைத் திரும்பிப் பார்த்து அதை ஒப்புக்கொள்கிற மாதிரி இலேசாகச் சிரித்தான் அவன்.

15

ரமணி கல்கத்தாவிலிருந்து திரும்பி விட்டான். ஏர் போர்ட்டிலிருந்தே வித்யாவுக்கு போன் பண்ணினான் "இன்னிக்கு சாயந்திரம் உன்னைப் பார்க்க முடியுமா?" என்று கேட்டான். வித்யா, 'சரி' என்று சொன்னாள். ரமணி தன் அறைக்குப் போய் சூட்கேஸைப் போட்டு விட்டு உடை மாற்றிக்கொண்டு, தொழிற்சாலைக்குப் போய் சில வேலைகளை முடித்துக் கொண்டு சரியாக ஐந்து மணிக்கு வித்யாவின் ஆபீசுக்கு வந்து சேர்ந்தான்.

"ஹௌ வாஸ் யுவர் ட்ரிப் ரமணி?"—கேட்டுக் கொண்டே, வித்யா அவன் பக்கத்தில் உட்கார்ந்து கதவை மூடினாள்.

ரமணி காரைக் கிளப்பி கியரை மாற்றிக் கொண்டே "ஃபைன் வித்யா. இங்கே எப்படியிருந்தது? இந்த பத்து

நாட்களில் வீட்டில் ஒன்றும் அமர்க்களமில்லையே?'' என்று கேட்டான்.

வித்யா சிரித்தாள்; ''எங்க வீட்டை நினைக்கும் போதே அமர்க்களம்தான் ஞாபகத்துக்கு வருகிறாற் போலிருக்கிறது?''

''சிலவற்றை நினைக்கும்போது உடனே சில விஷயங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. ஆனால் எனக்கு எதைப் பார்த்தாலும், எதை நினைத்தாலும் உன் ஞாபகம் மட்டும் உள்ளுக்குள் இருந்து கொண்டே இருக்கிறது. ஒரு நிமிஷம் கூட நகராமல் நிலையாக நிற்கிறதே, இது எப்படி வித்யா?''

வித்யா பதில் சொல்லாமல் சிரித்தாள்.

''உன்னை ஒன்று கேட்கலாமா வித்யா?''

''கேளுங்களேன்...''

''உனக்கு அந்த மாதிரித் தோன்றுவதே இல்லையா? இந்தப் பத்து நாட்களில் என் நினைவோ-என்னைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையோ உன் மனசில் வரவில்லையா?''

வெளிப்படையாகக் கேட்கப்பட்டுவிட்ட இந்தக் கேள்வியை அவள் எதிர்பார்க்கவில்லை. 'என்ன பதில் சொல்வது, என்று தடுமாறினாள். அவன் முகத்தைப் பார்த்தபோது அதிலிருந்த எதிர்பார்ப்பைத் தெரிந்து கொண்டவுடன் அவனைத் திருப்திப் படுத்துகிற பதிலாகச் சொல்ல வேண்டுமென்று தோன்றியது. பதிலைத் தேடினாள். வார்த்தைகளுக்காக அலைந்தாள். ஒரு நிமிஷ நேரத்தில் ரமணி உள்ளுக்குள் உடைந்து போய் விட்டான்.

''எம்பராஸிங்காக ஏதோ கேட்டுவிட்டேன் போலிருக்கிறது. விடு வித்யா.''

''நோ ரமணி, பதிலுக்காகத்தான் யோசித்தேன்.''

''பதிலுக்கு யோசித்தாயா?''—ரமணி அவள் முகத்தைப் பார்த்தான். 'யோசித்துப் பதில் சொல்ல வேண்டிய கேள்வியா இது?'—அவன் மனக் கஷ்டம் கண்களில் தெரிந்தது. வித்யா திண்டாடினாள்.

''ரமணி, ஏன் இப்படியெல்லாம் கேட்கிறீர்கள்? என்னால் உங்களை நினைக்காமல் இருந்திருக்க முடியுமென்று நினைக்கிறீர்களா? என்னால் எதையும் பேச்சில் கொட்ட முடிவதில்லை. வெளியே சொல்லவில்லை என்பதால் மனசில் ஒன்றுமில்லை என்று அர்த்தமா?''

அவள் பதிலைக் கேட்டவுடன், தான் கேட்ட கேள்விக்காக வருத்தப்பட்டான் ரமணி.

''ஸாரி வித்யா!''

வித்யாவும் மனசுக்குள் ரகசியமாக வருந்தினாள்; 'நீங்கள் என்னிடமிருந்து நிறைய எதிர்பார்க்கிறீர்கள் ரமணி' ஆனால் என்னால் போலியாகப் பேச முடிவதில்லை. இல்லாததைப் பெரிசு படுத்திச் சொல்ல வருவதில்லை. என் மனசில் உங்களுக்கு இடமுண்டு. கொஞ்சம் பொறுமையாக இருங்கள் ரமணி. என்னை முழுசும் பதப்படுத்திக் கொண்டு விடுகிறேன்.'

ரமணி காரின் முன்னாலிருந்த சின்ன கேஸைத் திறந்தான். ஒரு நீளமான அட்டைப் பெட்டியை எடுத்து அவளிடம் கொடுத்தான்:

''உனக்காக இதை வாங்கிக் கொண்டு வந்தேன். வித்யா.''

''ஓ! ரேவலான் இன்டிமேட்! தாங்க்யூ ரமணி. எனக்கு ரொம்பப் பிடித்த ஸெண்ட் இது.''

வித்யா பாட்டிலை எடுத்துப் புடவையில் ஸ்ப்ரே பண்ணிக் கொண்டாள். பின் அவனுடைய ஷர்ட்டில் ஸ்ப்ரே பண்ணினாள். நன்றாக மூச்சை இழுத்து அந்த வாசனையை உள்ளுக்குள் நிரப்பிக் கொண்டாள். அந்த பாட்டிலின்

அழகை ஒரு நிமிஷம் பார்த்துவிட்டுத் தன் 'ஹான்ட் பாகை'த் திறந்து அதற்குள் போட்டு மூடினாள்.

"வித்யா...." என்று தயங்கினான் ரமணி.

"சொல்லுங்கள்."

"நீ இல்லாமல் என்னால் இருக்கவே முடியவில்லை வித்யா! அந்த சனிக்கிழமை ப்ளேனில் ஏறும் கடைசி நிமிஷம் வரை நீ வருவாய் என்று எதிர்பார்த்தேன். ஒவ்வொரு நிமிடியும் எதிர்பார்த்தேன். உன்னோடு பேசிவிட்டாவது போகலாமென்று வீட்டுக்கு போன் பண்ணினால், அம்மா நீ இன்னும் வரவில்லை என்றாள். என் மனசில் இருந்த 'லோன்லி :ீலிங்' இன்னும் அதிகமாகி விட்டது. விமானத்தில் போகும் போதெல்லாம், 'நான் வைத்திருக்கிற அதே அளவு அன்பு, ஏன் உனக்கு என்மீது இல்லை?' என்று யோசித்துப் பார்த்தேன். என்னிடம் இருக்கும் சாதாரணத் தன்மை, என் சில குறைகள் எல்லாம் எனக்குப் புரிந்தது. இதையெல்லாம் விட்டுவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டேன். ஆனால் பிறவிக் குணம் அவ்வளவு சீக்கிரம் மாறிவிடுகிறதா வித்யா?—நீ மட்டும் என்னிடம் கொஞ்சம் அன்பாகப் பேசினால்—இன்னும் என்னை நெருங்கி வந்தால், நான் மாறி விடுவேன் வித்யா. உனக்காக என்னை மாற்றிக் கொண்டு விடுவேன்..."

வித்யா உருகிப் போனாள்: 'ஓ! ரமணி, இந்த அளவு அன்புக்கு எனக்கு என்ன தகுதி பிருக்கிறது? நான் தகுதியான வள்தானா ரமணி"—வார்த்தைகள் வெளிவர முடியாமல் நெஞ்சிலேயே நின்றன. அவள் பதிலை எதிர்பார்க்காமல் அவன் மேலே பேசிக் கொண்டு போனான்.

"நான் பேராசைக்காரன் வித்யா. அபரிமிதமான அன்பை உன்னிடமிருந்து எதிர்பார்க்கிறன். 'ஐ காண்ட் பி வித்அவுட் யு' என்று என்னை மாதிரியே நீயும் எனக்காக உருக வேண்டுமென்று நினைக்கிறன். ஐ நோ ஐயாம் ராங். நீ எனக்காக உன் மனசை மாற்றிக் கொண்டவள் என்னை உனக்குள், வலுக்கட்டாயமாக உருவாக்கிக் கொண்டவள். இதெல்லாம் தெரிந்திருந்தும் உன்னைக் கஷ்டப்படுத்துவது எவ்வளவு தவறு வித்யா. ஐயாம் டூ லக்கி டு கெட் யூ வித்யா. ரியலி வெரி லக்கி..."

"ர.....மணி!"

"நீ என் கூட இருந்தால் போதும் வித்யா. உன்னைப் பார்த்துக் கொண்டே இருந்தால் போதும். நீ ஒரு தரம் என்னை அன்பாகப் பார்த்தாலே போதும், நான் ஒரு குழந்தையாக, சின்னக் குழந்தையாக மாறி விடுவேன். ஏன், எதனால் எனக்கு உன்னிடம் மட்டும் இப்படிப்பட்ட பலவீனம் என்பது எனக்கே தெரியவில்லை. நான் போகும் இடங்களிலெல்லாம் எத்தனையோ பெண்களைப் பார்க்கிறேன். உன்னைவிட அழகான பெண்களிடமெல்லாம் கூடப் பேசுகிறேன். ஆனால் என் மனம் உனக்கு முன்னால் மட்டும்தான் விழுகிறது இவர்களெல்லாம் 'என் வித்யாவின் ஒரு சிரிப்புக்குக்கூட ஈடாக மாட்டார்கள்' என்று அலட்சியப் படுத்துகிறேன். நீ... நீ... நான் ஏன் உன்னிடம் மட்டும் இப்படி....?"

வித்யா ஸ்டியரிங்கில் இருந்த ரமணியின் கைமேல் தன் கையை வைத்தாள். அவனை அன்பாகப் பார்த்தாள். 'இவரிடம் நாம் இன்னும் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்' என்று தன்னை உறுதிப்படுத்திக்கொண்டாள். "ஐயாம் ஸாரி ரமணி! நீங்கள் இவ்வளவு தூரம் மனம் விட்டுப் பேசும்போது நானும் உங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்வதுதான் நியாயம். நீங்கள் என்னை நேசிக்கிற அளவு என்னால் உங்களை நேசிக்க முடியவில்லை என்பது உண்மை தான். ஆனால் உங்கள் மீது எனக்கு அன்பு இருக்கிறது. அது இன்னும் ஆழமாகக் கொஞ்ச நாட்களாகலாம். இதே அளவு அன்பை என்னால் திருப்பித் தர முடியும் என்றுதான்

தோன்றுகிறது. என்னை என்னால் இன்னும் கூட மாற்றிக் கொள்ள முடியும் ரமணி. மாற்றிக் கொள்ள வேண்டும்!'

"அதற்கு நானும் ஒத்துழைக்க வேண்டும் இல்லையா, வித்யா?" தன் கையிலிருந்த அவள் கையில் குனிந்து முத்தமிட்டான் ரமணி. வித்யா அவனைச் சடாரென்று திரும்பிப் பார்த்தாள். உதட்டைக் கடித்துக் கொண்டே மெதுவாகத் தன் கையை எடுத்துக் கொண்டாள்.

"ஐயாம் ஸாரி வித்யா..."

வித்யா, 'பரவாயில்லை' என்கிற மாதிரி அவனைப் பார்த்து இலேசாகச் சிரித்தாள்.

"கொஞ்ச நேரம் கழித்து ரமணி திரும்பிப் பேசினான்:

"என் தனி அறையும், ஒரே மனிதனாக அதற்குள் உலாவிக் கொண்டிருக்கும் வாழ்க்கையும் எனக்குச் சலித்துப் போய்விட்டது. ஐ நீட் யுவர் கம்பெனி வித்யா ப்ளீஸ்! தயவு செய்து சீக்கிரம் என்னிடம் வந்துவிடேன். என்னுடைய வித்யாவாக மாறிவிடேன்..."

அதற்கும் சிரிப்புதான் வித்யாவிடமிருந்து கிடைத்தது.

"இரண்டு நாட்கள் தொழிற்சாலைக்கு லீவு போட்டு விட்டு அப்பா அம்மாவைப் போய்ப் பார்க்கலாமென்றிருக்கிறேன். ஊர்ப் பக்கம் போய்க் கிட்டத்தட்ட இரண்டு வருஷங்களாகின்றன. அவர்களும் வரச் சொல்லி எழுதிக் கொண்டே இருக்கிறார்கள். நேரில் அவர்களிடம் உன்னைப் பற்றி, உன் அப்பாவைப் பற்றியெல்லாம் சொல்லி, கையோடு அழைத்துக் கொண்டு வரலாமென்று பார்க்கிறேன். என்ன சொல்கிறாய் வித்யா?"

"செய்யுங்கள், எதற்கும் அம்மாவையும் கேட்டு விடுங்கள்."

"இந்த 'செய்யுங்க'ளில் ஒரு சந்தோஷமோ, உற்சாகமோ இல்லையே, அது ஏன் வித்யா?"

"ரமணி, நான்தான் முன்னாலேயே சொல்லிவிட்டேனே, என்னால் எதையும் வெளிக் காட்ட முடியாதென்று..."

"இருந்தாலும் முகத்தில் கூட மலர்ச்சியில்லையே..."

வித்யா சிரிப்பை வரவழைத்துக் கொண்டாள்.

"இது போதும் எனக்கு. இப்போது தைரியமாக ஊருக்குப் போவேன். அப்பா, அம்மாவிடம் சொல்லுவேன். அவர்களை அழைத்துக் கொண்டு வருவேன். உன்னை என்னுடையவளாக்கிக் கொள்வேன்..."

வித்யா ஒரு நிமிஷம் தயங்கினாள். பின், மெதுவாகக் கேட்டாள்: "உங்களிடம் ஒன்று சொல்லலாமா?"

"என்ன?" அந்த 'என்ன' ஒரளவு பதட்டத்துடன் வெளியே வந்தது. அவள் என்னை சொல்லிவிடப் போகிறாளோ என்ற பயம் அதில் தெரிந்து.

"முதலில் என்னை உங்கள் மனசின் அருகில் வர விடுங்கள் ரமணி! அதன் பின்... அதன் பின்..."

ரமணி புரிந்து கொண்டான்: "ஓகே வித்யா" கூடவே ஒரு பெருமூச்சும் வெளிப்பட்டது. அது அவளைச் சுட்டது. பேசாமலிருந்தாள்.

"இந்தப் பத்து நாட்களில் என்ன பண்ணினாய் வித்யா?" — திரும்ப ரமணியே பேச்சை ஆரம்பித்தான்.

"வீடு— ஆபீஸ், ஆபீஸ்— வீடு. அதேதான். ஓ! சொல்ல மறந்து போனேனே, நான் ஒரு அழகான இடத்துக்குப் போயிருந்தேன் ரமணி. மரங்களும் செடிகளும், பசுமையும் குளுமையும் எவ்வளவு அழகு தெரியுமா? நீங்களும் அந்த இடத்தைப் பார்க்க வேண்டும்."

"எந்த இடம் அது?"

"ஊஹும்! சொல்லமாட்டேன், வழி தெரியும். ஒரு நாள் போகலாமா?"

"ஓ எஸ். போகலாம். நீ யார் கூடப் போயிருந்தாய்?"

"சங்கர்! அவர்தான் அழைத்துக் கொண்டு போனார். வழக்கமாக அவர் போகும் இடமாம் அது. அங்கு உட்கார்ந்து எழுதுவாராம்."

ரமணி ஹாரனை அழுத்தினான். டிராபிக் அதிகம் இருந்த சாலை அது.

"இன்னொரு விஷயம். நான் எழுதின கவிதை ஒன்று கூடரில் பிரசுரமாகப் போகிறது. சங்கர் அதை எப்படிப் புகழ்ந்தார் தெரியுமா?"

"கங்கிராஜுலேஷன்ஸ் வித்யா."

"என்னால் நன்றாக எழுத முடியும் என்கிறார். அவர். 'நீ எழுத வேண்டும்' என்பதை அடிக்கடி சொல்கிறார். அவர் வீட்டுக்குப் போனதைப் பற்றி நீங்கள் ஒன்றுமே கேட்க வில்லையே! அவர் வீடு எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா? சங்கரின் இந்த அறிவுக்கு அவருடைய அப்பா, அம்மாதான் மூலகாரணம் என்று நினைக்கிறேன். என்ன மாய்ப் பேசுகிறார்கள்! எத்தனை விஷயங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்! சங்கருக்கு கதை மட்டும் தான் எழுத தெரிகிறது என்று நினைத்துக் கொண் டிருந்தேன். அவர் ஒரு அற்புதமான ஓவியருமும்கூட! சுவர் முழுசும் எத்தனை வர்ணக் கலவைகள் தெரியுமா? ஹி இஸ் ரியலி க்ரேட். யு மஸ்ட் மீட் ஹிம் ரமணி."

அவன் கவனம் ரோடில் இருந்தது.

"ஒரு நான் நீங்களும் என்னுடன் அவர் வீட்டுக்கு வரு கிறீர்களா?"

"நான் வந்து என்ன பேசப் போகிறேன் வித்யா? அவருடைய கதைகளைக் கூடப் படித்தது கிடையாதே!"

"அதனால் என்ன? சங்கர் இலக்கியம் தெரிந்தவர் களோடு மட்டும்தான் பேசுவார் என்பதில்லை. எல்லாரை

யும் மதிக்கத் தெரிந்தவர் அவர். பொதுவாகக் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு வந்து விடலாம்."

"பார்க்கலாம் வித்யா. எனக்கு நேரம் கிடைக்க வேண்டுமே..."

அதற்கு மேல் அந்த விஷயத்தைப் பற்றின பேச்சு எதுவு மில்லை. ரமணி அவளைத் தெருக் கோடியில் இறக்கி விட்டான்.

"ஸோ, நான் அம்மா, அப்பாவை இப்போது வரவழைக்க வேண்டிய அவசியமில்லை, இல்லையா?"

"ஏன் ஊருக்குப் போய் அழைத்துக் கொண்டு வரப் போகிறேன் என்று கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே தானே சொன்னீர்கள்...!"

"நீதான் முதலில் மனசின் அருகில் வருகிறேன்; அதன் பின் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டாயே..."

வித்யாவின் புருவங்கள் சுருங்கின.

"வாட் இஸ் திஸ்? இதற்கும் கல்யாணத்திற்கும் என்ன சம்பந்தம்? நீங்களதானே தனிமை அலுப்பைத் தருகிறது என்று சொன்னீர்கள்...யூ நீட் மை கம்பெனி - ஆர் மை பாடி?"

"வித்யா..."

"பின் எதற்காக இப்படிக் கேட்டீர்கள்? நான் கல்யாணம் வேண்டாம் என்றா சொன்னேன்? கல்யாணமானாலும் முதலில் என்னை உங்கள் மனசின் பக்கம் நெருங்க விடுங்கள். அப்புறம் நீங்கள் என்னை நெருங்கலாம் என்றுதானே கேட்டுக் கொண்டேன்!"

"ஸாரி, வித்யா..."

"எதற்கு இந்த ஸாரி இப்போது? அது ஒரு சுலபமான வார்த்தையில்லையா ரமணி. என்னால் உங்கள் உள் மனசைப்

புரிந்து கொள்ள முடியவில்லை. சில சமயம் குழந்தையாகக் குழைகிறீர்கள். சில சமயம் வெறும் மௌனத்தில் - ஒரு வார்த்தைப் பதிலில் முள்ளாகக் குத்துகிறீர்கள். எது உங்கள் உண்மையான உருவம்? முள்ளா? குழந்தையா?''

அவனிடமிருந்து பதிலில்லை. அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பார்வை அவளை என்னவோ செய்தது.

''ஐயம் ஸாரி ரமணி. நீங்கள்தான் என்னை இப்படிப் பேச வைத்து விட்டீர்கள். காரில் வரும்போது நான் சந்தோஷமாகத்தானே பேசிக் கொண்டு வந்தேன்? உங்களுடைய ஒரே ஒரு வார்த்தையில் எல்லாம் கலைந்து போகிறது.''

''என்னை மன்னித்து விடு வித்யா.''

அவள் மௌனமாக கார் கதவில் சாய்ந்து நின்று கொண்டிருந்தாள். அவன் பாண்ட் பாக்கெட்டிலிருந்து கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொள்கிற மாதிரிக் கண்களைத் துடைத்துக் கொண்டான். ''நான் நாளைக்கே லீவு எடுத்துக் கொண்டு ஊருக்குக் கிளம்புகிறேன்.''

வித்யா தலையாட்டினாள்.

''ஸாரி, வித்யா! இதை மறந்துவிடு. இத்தனை நேரம் காரில் பேசினதிற்கெல்லாம் எதிர்மாறாக நடந்து கொண்டு விட்டேன். பிறவிக் குணம் அவ்வளவு சீக்கிரம் மாறுமா என்று கேட்டதை நிரூபித்துக் காட்டிவிட்டேன்...''

''தட்ஸ் ஆல்ரைட்.....''

''நாளைக்கு ஊருக்குக் கிளம்பு முன் அம்மாவை வந்து பார்த்துவிட்டு, உனக்கும் ஆபீசுக்குப் போன் பண்ணிவிட்டுப் போகிறேன்.''

''ஓ.கே.''

''குட்நைட் வித்யா.''

''குட்நைட் ரமணி.''

அவள் நகர்ந்து பிளாட்பாரத்தின் மேல் நின்று கொண்டு கையாட்டினாள். அவன் காரைத் திருப்பிக் கொண்டு வந்த வழியில் வேகமாகப் போய் விட்டான்.

''ரமணி, நம் வாழ்க்கை எப்படி இருக்கப் போகிறது? இப்படித்தானா? இப்படித்தான் என்றால் எதுக்கு இந்தக் கல்யாணம்?''

வித்யா வீட்டுக்கு வந்தபோது வாசல் கேட் திறந்து கிடந்தது. கேட்டைச் சாத்திக் கொக்கியைப் போட்டுக் கொண்டு திரும்பினாள்.

16

ரமணியின் பெற்றோர் வீட்டுக்கு வந்தபோது, வித்யா ஆபீசுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள். இதுவரை அவர்களைப் பார்த்ததில்லை அவள். அம்மாதான் எப்போதாவது அவர்கள் குடும்பத்தைப் பற்றி ஏதாவது சொல்லுவாள்:

''சாதாரணமான குடும்பம் இல்லைடி அது. தலைமுறை தலைமுறையாகப் பெயர் வாங்கிக் கொண்டிருக்கும் பெரிய குடும்பம். அந்தக் கால மிராசுதார் குடும்பம். ஏராளமான சொத்து. ஒரு கிராமம் முழுசையும் கட்டியாண்டு கொண்டிருக்கிற பெரியதனம். விடிஞ்சாப் போறும். ஊர் முழுசும் வீட்டு வாசலில் தண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு வந்து நிற்கும். ரமணியின் தாத்தா சொல்றதை மறுபேச்சில்லாமல் கேட்டுக் கொண்டு தலை ஆட்டி விட்டுப் போகும். ஒரு வேளைக்குக் குறைஞ்சது நூறு இலைகளாவது போட்டா

கணும். நாலு கோட்டை அடுப்பு எப்போது பார்த்தாலும் 'கண கண'வென்று நெருப்பைக் கக்கிக் கொண்டிருக்கும். அதுக்கு முன்னாலே ரெண்டு சமையற்காரா மாறி மாறி உடம்பு நனைய நின்னுண்டு இருக்கணும். ரமணியின் தாத்தா வாசல் திண்ணையில் திண்டைப் போட்டுண்டு உட்கார்ந்து கோவில் மணி மாதிரி குரலில் ஒரு அதட்டுப் போட்டால் போறும் ரெண்டு கட்டு தாண்டி கிணற்றடி வரை கேட்கும். அவர் இருந்தபோது ரெண்டு நாள் நாலும் உங்க அப்பாவும் போயிருந்தோம். பேச்சிலே எவ்வளவு அன்புங்கறே! அவர் போனார். அந்த ஊருக்குப் போறதும் நின்னு போச்சு. ரமணியோட அப்பா அம்மாவைப் பத்தி எனக்கு அவ்வளவாகத் தெரியாது..."

வித்யா இரண்டு நிமிஷப் பேச்சில் தெரிந்து கொண்டு விட்டாள். ரமணியின் அப்பாவைப் பார்த்ததுமே அவள் ஏமாந்து போனாள். அம்மா சொன்ன பின்னணியில் அவள் மனசில் நின்ற உருவமே வேறாக இருந்தது. அவரோ அசல் கிராமமாக வந்து நின்றார். பேச்சில், உடையில், சிரிப்பில் எதிலும் பெயருக்குக்கூட நாகரிகத்தைக் காணோம். காலைத் தூக்கி சோபாவின் மீது வைத்துக் கொண்டு உட்கார்ந்தார். ஒரு நிமிஷம் அவருடைய பேச்சில் பத்துத்தரம் 'பணம்' என்ற வார்த்தை அடிபட்டது. அதற்குள், பொடி மட்டையில பாதி மூக்கில் ஏறியது. கண்களில் நீர் தளும்பத் தளும்ப, அதிக வஸ்திரத்திலேயே மூக்கையும் கண்களையும் துடைத்துக் கொண்டு திரும்பப் பேச ஆரம்பித்தார். அதே பணம்! பணம்!

'ரமணி, இவரா உங்க அப்பா?...அம்மா சொன்ன பெரிய குடும்பத்தில் பிறந்தவரா இவர்? அந்தத் தாத்தாவுக்குப் பிறந்த பிள்ளையா? இவருக்கு நீங்கள் எப்படிப் பிறந்தீர்கள் ரமணி? ஒரு வேளை நீங்கள் அப்படியே அம்மாவோ?'

அந்த அம்மாள் அவளைக் கூப்பிட்டுப் பக்கத்தில் உக்கார வைத்துக் கொண்டாள். தலையைத் தடவினாள். அந்தத் தடவலில் அம்மா சொன்ன தாத்தாவின் அன்பு, ரமணியின் அன்பு எல்லாம் பளிச்சிட்டது. ஒரு பெரிய தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், ஒரு பட்டு ரவிக்கைத்துண்டு எல்லாவற்றையும் வைத்துக் கொடுத்தாள்.

"என் பிள்ளைதாம்மா எனக்கு முக்கியம். அவன் ஆசைப் படறான். அவன் மனசு கோணாமல் நடக்கணும். அதனால் தான் சம்பிரதாயம் எதுவும் பார்க்காமல் நாங்களே வந்தோம். அவன் சந்தோஷமாக இருந்தால் போறும். வேறே என்ன வேணும் எங்களுக்கு?" என்றாள். அப்பாவின் பேச்சில் நிமிஷத்துக்குப் பத்துத்தரம் பணம் என்ற வார்த்தை வெளிப் பட்டால், அந்த அம்மா அதைவிட ஒரு பிள்ளை அதிகம் போட்டாள். 'தன்பிள்ளை ஊரை விட்டுவிட்டு, சொத்தை விட்டுவிட்டுத் தனி ரூமில் இருந்து, ஓட்டல் சாப்பாடு சாப்பிட்டுக் கஷ்டப்படுகிறானே' என்று வருத்தப்பட்டாள். 'இவன் சம்பாதிச்சு என்ன ஆகணும்?' என்று கேட்டாள். 'இவனுடைய சொத்தில் கண்டவனும் சாப்பிட்டுப் போகும் போது இவன் எதற்காக ஒருத்தனுக்குக் கீழே வேலை செய்யணும்? சொன்னால் கேட்கிறானா?' என்று முணுமுணுத்தாள். வித்யாவுக்குச் சிரிப்பு வந்தது. இரண்டு பேருக்கும் 'நல்ல காண்ட்ராஸ்ட்' என்று நினைத்துக் கொண்டாள். தன்னை அவர்களுக்கிடையில் வைத்துப் பார்த்தாள். அப்போதும் அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. வேறு என்ன செய்ய முடியும்?

அப்பா அவர்களை வரவேற்றார். அவர்கள் நேரிடை யாக விஷயத்தைக் கேட்டார்கள். அப்பாவும் நேரிடையாகப் பதில் சொன்னார்.

"உங்க பிள்ளையும், என் பெண்ணுமே எல்லாத்தையும் முடிவு செய்து விட்டார்கள். தினமும் உங்கள் பிள்ளை

இவளைக் காரில் அழைத்துக் கொண்டு சுற்றுகிறான். தெருக் கோடியில் இறக்கிவிட்டுப் போகிறான். இவ்வளவு தூரம் என்னைக் கேட்டுக் கொண்டா நடக்கிறது? கல்யாணம் மட்டும் ஏன் என்னைக் கேட்டுக் கொண்டு நடக்கணும்? அவர்களே நடத்திக் கொள்வார்கள்."

அதைக் கேட்டதும் ரமணியின் அப்பா கோபப்பட்டார். ரமணியைத் திட்டினார். 'இப்படியெல்லாம் செய்யத்தான் மெட்ராஸ் வந்தானா' என்று கத்தினார். அவனுடைய அம்மா புத்திசாலித்தனமாக அவரை அடக்கினாள்.

"இதில் என்ன பெரிய தப்பு? ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவர்கள்தானே! காரில் போனால் என்ன வந்து விட்டது?" என்று அவரை அடக்கிவிட்டு அப்பாவிடம், "நீங்கள்தான் இந்தக் கல்யாணத்தை நடத்த வேண்டும். எங்கள் குடும்பமும் பெரிய குடும்பம். உங்களுடையதும் சின்னதில்லை. மேலே இன்னும் இரண்டு பெண் பசங்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கல்யாணமாக வேண்டாமா? எல்லாத்துக்கும் மேலே உங்கள் கடமை என்று ஒன்று இல்லையா?" என்று கேட்டாள்.

அதைக் கேட்டதும் அப்பாவுக்குக் கோபம் வந்துவிட்டது. கண்களின் சிவப்பில் அது தெரிந்தது. குரல் உயர்ந்தது:

"அதே மாதிரி பெண்ணுக்கும் சில கடமைகள் இல்லையா? அவள் என்னைக்காவது அதன்படி நடந்திருக்கிறாளா என்று கேளுங்கள்."

அந்த அம்மாள் நிதானமாகப் பதில் சொன்னாள். தெளிவான பதிலாகவும் இருந்தது:

"போனதெல்லாம் போகட்டும். சிறுசுகள் தப்பு பண்ணினாலும் பெரியவர்களான நாம்தான் மன்னிக்கணும். விட்டுக் கொடுத்து நடக்கணும். அதில்தான் பெரிய மனுஷத்தனம் இருக்கு. நாமும் அவர்களுக்குச் சரியாகப் பிடிவாதம் பிடித்து முரண்டு பிடித்தால் எப்படி?"

"அம்மா, நீங்களே வீடு தேடி வந்து இவ்வளவு தூரம் கேட்டதால் சொல்கிறேன். என் பெண் நானே முன் நின்று இந்தக் கல்யாணத்தை நடத்தணும் என்று நினைத்தால், அவள் ஒரு இரண்டு மாசங்களுக்காவது எனக்கு அடங்கி, நான் சொல்றபடி கேட்டு நடக்கணும். அப்படி வணக்கமா இருக்கச் சொல்லுங்கோ. நானே கல்யாணத்தை நல்லபடியா நடத்தி வைக்கிறேன்."

"இதைக் கேட்ட வித்யா மனசுக்குள் வெறுத்துக் கொண்டாள். 'சீ! இது என்ன பேரம்? இப்படியாவது என்னை அடக்கி, அடி பணிய வைத்துப் பார்க்க வேண்டுமென்ற வெறியா? உங்களுக்குத்தான் என்னைப் பிடிக்கவில்லையே, இவர்களாவது வந்து கேட்கிறார்களே, அனுப்பிவிட வேண்டியதுதானே?.... எதற்காக இந்த இரண்டு மாதப் பரிசோதனையெல்லாம்? நியாயமானதாக இருந்தால், தவறு என் பக்கம் இருந்தால் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், இந்தக் கட்டுப்பாடு...?'

ரமணியின் அம்மா அவளிடமும் வந்து பேசினாள்: "உங்கள் குடும்பத்தில் ஆயிரம் இருக்கும். அதற்கு என் பிள்ளையின் வாழ்க்கையைப் பலியாக்கி விடாதேம்மா. அவனோ, 'உன்னை விட்டால் நான் கடைசிவரை இப்படியேதான் இருப்பேன்' என்று பயமுறுத்துகிறான். நீ பிடிவாதம் பிடித்து அவனைக் கல்யாணம் இல்லாமல் ஆக்கிவிடாதே' என்று சொல்லிக் கண்கலங்கி விட்டுப் போனாள்.

அம்மாவும் வித்யாவிடம் வந்து புத்தி சொன்னாள்: "இன்னும் இரண்டு மாசம்தானே வித்யா, பல்லைக் கடித்துக்

கொண்டு அவர் சொல்கிறபடி கேளேன்...'' என்று கெஞ்சினாள்.

வித்யா பதில் சொல்லாமல் மத்தியானம் ஆபீசுக்குக் கிளம்பி வந்தாள். வேலையில் மனசு ஓடவில்லை. ஷோபா இன்விடேஷன் கார்டுகளுடன் வந்திருந்தாள். எல்லாரையும் அழைத்துவிட்டுக் கடைசியாக வித்யாவிடம் வந்தாள்.

''எல்லாரையும் மாதிரி ரிசப்ஷனுக்கு வந்து தலைகாட்டி விட்டுப் போய்விடலாமென்று நினைக்காதே! நீதான் கூட இருந்து எனக்கு உதவி செய்யணும். முந்தின நாள் காலையிலேயே வந்துவிடு. அம்மா உன்னிடம் தனியாகச் சொல்லச் சொன்னாள்.''

வித்யா சிரிப்பை வரவழைத்துக் கொண்டு தலையாட்டினாள்.

''இப்போ தலையாட்டிவிட்டு, அப்புறம் வராமலிருந்தாயோ, நான் உன்கிட்டே பேசவே மாட்டேன்.''

''இல்லை, ஷோபா! கட்டாயம் வருவேன். வராமலிருப்பேனா?''

ஷோபா போனதும் வித்யா தன் கல்யாணத்தை நினைத்துக் கொண்டாள். அப்பா போட்ட கட்டுப்பாடு நினைவில் நின்றது. கட்டுப்பாடா அது! 'அப்பா, உங்களுக்கு மனசே கிடையாதா?'

மூன்று மணிக்குமேல் சங்கருக்கு போன் பண்ணினாள்.

''என்ன விஷயம் வித்யா?''

''நான் இன்னைக்கு உங்களைப் பார்த்தாகணும்!''

''இன்னிக்கா? சாயந்திரம் ஆபீசுக்கு வரட்டுமா?''

''சரியாக ஐந்து மணிக்கு வந்துவிடுங்கள்.''

அவள் குரலில் இருந்த அழுத்தத்தைக் கவனித்த சங்கர் திரும்ப என்ன விஷயமென்று கேட்டான்.

''நேரில் சொல்கிறேன்'' என்று அவள் போனை வைத்து விட்டாள்.

''ஏதாவது சாப்பிடுகிறாயா வித்யா!''—காரில் கேட்டான் சங்கர்.

''வேண்டாம் சங்கர்.''

''எங்கே போகலாம்?''

''நேராகப் பீச்சுக்குப் போங்கள். உள்ளே காரை நிறுத்தி விட்டு காருக்குள்ளேயே உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கலாம்.''

அவன் பீச் ரோடில் திரும்பினான்.

''என்ன ஆயிற்று வித்யா? ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?''

''இன்றைக்கு ரமணியின் அப்பாவும் அம்மாவும் வீட்டுக்கு வந்திருந்தார்கள்.''

''ம்...''

''கல்யாணத்தைப்பற்றி அப்பாவிடம் கேட்டார்கள்.''

அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''அப்பா, நான் இரண்டு மாதங்கள் அவருக்கு அடங்கி நடந்தால் இந்தக் கல்யாணத்தை நடத்தி வைக்கிறேன் என்றார்.''

''அடங்கி நடப்பது என்றால்...?''

''வீட்டில், அவர் அம்மாவோடு சண்டை போட்டால் நான் தலையிடக் கூடாது. நான் எங்கேயும் வெளியே போகக் கூடாது. யாரிடமும் பேசக் கூடாது. வீட்டுக்கு அவருக்குப் பிடிக்காத என் சிநேகிதிகள் வரக்கூடாது. நான் வேலையைக் கூட விட்டுவிட வேண்டும். எதற்கும் அவரிடம் போய் நிற்க வேண்டும்.''

"என்ன வித்யா இது?"

வேதனையோடு சிரித்தாள் வித்யா.

"இரண்டு மாசம்தானே! அவருக்கு அடங்கிப் போய்விடு. இந்தக் கல்யாணம் நடந்தால்தாண்டி எனக்கு நிம்மதி ஏற்படும் என்கிறாள் அம்மா."

"அவர்கள் என்ன சொன்னார்கள்?"

"எவர்கள்?"

"ரமணியின் அம்மா அப்பா..."

"ரமணியின் அப்பா எப்போது பார்த்தாலும் இரும்பு பீரோவின் பக்கத்தில் உட்கார்ந்து பணத்தை எண்ணிக் கொண்டிருப்பார் போலிருக்கிறது. அம்மா, என் பிள்ளை, என் பிள்ளை' என்று உருகுகிறாள். இரண்டு பேரின் உலகமும் அதோடு முடிந்து விடுகிறது. அந்த அம்மாள், 'உங்கள் குடும்பத்தில் ஆயிரம் இருக்கும். என் பிள்ளையின் வாழ்க்கையைப் பாழாக்கி விடாதே!' என்று கண்ணைக் கசக்கிக்கொண்டு போய்விட்டாள்."

சங்கர் பேசாமலிருந்தான். நேராக காரை புகாரிக்குள் திருப்பினான். இரண்டு பேரும் மேலே ரூஃப் கார்டனில் போய் உட்கார்ந்து கொண்டார்கள். வெறும் டோஸ்டும், டீயும் ஆர்டர் பண்ணினான்.

"என்னைத் தேடிக்கொண்டு ஏன் இத்தனை பிரச்னை களும் வருகின்றன, சங்கர்...?"

"நீ சமாளிப்பாய் என்று அவற்றிற்குத் தெரியும். அதனால் தான் உன்னிடம் வருகின்றன."

"ஒரு அப்பா, தன் பெண்ணின் கல்யாணத்துக்குப்போடும் கட்டளைகளைப் பார்த்தீர்களா? அதற்கு அடங்கி, பயந்து, பணிந்துபோய் இந்தக் கல்யாணத்தை நடத்திக் கொள்ளத் தான் வேண்டுமா, சங்கர்? சின்னக் குழந்தைக்குச் 'சமர்த்தாக இருந்தால் மிட்டாய் தருகிறேன், என்று ஆசை காட்டுகிற

மாதிரி இது என்ன சங்கர்? ஒ, காட்! எனக்கு மட்டும் ஏன் சங்கர் இப்படியெல்லாம் நடக்க வேண்டும்?"

சங்கருக்கு அவளைப் பார்க்கக் கஷ்டமாக இருந்தது. அவளுடைய அப்பாவின்மேல் கோபம் வந்தது. தன் வேலை, வீடு எல்லாவற்றையும் விட்டுவிட்டு, 'வா, வித்யா' என்று அவளை அழைத்துக்கொண்டு உலகத்தின் எந்த மூலைக் காவது போய் கூலி வேலை செய்தாவது அவளைச் சந்தோஷ மாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று தோன்றியது. சி! என்ன சமூகம் இது! காய்ந்து சருகாகிப் போன சமூகம்! கொஞ்சம் நீ பட்டால் போதும். நீ கூட வேண்டாம். புகை வந்தாலே முழுகம் பற்றி எரியும்.' வித்யாவைப் பார்த்தான். அன்று பார்த்த அந்த ஒற்றைக் கிளியைக் கூண்டோடு கொண்டு வந்து எதிரே நாற்காலியில் வைத்த மாதிரி இருந்தது. 'கூண்டை உடைத்து, உன்னைப் பறக்கவிட எனக்கு வலிமை இருந்தாலும், உரிமையில்லையே வித்யா. உன் கஷ்டங்களைக்கேட்டு நானும் உனக்காக மனசுக்குள் கஷ்டப்படுவதைத் தவிர, வேறு எதுவும் செய்ய முடியாத வனாக இருக்கிறேன். உன் அழுகையைப் பார்த்துக்கொண் டிருக்கிறேன். என்னை மன்னித்துவிடு வித்யா.'

"என்ன சங்கர், பேசாமலிருக்கிறீர்கள்?"

"நீ உன்னை இன்னும் தைரியமானவனாக வளர்த்துக் கொள்ள வேண்டும் வித்யா. இதையெல்லாம் சமாளிக்கத் தெரிய வேண்டும். ரமணிதான் உனக்கு முக்கியமேதவிர, அவருடைய அம்மா, அப்பாவைப் பற்றி நீ அதிகம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. அவர்கள் எங்கோ கிராமத்தில் இருக்கப் போகிறவர்கள். ரமணி நல்லவராக இருக்கிறார். அப்பாவிடம் இருந்து நீ படும் கஷ்டங்களைவிட வேறு எங்கு போனாலும் இவ்வளவு கஷ்டப்படப்போவ தில்லை. உன் அம்மாவை நினைத்துப்பார். அவளுடைய கஷ்டங்களை விடவா இது பெரிசு? அவளுக்காக அவள் மன நிம்மதிக்காக, ஏன், உனக்காகவே கூட நீ உன் அப்பா

சொன்ன கட்டுப்பாடுகளுக்கு அடங்கி நடப்பதைத் தவிர வேறு வழியில்லை. நிச்சயமாக ஒரு சோலையை அடையப் போகிறோம் என்பது தெரிந்த பின்னால், இன்னும் கொஞ்ச தூரம் பாலைவனத்தில் நடப்பதில் தவறில்லை வித்யா. யோசித்துப் பார். உன் சுய கௌரவம் இதனால் குறைந்து விடப் போவதில்லை. மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தால் அது எத்தனையோ பேர்களின் மன வருத்தத்துக்குக் காரணமாகும். இந்தக் கல்யாணம் வேறு விதமாக நடந்தாலும் பிரச்னைகள்தான். மற்றவர்களை நினைத்துப் பார்த்து நீ உன் மனசை அடக்கிக் கொண்டு — புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும். அதை நான் உனக்குச் சொல்லித்தர வேண்டிய அவசியமில்லை."

வித்யாவிடமிருந்து ஆழமான பெருமூச்சுக் கிளம்பி வந்தது. அவள் கண்களில் நீர் தளும்பி நின்றது.

"உங்கள் நட்பு மட்டும் எனக்குக் கிடைக்காமற் போய் இருந்தால் இத்தனை நேரம் நான் என்னவாகியிருப்பேன் என்று சொல்லவே முடியாது சங்கர்."

"நான் உன்னுடன் இருப்பேன் வித்யா. கடைசிவரை இதே மாதிரி, இதே சங்கராக இருப்பேன். நீ மனசு உடைந்து போய்விடக் கூடாது. நீ எதையும் ரெகன்ஸைல் பண்ணிக் கொண்டு இருக்கத் தெரிந்தவள், எல்லாவற்றையும் சகித்துக் கொள்ளப் பழக்கப்பட்டவள்."

"என் கஷ்டங்களுக்கெல்லாம் ஒரே எஸ்கேப் என் ஆபீஸ்தான் சங்கர். ஆபீசுக்குக்கூடப் போகக்கூடாது என்பதைத்தான் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை."

"அப்பாவிடம் நிதானமாகச் சொல்லு வித்யா. ஆபீசுக்குப் போய்வர மட்டும் அனுமதி வாங்கிக் கொள். இரண்டே மாதங்கள்...பல்லைக் கடித்து கொண்டு தள்ளிவிடு.

அதற்குப் பின்னால் உனக்குக் கஷ்டங்களே மறந்து போய்விடும்."

"பார்க்கலாம் சங்கர்."

அவள் நம்பிக்கையில்லாமல் சிரித்தாள்.

17

வித்யாவுக்கு ஆபீசுக்குப் போய்வர மட்டும் அனுமதி கிடைத்தது. ஆபீஸ், நேராக வீடு. வீட்டிலிருந்து திரும்ப ஆபீஸ் அவ்வளவுதான். அப்பா ரமணியிடமும் சொல்லி விட்டார். அவன் அவளைப் பார்க்கக் கூடாது. எங்கும் அழைத்துக் கொண்டு போகக் கூடாது. வீட்டுக்கும் வரக் கூடாது என்று. ரமணி அவளோடு தினமும் ஒரு தரம் போனில் பேசிக் கொண்டிருந்தான். ஐந்து மணிக்கு ஆபீஸ் விட்டால், ஐந்து பத்திற்குக் கிளம்பும் ஒரு பஸ்ஸில் போய் அவள் ஏறிக் கொள்ள வேண்டும். ஐந்தரைக்கெல்லாம் வீட்டிலிருக்க வேண்டும் என்கோ இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் சோலையை அடையப் பாலைவனத்தில் அவள் நடந்து கொண்டிருந்தாள்.

சங்கரைப் பார்த்தும் எத்தனையோ நாட்களாகி விட்டிருந்தன. அவளுடைய 'தனி மரம்' பிரகரமானதும் அதை எடுத்துக்கொண்டு ஆபீசுக்கு வந்திருந்தான் அவன். அன்று அவளால் அதிகம் பேச முடியவில்லை.

"இப்போது உன்னால் எழுத முடியும் வித்யா. எல்லாவற்றையும் மறந்து விட்டு எழுதத் தொடங்கு" என்று திரும்ப வற்புறுத்தினான்.

"வேண்டாம் சங்கர். இந்த 'தனிமரத்'தோடு என் எழுத்து தனியாகவே நிற்கட்டும்!"

அந்தப் பதில் அவனை வருத்தியது. பேசாமல் ஒரு நிமிஷம் அவளையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, "வரட்டுமா?" என்று கிளம்பினான். வித்யா தலையாட்டினாள்.

அவன் கீழே இறங்கிக் காரில் ஏறும்வரை பார்த்துக் கொண்டு நின்றாள்.

அதன் பின் அவனாலும் வர முடியவில்லை. ஆபீஸ் வேலை அழுத்திக் கொண்டிருக்கிறது என்று சொன்னாலும் வித்யாவின் சோகமான முகத்தை அவனால் பார்க்க முடியவில்லை என்பதுதான் உண்மையான காரணம். தினமும் காலை ஆபீசுக்கு வந்ததும் ஒன்பதரை மணிக்கு முதலில் அவளுக்கு போன் பண்ணிப் பேசுவான். இப்போது கிரஹாம் பெல்லுக்கு அதிகமாக நன்றி சொல்லத் தொடங்கினான். அவள் குரலையாவது கேட்க முடிகிறதே!

வழக்கப்படி அன்று காலை ஒன்பதரைக்கு போன் பண்ணின சங்கர், "வித்யா, நாளைக்கு ஒரு நிமிஷம் வீட்டுக்கு வந்துவிட்டுப் போக முடியுமா?" என்று கேட்டான்.

"என்ன விஷயம் சங்கர்?"

"என்னுடைய பிறந்த நாள். அம்மா உன்னைக் கூப்பிடச் சொன்னாள். அவசியம் வரும்படி சொல்லச் சொன்னாள். எனக்குத் தெரிந்த விஷயங்களெல்லாம் அவளுக்குத் தெரியாதே! அதனால் உனக்காகக் காத்துக்கொண்டிருப்பேன் என்று சொல்லச் சொன்னாள். அநேகமாக அம்மாவே உனக்கு போன் பண்ணினாலும் பண்ணுவாள்."

"நாளைக்கா? எப்படி சங்கர் முடியும்?" என்று இழுத்த வித்யாவுக்குத் திடீரென்று நாளைக்கு ஷோபாவின் கல்யாணம் என்பது ஞாபகத்துக்கு வந்தது. ஆபீசுக்கு லீவு போட்டிருந்தாள். கலயாண வீட்டிலிருந்து எப்படியாவது

பிய்த்துக் கொண்டுபோய்ச் சங்கரை பார்த்துவிட வேண்டும்.

"ஓ.கே. சங்கர், கட்டாயம் வருகிறேன். நாளைக்கு ஷோபாவின் கல்யாணம். கல்யாண வீட்டிலிருந்து அங்கே வருகிறேன். வீட்டிலேயே இருங்கள். எப்போது வேண்டுமானாலும் வருவேன்."

சங்கர் சந்தோஷத்தோடு போனை வைத்தான். 'நாளைக்கு வித்யாவைப் பார்க்கப் போகிறோம்! எப்போது வரும் அந்த நாளை?'

வித்யா அன்று மத்தியானம் சாப்பிடவில்லை. அந்த நேரத்தில் பிராட்வேயிலிருந்த ஒரு பெரிய ஆப்டிஷியன் கடைக்குப் போனாள். முதல் நாள் தான் சம்பளம் வாங்கியிருந்ததால் கையில் நிறையப் பணம் இருந்தது. சங்கருக்காக ஒரு ரே-பான் கூலிங்கிளாஸை வாங்கிக்கொண்டாள். 'இது அவர் நிறத்துக்கும், பர்சனாலிடிக்கும் ரொம்ப நன்றாக இருக்கும்' என்று மனசுக்குள் அதை அவனுக்குப் போட்டுப் பார்த்து வாங்கினாள்.

வீட்டுக்குப் போனதும் ஷோபாவின் கல்யாணப் பத்திரிகையைக் காட்டி அம்மாவை விட்டு அப்பாவிடம் கேட்கச் சொன்னாள்.

"ஏன், உன் பெண்ணுக்கு வாய் இல்லையா? அவளே வந்து கேட்கட்டும்" என்று சொல்லி விட்டாராம் அப்பா. வேறு வழியில்லாமல், வித்யா அவர் எதிரில் போய் நின்றாள்; கேட்டாள். அவள் வந்து தன் எதிரில் நிற்கும் அந்த நிமிஷங்களை நன்றாக உபயோகப்படுத்திக் கொண்டார் அப்பா. எத்தனை பேச்சுக்கள்! வித்யா வாயைத் திறக்கவில்லை. 'ப்ளீஸ், மை டியர் வித்யா! பேசாமல் இரம்மா. கொஞ்சம் பொறுமையாக இரேன்' என்று தன் மனசுக்குள் சொல்லிக் கொண்டாள். கடைசியில் அனுமதி கிடைத்தது; கிளம்பி விட்டாள்.

கல்யாண வீட்டில் அவளால் பத்து நிமிஷங்களுக்கு மேல் இருக்க முடியவில்லை.

"இன்னைக்கே என் கஸினுக்கும் கல்யாணம் ஷோபி. அதற்கு வேறே போயாக வேண்டும். வரட்டுமாடி?" என்று பொய் சொல்லிவிட்டு கிளம்பினாள். டாக்ஸியில் ஏறி, 'காந்தி நகர்' என்று சொல்லும் வரையில் அவளுக்குச் சங்கரைப் பார்ப்போம் என்ற நம்பிக்கையே இல்லை.

சங்கர் வாசல் வராந்தாவிலேயே அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். எத்தனை நாட்களுக்குப் பின் பார்க்கிறாள் அவனை! அவளால் ஒன்றும் பேசமுடியவில்லை. பேசாமல் ஒரு சிரிப்புடன் அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

"உள்ளே வா வித்யா. ஏன் இப்படி இளைத்துக் கருத்துப் போய் விட்டாய்?"

வித்யா அலட்சியமாக 'ச்சூ' என்றாள்.

"உடம்பைப் பார்த்துக் கொள் வித்யா. தயவு செய்து இப்படி அலட்சியப் படுத்தாதே! உன்னை நீ கண்ணாடியில் பார்த்துக் கொள்வதேயில்லையா?"

வித்யா பதில் சொல்லாமல் ஹான்ட் பாகைத் திறந்து கூலிங்கிளாஸை எடுத்துக் கொடுத்தாள்.

"ஓ! தாங்க்யூ வித்யா" என்ற சங்கர், உடனே அதைப் போட்டுப் பார்த்தான்.

"உங்களுக்கு ரொம்ப நன்றாகப் பொருந்துகிறது சங்கர்."

"இது எப்போதும் என்னுடன் இருக்கும். எரிச்சல்களை விட்டு விட்டு எதையும் குளிர்ச்சியாகவே பார் என்று சொல்லாமல் இதைக் கொடுத்திருக்கிறாய்! இல்லையா வித்யா?"—சங்கர் சிரித்தான்.

சங்கரின் அம்மாவும், அப்பாவும் வந்து உட்கார்ந்து கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அதன் பின்

அவர்கள் இருவரும் வெளியே கிளம்பிப் போனதும் சங்கர் அவளை அழைத்துக் கொண்டு தன் அறைக்குப் போனான்.

"உங்கள் நாவல் ஒன்று ஆரம்பிக்கப் போகிறதே சங்கர். கூடரில் அனவுன்ஸ்மென்ட் பார்த்தேன். என்ன கதை அது?"

அவன் கதையைச் சொன்னான். வித்யாவுக்குக் கதை ரொம்பப் பிடித்திருந்தது.

"இந்த நாவலில் நம்மை நிறைய இடங்களில் நாமே பார்த்துக்கொள்ளப் போகிறோம் வித்யா..."

"என்னைச் சந்தித்ததின் ஒரே லாபம் ஒரு கதை, ஒரு கவிதை இல்லையா, சங்கர்?"

"வித்யா...?" அவன் பார்வையில் மனஸில்பட்ட அடி தெரிந்தது.

"விளையாட்டிற்குச் சொன்னேன் சங்கர். உங்களிடம் நான் விளையாடக் கூடாதா?"

"ஸாரி வித்யா" என்ற சங்கர், பேச்சைத் திருப்பினான்.

"இந்த வாரச் கூடர் படித்தாயா வித்யா? சாருலதா—அதுதான் சுகுமாரனின் கதை எப்படி?"

"அலைகள்தானே? படித்தேன். ஒரு சுமாரான கதை."

"அவன் எனக்குக் கடிதம் போட்டிருக்கிறான். இங்கேயே வந்து விடப் போகிறானாம்."

"எதற்கு?"

"இங்கே ஜி. எச்-ல் வேலை கிடைக்கும் போலிருக்கிறதாம். அநேகமாக இன்னும் பத்து நாட்களில் வருவான் போலத் தெரிகிறது."

"சுகுமாரன், நீங்கள் எதற்காக மெட்றாசுக்கு வரப் போகிறீர்கள்? அங்கேயே இருங்களேன்'-வித்யா மனத்தில் நினைத்துக் கொண்டாள்.

"என்ன வித்யா யோசனை?"

"சுகுமாரனைத் தஞ்சாவூரிலே இருக்கச் சொல்லி மனசுக்குள் கேட்டுக் கொண்டிருக்கிறேன்."

"ஏன்?"

"யூ அண்ட் யுவர் சுகுமாரன் ஆரம்பத்திலிருந்தே உங்கள் நட்புக்கு என்னோடு போட்டி போடும் ஒரே மனிதன்."

சங்கர் சிரித்தான். ஒரு திருப்தியான சிரிப்பு.

"ஸோ, சுகுமாரன் வந்ததும் எனக்கு போன் பண்ணக் கூட நேரமிருக்காது இல்லையா?"

"டோண்ட் பி சில்லி வித்யா."

"அவருக்கு இன்னைக்கே ஒரு கடிதம் எழுதப் போகிறேன். சுகுமாரன் மெட்றாஸ் தஞ்சாவூர் மாதிரி இருக்காது. இங்கே கதம்பம் மணக்காது. காவிரி ஓடாது. கோவில் கோபுரத்தின் நிழல் கீழே விழாமல் இருக்காது. ஓட்டல் சாப்பாடு உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது. எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் சாருலதா இங்கே இருக்க மாட்டாள். எதற்கு இந்தக் கஷ்டமெல்லாம்? பேசாமல் அங்கேயே இருந்துவிடுங்களேன் என்று எழுதப் போகிறேன்."

சங்கரால் சிரிப்பை அடக்க முடியவில்லை. வித்யாவும் சிரித்தாள்.

"அப்பாடா! எத்தனை நாட்களுக்குப் பின் சிரிக்கிறேன் சங்கர்."

"உன்னைச் சிரிக்க வைக்க முடியுமானால் எத்தனை சுகுமாரன்கள் வேண்டுமானாலும் வருவதாக எழுதட்டுமே வித்யா..."

மணி மூன்றடித்தது. 'மூன்று மணி ஆகிவிட்டதா?' என்று சலித்துக் கொண்டே எழுந்தாள் வித்யா. "வரட்டுமா?"

"திரும்ப எப்போது பார்க்க முடியும்?"

"கல்யாணத்துக்குக் கூப்பிட வருவேன். ஏமாற்றாமல் வருவீர்கள் இல்லையா?"

"நிச்சயமாக வருவேன்."

கீழே வந்ததும்; சங்கர் செருப்பைப் போட்டுக் கொண்டான்:

"உன்னைக் கொண்டு போய் விட்டுவிட்டு வருகிறேன்" என்றான்.

காரில் இரண்டு பேருமே எதுவும் பேசிக் கொள்ளவில்லை. அவளை வீட்டு வாசலிலேயே இறக்கி விட்டான் சங்கர்.

"வரட்டுமா வித்யா?"

"உள்ளே வாங்களேன் சங்கர். அம்மா மட்டும்தான் இருப்பாள்."

"இன்னைக்கு வேண்டாம் வித்யா. இல்லொரு நாள் வருகிறேனே..."

அவள் 'சரி' என்று தலையாட்டினாள். கார் தெருக் கோடியில் திரும்பும்வரை பார்த்துக் கொண்டு நின்றுவிட்டு உள்ளே போனாள்.

திரும்பி வந்து கொண்டிருந்த சங்கருக்கு வீட்டுக்குப் போகப் பிடிக்கவில்லை. எங்கே போவது என்று யோசித்தான். அந்தக் கூண்டுக்கிளியை அந்த நிமிஷத்தில் பார்க்க வேண்டுமென்று தோன்றியது. காரை அந்தப் பாதையில் திருப்பினான். முன்னால் இருந்த ரிவர்ஸ் மிரரில் தன் முகத்தை ஒரு தரம் பார்த்துக் கொண்டான்.

'ஒரு நிமிஷத்தில் உலகத்தையே எப்படிக் குளிர்ச்சியாக்கி விட்டுப் போய்விட்டாய் வித்யா! கூலிங்கிளாஸ் ஒரு ஐடியல் பிரசன்ட். இதைப் பரிசாகக் கொடுக்க வேண்டுமென்று உனக்கு எப்படித் தோன்றியது? 'சங்கர், எப்போதும் குளிர்ச்சியாக இரு' என்று சொல்லாமல் சொல்லி விட்டுப் போகும் உன் புத்திசாலித்தனம்! சுகுமாரனை வரவேண்டா மென்று எத்தனை அழகாகச் சொன்னாய் வித்யா! இவ்வளவு நன்றாகப் பேசும் உனக்கு எழுத வராதா? எனக்காகவாவது எழுதேன்....!'

'ஹஹ்ஹும்! அவள் எழுதமாட்டாள். எத்தனை தரம் சொன்னாலும் எழுதமாட்டாள். அதனால் என்ன? நீ சொன்னதை, உன் மனதில் இருப்பதை, உன் ரசனைகளை யெல்லாம் நான் எழுதுகிறேன். இனிமேல் என்னுடைய எல்லா எழுத்திலும் நீ இருப்பாய். உன்னை வைத்து என்னால் நானூறு பக்கங்களுக்கு நாலு நாவல்கள் எழுத முடியும்.'

அவன் 'பார்க்'கைத் தாண்டிப் போய்விட்டது தெரிந்தது. காரைத் திருப்பிக் கொண்டு வந்தான். அன்று நிறுத்திய அதே இடத்தில் நிறுத்திப் பூட்டினான். நாய்களும் வாகனங்களும் போர்டைப் பார்த்ததும், 'உங்களை உள்ளே விட மாட்டார்களாம் சங்கர்' என்ற வித்யாவின் குரல் மனசில் கேட்டது. உள்ளே போனால் ஒவ்வொரு இடத்திலும் அவள் ஞாபகம் வரும். இப்போதைய வெறுமை அதிகமாகும். உள்ளே இருக்கும் கிளி, குரங்கு, யானை மாதிரி நானும் தனியாகப் பரிதாபமாக நின்று கொண்டிருக்க வேண்டும். வேண்டாம் உள்ளே போக வேண்டாம்! சங்கர் காருக்குத் திரும்பினான்.

'என்னைத் திரும்ப இங்கே வர விடாமலேயே செய்து விட்டாயே வித்யா...'

அவன் பெருமூச்சு விட்டுக் கொண்டே காரைக் கிளப்பினான்.

18

சித்திரத்திலிருந்து நேற்று ராத்திரியே எல்லாரும் வீட்டுக்கு வந்தாகிவிட்டது. எல்லா சாமான்களும் கை வண்டியில் வந்து சேர்ந்தன. முக்கால் வாசிப்பேர்கள் முகூர்த்தம் முடிந்ததும் சாப்பிட்டு விட்டுக் காருக்கும் பஸ்ஸுக்கும், ரயிலுக்கும் ஓடினார்கள்; அப்படியும் வீடு நிறைய மனிதர்கள். ராத்திரி முழுதும் மாறி மாறி அழும் குழந்தைகள், வாசற்படியிலும், உத்திர வளைவுகளிலும் கட்டப்பட்டுத் தொங்கும் ஏணைகள். மஞ்சள், பச்சை, வெள்ளை என்று அதன் பல நிறங்கள். அதற்குள்ளே இருந்து சிணுங்கும் சிணுங்கல்கள், ஒழுங்கில்லாமல் போடப் பட்டிருந்த படுக்கைகள்; அதில் படுத்துக் கொண்டிருந்த உருவங்கள். முழுசாகத் தலையோடு கால்வரை போர்வை, பாதிப் போர்வை; கால் முட்டி தெரிய விலகிய புடவைகள், வெள்ளை வேஷ்டிகள், லுங்கிகள், பைஜாமாக்கள், கௌனைத் தலைமீது போட்டுக் கொண்டு அசந்து தூங்கும் எட்டு—பத்து வயசுகள்... இருமல் சத்தம், குறட்டைச் சத்தம்....

மக்கலான சின்ன நைட் லைட் வெளிச்சத்தில் வித்யா எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு, யார் காலையும் மிதித்து விடாமல் ஜாக்கிரதையாக நடந்து போனான். வீட்டை ஒழுங்காக்க அம்மாவுக்கு இன்னும் ஒரு மாசமாகும் என்று நினைத்துக் கொண்டாள். மூலைக்கு மூலை துணிகள், பாத்திரங்கள்.. சாமான் அறை முழுவதும் கூடைகளில் பட்சணங்கள், பழங்கள், வெற்றிலைகள்... வீடு நிறைய சிந்தப்பட்ட அட்சதை, ரோஜா இதழ்கள்... அழுக்கினால் தரை காலில் ஒட்டிக் கொண்டது.

வீட்டின் பக்கத்திலேயே இருக்கிறதென்று அப்பா கபாலீஸ்வரர் கல்யாண மண்டபத்தை ஏற்பாடு பண்ணி விட்டார். பெரிய சத்திரம்தான். ஆனாலும் போதவில்லை.

அப்பா கல்யாணத்தை ரொம்ப நன்றாக நடத்தினார். அட்சதைமாதிரியே பணத்தையும் இறைத்துத் தாராளமாகப் பண்ணினார். புடவை, நகை எல்லாமே ஒன்றுக்கு இரண்டாக வாங்கிக் கொடுத்தார். ஆனால் எது வாங்கவும் வித்யா போகவில்லை. 'நான் வரவில்லை. இதையெல்லாம் பத்தி எனக்கு எதுவும் தெரியாதும்மா. நீயாக எதை வாங்கிக் கொண்டு வந்தாலும் சரி' என்று சொல்லி விட்டாள். வாங்கிக் கொண்டு வந்ததை அம்மா எல்லாருக்கும் காட்டிக் கொண்டிருப்பாள். ''வித்யா வந்து பாருடி. நன்றாக இருக்கிறதா பார்'' என்று அம்மா கூப்பிட்ட பின் கடைசியாகப் போய்ப் பார்ப்பாள். நன்றாக இருக்கிறதென்று தலையாட்டுவாள். அம்மா விடமாட்டாள்.

''என்ன தலையாட்டல்? பிடித்திருக்கிறதா சொல்லு. இல்லாவிட்டால் மாற்றி விடலாம்'' என்று அழுத்தி, அழுத்திக் கேட்பாள்.

''பிடித்திருக்கிறதம்மா. மாற்ற வேண்டாம்'' என்று ஒரு வார்த்தை பதிலாக வரும்.

எல்லாவற்றிற்கும் வாயை மூடிக்கொண்டு தலையாட்டின வித்யாவால் இந்தக் கல்யாண நிகழ்ச்சிகளுக்கு மட்டும் அந்த மாதிரித் தலையாட்ட முடியவில்லை. ரமணியைத் தனியாகக் கூப்பிட்டு முன்பே சொல்லி விட்டிருந்தாள்.

''இந்த மாப்பிள்ளை அழைப்பு, நலங்கு இதெல்லாம் ஒப்புக் கொள்ளப் போவதில்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''எனக்கும் இதெல்லாம் பிடிக்காது. நீ கவலைப் படாதே! நானே இதையெல்லாம் தடுத்து நிறுத்தி விடுகிறேன்.''

சொன்னபடி ரமணி பிடிவாதமாக இருந்தான். அப்பா, மாப்பிள்ளை அழைப்பிற்குத் திறந்த காராக ஒரு நல்ல கார் ஏற்பாடு பண்ணியிருந்தார். ரமணி ஒப்புக் கொள்ளாதது அப்பாவைக் கோபப்படுத்தியது. ஆனால் அந்த இடத்தில், சூழ்நிலையில் தன்கோபத்தைக் காட்டிக் கொள்ள முடியாமற் போகவே பேசாமல் இருந்து விட்டார். காலை முகூர்த்தத்தையும் மாலை ரிசப்ஷனையும் தவிர வேறு எதுவும் நடக்கவில்லை. அம்மா முணு முணுத்துக் கொண்டேயிருந்தாள். ''இது கல்யாணம் மாதிரியே இல்லை. இதைவிட ஏதாவது கோவிலில் போய் தாலி கட்டிக்கொண்டு வந்திருக்கலாமே'' என்று வித்யாவிடமே வந்து குறைப்பட்டுக் கொண்டாள். அதற்கும் அவள் பதில் பேசவில்லை.

கல்யாணத்துக்குச் சங்கர் வந்திருந்தான். வித்யா அம்மாவோடு கூடப்போய் அவனை அழைத்து விட்டு வந்திருந்தாள். அவனுடைய அம்மாவையும் அப்பாவையும் கட்டாயம் வரவேண்டுமென்று வற்புறுத்தினாள். ''நீ எங்கள் பெண் மாதிரி வித்யா. வராமலிருப்போமா?'' என்று சிரித்தார்கள் அவர்கள். இரண்டு அம்மாக்களும் பேசிக் கொண்டிருந்தபோது, வித்யா சங்கரோடு மாடிக்குப் போனாள். அவன் ஒரு பெரிய டிராயிங் ஷீட்டில் எதையோ பாதி ஸ்கெட்ச் பண்ணி வைத்திருப்பதைப் பார்த்தாள்.

''என்ன வரைகிறீர்கள் சங்கர்?''

''வரைந்து முடித்து உனக்குத்தான் கொடுக்கப் போகிறேன். அப்போது பார்த்துக் கொள்.''

வித்யா அவனிடம் தனியாக ஓர் அழைப்பிதழை நீட்டினாள். அதை அவன் வாங்கிக் கொண்டான். பிரித்துப் படித்தான். படித்து முடித்தபின் வித்யா கேட்டாள்:

''வருவீர்களா சங்கர்?''

''இது என்ன கேள்வி வித்யா?''

அவள் பேசாமலிருந்தாள். அவனும் ஒன்று பேசவில்லை. பால்கனி வழியாகச் சரக்கொன்றை வாடிப்போய் இருப்பது தெரிந்தது. பால்கனிக்குப் போய் கைப்பிடிச் சுவரில் உட்கார்ந்து கொண்டாள்.

"அன்றைக்கு இந்தச் சரக்கொன்றை எவ்வளவு அழகாகப் பூத்திருந்தது சங்கர்? இப்போது எப்படி வாடிப்போய் விட்டது பார்த்தீர்களா?"

அவன் அவளைப் பார்த்தான். அவள் கண்களுக்குள் பார்த்தான். வித்யா தன் பார்வையை மெதுவாகத் திருப்பிக் கொண்டு வானத்தைப் பார்த்தாள். திட்டுத் திட்டாக வெள்ளை மேகம். புகை மாதிரி நகருகிற கருப்பு மேகம். தெளிவான நீலத்தைப் பார்க்கவே முடியவில்லை. அந்த மூன்று நட்சத்திரங்களும் பார்வைக்கு நேராகப் பளபளத்துக் கொண்டிருந்தன. தென்னை ஓலைகள் ஒன்றோடு ஒன்று தேய்த்துக் கொண்டிருந்தன. கொஞ்ச நேரத்திற்கு அதன் சரசரப்பு மட்டுமே கேட்டது.

"வித்யா, உனக்கு நான் ஒன்று சொல்லலாமா?" மிகவும் மெதுவான குரலில் நிதானமாகக் கேட்டான் சங்கர்.

"சொல்லுங்கள்."

"நீ இந்த மாதிரி மேகத்தில் மிதந்து, வானத்தில் பறப்பதைக் கொஞ்சம் குறைத்துக் கொள். கீழே இறங்கி வந்து வாழ்க்கையோடு கலக்கப்பார். நாம் வாழுகிற உலகம் இங்கேதான் இருக்கிறது. இதன் மண்ணை, கல்லை, சேற்றை மிதித்துக் கொண்டு நடந்துதான் ஆகவேண்டும்."

அவள் பதில் சொல்லவில்லை. கலங்குகிற கண்ணையும், மனசையும் மறைத்துக் கொள்ளப் பாடுபட்டாள். 'வித்யா, டோன்ட் பி சில்லி. இது என்ன சராசரித்தனம்? எப்படி வரும் இந்த அழுகை? நீயா அழுகிறாய்? அழுவதே பிடிக்காத நீதானா அழுது உன்னைக் கரைத்துக் கொள்ளப் பார்ப்பது?

ஷிட்...' உள்ளேயிருந்த வித்யா அவளைத் தைரியப்படுத்த வேண்டியதாயிருந்தது.

"சங்கர், எனக்குக் கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் வேண்டும்."

அவன் உள்ளே போய்க் கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த கண்ணாடி ஜாடியிலிருந்து தண்ணீரைக் கொட்டிக் கொண்டு வந்து கொடுத்தான். ஒரு டம்ளர் தண்ணீர். எல்லாவற்றையும் உள்ளுக்குள் அடித்துக் கொண்டு போய் விட்டது. டம்ளரை அவனிடம் கொடுத்துவிட்டுச் சிரித்தாள் வித்யா. கைப்பிடிச் சுவரைவிட்டு இறங்கி, "வரட்டுமா சங்கர்?" என்று கேட்டாள்.

அவன் சொன்னதைக் கேட்டு அவள் தன் முகத்தை அவன் பார்வையை விட்டுத் திருப்பிக் கொண்டது, தண்ணீர் கேட்டது, மடமடவென்று குடித்து விட்டு, அவனைப் பார்த்துச் சிரித்தது....

'வித்யா, நீ புத்திசாலி. நான் நினைத்ததைவிட உன் புத்திசாலித்தனம் அதிகம்!'

சங்கர் டம்ளரை வைத்து விட்டு அவளோடு கீழே இறங்கி வந்தான். வாசல்வரை வந்து விடை கொடுத்தான், கார் 'கேட்'டைத் தாண்டுமுன் வித்யா பின் பக்கக் கண்ணாடி வழியாக அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் தனியாக போர்ட்டிகோவில் தூணுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. கார் கேட்டை விட்டு வெளியே போய்த் திரும்பி விட்டது.

"ரொம்ப நல்ல மனிதர்களாக இருக்கிறார்கள் வித்யா. அந்தப் பிள்ளை கல்யாணம் பண்ணிக் கொள்ள் மாட்டேன் என்று அடம் பிடிக்கிறானாமே! அந்த அம்மாள் என்னிடம் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டாள்..."

வித்யா மௌனமாக இருந்தாள்.

"பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கிறான்? பெயர், புகழ், பணம் காசு எல்லாம் இருக்கிறது. மனசில் என்ன குறையோ...?"

அதற்கும் அவளிடமிருந்து பதில்லை.

"ஏன் வித்யா அப்படிச் சொல்லுகிறான்? என்ன காரணம்?"

"எனக்கு எப்படிம்மா தெரியும்? நான் சொந்த விஷயம் எதைப் பற்றியும் கேட்பதில்லை. நாங்கள் பேசினால் கதை, கவிதை என்ற பொதுவான விஷயங்களாகத்தான் இருக்கும்."

அதற்கு மேல் அம்மா ஒன்றும் கேட்கவில்லை. "ஒவ்வொரு விதமான வேதனை" என்று சொல்லிவிட்டுப் போசமல் இருந்து விட்டாள்.

ரிசப்ஷனுக்குச் சங்கர், அவனுடைய அம்மா, அப்பா மூன்று பேரும் வந்திருந்தார்கள். வித்யா அவர்களை ரமணிக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். சங்கர் ரமணியைப் பார்த்துவிட்டு ஒரு திருப்தியான சிரிப்புடன் கை குலுக்கினான். ரமணியின் கையிலிருந்த மென்மையைக் கவனித்தான். முகத்தை, அதில் பார்க்க முடிந்த உணர்ச்சிகளை மனசில் வாங்கிக் கொண்டான்.

"வித்யா உங்களைப்பற்றி நிறையச் சொல்லியிருக்கிறாள். ஆனால், நான்தான் உங்கள் கதைகள் எதையும் படித்ததில்லை."

"ஓ! அதனால் என்ன?" என்று சிரித்தான் சங்கர்.

"இருந்து சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும் சங்கர்."

"நீ சொல்லாவிட்டால்கூட சாப்பிட்டு விட்டுத்தான் போவதாக உத்தேசம் வித்யா."

பெரிசாக—தூக்க முடியாமல் டிரைவர் உள்ளே கொண்டு வந்து கொடுத்த ஓர் அட்டைப் பெட்டியை வாங்கி

வித்யாவிடம் கொடுத்தான் சங்கர். அவள் அதை வாங்கிக் கொண்டாள். எங்கோ இருந்த அம்மா அவர்களைப் பார்த்து விட்டுச் சிரித்துக் கொண்டே வந்தாள். "வாருங்கள்..." என்று டிபனுக்கு அழைத்துக் கொண்டு போனாள். டிபன் முடிந்ததும் சங்கர் திரும்பி வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு மேஜையிலிருந்து விணையில் வந்த 'ரகு வம்ச கதா'வைச் சிறிது நேரம் கேட்டுக் கொண்டிருந்தான். பின் வித்யாவைத் திரும்பிப் பார்த்தான்.

இதுவரை எளிமையான ஒரு தோற்றத்தில் மட்டுமே அவளைப் பார்த்திருக்கிறான். 'பட்டுப் புடவையும், நகைகளும், தலை நிறையப் பூவும் - வித்யா இதில் கூட நீ அழகாகத்தான் இருக்கிறாய்' என்று நினைத்துக் கொண்டான். ஆனால், அவனுக்கு அவளுடைய அந்த எளிமைத் தோற்றம்தான் பிடித்திருந்தது.

எட்டு மணிக்கு மேல் கழுத்திலிருந்த மாலையைக் கழற்றிக் கொண்டே வித்யா நேராக அவனிடம்தான் வந்தாள். பூமாலையை இரண்டு பேருக்கும் நடுவிலிருந்த ஒரு நாற்காலியில் போட்டுவிட்டு உட்கார்ந்து கொண்டாள்.

"சாப்பிட்டுவிட்டீர்களா சங்கர்?"

"ஓ.எஸ். கிளம்பிக் கொண்டேயிருக்கிறோம்."

அவள், அவனுடைய அப்பாவையும், அம்மாவையும் பார்த்து, "நீங்கள் வந்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம்" என்றாள்.

அவர்கள் சிரித்தார்கள்.

"நான் பதினைந்து நாட்களுக்கு லீவு எடுத்துக் கொண்டிருக்கிறேன் சங்கர். நாளைக்கு ஊட்டி போவதாக பிளான். வந்ததும் உங்களுக்கு போன் பண்ணுகிறேன்."

அவன் தலையாட்டினான்.

அவளே அவர்களுக்குத் தேங்காய்ப் பையை எடுத்துக் கொடுத்தாள். சங்கர் ரமணியை அவனது நண்பர்களுக் கிடையே தேடிக்கொண்டு போய்ச் சொல்லி விட்டுக் கிளம் பினான்.

"அடிக்கடி வீட்டுக்கு வந்து கொண்டிருங்கள் மிஸ்டர் சங்கர்."

ரமணியின் அழைப்புக்கு நன்றி சொல்கிற மாதிரிச் சிரித்துவிட்டு அவன் போய் விட்டான்.

ரிசப்ஷன் முடிந்ததுமே, ரமணி வித்யாவிடம் வந்து, "தான் வீட்டுக்குப் போய்விட்டு நாளைக்குக் காலையில் வந்து விடுகிறேன் வித்யா. கொஞ்ச நேரம் நிம்மதியாகத் தூங்க வேண்டும் போலிருக்கிறது. நீயும் வருகிறாயா, இல்லா விட்டால் இங்கேயே இருக்கிறாயா?" என்று கேட்டான்.

"நான் இங்கேயே இருக்கிறேன். இன்னைக்கு ராத்திரியே சத்திரத்தைக் காலி பண்ணியாக வேண்டுமாம். நான் இருந்தால் உதவியாக இருக்கும்."

சாப்பாட்டுக்குப் பின் அவன் கிளம்பும்போது அப்பா அவனிடம் வந்து, "வீட்டில் உங்களுக்குப் படுக்க அறை ஏற்பாடு பண்ணியிருக்கிறது. இப்போது எங்கே கிளம்பி விட்டாய்? மீதி ஃபங்ஷனுக்கெல்லாம் எல்லா ஏற்பாடும் பண்ணியிருக்கிறது..."

"நோ. இதெல்லாம் வேண்டாம் என்று நான் அப்போதே சொல்லவில்லையா?" என்று பிடிவாதமாகப் புறப்பட்டுப் போய்விட்டான் அவன்.

அவனுடைய அந்தப் பெருந்தன்மையும், நடத்தையும் வித்யாவுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அவனைப் பற்றி நினைத்துக் கொண்டே மாடிக்குப் போனாள் வித்யா. பால்கனிக்குப் போய்க் கொஞ்ச நேரம் நின்று கொண்டிருந்தாள். விடியப் போவதற்கு அடையாள

மாகப் பறவைகளின் கூச்சல். சாம்பலாக வெளுத்திருந்தது வானம்.

வித்யா உள்ளே வந்தாள். எதிரே அவளது அறை பூட்டப்படாமல் வெறுமனே சாத்தி வைத்திருந்தது. கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனாள்.

'இனிமேல் இந்த அறையில் வந்து உட்கார்ந்து எழுதப் போவதில்லை. கட்டிலில் படுத்துக் கொண்டு ஜன்னல் காட்டன்களைத் தள்ளிவிட்டு வானத்தைத் தென்னை ஓலை களின் வழியாக அழகு பார்த்துக் கொண்டிருக்க முடியாது...'

மேஜையின் மேல் அவளுக்கு வந்திருந்த பரிசுப் பொருள்கள் அடுக்கப் பட்டிருந்தன. சங்கர் கொடுத்த அந்தப் பெரிய அட்டைப்பெட்டி ஒரமாகப் பிரிக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தது. வித்யா அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தாள்.

சுற்றிலும் தந்தத்தால் அழகான வேலைப்பாடுகள் செய்யப்பட்ட ஃப்ரேமுக்கு நடுவில் கண்ணாடிக்குள் அவன் வரைந்த சித்திரம். பாதையின் ஆரம்பத்திலிருந்த வாகனங் களும் நாய்களும் உள்ளே அனுமதிக்கப்பட மாட்டாது போர்டிலிருந்து கடைசி முள் கம்பிவரை அவள் கண்ணெதிரே வந்து வர்ணக் கலவையாகக் காகிதத்தில் நின்றது.

ஓர் ஓரத்தில் தனியாக ஒரு மூலையில் சின்னக் கையெழுத்து.

வித்யா அதையே பார்த்துக் கொண்டு உட்கார்ந் திருந்தாள்.

19

எட்டு மணிக்கெல்லாம் குளித்து உடை மாற்றிக் கொண்டு வந்து விட்டான் ரமணி. நேற்றைய களைப்பு, அந்த மாப்பிள்ளைத் தோற்றம் எல்லாம் போய்ச் சாதாரண ரமணியாக வெள்ளை பாண்ட், நீலக் கட்டம் போட்ட டெரிகாட் ஷர்ட்டுடன் வந்து நின்றான்.

"சாப்பிட்டுவிட்டு காரிலேயே ஊட்டிக்குக் கிளம்பி விடலாம் வித்யா. பதினைந்து நாள் லீவு இருக்கிறதே! ஊட்டி, மைசூர், பெங்களூர் என்று இப்படிச் சுற்றிக்கொண்டு மெட்ராஸ் வந்து விடலாம்" என்றான்.

வித்யா, 'சரி' என்று தலையாட்டினாள். ரமணியை அழைத்துக் கொண்டு போய்ச் சங்கரின் சித்திரத்தைக் காட்டினாள். "இந்த இடத்திற்குத்தான் போகலாமா என்று அன்றைக்குக் கேட்டேன். எவ்வளவு நன்றாக இருக்கிறது பார்த்தீர்களா? அந்த இடத்தை அப்படியே கண்ணெதிரில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார் சங்கர்!"

"ஒன்று செய்யலாமா வித்யா? சரியாக ஒரு மணிக்கு இங்கிருந்து கிளம்பி விடலாம். நேராக இந்த இடத்திற்குப் போய்க் கொஞ்ச நேரம் இருந்து விட்டுப் பின், ஊட்டிக்குப் போகலாம். உனக்குப் பிடித்த இடத்திற்கு முதலில் போவோம்."

"ஓ.எஸ். இந்தப் படத்தை நான் நம் வீட்டில் டிராயிங் ரூமில் மாட்டப் போகிறேன் ரமணி" என்று சொல்லிக் கொண்டே அதை எடுத்து இரும்பு பீரோவின் அடியில் வைத்துப் பூட்டினாள். அந்த ஜாக்கிரதையைப் பார்த்து ரமணி சிரித்தான்.

கிட்டத்தட்ட ஒரு மணிக்கு சூட் கேஸ்களுடன் கிளம்பி னார்கள். அழும் தங்கைகளை ரொம்ப நேரம் சமாதானப்

படுத்தினாள் வித்யா. பெரிய தங்கை அவளைக் கட்டிக் கொண்டு விடமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தாள்: "நீ இல்லாமல் எனக்கு இங்கே இருக்கவே பிடிக்காது அக்கா. என்னை விட்டு விட்டுப் போகாதேக்கா..." என்று அழுதாள். வித்யாவும் கலங்கினாள். கண்ணில் நிரம்பிய நீரை அடக்கிக் கொண்டாள்.

"ராஜி, நான் எங்கேம்மா போறேன்? பதினைஞ்சே நாள்...திரும்ப இங்கேதானே வரப்போறேன். உன்கிட்டே தானே இருக்கப் போகிறேன்!"

"பொய். நீ இந்த வீட்டிலே எங்கே இருக்கப் போறே. ரமணி வாங்கியிருக்கிற புது வீட்டிலேதானே இருக்கப் போறே..."

"அந்த வீடு எங்கே, அமெரிக்காவிலேயா இருக்கு...? இதோ பக்கத்திலேதானே இருக்கு! தினமும் வரமாட்டேனா உன்னைப் பார்க்க! அழக் கூடாது. எங்கே, சிரி பார்க்கலாம்" என்று சமாதானப்படுத்திச் சிரிக்க வைத்து விட்டுத்தான் நகர்ந்தாள்.

சின்னத் தங்கை விஜி அவ்வளவாகப் பேசாதவள்? குழந்தைத்தனம் மாறாதவள். எதையும் பேச்சில் காட்டத் தெரியாது.

"எங்களை விட்டுட்டுப் போறே இல்லே?" என்று அழுகையை அடக்கிக் கொண்டு கேட்டாள். வித்யா குனிந்து அவள் கன்னத்தில் முத்தமிட்டாள்.

"உங்களை விட்டுட்டுப் போக என்னால் முடியுமா விஜி? சமர்த்தாக இருக்கணும். பதினைந்தே நாள். ஓடி வந்து விடுவேன்."

தம்பியிடம், அழுகையை அடக்கிக்கொள்ளும் அம்மா விடம், அப்பாவிடம் சொல்லிக் கொண்டு காரில் ஏறினாள். கார் காம்பௌண்டை விட்டு நகரும் வரை ஆடிக்கொண்டே இருந்த தங்கைகளின் கைகளும், அம்மாவின் முகமும் அவள்

மனத்தைக் கலைத்தன. நெஞ்சின் பாரத்தை வெளியே தெரிந்த காட்சிகளில் கரைத்துவிடப் பார்த்தாள்.

"அழுகிறாயா வித்யா?"

வித்யா இலேசான சிரிப்புடன் ரமணியைத் திரும்பிப் பார்த்தாள்.

"இல்லையே..."

"இந்த சிரிப்பை விட உன் அழுகையே தேவலாம். ஏன் கதவு மூலையில் ஒட்டிக் கொள்கிறாய் வித்யா? நகர்ந்து என் பக்கத்தில்தான் வாயேன்..."

வித்யா நகர்ந்து கொண்டாள், ரமணி அவள் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டான்.

"அப்பா! எத்தனை மென்மையாக இருக்கிறது உன் கை, உன் மனசைப் போலவே...இல்லையா வித்யா?"

அவள் சிரித்தாள்.

"கிளம்புவதற்கு முன் உன் அம்மா என்னைத் தனியாக அழைத்துக் கொண்டு போய் உன்னைப் பற்றிச் சொன்னாள். நீ குழந்தை மாதிரியாம். உனக்குத் தனியான ஒரு குணமாம். உன் மனசை கோணாமல் வைத்துக்கொள்ள வேண்டுமாம். வைத்துக்கொள்ள மாட்டேனா வித்யா?"

அதற்கும் அவள் சிரிப்பைத்தான் பதிலாகத் தந்தாள்.

அம்மா அவளிடமும் அதே மாதிரி சொல்லியிருந்தாள்: "ரமணி நல்லவன் வித்யா. சில சமயம் உன் மனசுக்குப் பிடிக்காததாக ஏதாவது செய்தாலும் நீதான் விட்டுக் கொடுத்துப் போக வேண்டும். வெறும் கற்பனையில் பழைய மாதிரியே மிதந்து கொண்டு இருக்காமல்-அது இது என்று எங்களுக்குப் புரியாததை எல்லாம் பேசிக் கொண்டிருக்காமல் வாழ்க்கையை ரமணியை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். புரிகிறதா?"

"என்ன வித்யா, பேசாமலிருக்கிறாய்?" ரமணி கேட்டான்.

"அம்மா என்னிடமும் இதே மாதிரி சொன்னாள். அதை நினைத்துக் கொண்டேன்."

ரமணி அவள் தோள் மீது கை போட்டுத் தன்னோடு சேர்த்துக் கொண்டான்,

"பயப்படாதே வித்யா. நான் உன்னைச் சந்தோஷமாக வைத்துக் கொள்வேன்."

வித்யா சிரித்தாள். தோள் மீதிருந்த அவன் கையை மெதுவாக எடுத்துவிட்டு நேராக உட்கார்ந்து கொண்டாள். அது அவனைக் கஷ்டப்படுத்தியது:

"ஏன் வித்யா, இப்படி எப்போதும் என்னை விட்டு விலகியிருக்கவே ஆசைப்படுகிறாய்? நான் உன்னைத் தொடுவது உனக்குப் பிடிக்கவில்லையா? இல்லை, என்னையே பிடிக்கவில்லையா?"

அந்தக் கேள்வி அவளை உறுத்தியது. தன் செய்கைக்காக வருத்தப்பட்டுக் கொண்டாள்: 'நான் ரமணியின் மனைவி, பழைய எஸ். வித்யா இல்லை; இப்போது ஆர். வித்யா. இந்த ஆர். வித்யாவுக்குச் சில புதிய பொறுப்புகள் உண்டு...'

வித்யா திரும்ப அவனருகில் நகர்ந்து, அவன் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

"ஏன் ரமணி இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்?" என்று மட்டும் கேட்டாள். அவன் அவளது தலையைத் தடவினான். அந்தக் கூந்தலிலிருந்து வந்த வாசனை அவனுக்குப் பிடித்திருந்தது. அவளிடமிருந்து எப்போதுமே இலேசான சந்தன வாசனை வரும். அப்போதும் அது வந்தது.

'ஓ! மறந்து விட்டேனே, அந்த இடத்திற்கு எப்படிப் போக வேண்டும் வித்யா?" காரின் வேகத்தைக் குறைத்துக் கொண்டே கேட்டான் ரமணி.

"முதலில் நம் வீட்டுக்கு வண்டியைத் திருப்புங்கள். உங்கள் அம்மா அப்பாவிடம் சொல்லிக் கொண்டு அப்புறம் அங்கே போகலாம்."

அவனுக்கு அவள் அப்படிச் சொன்னது மிகவும் பிடித்திருந்தது. அடையாறு போட் கிளப் ரோடில் அவன் வாங்கியிருந்த அந்தப் புது பங்களாவிற்குக் காரைத் திருப்பினான். அந்த வீடு வித்யாவுக்குப் பிடித்திருந்தது என்பதற்காகவே அதிக விலை கொடுத்துப் போட்டியின் நடுவே வாங்கியிருந்தான். கல்யாணத்துக்கு முன்னாலேயே வித்யாவை அழைத்துக் கொண்டு போய் அவள் விரும்பிய மாதிரியே சோபா ஸெட், காட்டன் எல்லாம் வாங்கிப் போட்டு அழகு படுத்தியிருந்தான். ஒரு தோட்டக்காரனை அமர்த்தி, முன்னாலிருந்த செம்மண் தரையைப் பசுமையாக்க ஏற்பாடு பண்ணினான்.

அவர்கள் வீட்டுக்குப் போய் அவனுடைய அப்பா, அம்மாவிடம் சொல்லி விட்டுக் கிளம்பினார்கள். ஹாலில் மாட்டியிருந்த சுமாரான ஒரு பெய்ண்டிங்கைக் கழற்றி விட்டு அங்கு சங்கரின் பெய்ண்டிங்கை மாட்ட வேண்டும். அதை மாட்ட அதுதான் சரியான இடம் என்று நினைத்துக் கொண்டாள் அவள்.

அன்று சங்கர், 'பார்க்' பண்ணின அதே இடத்தில் காரை நிறுத்திப் பூட்டினான் ரமணி. இரண்டு பேரும் செம்மண் பாதையில் நடந்தார்கள்.

"இந்த போர்டிலிருந்து பார்த்துக் கொண்டு வாருங்கள் ரமணி. சங்கரின் சித்திரம் அப்படியே சரியாக இருக்கும்!"

ரமணி பார்த்துக் கொண்டே வந்தான்.

மரங்களையும், செடிகளையும், குளிர்ச்சியையும் விட வித்யாவோடு கூட நடந்ததுதான் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. 'இவளோடு இப்படியே காலமெல்லாம் நடந்து கொண்டிருக்கலாமே...' என்று நினைத்துக் கொண்டான்.

இதுவரை நகைகள் எதுவுமில்லாமல், அதிகமான அலங்காரங்களில்லாத சாதாரணமான வித்யாவாகத்தான் பார்த்திருக்கிறான் அவன். இப்போது நகைகளின் பளபளப்பும், பட்டுப் புடவையின் சரசரப்பும், அவளிடமிருந்து வந்து கொண்டிருந்த சந்தன வாசனையும் அவனைக் கவர்ந்தது. அடிக்கடி அவளைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தான்.

அவளுடைய அழகு அவனைக் கவர்ந்த அளவு அந்த இடம் அவனைக் கவரவில்லை. அவளுக்காக—அவள் ரசிக்கிறாளே என்று—அவள் காட்டியதையெல்லாம் நின்று பார்த்தான். அவள் முகத்தில் மாறின பாவங்களின் அழகை ரசித்துப் பார்த்தான்.

கரடிகள் கூண்டினுள் நிறம் மாறுவதை அவனுக்குக் காட்டினாள் வித்யா. அதை அவனும் நின்று பார்த்தான். அந்த ஒற்றைக் கிளியின் அருகே வந்ததும் வித்யாவுக்குச் சங்கரின் நினைவு வந்தது. அந்த இடத்தின் ஒவ்வோர் அழகும் அவளுக்கு அவனைத்தான் ஞாபகப்படுத்தியது. 'ஒரு புல்லை, ஒரு பூவைக்கூடத் தவற விடாமல் எப்படி வரைந்தீர்கள் சங்கர்? இதையெல்லாம் நீங்கள் எந்த அளவுக்கு ரசித்திருக்க வேண்டுமென்பது தெரிகிறது சங்கர்!"

"இந்தக் கிளியை மட்டும் தனியாக இப்படி வைத்திருக்கிறார்களே, கூட இன்னொரு கிளியையும் வைத்திருக்கக் கூடாது வித்யா?"

"கூண்டைத் திறந்து விட்டு இதையே வெளியே பறக்க விடமாட்டோமா என்று என் மனசு துடிக்கிறது ரமணி, எந்த மிருகத்தையும் இப்படிக் கூண்டிலடைப்பது எனக்குப் பிடிக்காது."

"உனக்குப் பிடிக்காமலிருக்கலாம். எத்தனை பேர்கள் இதை ரசிக்கிறார்கள் தெரியுமா?"

'இப்படியும் ஒரு ரசனையா? இதற்குப் பேர் ரசனையா?'—வித்யா பெருமூச்சு விட்டாள்.

அன்று உட்கார்ந்திருந்த அதே மரத்தடியில் உட்கார்ந்து கொண்டாள். 'அன்று இதே இடத்தை, இதே காட்சிகளை, தொலைவில் தெரியும் ஊஞ்சலை, யானையை ரசித்த மாதிரி இன்று ஏன் ரசிக்க முடியவில்லை? எது தடையாக நிற்கிறது? எந்த ரசனையையும் பகிர்ந்து கொள்ள அதே ரசனையுடைய ஒருவர் கூட இருக்க வேண்டுமோ?'

"என்ன வித்யா, பேசாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்?"

"இந்த இடம் உங்களுக்குப் பிடிக்கவில்லையா ரமணி?"

"பிடித்திருக்கிறது. இதைவிட நீ அழகாயிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது?"

வித்யா சிரித்தாள்; ஒரு வெறுமைச் சிரிப்பு.

"போகலாமா?" என்று எழுந்துவிட்டாள்.

காரில் போய்க்கொண்டிருந்தபோது பக்கத்தில் தெரிந்த காட்சிகளை, வயலை, ஏற்றத்தை, ஒரு தாழ்வான மரத்தில் தூக்கணாங் குருவிகள் கட்டியிருந்த கூடுகளை, இருட்டில் சிவப்புக் கோலமாகத் தெரிந்த டிரான்ஸ்பார்மர் கம்பங்களை, காரின் ஓட்டத்தில் மரங்களுக்கிடையே அதன் வெளிச்சம் மறைந்து மறைந்து தெரியும் அழகை மனசுக்குள்ளே ரசித்துக் கொண்டு வந்தாள். ரமணி ஏதேதோ பேசியபடி ரோடைப் பார்த்துக் காரை ஓட்டினான்.

"தூக்கம் வந்தால் இப்படியே சாய்ந்து தூங்கு வித்யா."

வித்யா ஸீட்டிலேயே சாய்ந்து கொண்டாள். ரமணி அவளை இழுத்துத் தன் தோள் மீது அவள் தலையைச் சாய்த்துக் கொண்டு, இடது கையால் குழந்தையைத் தட்டுகிற மாதிரி மெதுவாகத் தட்டினான்.

'உங்கள் மனசு முழுசையும் வெறும் அன்பு மட்டுமே நிறைத்துக் கொண்டிருக்கிறது ரமணி. அதிலும் என்னிடம் மட்டுமே காட்டத் தெரிந்த மூர்க்கத்தனமான அன்பு!'

அந்த அன்பு அப்போது அவளுக்கு இதமாகத்தான் இருந்தது. அந்த இதமான உணர்வுடன் தூங்கிப் போய் விட்டாள். ஊட்டி உட்லண்ட்ஸ் ஓட்டல் வாசலில் கார் நின்ற போது சுற்றி ஒன்றுமே தெரியாத இருட்டு. பனிமழை மாதிரிக் கொட்டிக் கொண்டிருந்தது. வித்யா நடுங்கிக் கொண்டே ஓட்டலுக்குள் ஓடினாள். புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு நின்றாள். அதற்குள் ரமணி அறையை 'புக்' பண்ணிக் கொண்டு வந்தான். மூன்றாம் நம்பர் அறை ஒன்று அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

அந்த நேரத்தில் சாப்பிடச் சூடாக இரண்டு கப் பால் மட்டும்தான் கிடைத்தது. குடித்துவிட்டு உடை மாற்றிக் கொண்டு படுத்துக் கொண்டார்கள். கம்பளிப் போர்வைக்கு ஊடியிலும் உடம்பு நடுங்கியது.

ரமணி ஒரு கையை அவள் மீது போட்டு, "வித்யா..." என்று மென்மையாக— மிகவும் மென்மையாகக் காதுக் கருகில் ரகசியமாகக் கூப்பிட்டு அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். இறுக்கமான அணைப்பு அது. அதில் அவனது தடுமாற்றம் தெரிந்தது. மூச்சுக் காற்று சூடாக அவள் முகத்தில் பட்டது.

வித்யா தன்னை விலக்கிக் கொள்ள முயற்சி செய்தாள். அவன் அவளை விடுவதாக இல்லை. 'ப்ளீஸ் வித்யா... ப்ளீஸ்..."— அவனுடைய கெஞ்சல் காதுக்கருகில் கேட்டது. அவனது உதடுகள் கன்னத்தை உரசின.

'ரமணி, அன்று காரில் சொன்ன ஒ.கே. என்னவாயிற்று? மறந்து போய் விட்டீர்களா?' என்று கேட்க நினைத்த கேள்வி மனசுக்குள்ளேயே அடங்கிப் போய் விட்டது.

'இது அவருக்குக் கிடைத்துள்ள உரிமை, இரண்டு நாட்களுக்கு முன், அத்தனை பேர்களுக்கு நடுவிலும் கொடுக்கப்பட்ட உரிமை. இவரைத் தடுப்பதோ —அந்த உரிமையை இப்போது மறுப்பதோ நியாயம் இல்லை.

'உங்களுக்கு ஒரு நல்ல மனைவியாக இருக்கவேண்டும். இருப்பேன் ரமணி. நிச்சயமாக இருப்பேன். உங்கள் ஆசைகளை அழிக்க, ஏமாற்ற எனக்கு என்ன உரிமை இருக்கிறது?'

அவனுக்கு அடங்கிப் போனாள் அவள்.

20

வித்யாவின் கல்யாணத்துக்கு வந்துவிட்டுப் போன சங்கர், பால்கனி கைப்பிடிச் சுவர் மீது ரொம்ப நேரம் உட்கார்ந்து கொண்டு இருந்தான். எதிரே சிகரெட் பாக்கெட்டும், தீப் பெட்டியும். கையிலும் புகைந்து கொண்டிருந்தது. சில நாட்களாக இல்லாமலிருந்த பழக்கம் திரும்ப ஆரம்பித்து விட்டது. வேலைக்காரனை அனுப்பி சிகரெட் பாக்கெட் வாங்கிக் கொண்டு வரச் சொன்ன போதே, வித்யா மனசுக்குள் நின்று, 'என்ன சங்கர் இது?' என்று கேட்டாள். அவளுக்கு 'ஸாரி' சொல்லிக் கொண்டே பாக்கெட்டைப் பிரித்தான். பற்ற வைத்துக் கொண்டு டைரி எழுத உட்கார்ந்தான்.

என்ன எழுதுவது? வித்யாவின் கல்யாணத்தைப்பற்றி? பட்டுப்புடவையுடன் அவள் இருந்த அழகைப்பற்றி? ரமணியைப்பற்றி? ஒரே பார்வையில் அவனால் ரமணியைப் புரிந்து கொள்ள முடிந்தது. அவனுடைய பார்வையின் குளிர்ச்சி, கையின் மென்மை எதையும் மறக்க முடியவில்லை. ரமணி ஒரு நல்ல கணவனாக மட்டுமே இருக்கக் கூடியவன் என்பது தெரிந்தது. சாதாரணப் பெண்ணாக இருந்தால் ரமணியால் ரொம்ப சீக்கிரம் கவரப்பட்டு விடுவாள். அவனுடைய அன்பில் குளிர்ந்து போய் விடுவாள். திருப்திப்பட்டுக் கொண்டு விடுவாள். ஆனால், வித்யா?

'நீ தேடும் சின்னச் சின்ன விஷயங்களை ரமணியிடம் பார்க்க முடியுமா? உன் ரசனைகளை அவரிடம் காணாமல் ஏமாந்து போய் விடுவாயா? அவருக்கேற்றபடி உன்னை மாற்றிக் கொள்வாயா? இல்லை, மாற்றிக் கொள்ள முடியாமல் மனசு உடைந்து போவாயா? எப்படி இருக்கப் போகிறது உன் வாழ்க்கை? நீ சந்தோஷமாக இருக்க வேண்டும் வித்யா. இத்தனை நாட்கள் பட்ட எரிச்சல்களெல்லாம் மறந்துபோய்ப் புதுக் குளிர்ச்சியை அநுபவிக்க வேண்டும்!'

டைரியில் என்ன எழுதுவது? அன்றைய பக்கத்தை ஒன்றும் எழுதாமல் அப்படியே விட்டால் என்ன? காலியாக இருக்க வேண்டிய பக்கம்தான் அது. அப்படியே இருக்கட்டும். ஒன்றும் எழுதாமல் மூடி வைத்தான். முதல் முறையாக அவனது டைரியில் ஒன்றும் எழுதப்படாமல் ஒரு பக்கம் மூடி வைக்கப்படுகிறது!

சிகரெட் சின்னதாகிக் கையைச் சுட்டது. மேஜை மேல் பார்த்தான். எரிந்த சிகரெட்டின் சாம்பல் உதிர்ந்து கிடந்தது. 'முடிவாய் உதிர்ந்தது சாம்பல்! சாம்பல்!' என்று மனசுக்குள் ஒரு வரியைச் சொல்லிப் பார்த்துக் கொண்டான். கையிலிருந்த துண்டை ஆஷ்ட்ரேயில் போட்டு விட்டுக் கட்டிலில் வந்து படுத்துக் கொண்டான். ஸ்டாண்டிலிருந்த டிரான்ஸிஸ்டரை 'ஆன்' பண்ணினபோது விவித பாரதியில் அவனுக்குப் பிடித்த அதே பர்வானா பாட்டு: 'ஜிஸ் தின் ஸே மேனே தும்கோ தேகா...!'

அவனுக்கு அந்த டிசம்பர் பதினைந்து ஞாபகத்துக்கு வந்தது. இன்று ஏப்ரல் 15. என்ன ஆச்சரியம்! இன்றைய தேதி 15. வித்யா, உன் கல்யாணம் ஒரு பதினைந்தாம்

தேதியில் நடந்திருக்கிறது. அவனை வெகுவாகப் பாதித்துக் கொண்டு வரும் 'பதினைந்து'கள், ஏன் வந்தன இந்தப் பதினைந்துகள்!

வித்யாவை முதன் முதலாகப் பார்த்து மூன்று மாதங்கள் தான் ஆகின்றனவா? மூன்று மாதப் பழக்கம்தானா? அவனுக்கென்னவோ மூன்று வருஷங்களான மாதிரி, அவளோடு ஜென்ம ஜென்மமாகப் பழகிக் கொண்டு வந்த மாதிரித் தோன்றியது.

அவளைச் சிவகுமாரின் அறையில் பார்த்ததிலிருந்து இதுவரை நினைத்துப் பார்த்தான். இந்த நினைவுகளுக்குத் தான் எத்தனை சக்தி! பத்து வருஷங்களானாலும் கட்டி இழுத்துக் கொண்டு வந்து நம் முன்னால் நிறுத்தி விடுகிற பலம். ஒரு யானையின் பலம். அதே மாதிரி மனசைக் காலின் கீழே போட்டு மிதித்துத் துவைத்து ஒன்றுமில்லாமல் ஆக்கி விடுகிற வெறி. அதிலும் யானையின் வெறி. அப்போது அவன் அந்த வெறியின் கீழ் மிதிபட்டுக் கொண்டிருந்தான்.

டிரான்ஸிஸ்டரை 'ஆஃப்' பண்ணி விட்டு இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு பால்கனியில் வந்து நின்றான். எதிரே சரக்கொன்றை இப்போதெல்லாம் பூப்பது இல்லை. அவனைப் பார்த்துச் சிரிப்பதில்லை. அதன் காலம் அவ்வளவுதான் போலிருக்கிறது. இனிமேல் திரும்ப எப்போது பூக்குமோ? எப்போது அவனைப் பார்த்துச் சிரிக்குமோ? அவனுக்கு வித்யாவின் சிரிப்பு ஞாபகத்துக்கு வந்தது. என்ன சிரிப்பு அது! எதிரே இருப்பவர்கள் மனசைக் கட்டிப் போடுகிற சிரிப்பு! அலைய வைக்கிற சிரிப்பு! அர்த்தத்தைத் தேட வைக்கிற சிரிப்பு! அவளுடைய சிரிப்பை அவனால் மறக்கவே முடியாது போலிருந்தது.

வித்யா, என்னை ஏன் இப்படி அலைக்கழிக்கிறாய்? எங்கோ இருந்து என் மனசைப் பிடித்து உலுக்கும் சக்தி உனக்கு எப்படி வந்தது? என்னை ஒரு பொம்மையாக்கிக்

கயிற்றில் கட்டி மறு முனையை உன்னிடம் யார் கொடுத்தது? நானா? நான் தானா? என்னை இப்படி ஒரு குழந்தையாக்கி அழவைத்து விட்டுப் போய் விட்டாயே வித்யா! என்னைப் புரிந்து கொள்ளவே இல்லையா நீ? எதையும் சுலபமாகப் புரிந்து கொள்ளும் உன்னால் இது எப்படி முடியாமல் போய் விட்டது?'

இன்னொரு சிகரெட்டிற்காக உள்ளே வந்தான். பாக்கெட்டையே கொண்டு போய் பால்கனியின் கைப்பிடிச் சுவரில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தான். பற்ற வைத்துக் கொள்வது அன்றைய பதினேழாவது சிகரெட் என்பதை மனசுக்குள்ளேயே எண்ணிக்கொண்டான். வானத்தைப் பார்த்தான். மூன்று நட்சத்திரங்களும் பளிச்சென்று கண்ணில் அடித்தது. ஒரு நிமிஷத்திற்குப் பின் நகர்ந்து கொண்டே வந்த வெள்ளை மேகம் அவற்றை மறைத்து விட்டது. அவன் பார்வை எதிரே தெரிந்த தோட்டத்து இருட்டைத் தடவியது. 'ஜிவ்'வென்று கத்தும் சுவர்க் கோழியின் சத்தம். தெருவில் குரைக்கும் நாய், எங்கோ போகும் கார், ஹாரன் அடிக்கப்படும் ஓசை.

உள்ளே போய் அந்தக் கவிதையை முழுசும் எழுதினால் என்ன? உள்ளே வந்தான். மேஜை விளக்கைப் போட்டுக் கொண்டு எழுதினான். 'நினைவு' என்ற தலைப்பில் ஆரம்பித்துப் பத்து நிமிஷங்களில் 'முடிவாய் உதிர்ந்தது சாம்பல்! சாம்பல்!' என்று அந்தக் கடைசி வரிகளில் கவிதையை முடித்தான். அவன் மனம் அதில் பளிச்சிட்டது. சில வரிகளில் ஒளிந்து கொண்டு அழுதது. பேனாவை மூடி வைத்து விட்டு வந்து படுத்துக் கொண்டபோது, தொண்டை எரிந்தது.

தண்ணீரை இரண்டு மூன்று டம்ளர்கள் ஊற்றிக் குடித்தான். இப்போது எதுவோ அடங்கி மனம் இலேசான மாதிரித் தோன்றியது. திடீரென்று சுகுமாரனின் ஞாபகம் வந்தது. காலையில் அவனிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அதில் அவன் சென்னை வரப்போவதில்லை என்று எழுதி

யிருந்தான். 'சுகுமாரா, நீ மெட்ராசுக்கு வராதேயேன்' என்று வித்யா அவனுக்கு எழுதப் போவதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது. அவனை 'வராதே' என்று சொன்ன நீ பதினைந்து நாட்களுக்கு இங்கே இருக்கப் போவதில்லை. என்னைப் பார்க்கப் போவதில்லை. என்னுடன் பேசப் போவதில்லை. எத்தனை சுயநலம் உனக்கு! நான் சுகுமாரனை வரச் சொல்லி எழுதப் போகிறேன். உன் எரிச்சல்களுக்கு எனக்கு இப்போது பஞ்சு தேவைப்படுகிறது. அது ஏன் சுகுமாரனாக இருக்கக் கூடாது? உன்னைப்போல் அவனும் என்னைப் புரிந்து கொண்டவன்.

எழுந்து சுகுமாரனுக்கு ஒரு பெரிய கடிதமாக எழுதினான். எதையும் சொல்லாமலேயே சொல்லியிருந்தான்: 'ஒரு வாரம் லீவு எடுத்துக் கொண்டு இங்கே வா. நீ இப்போது எனக்கு அதிகம் தேவைப்படுகிறாய். தயவு செய்து வா!' என்று கேட்டுக் கொண்டிருந்தான். இந்த மாதிரியெல்லாம் யாரையும் அவன் கேட்டுக் கொண்டதில்லை. எதையும் பெரிசு படுத்தினதில்லை. 'என்னை எப்படி எல்லாம் மாற்றி யிருக்கிறாய் வித்யா!.

தூக்கம் வராமல் ரொம்ப நேரம் இருட்டைப் பார்த்தபடி படுத்துக் கொண்டிருந்தான்.

மறு நாள் ஆபீசுக்குப் போனதும் ஒன்பதரை மணிக்கு வழக்கம் போல் கை டேலிபோனை எடுத்தது. அப்புறம் தான் வித்யா ஊரில் இல்லை என்ற ஞாபகம் வந்தது. போனை வைத்து விட்டுத் தன்னை வேலையில் மறக்க முயற்சி செய்தான். ராத்திரி எழுதின கவிதையை அந்த வாரச் சுடரிலேயே பிரசுரிக்க ஏற்பாடு பண்ணினான். சுறு சுறுப்பாக மற்ற வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தான்.

அந்த வாரச் சுடர் வந்த மறு நாளைக்கெல்லாம் சுகுமாரனிடமிருந்து கடிதம் வந்தது: 'சங்கர், இரண்டு நாளைக்கு முன் கிடைத்த உன் கடிதத்தில் விம்மிய சோகத்தைக் கவிதையிலும் பார்த்தேன். நேரில் வருகிறேன். புதன்கிழமை ஸ்டேஷனுக்கு வா.'

புதன்கிழமை ஸ்டேஷனில் சுகுமாரனைப் பார்த்ததும் சங்கர் இன்னும் குழந்தையானான். ஸ்டேஷனிலிருந்து வீட்டிற்கு வருவதற்குள் ஆறு சிகரெட்டுகள் அவன் கையால் சாம்பலாயின.

"உன்னுடைய இந்தச் சாம்பல்களின் அர்த்தம் எனக்குப் புரியவில்லை சங்கர். ஏதோ ஒரு பாதிப்பு வெகு ஆழமாக உன்னை அலைக்கழிக்கிறது என்று மட்டும் தெரிகிறது. நீயே இப்படி மாறிப் போயிருக்க வேண்டுமானால்—அவள் யார் சங்கர்?"

'அவள்! அவளைப்பற்றிச் சொல்லி விடலாமா? வித்யா, உன்னைப் பற்றிச் சொல்லப் போகிறேன். உன்னிடமிருந்து நான் மறைத்ததையெல்லாம் இவனிடம் சொல்லிவிடப் போகிறேன். எனக்குக் கொஞ்சம் நிம்மதி வேண்டும் வித்யா. என்னால் அழ முடிவதில்லை. அழுவது எனக்குப் பிடிக்காது. என் கஷ்டங்களை இன்னொருவரிடம் சொல்லி ஒரு போலித் தனமான ஆறுதலைத் தேடிக் கொள்வதிலும் எனக்கு இஷ்ட மில்லை. நான் என்னதான் செய்வது? என் குமுறலுக்கு ஒரே இடம் என் டைரிதான். அதிலும் எழுத முடிய வில்லையே...?'

சங்கரிடமிருந்து பதில் வராமல் போகவே சுகுமாரன் அவன் கையைப் பற்றினான்: "நீ எனக்கு எதையும் சொல்ல வேண்டாம். தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையும் எனக்கில்லை. உன் பாதிப்பின் பலத்திலிருந்து அதன் பின்னணி முழுசையும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. மனசைச் சிதற விடாதே சங்கர்; இப்படி வில்ஸ் பில்டராகக் கரைந்து சாம்பலாகாதே!"

சங்கர் பெருமூச்சு விட்டான். "ஸாரி சுகுமார்! இப்போது என்னால் எதையும் சொல்ல முடியவில்லை. எப்போதாவது ஒரு நாள் எழுத்தாக வெளிவருவேன். அப்போது புரிந்து கொள்."

சில நிமிஷங்களுக்குப் பின் சங்கர், "பார்த்தாயா சுகுமார்: நான் உன்னைப் பற்றி எதுவும் கேட்க மறந்து போனேன். சாருலதா எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டான்.

"அவளால்தான் தஞ்சாவூர் சுவாரஸ்யமாக இருக்கிறது. அவள் இல்லையென்றால் எப்போதோ என் தஞ்சாவூர் வாசம் முடிந்து போயிருக்கும்."—சங்கர் புரிந்து கொண்டு சிரித்தான்.

"என் கடிதங்களையும் அதற்கான என் பதில்களையும் நான் அவளுக்குக் காண்பிப்பேன் சங்கர். 'ஹவ் டு ஹேல் இஸ் திஸ் சங்கர்' என்று கோபப்படுவாள், நம் நெருக்கத்தைப் பார்த்து. உன் கதைகளையெல்லாம் அவளிடம் கொடுத்துப் படிக்க வைத்தேன். இப்போது உன்னைப் பார்க்க வேண்டுமென்கிறாள்."

"உன் கூடவே அழைத்துக் கொண்டு வந்திருக்கலாமே சுகுமார்!"

"ஓ.எஸ். வந்திருக்கலாம். அதன் பின் தஞ்சாவூரே என் மீது வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்கு வருமே! அதற்கு என்ன செய்வது? 'காய்ந்து சருகாகிப் போன சமூகம்' என்று நீ அடிக்கடி கோபப்படுவாயே சங்கர், அது இப்போது ரொம்ப நன்றாகப் புரிகிறது."

சங்கர் பேசாமல் இருந்தான். அதன் பின் சுகுமாரனும் எதுவும் கேட்கவில்லை. வீட்டுக்குப் போய்க் குளித்துச் சாப்பிட்டுவிட்டு பேப்பரைப் படித்துக் கொண்டிருந்த சுகுமாரன் திடீரென்று அதை அப்படியே போட்டுவிட்டு, "இளம்பு சங்கர்" என்று அவசரப்படுத்தினான்.

"எங்கே? என்ன விஷயம்?"

"சஃபையரில் சத்தியஜித்ரே படம். மார்னிங் ஷோ. இப்போது மணி ஒன்பதரை. பீக்கிரம்"

படத்தில் கதாநாயகன், கதாநாயகி— இரண்டு பேருமே புத்திசாலிகள். பல சின்னச் சின்னக் கவைத்தன்மை மிகுந்த அழகான காட்சிகள்...

படத்தின் கதை சங்கரை அழ வைத்தது. ஆம்; உண்மையிலேயே அழ வைத்து விட்டது. அந்தக் கதையில், அவன் அவளை முதன் முறையாக ஒரு ஓட்டலில் பார்த்தது, காதலித்தது, பின் அவள் தனக்குக் கல்யாணம் என்று அவன் மார்பில், கையில், காலில் விழுந்து அழுதது, அவனும் அழுதது— எல்லாம் ஒவ்வொன்றாய், மெதுவாய், சத்தமில்லாமல் தோன்றி மறைந்தபோது சங்கரும் அழுதான். அவன் தன் வாழ்க்கையில் முதல் முறையாக அழுதான். திரும்பிப் பார்த்த சுகுமாரன், அவன் கையைப் பிடித்து அழுத்தினான்.

"வாட் இஸ் திஸ் சங்கர்? ப்ளீஸ் பி காம்."

"சுகுமார் இதற்கு மேல் என்னால் பார்க்க முடியாது. நீ வேண்டுமானால் இருந்து பார்த்து விட்டு வா." — சங்கர் எழுந்ததும் சுகுமாரனும் எழுந்து வெளியே வந்தான்.

காரில் வரும்போது சுகுமாரன் கேட்டான்: "சினிமாவைப் பார்த்து அழும் அளவிற்கு நீ எப்படி இவ்வளவு மென்மையானவனானாய் சங்கர்?"

"அந்த டிசம்பர் பதினைந்திலிருந்து' என்று நினைத்துக் கொண்டான் சங்கர்.

21

சிங்கரின் பெயரில் வீட்டுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது வீட்டு விலாசத்துக்கு அவனுக்கு யாரும் கடிதம் போடுவ தில்லை. கவர் கனமாக இருந்தது. இருபது பைசா கட்டி அம்மா கடிதத்தை வாங்கி வைத்திருந்தாள். உடனே பிரித்துப் படிக்கத் தோன்றவில்லை, அன்றைய வேலையின் சுமை அவனை அதிகக் களைப்பாக்கி விட்டிருந்தது. 'படுத்துக் கொள்' என்று உடம்பு முழுசும் கெஞ்சவே, கடிதத்தோடு மாடிக்கு வந்து உடை மாற்றிக் கொண்டான்.

காலையில் அவனோடு ஆபீசுக்கு வந்து கொஞ்ச நேரம் இருந்துவிட்டு மற்ற இலக்கிய நண்பர்களைப் பார்க்கப் போன சுகுமாரன் இன்னும் வரவில்லை. ஒரு வேளை வராமல் இருந்தாலும் இருக்கலாம். எப்போதோ ஒரு தரம் சென்னைக்கு வருகிறான். கடிதத்தில் அடிக்கடி சந்திப்பவர் களை எல்லாம் நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்திருக் கிறது. பேச்சு அனுமார் வாலாக நீளும். பேச அவர்களுக் கிடையே விஷயங்களா இல்லை? சில சமயம் விவாதமே சண்டையில் போய் முடிவதுண்டு. சண்டை என்றால் வெறும் இலக்கியச் சண்டை. அதிலும் சுகுமாரன் இலேசில் ஒப்கிற ஆசாமி இல்லை. வாய் முழுதும் சிரிப்பாக, அதே சிரிப்பில் தன்னிடம் பேசுகிறவர்களை நிமிஷத்தில் முட்டாளாக்கி விடுகிற சாமர்த்தியம். தோளில் கை போட்டுக் கொண்டே 'நீ சொல்வது மகா அபத்தம்; மகா முட்டாள்தனம்' என்று அடித்துப் பேசுகிற துணிச்சல். புத்திசாலித்தனம் இல்லாத யாரையும் எனக்குப் பிடிக்காது என்று எதிரே இருப்பவனை முகத்துக்கு நேராகச் சொல்லித் தவிர்த்துக் கொண்டு போய்

விடுகிற முரட்டுத்தனம். இதெல்லாம் சாருலதாவின் பழக்கத் துக்குப் பின்னாலும் மாறாமலிருந்ததுதான் ஆச்சரியம்.

சாருலதா ஒரு வங்காளி. ஆங்கிலப் பத்திரிகைகளில் அவளது கவிதைகளும், கதைகளும் அடிக்கடி வரும். சுகு மாரன் கல்கத்தாவிலிருந்த தன் அக்கா வீட்டிற்குப் போயி ருந்தபோது அவளைச் சந்தித்திருக்கிறான். அவள் பரத நாட்டியம் கற்றுக் கொள்ள வேண்டுமென்று அவனுடனேயே கிளம்பி வந்து விட்டாள். தஞ்சாவூரில் அவன் வீட்டுக்குப் பக்கத்திலேயே வீடு பார்த்துக் கொண்டாள். ஒரு பள்ளிக் கூடத்தில் வேலையும் கிடைத்தது. சுகுமாரனைக் கேட்டால் தங்கையின் கல்யாணம் முடியும் வரை வீட்டில் இதைப் பற்றிப் பேச்செடுக்க முடியாது என்று சொல்லி விட்டான். சாருலதாவும் அவனுக்காக ஜென்மம் முழுசும் காத்துக் கொண் டிருப்பாள் போலிருக்கிறது. தமிழே தெரியாத அவள், இப்போது தமிழில் ஒரு புதுக்கவிதை எழுதியிருக்கிறாளாம். சாருலதாவை இன்னும் சங்கர் பார்த்ததில்லை. ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றில் வந்திருந்த அவளுடைய 'பிச்சைக் காரர்கள்' என்ற கவிதையைப் படித்த பின்னால் அவளைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை சங்கருக்கே இருந்தது. சுகுமாரன் மொழி பெயர்த்து அனுப்பியிருந்த அவளது 'நிழல்கள்' என்ற கதை இப்போது கூடரில் வந்து கொண் டிருக்கிறது. அதற்காகச் சாருலதாவுடன் சங்கர் கடிதம் மூலம் பேசி இருக்கிறான். சுகுமாரன் அவளது புகைப்படத்தைக் காட்டி இருக்கிறான். எல்லா வங்காளிகளையும் போல அவளும் எளிமையாக இருந்தாள். தீர்க்கமான அறிவைக் காட்டும் கண்கள். பளீரென்ற நல்ல சிரிப்பு. அந்த முகத் திலிருந்த மேதைத்தனமான அழகு சங்கருக்குப் பிடித் திருந்தது. சுகுமாரனும் அதே மாதிரிதான் இருப்பான். தடித்த கருப்பு ஃபிரேம் போட்ட கண்ணாடிக்குள்விருந்து அவன் பார்க்கும் பார்வை நேராக மனசின் அடிக்குப் போகும். முகத்தில் சுறுசுறுப்புத் தெரியும். சிரிப்பில் ஒரு குழந்தைத்

தனம். பேச்சில் வெளிப்படும் மேதைத்தனம். சுகுமாரனுக்கு சாருலதா எல்லா விதத்திலும் பொருத்தமானவள்.

சங்கர் ரேடியோகிராமை 'ஆன்' பண்ணி அவனுக்குப் பிடித்த ஸிதார் இசையைச் சின்னதாக வைத்து விட்டுக் கட்டிலில் சாய்ந்து கொண்டான். பக்கத்து ஸ்டாண்டிலிருந்த கடிதம், 'என்னை இன்னும் பிரிக்கவில்லையே' என்று கேட்டுக் கொண்டிருந்தது. யாராக இருக்கும் என்ற யோசனையுடன், கடிதத்தைப் பிரித்தவுடனேயே, அந்தக் கையெழுத்து சொல்லிவிட்டது.

வித்யா!

அவளிடமிருந்து அவன் கடிதத்தை எதிர்பார்க்கவே இல்லை. அவளுடையதுதான் என்று தெரிந்திருந்தால் இத்தனை நேரத்தை வீணாக்கி இருக்க மாட்டான். எத்தனை தரம் படித்திருப்பான்! படிக்க ஆரம்பித்தான்:

'சங்கர்! என்னோடு கொஞ்ச நேரம் ஊட்டிக்கு வருகிறீர்கள். இந்தப் பசுமையை, வரிசையாக உயரமாக வளர்ந்திருக்கும் யூகலிப்டஸ் மரங்களை, மலைச் சிகரங்களை, மேடு பள்ளமான இந்தத் தெருக்களை, சிவப்பு ஓடுகளால் ஆன வீடுகளை, பெரிசாகப் பூத்திருக்கும் ரோஜாப் பூக்களை, நீலத் தகடாக நிற்கும் ஏரியை, காலை எட்டு மணி வரைக்கும் எதையும் காட்டாமல் தனக்குள் மறைத்துக் கொண்டு விடுகிற பனி மூட்டத்தை, யாரையோ அரத்துகிற மாதிரி புகையாக ஓடும் அதன் வேகத்தைப் பார்க்க வருகிறீர்கள். என் கண்ணில் படும் சின்னச் சின்ன அழகுகளை நீங்களும் ரசிக்க வருகிறீர்கள்.

'அதோ, அந்த வீட்டு வாசலில் தனியாக அழகாகப் பூத்திருக்கும் பெயர் தெரியாத அந்தப் பூ—தக்கையாகப் பறக்கும் ஒற்றைக் கழுகு—தூரத்தில் தெரிகிற வீடுகள்—பள்ளத்தாக்கில் புரளும் இரண்டு நாய்கள்—அவற்றின் சுதந்திரம்—இதோ, இந்த யூகலிப்டஸ் மரத்தின் மேல் வந்து உட்கார்ந்து சன்னமாகக் கத்துகிற பறவையின் அழகு, விதம்

விதமான இந்தப் பச்சை மரங்களின் குளுமை—எல்லாம் நீங்கள் வரைந்து எனக்குப் பரிசாகக் கொடுத்த அந்தப் படத்தை நினைவூட்டவில்லை?

'அப்பா...! அந்தப் படத்தைப் பார்த்ததும் நான் அசந்து போனேன். ஒரு நிமிஷம் நான் அந்த இடத்திற்கே போய் விட்ட மாதிரி இருந்தது. வாசல் போர்டில் இருந்து ஒரு புல், ஒரு பூ எதையும் தவற விடாமல் எப்படி சங்கர் வரைந்தீர்கள்! மிகவும் அற்புதமாக அமைந்துவிட்ட சித்திரம் அது.'

சங்கருக்கு அந்த ஓவியத்தை வரைய எடுத்துக் கொண்ட சிரமம் நினைவுக்கு வந்தது. ஒரு மாத உழைப்பு அது. இரவைப் பகலாக்கி உட்கார வைத்த உழைப்பு. மனத்தில் நிரந்தரமான ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்த அந்தப் பசுமையைக் காகிதத்தில் முழுசாகக் கொண்டு வர எத்தனை நாள் தவித்திருக்கிறான்! சாப்பாட்டையும், தூக்கத்தையும் மறந்து எப்படி வர்ணக் கலவைகளின் நடுவே அமிழ்ந்து போயிருக்கிறான்! வித்யாவுக்கு அதன் அழகு தெரிகிற மாதிரி அதை உருவாக்க எடுத்துக் கொண்ட உழைப்பும் புரியும். அவன் மேலே கடிதத்தைப் படித்தான். அவனைக் கடிதத்தின் வழியாக ஊட்டிக்கே அழைத்துக் கொண்டு போனாள் அவள். ஒவ்வோர் இடமாக, மரமாகக் காட்டிக் கொண்டே போனாள். பறக்கும் பறவைகள், ரோஜாவின் நிறங்கள், பனி மூட்டத்தின் ஓட்டம், கூவிங் கிளாஸ் பார்வையை விரிக்கும் மலைச் சிகரங்கள்...ஒன்று விட வில்லை.

சங்கருக்குப் பெருமையாக இருந்தது. 'எப்படி எழுதியிருக்கிறேன் பாருங்கள்' என்று சவால் விட்டுக் கொண்டு வந்தக் கடிதத்தை எழுதின மாதிரித் தோன்றியது. நீங்கள் சொன்னது சரிதான் சங்கர். எவ்வளவு நன்றாக எழுத முடியும்' என்பதை நிரூபிக்கிற மாதிரி எப்படி எழுதியிருக்கிறாள் என்று சந்தோஷப் பட்டான். பெயர்களை மட்டும்

MAR 2001

நீக்கி விட்டால் அப்படியே பிரசுரிக்கக் கூடிய ஒரு நல்ல கட்டுரை அது. 'உன் திறமை முழுவதும் இப்படி வீணாகிப் போகிறதே. உன்னை வெளிக்காட்டவாவது எழுதேன் வித்யா...'

கடைசியில் தனியாக ஒரு காகிதத்தில் நான்கே வரிகள் 'உங்கள் கவிதையைப் படித்தேன். அதிலிருந்த சோகம் எனக்குச் சகிக்கவில்லை. உங்கள் கை விரல்கள் சாம்பலை உதிர்த்துக் கொண்டிருப்பது தெரிகிறது. நிறுத்த மாட்டீர்களா?'

படித்ததைத் திரும்ப ஒரு தரம் படித்தான். இன்னும் ஒரு முறை படித்தான். பின் மடித்துத் தலைகாணியின் அடியில் போட்டான். எழுந்து போய் சிகரெட் கேஸிலிருந்த அத்தனை சிகரெட்டுகளையும் வீசி எறிந்தான். 'நிறுத்தி விட்டேன் வித்யா. இனிமேல் சத்தியமாகத் தொடுவதில்லை.' பால்கனியில் வந்து நின்றபோது டாக்ஸியிலிருந்து சுகுமாரன் இறங்கி பணத்தைக் கொடுத்துவிட்டு உள்ளே வருவது தெரிந்தது. 'ஒரு வாரம் லீவு எடுத்துக் கொண்டு சுகுமாரனோடு எங்கேயாவது போனால் என்ன?'

சுகுமாரனும் பக்கத்தில் வந்து நின்றான். சங்கர் கைப் பிடிச் சுவரில் உட்கார்ந்தான். சுகுமாரன் பிரம்பு நாற்காலியை இழுத்து அவனுக்கு எதிரில் போட்டுக் கொண்டான். அன்று சந்தித்தவர்களையெல்லாம்—பேசினதை எல்லாம் ஒன்று விடாமல் சொன்னான். சங்கர் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தான்.

"நான் வந்து ஒரு வாரமாகி விட்டதே சங்கர்! இன்னும் இரண்டு நாள் லீவுதான் பாக்கியிருக்கிறது. நாளைக்காவது ஊருக்குக் கிளம்பியாக வேண்டும்."

"நானும் ஒரு வாரம் லீவு எடுத்துக் கொண்டு உன்னோடு தஞ்சாவூருக்கு வரப் போகிறேன்."

சுகுமாரனின் முகம் தனக்கு ஏற்பட்ட சந்தோஷத்தைக் காட்டியது. "வா, சங்கர். அப்பாவும், அம்மாவும் சந்தோஷப்படுவார்கள். சாரு கூட உன்னைப் பார்க்க வேண்டுமென்கிறாள்."

"என் புது நாவலை அங்கே வந்துதான் ஆரம்பிக்கப் போகிறேன் சுகுமார். ஒரு நல்ல சூழ்நிலையில் தெளிவான மனசோடு எழுத வேண்டிய ஒரு நல்ல கதை அது..'

அன்று ராத்திரி அவர்கள் பேசி முடித்துவிட்டுப் படுத்துக் கொள்ளப் போனபோது, மணி இரண்டுக்கு மேலாகிவிட்டது. மறுநாள் சாப்பிட்டதும் இரண்டு பேரும் காரிலேயே தஞ்சாவூருக்குக் கிளம்பினார்கள்.

போன உடனேயே சுகுமாரன், சங்கரைச் சாருலதாவின் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனான். புகைப்படத்தில் பார்த்த அதே மாதிரி இருந்தாள் அவள். நல்ல நிறம். தெளிவான சிரிப்பு. பேச்சில் அடிக்கடி வித்யாவை நினைவு படுத்தினாள். அதே அனுபவம் கலந்த புத்திசாலித்தனமான பேச்சு.

வீட்டின் அந்த அறை தன் ஒவ்வோர் அங்குலத்திலும் அவளின் கலை உணர்வை நிரூபித்துக் கொண்டிருந்தது. நடுவில் விரிக்கப்பட்ட திண்டு. எதிரே கீழே உட்கார்ந்து எழுத வசதியான சின்ன மேஜை. அவனுடைய அறையைப் போல் அதே மாதிரிச் சுவர் ஓரமாக நீளமான புத்தக அலமாரி. அதன் மேல் தந்தம், வெண்கலம், சந்தன மரங்களால் ஆன சிற்பங்கள். ஒரு மூலையில் பெரிசாக ஆள் உயரத்துக்குச் செம்மரத்தால் ஆன ஒரு சிரிக்கும் புத்தர் சிலை. நடுவில் தொங்கின பளபளக்கும் வெண்கல அன்ன விளக்குகள். அதன் சங்கிலிகளில் செருகப்பட்டிருந்த செம்பருத்திப் பூக்கள். ஜன்னல், கதவு, சுவர் எல்லாவற்றிலும் பார்க்கக் குளிர்ச்சியான அவளது கைவேலைகள். சாதாரணத் துடைப்பக் குச்சிகளை ஒன்று சேர்த்து ஒரு பெரிய காகித அளவாக்கி அதில் வரைந்த சகுந்தலை ஓவியம். பழைய கடிகாரம் ஒன்று.

பெண்டுலத்தின் கீழே இரண்டு சங்கிலிகள் ஏற்றத் தாழ்வாகத் தொங்கின. மணி அடித்தபோது அதன் சத்தம் மிகவும் இனிமையான இசையாக இருந்தது. வாசல் படிகளில் காற்றில் தானே அடித்துக்கொள்ளும் மணிகள் தொங்கவிடப் பட்டிருந்தன. காற்றோட்டத்துக்குத் தடையில்லாத அறை யாக இருந்ததால் எப்போதும் அதன் இலேசான இனிமை கேட்டுக் கொண்டே இருந்தது.

"இந்த அறை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது மிஸ் சாருலதா! இங்கே என்னால் ஒரு நிம்மதியை உணர முடிகிறது."

"உண்மைதான் மிஸ்டர் சங்கர். நானே அதை உணர்ந் திருக்கிறேன். உங்களுக்குச் சௌகரியமாக இருந்தால் இங்கேயே தங்கி எழுதுங்களேன். உங்களால் இங்கே நன்றாக எழுத முடியுமென்று நினைக்கிறேன்."

"உனக்குப் பிடித்தால் நீ இங்கேயே தங்கலாம் சங்கர். நிம்மதியாக எழுதுவதற்கு ஏற்ற இடம்!"—சுகுமாரனும் சொன்னான்.

சாருலதா மேலும் வற்புறுத்தினதால் சங்கர் அன்று அங்கேயே தங்கினான். சுகுமாரன், "காலையில் வருகிறேன் சங்கர்" என்று சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டான்.

அன்றிரவு முழுசும் சங்கர் தூங்கவில்லை. அடிக்கடி ஒலிக்கும் அந்தக் காற்று மணிகளின் ஓசையையும், எப்போ தாவது அடிக்கும் கடிகாரத்தின் இனிமையையும் கேட்டுக் கொண்டே தன் புது நாவலை ஆரம்பித்தான். அங்கே நிம்மதியாக எழுத முடிந்தது. சாருலதாவின் எழுத்துக்கு அந்த அறையும், அதன் அமைதியும் கூட ஒரு காரணமாக இருக்கலாம் என்று நினைத்தான். அவனுக்கு விவேகா னந்தரின் முகத்தைப் பார்க்கும் போதும், புத்தரின் சிலை களைப் பார்க்கும்போதும் மனசுக்குள் ஏதோ ஓர் உணர்ச்சி ஏற்படுகிற வழக்கம். அது அமைதியா, நிம்

மதியா, நெகிழ்ச்சியா, உருகலா என்று பிரித்துச் சொல்ல முடியாத உணர்ச்சி. அதையே அந்த அறையிலிருந்த போதும் அனுபவித்தான்.

'சாருலதா, உங்களிடம் வித்யாவைப் போன்ற பிரமிக்க வைக்கும் அழகில்லை. ஆனால், அவளைப் போலவே நீங்களும் ஒரு வித்தியாசமான பெண்! சுகுமார், நீயும் அதிர்ஷ்டசாலி. உன்னை மாட்சி பண்ணக் கூடிய ஒரு புத்தி சாலி உனக்கும் கிடைத்திருக்கிறாள். இவள் துணை உனக்கு நிரந்தரமானதாக இருக்க வேண்டும். நவற விட்டுவிடாதே. அந்த இழப்பு ரொம்ப பெரிசானது. தாங்க முடியாதது. ஜலமாகப் பாதிக்கக் கூடியது...'

ஒரு வாரத்திற்குப் பின் தஞ்சாவூரை விட்டுக் கிளம்பின போது சங்கருக்குக் கஷ்டமாக இருந்தது. சுகுமாரனையும், சாருலதாவையும் சேர்த்துப் பார்த்துக் கொண்டிருந்தது நெஞ்சுக்கு இதமாக இருந்தது. அவனிடம் அவர்கள் காட்டின அன்பு அவனால் மறக்கமுடியாததாக, அப்போது அவனுக்கு அதிகம் தேவைப்பட்டதாக இருந்தது; இழக்கக் கூடாததாகத் தோன்றியது.

காரில் வரும்போது திரும்பத் திரும்ப அவன் நினைவால் தஞ்சாவூருக்கே போய்க் கொண்டிருந்தான். சாருலதாவை— அறையை— அன்பை— அறிவை அடிக்கடி நினைத்துப் பார்த் தான்: 'சுகுமாரா, அதிர்ஷ்டம் உன் வீட்டு வாசலைத் தட்டின போது நீ வீட்டிலிருந்தாய். நீயே கதவைத் திறந்தாய், உள்ளே வரவழைத்தாய். திரும்ப வெளியே விட்டு விடாமல் தாழ்ப் பாளும் போடத் தெரிந்து கொண்டாய்...' அவன் பெருமூச்சு விட்டான்.

மெட்றாசுக்கு வந்த உடனேயே, அம்மா வித்யா திரும்பி வந்து விட்டதைச் சொன்னாள். வீட்டுக்கு வந்திருந்தாளாம். அவன் வந்ததும் போன் பண்ணச் சொன்னாளாம். அம்மா எழுதி வைத்திருந்த டெலிபோன் நம்பரை எடுத்துக்கொடுத் தாள். அவன் போன் பண்ணிய போது பகல் ஒரு மணி இருக்கும். வித்யாதான் பேசினாள்.

"வித்யா...?"

"ஆமாம். தஞ்சாவூர் எப்படி இருந்தது? சுகுமாரனை இங்கே வரவேண்டாமென்று எழுதப் போகிறேன் என்று சொன்னால் நீங்கள் அங்கே போய் விட்டீர்களா?"

"சுகுமாரன் இங்கே வந்திருந்தான் வித்யா. அவனுடனேயே நான் கிளம்பிப் போனேன். அவனுடைய சாருலதாவைப் பார்த்தேன். உன்னை மாதிரியே இன்ட்ரஸ்டிங் பர்ஸன். அதையெல்லாம் நேரில்தான் சொல்ல வேண்டும்."

"இப்போது இங்கே வாருங்களேன் சங்கர்..."

"இப்போதா?"

"இப்போதேதான்."

"ஓ கே! இன்னும் அரை மணி நேரத்தில் அங்கே இருப்பேன்."

"சரியாக அரை மணி. அரை மணியை ஆறு மணி என்று நினைத்துக் கொண்டு விடாதீர்கள்."

"இல்லை. முப்பது நிமிஷங்கள். ஓ. கே?" — அவன் சிரித்துக் கொண்டே போனை வைத்தான்.

சங்கர் போனபோது வீட்டில் வித்யா மட்டும்தான் இருந்தாள். ஹாலில் வாசலுக்கு எதிரில் அவன் வரைந்த படம் பளிச்சென்று கண்ணில் பட்டது. வித்யா வீட்டைச் சுற்றிக் காண்பித்தாள். எல்லா இடங்களிலும் பள பளப்புத் தெரிந்தது. திரும்ப வந்து ஹால் சோபாவில் உட்கார்ந்து கொண்டார்கள்.

"என்ன சாப்பிடுகிறீர்கள் சங்கர்?"

"ஒன்றும் வேண்டாம் வித்யா. இப்போதுதான் சாப்பிட்டு வந்தேன்."

"என் லெட்டர் கிடைத்ததா?"

"ஓ. எஸ். எவ்வளவு நன்றாக எழுதியிருந்தாய் தெரியுமா? ஒவ்வொரு வார்த்தையும் 'பவர்புல்'லாக வந்து விழுந்திருந்தது. அதைப் படித்ததும் உன் திறமையெல்லாம் என் ஒருத்தனுக்கு மட்டுமே தெரிந்து, என்னோடு மட்டுமே முடிந்து போய் விடுகிறதே என்று வருத்தமாக இருந்தது."

வித்யா பேசாமலிருந்தாள். இலேசாகச் சிரித்துக் கொண்டிருந்தாள். சங்கர் அந்தச் சிரிப்பைக் கவனித்தான். மறக்க முடியாத பழைய சிரிப்பு இல்லை அது. அந்தச் சிரிப்பில் கீறல் விழுந்த மாதிரிச் சிரிப்பு. உயிரே இல்லாத சிரிப்பு. 'வித்யா, உன் அந்தச் சிரிப்பு எங்கே? அர்த்தங்களைத் தேட வைக்கும் ஈரமான சிரிப்பு எங்கே?'

"உங்கள் கவிதையைப் படித்தேன். என்ன கவிதை எழுதியிருக்கிறீர்கள், சங்கர்? படித்து விட்டு அழலாம் போலிருந்தது. ஆனால் முடியவில்லையே! அதில் தொனித்த சோகம் எனக்குச் சகிக்கக்கூடியதாக இல்லை!"

சங்கர் பதில் சொல்லவில்லை. வித்யா ஒரு நிமிஷ மௌனத்திற்குப் பின் கேட்டாள்:

"இன்னமும் சிகரெட்டின் துணை தேவைப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறதா?"

"இல்லை வித்யா, விட்டுவிட்டேன்."

"நிஜமாகவா?"

"சத்தியமாக."

"அன்றைக்கும் மணலில் உட்கார்ந்து இதே சத்தியத்தைப் பண்ணினதாகத்தான் ஞாபகம்."

"இது நிரந்தரமான சத்தியம் வித்யா."

அவளுடைய சிரிப்பு, கொஞ்சம் பளிச்சிட்டது.

"சரி, தஞ்சாவூர் எப்படியிருந்தது? உங்கள் சுகுமாரனைப் பற்றி, அவருடைய சாருலதாவைப் பற்றியெல்லாம் சொல்லுங்கள்.,'

"அதெல்லாம் இருக்கட்டும். நீ எப்படி இருக்கிறாய் வித்யா?"

அந்தக் கேள்விக்கு அவளிடமிருந்து பதிலில்லை. சங்கரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பார்வையின் பின்னணியைப் புரிந்து கொண்டு விட்டான் அவன். சில நிமிஷங்கள் பேசாமலிருந்தான்.

"வித்யா, நீ புத்திசாலி. ரமணி உன் மனசைப் புரிந்து கொண்டு நடக்கவில்லையே என்று இனிமேல் வருத்தப் பட்டுப் பிரயோஜனமில்லை. நீதான் அவர் மனசின்படி நடந்து கொள்ள வேண்டும். அதுதான் புத்திசாலிகள் செய்யும் செய்கை."

வித்யாவின் கண்கள் மினுமினுத்தன. "சங்கர்..." என்று மெதுவாக எதையோ ஆரம்பித்தாள். மேலே பேசும் முன் மத்தியானம் இரண்டு மணிக்குப் பின் போகும் விமானம் ஒன்று வானத்தைக் கிழிக்கிற மாதிரிப் பறந்தது. அந்தச் சத்தத்தில் அவள் மௌனமானாள்.

அது அவர்களைக் கடக்க ஒரு நிமிஷம் பிடித்தது.

அந்த ஒரு நிமுஷத்தில் அவள் தன் வேகத்தைத் தணித்துக் கொண்டு விட்டாள். தன் பழைய நிதானத்திற்கு வந்து விட்டாள்.

22

சங்கர் தொழிற்சாலையிலிருந்து ரமணி திரும்பி வரும்வரை வித்யாவுடன் பேசிக் கொண்டிருந்தான்.

"ஊரிலிருந்து வந்தவுடன் அம்மாவைப் போய்ப் பார்த்தேன் சங்கர். அப்பாவின் மாற்றத்தைப் பற்றி ஆச்சரியத்தோடு சொன்னாள். குழந்தைகளும் சந்தோஷத்தோடு ஓடி வந்து, 'அப்பா உன் கல்யாணத்திற்குப்புறம்

கத்தறதே இல்லை அக்கா. கோபப்படறது இல்லை. அடிக்கிறதும் இல்லை. கேட்பதற்கு முன்னாலேயே எல்லாத்தையும் வாங்கித் தரார். முன்னை மாதிரி பணத்தை முஞ்சியில் வீசி எறிவதில்லை!' என்றார்கள். அந்த வீட்டுக்குள் காற்று வராமல் கடுத்துக் கொண்டிருக்கும் கதவு, அப்பா என்று நினைத்தேன் சங்கர். நான்தான் இத்தனை நாளும் பெரிய கதவாக இருந்திருக்கிறேன். என்னை நகர்த்தின பின்னால் வீடு சிலு சிலுக்கிறது...!"

"நீ ஆசைப்பட்டதும் அந்த சிலு சிலுப்பிற்குத்தானே வித்யா..."

"அம்மாவின் சிரிப்பை, குழந்தைகளின் கலகலப்பைப் பார்த்தபோது முன்னாலேயே நகர்ந்து வந்திருக்கலாமே என்று தோன்றியது." — அவள் சிரிப்பில் தன் மன வேதனையைப் புதைத்துக் கொள்வது தெரிந்தது.

சங்கர் அவளை மாற்ற, தஞ்சாவூரையும், வழியில் தன்னைக் கவர்ந்த அழகுகளையும் பற்றிச் சொன்னான். சாருலதாவையும், சுகுமாரனையும் பற்றி, அவர்களுக்கு இடையே இருந்த அன்பைப் பற்றி, தான் பார்த்த சத்யஜித்ரேயின் படம், அவள் அதைப் பார்க்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டது, தன் நாவலின் மூன்றாம் அத்தியாயத்தில் நின்று கொண்டிருப்பது எல்லாவற்றையும் சொன்னான்.

"எழுதினதைக் கொண்டு வந்திருக்கலாமே சங்கர். நான் படித்திருப்பேனே..."

"தஞ்சாவூரிலிருந்தே அதை அனுப்பியாகி விட்டது வித்யா. நாளைய சுடரில் ஆரம்பித்தாக வேண்டுமே!"

"சரி, இந்த மூன்று அத்தியாயங்களை மட்டும் சுடரில் படித்துக் கொள்கிறேன். மற்றதையெல்லாம் உங்க கை எழுத்திலேயே படித்தாக வேண்டும்."

"இனிமேல் உன்னிடம் காட்டி, நீஓ கே. பண்ணின பின்புதான் கம்போஸிங்கிற்கு அனுப்புவேன், போதுமா?"

இரண்டு பேரும் சிரித்தார்கள். சிரிப்பு அடங்குவதற்குள் கார் ஹாரன் போர்ட்டிகோவிலேயே கேட்டது. ரமணி உள்ளே வந்தான்.

சங்கர், "ஹலோ" என்று சிரித்தான். ரமணி அவனை எதிர்பார்க்கவில்லை என்பது தெரிந்தது. திரும்பி 'ஹலோ' சொல்லிக் கொண்டே எதிரில் வந்து உட்கார்ந்தான். வித்யா காபி கொண்டுவர எழுந்து போனாள்.

"நாங்கள் சென்னைக்குத் திரும்பி விட்ட விஷயம் எப்படித் தெரிந்தது மிஸ்டர் சங்கர் ?"

"வித்யா வீட்டுக்கு வந்திருந்தாளாம். நானும் ஊரில் இல்லை. இன்றைக்குத்தான் வந்தேன். உடனே அம்மா சொன்னாள். போன் பண்ணிவிட்டு நேரில் வந்தேன்..."

"ஓ... எந்த ஊருக்குப் போயிருந்தீர்கள் ?"

"தஞ்சாவூருக்கு..."

"வந்த உடனேயே இங்கே வந்து விட்டீர்கள் போலிருக்கிறதே! கொஞ்சம் 'ரெஸ்ட்' எடுத்துக் கொண்டு வந்திருக்கலாமே..."

"எனக்கு ஓய்வு என்பதே 'சேஞ்ஜ் ஆஃப் ஓர்க்'தான் மிஸ்டர் ரமணி. படுத்துத் தூங்கினால்தான் ஓய்வு என்பதில்லை."

"நீங்களெல்லாம் சாதாரண மனிதர்களிலிருந்து மாறுபட்டவர்கள். வித்தியாசமானவர்கள். அதனால் எல்லாவற்றிலும் உங்கள் வித்தியாசம் தெரிகிறது."

ரமணி சிரித்துக் கொண்டே சொன்னதனால் அதன் அர்த்தத்தைச் சங்கரால் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த முகத்திலிருந்தும் ஒன்றும் கண்டு பிடிக்க முடியாததால் பேச்சை மாற்றினான்.

"ஊட்டி எல்லாம் எப்படியிருந்தது ?"

"நான் ஒரு மெகானிகல் மனிதன் மிஸ்டர் சங்கர். உங்களைப்போல் கதாசிரியனோ, கவிஞனோ இல்லை. அதனால் எந்த அழகையும் என்னைப் போன்றவர்களுக்கு உங்களை மாதிரி ரசிக்கத் தெரியாது." — திரும்ப அதே சிரிப்பு. அதே சாதாரணமான முகம். இதை எப்படி எடுத்துக் கொள்வது என்று தெரியாமல் சங்கர் மௌனமாக இருந்தான்.

வித்யா காபியுடன் வந்தாள். "என்ன பேசாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்" என்று கேட்டுக் கொண்டே கோப்பைகளை எடுத்துக் கொடுத்தாள். சங்கர் இலேசாகச் சிரித்தான். ரமணி காபியை உறிஞ்சினான். கோப்பையைக் கீழே வைத்துவிட்டு, "ஒரு நிமிஷம் மிஸ்டர் சங்கர்" என்று எழுந்தான்.

"யு டேக் யுவர் ஒன் டைம்."

"வித்யா, கொஞ்சம் உள்ளே வருகிறாயா ?"

வித்யாவும் சங்கரிடம் சொல்லிவிட்டு ரமணியுடன் உள்ளே போனாள். ரமணி கட்டிலின் மீது உட்கார்ந்து ஷூவைக் கழற்றிக் கொண்டே சொன்னான்:

"சிக்கிரம் கிளம்பு வித்யா. நாம் இப்போது சினிமாவுக்குப் போகிறோம்."

"சினிமாவுக்கா ? எந்த சினிமா ரமணி ?"

அவன் ஒரு ஸீன்காளரி படத்தைச் சொன்னான்.

"ஓ ! ஜேம்ஸ்பாண்ட் படமா ? எனக்குப் பிடிக்காதே ரமணி..."

"எனக்குப் பிடிக்கும் என்று 'புக்' பண்ணிக் கொண்டு வந்திருக்கிறேன். இப்போதே மணி ஆறரை. சிக்கிரம்."

"சங்கர் வேறு உட்கார்ந்து கொண்டிருக்கிறாரே...?"

"அனுப்பி விட்டு வாயேன். பேச்சு இன்னும் முடியவில்லையா ?"

வித்யா அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் ஷூவை ஸ்டாண்டில் வைத்துவிட்டு டவலோடு பாத்ரூமுக்குப் போனான். "நான் முகத்தை அலம்பிக்கொண்டு வருகிறேன். அதற்குள் தயாராக இரு..."

வாஷ்பேஸினில் நீர் விழும் சத்தம் கேட்டது. வித்யா வெளியே வந்தாள். சங்கர் டீபாயில் இருந்த டைம் மாக வினை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தான்.

"சங்கர்..."

மாகஸினை டீபாயின் மேல் வைத்துவிட்டு நிமிர்ந்து பார்த்தான் அவன்.

"அவசரமாக எங்கேயோ வெளியே போகவேண்டுமாம். ரமணி என்னையும் கூப்பிடுகிறார்..."

"ஓ. கே. வித்யா. நான் கிளம்புகிறேன்!"—அவன் எழுந்தான்.

"நான் நாளைக்கு வீட்டுக்கு வரட்டுமா? அதற்குள் நாலாவது அத்தியாயத்தை எழுதி முடித்து விடுவீர்கள் இல்லையா?"

"முடிக்கிறேனோ இல்லையோ, நாளைக்கு வாயேன். மிஸ்டர் ரமணியையும் அழைத்துக் கொண்டு வாயேன்..."

"அவரைக் கூப்பிட்டுப் பாருங்கள். வந்தால் அழைத்துக் கொண்டு வருகிறேன். இல்லாவிட்டால் நான் மட்டும் வருகிறேன்."

சங்கர் ரமணிக்காகத் தயங்குவது தெரிந்தது.

வித்யா உள்ளே போய் ரமணியிடம் சொன்னாள். அவன் ஷர்ட் பட்டன்களைப் போட்டுக் கொண்டே வெளியே வந்தான்.

"நாளைக்கு வீட்டுக்கு வாருங்களேன் மிஸ்டர் ரமணி"

"பார்க்கலாம் மிஸ்டர் சங்கர். எனக்கு நேரம் சரியாகப் போவதே இல்லை. கிடைத்தபோது வருகிறேன்."

"ஸீ யு தென்..."

"ஸீ யு..."

வித்யாவைப் பார்த்துத் தலையசைத்துவிட்டுச் சங்கர் போய் விட்டான். வெளியே அவன் தன் காரை ஸ்டார்ட் பண்ணும் சத்தம் கேட்டது.

வித்யா உள்ளே போய்ப் புடவையை மாற்றிக் கொண்டு வந்தாள். ரமணி சோபாவில் உட்கார்ந்து எதையோ படித்துக் கொண்டிருந்தான். அவள் அவன் எதிரில் வந்து நின்றாள். நிமிர்ந்து பார்த்தான்.

"கிளம்பலாமா?"

ரமணி கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே "ஏழாகி விட்டதே" என்று இழுத்தான்.

"இங்லிஷ் படம்தானே! இன்னும் ஆரம்பித்திருக்காது. அதிலும் ஜேம்ஸ் பாண்ட் மூவி. எப்போது போனாலும் புரியும்."

"போய்த்தான் ஆக வேண்டுமா வித்யா? எனக்குத் தலையை வலிக்கிற மாதிரி இருக்கிறது."

"எனக்கு ஒன்றுமில்லை. ஜேம்ஸ் பாண்ட் படமே எனக்குப் பிடிக்காது. நீங்கள் ரிசர்வ் பண்ணிக்கொண்டு வந்துவிட்டேன் என்று சொன்னதால் கிளம்பினேன்..."

"ஸாரி வித்யா. நீ புடவையைக்கூட மாற்றிக் கொண்டு விட்டாயே!"

"அதனால் என்ன ரமணி? பரவாயில்லை."

"இப்படி உட்காரேன். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கலாம்."

வித்யா அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள்: "இப்படி என்று தெரிந்திருந்தால் சங்கரையும் இன்னும் கொஞ்ச நேரம் இருக்கச் சொல்லி இருக்கலாம்...."

ரமணி கையிலிருந்த புத்தகத்தை டீபாயின் மேல் போட்டான்:

"எப்போது வந்தான் அவன்?"

"மத்தியானம் ஒரு மணி இருக்கும்." ரமணி சங்கரை அவன் என்றாக்கிக் கொண்டு விட்டதைக் கவனித்தாள் வித்யா. அதை ஒரு பெரிய விஷயமாக எடுத்துக் கொள்ள வில்லை. அவளுக்கு எப்போதுமே அநாவசியமான மரியாதைகளெல்லாம் பிடிக்காது. கூடியவரை அதைத் தவிர்ப்பாள். அதனால் ரமணியின் 'அவ'னில் எந்த உறுத்தலும் தெரியவில்லை.

"ஒரு மணியிலிருந்து ஏழு மணி வரைக்குமா பேசிக் கொண்டிருந்தீர்கள்? அப்படிப் பேசுவதற்கு என்ன விஷயம் இருக்கும் வித்யா?"

அவள் சிரித்தாள்; "எத்தனையோ விஷயங்கள் ரமணி. அவர் தஞ்சாவூருக்குப் போயிருந்தது, அங்கே இருக்கும் தன் நண்பர்களைப் பார்த்தது. இப்போது எழுதிக் கொண்டிருக்கும் நாவலின் மூன்றாவது அத்தியாயத்தில் நிற்பது— எல்லாவற்றையும் பற்றிச் சொன்னார்."

"ம்....."

"அந்த நாவல் நாளையிலிருந்து ஆரம்பமாகிறது. கதை முழுசையும் கேட்டேன். ரொம்ப நல்ல கதை. அவர் எழுத்தில் இன்னும் நன்றாக வரும்.

"ஆபீசுக்கெல்லாம் போகிறதே இல்லையா? இங்கே வந்து இப்படி மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பது தான் வேலை போலிருக்கிறது..."

"ஒரு வாரமாக லீவில் இருக்கிறார். நாளையிலிருந்து தான் ஆபீஸ்..."

"நானும் ஐந்து வருஷங்களாக உன்னுடன் பழகிக் கொண்டுதான் இருக்கிறேன். நீ ஒரு நாள்கூட என்னிடம் சேர்ந்தாற்போல் ஒரு மணி நேரம் பேசினதில்லை."

வித்யா சிரித்துக்கொண்டே, "நீங்களும் பேசுங்களேன் ரமணி. எதைப் பற்றியாவது சொல்லுங்கள், கேட்டுக் கொண்டிருக்கிறேன்" என்றாள்.

"என்னிடமிருந்து சங்கரைப்போல் உன்னைத் திருப்திப் படுத்துகிற பேச்சாக வராது."

"நீ மனசுக்குள் நினைத்துக் கொண்டிருப்பதைச் சொல்கிறேன். உன் செய்கையைச் சொல்கிறேன்."

வித்யாவினால் பேச முடியவில்லை. கல்யாணம் ஆனதிலிருந்து ரமணி இப்படித்தான் சில சமயங்களில் நெருப்பாய்ச் சுடுகிறான். நெருப்பு என்பதைக் காண்பிக்காமல் சிரித்துக் கொண்டே சுடுகிறான். இந்தக் கொஞ்ச நாட்களுக்குள் ஓராயிரம் தடவை இதே மாதிரிப் பேச்சைக் கேட்டுவிட்டாள் வித்யா. சலித்துக்கூடப் போய்விட்டது: சில நேரத்தில் கோபம் வரும். கோபம் வருகிறபோது வாயை மூடிக் கொண்டு இருந்துவிடுகிற வழக்கம். இப்போதும் அப்படியே இருந்தாள். அதன் பின் சாப்பாடு, படுக்கை எல்லாம் அதே மௌனத்தில் நடந்தன.

ரமணி, வித்யாவின் பக்கம் திரும்பக்கூட இல்லை. அன்று அவன், அவள் பக்கம்கூடத் திரும்பாததிலிருந்து ரொம்ப கோபம் என்பது தெரிந்தது.

அறையில் 'நைட் லைட்' நீலத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது. ஏர்கண்டிஷனரின் 'கிர்'ரென்ற சத்தம். அவளுக்குத் தூக்கம் வரவில்லை. அங்கே படுத்துக் கொண்டிருக்கவும் பிடிக்கவில்லை. எழுந்து சத்தப்படுத்தாமல் கதவைத் திறந்து கொண்டு வந்து பால்கனியில் நின்றாள். அங்கே உட்காரும்படி கைப்பிடிச் சுவர் இல்லை. வெறும் கம்பித் தடுப்பு மட்டும்தான். வித்யா, வானத்து நட்சத்திரங்களைப் பார்த்தாள். மூன்று நட்சத்திரங்கள் அழகாகத் தெரிந்தன. உடனே சங்கரின் நினைவு வந்தது.

திடீரென்று அவளுக்கு அப்போது அழ வேண்டும் போலிருந்தது. நன்றாக அழ வேண்டும். உடம்பு குலுங்க அழ வேண்டும். நெஞ்சு வெடித்துச் சிதறும்படி அழ

வேண்டும். ஆனால் அழுகை வரவில்லை. அழுது பழக்கமும் இல்லை. எல்லாம் உள்ளுக்குள்ளேயே இறுகி அடைத்துக் கொண்டு விடுகிற பழக்கம். இப்போதும் அதே அடைப்புதான்.

ரமணியின் இன்றைய பேச்சைத் திரும்ப நினைத்துப் பார்த்தாள். கல்யாணத்துக்கு முன் ஒரு நாள் காரில் சங்கரைப் பற்றிப் பேசிக் கொண்டு வந்தபோது அவன், 'ஐ ஸி, ஓஹோ!' என்று அலட்சியமாகப் பதில் சொன்னது, ஊட்டியில் சுடரில் வந்திருந்த கவிதையை அவனுக்குப் படித்துக் காட்டினபோது பாதியில் பாத்ரூமுக்குப் போகிற சாக்கில் எழுந்து போய்விட்டது, சங்கருக்குக் கடிதம் எழுதப் போவதாக அவள் சொன்னபோது முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டது, இப்போது இன்று பேச்சில் வெளிப்படுத்தியது....

'ரமணி, உங்களுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை. சங்கரைப்போல் இல்லையே என்ற ஏக்கம். இப்படிக் கோபமாய், வெறுப்பாய், வார்த்தைகளாய் வெளிக்காட்டுகிறீர்கள். நீங்கள் அப்படியெல்லாம் பேசவில்லை, எழுதவில்லை என்று நான் எப்போதாவது சொல்லியிருக்கிறேனா? குறைபட்டிருக்கேனா? உங்களால் முடியாத எதையும் எதிர்பார்ப்பதில்லையே! இதையெல்லாம் அன்று நான் பீச்சில் உங்களுக்கு எடுத்துச் சொல்லவில்லையா? மாறுபட்ட நம் ரசனைகளினால் நமக்குப் பேசுவதற்குக்கூட விஷயமில்லாமற் போகிறது என்று தெரியப் படுத்தவில்லையா? எல்லாவற்றையும் நன்றாக, தெளிவாகப் புரிய வைத்துத் திரும்பத் திரும்ப யோசிக்கச் சொன்னது இந்த மாதிரி வருத்தங்களெல்லாம் வரக்கூடாது என்றுதானே ரமணி...'

சங்கரை நினைத்துக் கொண்டாள். 'வெளியே போ' என்று சொல்வதற்குப் பதிலாக கொஞ்சம் மாற்றிச் சொல்லி அனுப்பியிருக்கிறாள். 'ஐயாம் ஸாரி சங்கர்.

நீங்கள் என்னைப் புரிந்து கொள்வீர்கள். ஆனால், ரமணி...?'

'ஒருவேளை சங்கர் வீட்டிலிருப்பது பிடிக்காமல் அவனை அனுப்புவதற்காகத்தான் ரமணி, சினிமாவுக்குப் போக வேண்டும் என்று சொன்னாரோ? முதலில் கிளம்பு என்று அவசரப்படுத்தி விட்டு, ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் தலை வலி என்று ஏன் நிறுத்த வேண்டும்? உண்மையாகவே தலை வலிதானா? என்ன படம் என்று சொன்னார்...?'

படத்தின் பெயரை நினைவு படுத்திக்கொண்டு கீழே இறங்கி ஹாலுக்கு வந்தாள். விளக்கைப் போட்டு, பேப்பரை எடுத்து 'எிட்டி என்டர்டெய்ன்மெண்ட்' பக்கத்தைப் புரட்டினாள். ஒவ்வொரு தியேட்டராகப் பார்த்துக் கொண்டே வந்தாள். எந்தத் தியேட்டரிலும் அந்தப் படம் இல்லை. ஏதாவது தியேட்டர் விட்டுப் போயிருக்கிறதா என்றால் எதுவும் இல்லை. அது வெள்ளிக்கிழமை பேப்பர்.

'ரமணி, நீங்கள் சொன்னது பொய்யா?'

வித்யா விளக்கை அணைத்துவிட்டு பெட் ரூமுக்கு வந்தாள். ரமணியைப் பார்த்தாள். அவன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். கோட் ஸ்டாண்டில் அன்று அவன் போட்டுக் கொண்டு போன பாண்டும், ஷர்ட்டும் இருந்தது. அதன் பாக்கெட்டுகளில் கைவிட்டுப் பார்த்தாள். கட்டிலோடு தலைப் பக்கத்தில் இணைக்கப்பட்டிருந்த ஸ்டாண்ட் மேலேயிருந்த அவன் பர்ஸைத் திறந்து தேடினாள்.

அவன் ரிசர்வ் பண்ணினதாகச் சொன்ன டிக்கெட்டுக்கள் எதிலும் இல்லை.

23

அது ஒரு ஏர்கண்டிஷன் பண்ணப்பட்ட அறையானதால் அதனுள் இரவின் ஆத்மா ஒடுங்கிப் போய்விடும்; பிணம் ஒன்றைக் கிடத்தின மாதிரி ராத்திரி வேளைக்கு உயிரோ, களையோ இருக்காது. சுவர்க் கோழி சத்தம் கேட்காது. தென்னை ஓலைகளின் சலசலப்போ, எங்கோ போகும் கார் ஹாரன்களின் இலேசான ஓசையோ, தெருவில் காம்பவுண்ட் சுவர்களைத் தட்டிக் கொண்டே போகும் கூர்க்காவின் தடிச் சப்தமோ, எந்தப் பறவையாவது எப்போதாவது பாதித் தூக்கத்தில் விழித்துக் கொண்ட குழந்தை மாதிரி அலறும் அலறலோ காதை எட்டவே எட்டாது. வானத்தின் நீலமும், நகரும் மேகங்களும், நட்சத்திரங்களின் மினு மினுப்பும் ஜன்னல் வழியாகக் கண்ணில் படாது. அந்த மூன்று நட்சத்திரங்கள் எங்கே என்று தேட முடியாது. கண்ணாடிக் கதவுகளைச் சாத்தி, கனமான கார்ட்டன்கள் இழுத்து விடப்பட்டிருக்கும் வீட்டில் அவளது அறையில் ஜன்னல் ஓரம் படுத்துக் கொண்டு தூக்கம் வராத ராத்திரிகளில் வானத்தைப் பார்த்துக் கொண்டு, இரவின் சலசலப்புகளை ரசித்துக் கொண்டு பொழுதைப் போக்குவாளே, அந்த மாதிரி இந்த அறையில் தூங்காமல் பொழுதைப் போக்கும் வசதி கிடையாது. ஏர் கண்டிஷனரின் இலேசான 'கிர்' ரென்ற ஓசையும், நீலமாக வழியும் சின்ன பல்பும்தான்.. இரவின் அழகையெல்லாம் ஒடித்துப் போட்டுவிடும் ஏர்கண்டிஷனரின் மேலேயே வித்யாவுக்கு ஒரு வெறுப்பு ஏற்பட்டு விட்டிருந்தது. அதை நிறுத்திவிட்டு, ஜன்னல் கதவுகளை எல்லாம் திறந்து வைத்துக் கொண்டு, நிலா வெளிச்சமும், மாமரக் காற்றும் உள்ளே வர வெளி உலகத்தின் சலனங்களை யெல்லாம் கேட்டுக் கொண்டு படுக்க மாட்டோமா என்றிருக்கும். ஆனால், ரமணிக்கு மார்கழி மாதத்தில் கூட ஏர்கண்டிஷனரின் முழுக் குளிர்ச்சியும் வேண்டும்.

எதிரே சுவரில் பொருத்தப்பட்டிருந்த அந்த சின்ன நீல நிற பல்பையே பார்த்துக் கொண்டிருந்தாள் வித்யா. அவளால் தூங்க முடியவில்லை. மனசில் ஏதேதோ அலைச்சல். அந்த அலைகளைக் கிளப்பிவிட்ட ரமணி, நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் ஏன் எதற்காகப் பொய் சொன்னான் என்று அவள் ஆராய்ந்து கொண்டிருக்கவில்லை. அது பளிச் சென்று புரிந்தது. ரமணியைத் தெரிந்துகொண்ட நாளிலிருந்து அவனுடைய இந்த குணம் — ஒரு தாழ்வு மனப்பான்மையால் வந்த குணம் — அவளுக்குள் ஓர் எரிச்சலை ஏற்படுத்தியது. இப்போது அந்த எரிச்சல் இல்லை. ஆனால், வருத்தம் மட்டும் இருந்தது.

அன்று பீச்சில் உட்கார்ந்து, 'இந்த மாதிரி அசட்டுத் தனங்களை எல்லாம் விட்டுவிடுங்கள் ரமணி. உங்கள் மீது எனக்கிருக்கும் மதிப்பையும், அன்பையும் இந்த மாதிரி செய்கைகளினால் கலைத்து விடாதீர்கள். உலகம் வெகு வேகமாக மாறிக் கொண்டு வருகிறது. அந்த மாற்றத்தின் பாதிப்பை உங்களுக்குள்ளும் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். எதையும் தெளிவாகப் பார்க்கப் பழகுங்கள்' என்று சொன்னாளே... எது சொல்லி என்ன? ரமணி இப்படித்தான் இருப்பான். எதுவும் அவனை மாற்றாது. யாராலும் மாற்றவும் முடியாது. இன்றைய இந்தப் பொய்— ஒரு சாதாரண விஷயத்துக்காக, ஒரு சராசரித்தனத்துடன் சொல்லப்பட்ட பொய் — அதை நிரூபித்து விட்டதே...

வித்யாவிடமிருந்து பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது. சங்கரை நினைத்தபோது கஷ்டமாக இருந்தது. தவறாக எதையும் நினைக்கத் தெரியாத மனசு அது. எது தவறு, எது சரி என்று தன்னைத் திடப்படுத்திக் கொண்டுவிட்ட மனசு ஒரு நந்தினியையும் விரும்பத் தெரிந்த மனசு. எதையும் ஒட்டி நின்றும் விலகிப் போயும் நியாயப் படுத்திப் பார்க்கத் தெரிந்த மனசு. எல்லாவற்றையும் புரிந்து கொள்கிற மதிக்கத் தெரிகிற மனசு.

ரமணியை நினைத்தபோது இன்னும் வருத்தமாக இருந்தது. அவளை ஏன் அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை? ரமணி... தயவு செய்து என் மனசைப் புரிந்து கொள்ள முயலுங்களேன் ... உங்களிடம் நான் தேடும விஷயங்கள் இல்லை என்பது தெரிந்தும், என் மனம் உங்களிடமிருந்து எல்லா விஷயங்களிலும் வேறுபட்டது என்பது தெரிந்தும், ''வித்யா, நீ இல்லாமல் எனக்கு வாழ்க்கையே இல்லை'' என்று நீங்கள் உருகின உருகலுக்குக் கரைந்து, உங்கள் ஆசைகளுக்கு இணங்கி, விருப்பங்களுக்கு இறங்கி, என்னுடைய எரிச்சல்களை எல்லாம் புதைத்துக் கொண்டு — என்னை வெளிக் காட்டாமல் உங்களை எல்லா விதங்களிலும் அநுசரித்துக் கொண்டிருக்கும் எனக்கும் மனசு உண்டு என்பதைத் தெரிந்து கொள்ளுங்களேன். அதில் இன்னும் சில சின்னச் சின்ன ஆசைகள் மீதமிருக்கின்றன ரமணி. அவற்றையும் அழித்துக் கொண்டு விடு என்றால்...என்னால் முடியாது. கதைகள், கவிதைகள், நல்ல திரைப்படங்கள் — இவற்றில் எனக்கிருக்கும் ஆர்வத்தைக் குறைத்துக் கொள்ளமுடியாது. அவற்றைப் பற்றிப் பேசாமல் இருக்க முடிவதில்லை. என் ரசனைக்கு ஏற்ற ஒருவர் கிடைத்திருக்கிறார். அவரிடம் பேசுகிறேன். உங்களுக்கு இவற்றில் ஈடுபாடு இருக்குமானால், நீங்களே எனக்குச் சரியாக, என் ரசனைகளைப் புரிந்து கொண்டு பேசுவீர்களானால் — நான் உங்களிடம், மட்டுமே பேசிக் கொண்டிருப்பேன். மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பேன்.....

ஆனால், இது உங்கள் வீடு. உங்களுக்குப் பிடிக்காததை இதில் செய்ய எனக்கு இஷ்டமில்லை. அப்படிச் செய்து இதில் எனக்கும் உரிமையுண்டு என்று காட்ட நான் விருப்பப்படவில்லை. அதனால் சங்கர் இங்கே வர மாட்டார். அவரை வர வேண்டாமென்று சொல்லிவிடுகிறேன். அவரை உங்களுக்குத் தெரியாது. இன்றுகூட ரமணியின் மனசின் படி நீ நடந்து கொள்ள வேண்டும் என்று

சொன்னவர் அவர். அவரையா? அவரிடமா...? எப்படி சொல்லப் போகிறேன் நான்?

'சங்கர்...உங்களிடம் வார்த்தைகளால் சொல்லக்கூட வேண்டாம். ஒரு கோடி காட்டினால் போதும். உங்களுக்குப் புரியும். எதையும் சுலபமாகப் புரிந்து கொண்டு விடுகிற உங்களுக்கு இது ஒரு கஷ்டமில்லை. ஆனால் எனக்குத்தான் சொல்ல மனசு வரவில்லை. உங்களைத்தான் இங்கே வர வேண்டாம் என்று சொல்லுகிறேனே தவிர, என்னால் உங்கள் வீட்டிற்கு வராமல் இருக்க முடியாது. உங்களைப் பார்க்காமல், பேசாமல் இருக்க முடியாது. நான் அங்கே வருவேன் சங்கர். முடிந்த போதெல்லாம் வருவேன். வழக்கப்படி பேசுவோம் சங்கர். நிறையப் பேசுவோம்...!'

ராத்திரி முழுவதையும் இதே யோசனைகளுடன் தூக்கம் இல்லாமல் தள்ளியதால் காலையில் எழுந்திருக்க முடியாமல் உடம்பு வலித்தது. ஆனால் ரமணி எட்டு மணிக்கெல்லாம் கிளம்பியாக வேண்டும். அதற்குள் அவனுக்குத் தேவையான சில உதவிகளைச் செய்து முடிக்க வேண்டும்.

அவள் தன் கடமைகள் என்று நினைத்த எதிலிருந்தும் தவறாமல் செய்து விட்டுத்தான் ஆபீசுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள். இருந்தாலும் ரமணிதான் வற்புறுத்தி வேலையை விட்டுவிடச் சொல்லி விட்டான். அம்மாவும், ''உன் பணம் தேவையில்லை வித்யா. அப்பாவே இப்போது குறை இல்லாமல் எல்லாம் செய்கிறபோது ரமணியின் இஷ்டப்படி தான் நடந்துகொள்ளேன்'' என்று அவனுக்கு ஆதரவாக நின்றாள்.

''வீட்டில் காலை எட்டிலிருந்து சாயந்திரம் ஆறுவரை என்ன செய்வது ரமணி? நான் போய்விட்டு வருகிறேன்'' என்று கேட்டுப் பார்த்தாள்.

ரமணி சம்மதிக்கவில்லை. ''அந்தப் பணம் வந்து ஆக வேண்டியது என்ன வித்யா? அதுவும் நான் இந்தப் பெரிய

பதவியில் இருக்கும்போது நீ வேலைக்குப் போனால் யாராவது ஏதாவது சொல்லுவார்கள்.''

''அன்றைக்கே வேலைக்குப் போக நான் உங்களிடம் அனுமதி வாங்கிக் கொள்ளவில்லையா?''

''அப்போது நீ சொன்ன காரணம் வேறு. அம்மாவிற்கும் தங்கைகளுக்கும் என் சம்பளம் உதவியாக இருக்கும் என்றாய். அதனால் சரி என்றேன். இப்போது அவர்களே வேண்டாமென்கிறபோது எதற்கு? நாலு பேர்களுக்கு நடுவில் நின்று கொண்டு, அதட்டல்களுக்கெல்லாம் பணிந்து கொண்டு... வேண்டாம் வித்யா...''

ஆபீசுக்குப் போவதை ஒரு விடுதலையாக உணர்ந்தவள் அவள். வீடு, கணவன், சமையல், குழந்தை என்ற அதே பரம்பரை வழக்கத்தில் தன் வாழ்க்கையும் முடிந்து போகும் என்று அவள் நினைக்கவே இல்லை. முதல் நான்கு நாட்கள் அந்தப் பெரிய வீட்டில் சுற்றி வந்த வெறுமை அவளுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. வெறுப்பாக இருந்தது. இப்போது அந்த வெறுப்பு, வேதனை எல்லாம் உள்ளுக்குள்ளேயே குளிருக்கு அடங்குகிற மாதிரி ஒடுங்கிக் கொண்டு விட்டது.

வித்யா எழுந்திருக்கப் பிடிக்காமல் படுக்கையை விட்டு எழுந்தாள். ரமணி இன்று அவள் எழுப்பும்வரை காத்துக் கொண்டிருக்கவில்லை.

கீழே இறங்கி வந்தபோது அவன் குளித்து உடை மாற்றிக் கொண்டு கிளம்பத் தயாராகி விட்டிருந்தான். சமையலறைக்குப் போய், சமையற்காரன் கலந்து வைத்திருந்த காபியை எடுத்துக் கொண்டு வந்தாள். அவனிடம் ஒரு கோப்பையைக் கொடுத்தாள்.

எதிரே உட்கார்ந்து தன் கோப்பையை எடுத்து உறிஞ்சினாள். அப்போது பேப்பர் பையன் சுடரை உள்ளே போட்டு விட்டுப் போனான். வித்யா குடித்துக் கொண்டிருந்த காபியை வைத்து விட்டு எழுந்து போய் சுடரைக் கொண்டு

வந்தாள். பக்கங்களை வேகமாகத் திருப்பி சங்கரின் நாவலைத் தேடினாள். கதைக்குப் போடப்பட்டிருந்த படத்தை மட்டும் பார்த்தாள். சங்கர் ஒரு பக்க முன்னுரை எழுதியிருந்தான். அதைப் படிக்கலாமென்று சரியாகச் சாய்ந்து உட்கார்ந்து கொள்ள நிமிர்ந்தபோது ரமணி பேப்பரைத் தாழ்த்திக் கொண்டு அவளை ஒரு மாதிரிப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அந்தப் பார்வையில் அவளுக்கு ஏதேதோ தோன்றியது. சுடரை மூடி வைத்தாள். மீதி காபியைக் குடிக்கப் பிடிக்காமல் ட்ரேயை எடுத்துக் கொண்டு எழுந்தாள். போகும்போது, 'எதற்காகக் கதையைப் படிக்காமல் மூடி வைத்தோம்' என்று யோசித்தாள். ஏதோ தவறு செய்கிற உணர்ச்சியாலா? அல்லது ரமணியின் பார்வையாலா? அதனால் பாதிக்கப்படாததாகக் காட்டிக் கொண்டு கதை முழுசையும் படித்து விட்டு வந்திருக்க வேண்டும். என்ன கோழைத்தனம் அது? வித்யா, நீயா அப்படிச் செய்தாய்?'

ரமணி உள்ளே வந்து, நான் தொழிற்சாலைக்குப் போகவில்லை. வெளியில் ஒரு வேலையாகப் போகிறேன். இரண்டு மணிக்கு வருகிறேன். காரியர் அனுப்ப வேண்டாம்'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டான்.

அவன் கார், காம்பவுண்டை விட்டுப் போனதும் வித்யா மாடிக்குப் போய் குளித்தாள். தலையைக் காய வைத்துக் கொண்டே கர்ட்டனைத் தள்ளிவிட்டு ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். பக்கத்து வீட்டு வேப்பமரம். காற்றுக்குத் தன்னை அசைத்துக் கொண்டது. சித்திரை மாசமானதால் மரமே பூவாகிவிட்டதுபோல் காணப்பட்டது. மாமரத்தில் ஒளிந்து கொண்டு அக்கூ பட்சி கூவியது. வீட்டில் எப்போதும் அந்தப் பட்சிக்கு எதிர் குரல் கொடுப்பாள். அப்போது அதே மாதிரி உதட்டைக் குவித்து அக்கூ என்று கத்தத் தோன்றவில்லை. சில நிமிஷங்களில் வானத்தின் நீலப் பின்னணியில் அது தனியாகப் பறந்து போவதைப்

பார்த்தாள். அது தூரப் போகப் போக உருவத்தில் குறைந்து கொண்டே போன காட்சி அழகாக இருந்தது. அதற்கு இந்த இடம் இல்லையென்றால் இன்னோர் இடம். மாமரத்தை விட்டால் வேறு ஏதாவது மரம். இந்தப் பறவைகளுக்குத் தான் எவ்வளவு சுதந்திரம்!

டெலிபோன் அடிப்பது கேட்டது. கீழே போய் ரிஸீவரை எடுத்தாள். சங்கர்.

"காலையிலிருந்து உன் போன் காலுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். இதற்கு மேலும் பொறுமை இல்லை. அதனால் நானே பண்ணி விட்டேன். கதையைப் படித்தாயா வித்யா?"

"இன்னும் இல்லை."

அந்தப் பதில் அவனை ஏமாற்றியது. "இல்லையா...?"

"ஆமாம், சங்கர். கொஞ்சம் மனசு சரியில்லை. எதுவும் பண்ணவும் தோன்றவில்லை."

அவன் பேசாமல் இருந்தான். என்ன விஷயம் என்று கேட்கவில்லை. சொல்லக் கூடியதாக இருந்தால் அவளே சொல்லுவாள் என்று எதிர்பார்த்தான்.

"நீங்கள் இப்போது இங்கே வரமுடியுமா சங்கர்?"

"இப்போதா வித்யா? சாயங்காலமாக ஆபீஸ்விட்டு வந்தால் போறாதா?"

"இல்லை. இப்போதே வரவேண்டும். இன்னும் பத்து நிமிஷத்தில்."

"சரி. வருகிறேன்."

அவன் வரும்வரை அவனிடம் எப்படிப் பேச வேண்டும் என்பதை யோசித்தாள். அவன் மனசு புண்படாமல் விஷயத்தைச் சொல்லும் வழியைத் தேடினாள். ஆனால் சங்கரை நேரில் பார்த்ததும் சொல்வதற்குத் தேடின சரியான வார்த்தைகள் எல்லாம் மறந்து போய் விட்டது. அவன்

அவளைப் பார்த்ததும், "உடம்பு சரியில்லையா வித்யா?" என்று கேட்டான்.

"உடம்புக்கு ஒன்றுமில்லை சங்கர்."

"பின்...?"

"உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும். எப்படிச் சொல்வதென்று வார்த்தைகளைத் தேடுகிறேன்."

சங்கர் அவளைப் பார்த்து நிதானமாகச் சிரித்தான்: "என்னிடம் எதைச் சொல்லவும் நீ தயங்க வேண்டாம் வித்யா. வார்த்தைகளுக்காக அலையும் அலைச்சலை விட்டு விட்டு மனசில் இருப்பதை நேராகச் சொல்லலாம்."

"சரி. சொல்லி விடுகிறேன். ஆனால் இது என் மனசில் இருப்பது இல்லை. உங்களிடம் சொல்ல வேண்டுமென்ற துடிப்பு மட்டும்தான் என் மனசிலிருந்து வருகிறது. சொல்லப் போகிற வார்த்தைகள் இல்லை."

"சொல்லு வித்யா."

"நீங்கள் இனிமேல் இங்கே வர வேண்டாம் சங்கர்." அவன் புருவங்கள் சுருங்கின. அவள் முகத்தில் கண்களில் எதையோ தேடினான்.

அந்தப் பார்வையில் அவள் துவண்டு போனாள்: "மேலே வேறு எதுவும் கேட்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்."

அவன் எதுவும் கேட்கவில்லை. அமைதியாயிருந்தான். முகம் மட்டும் வேதனையில் நனைந்தது. அந்த மௌனத்தை வித்யாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"நீங்கள் இங்கே வர வேண்டாமென்று சொன்னேனே தவிர, என்னைப் பார்க்கக் கூடாது பேசக்கூடாது என்று சொல்லவில்லையே! நான் உங்கள் வீட்டுக்கு வருகிறேன். நாம் பேசுவோம்."

அவன் தன்னை இலேசாக்கிக் கொள்ள முயற்சி செய்தான். 'இது என்ன பெரிய விஷயம் வித்யா? இதை நான் ரொம்ப கலபமாக எடுத்துக்கொள்கிறேன். இந்த விஷயம் என்னை வருத்தவே இல்லை. பார்' என்ற பாவனையை முகத்தில் வரவழைத்து சிரித்துக் கொண்டே எழுந்தான். வித்யாவுக்குப் புரிந்தது. தனக்காக அவன் வருத்தத்தை மறைத்துக் கொண்டு சிரிப்பது தெரிந்தது.

"ஒ.கே. நீ வரச் சொன்னாய், வந்தேன். போகச் சொல்கிறாய், போகிறேன். வரட்டுமா, வித்யா?"

அவன் கார், காம்பவுண்டை விட்டு வெளியே போன உடனேயே ரமணியின் கார் உள்ளே வந்தது. ரமணி, சங்கரைப் பார்த்து விட்டான். சங்கர் அவனை மீறிக் கொண்டு போக இஷ்டப்படாமல் காரைக் காம்பவுண்டிற்கு வெளியில் நிறுத்திவிட்டு கீழே இறங்கினான். அதே மாதிரி ரமணியும் காரை நிறுத்திவிட்டு வந்து பேசுவான் என்று எதிர் பார்த்தான். ஆனால், ரமணியின் கார் நிற்காமல் உள்ளே போய்விட்டது. சங்கர் திரும்ப காரில் ஏறி ஸ்டார்ட் பண்ணினான். 'வித்யா, இது உன் விஷயம், ஆனால் இதைக்கூட நான் பெரிசுபடுத்திப் பார்க்க விரும்பவில்லை' என்று சொல்லிக் கொண்டான்.

ரமணி 'போர்டிகோ'வில் காரை நிறுத்திவிட்டு உள்ளே வந்தபோது வித்யா மாடிக்குப் போய் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தாள். சங்கர் சொல்லிவிட்டுப் போன வார்த்தைகள் அவள் மனசில் அம்பாகக் குத்திக் கொண்டு நின்றன. அந்த வலியில் உயிர் போய்விடும் போலிருந்தது.

'நீ வரச் சொன்னாய், வந்தேன். போகச் சொல்கிறாய், போகிறேன்.'

ரமணி வந்ததை அவள் கவனித்தாள். கட்டிலில் எழுந்து உட்கார்ந்தாள். அவன், அவளை ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டு பாத்ரூமுக்குப் போனான்.

'சங்கரை அவன் எதிரே பார்த்திருக்கக்கூடும்' என்று வித்யா நினைக்கவில்லை. அவன், பாத்ரூமை விட்டு வந்ததும், "சாப்பிட வருகிறீர்களா?" என்று சாதாரணமாகக் கேட்டாள்.

அவன் பதில் சொல்லாமல் கீழே இறங்கிப் போனான்.

24

இரண்டு நாட்கள் வரை சங்கர் சொல்லிவிட்டுப் போன, 'வரச் சொன்னாய், வந்தேன்; போகச் சொல்கிறாய்? போகிறேன்!' அவள் மனசைச் சுற்றிக்கொண்டே இருந்தது. அவன் குத்திவிட்டுப் போன அம்பின் வலி நிமிஷத்திற்கு நிமிஷம் எட்டிப் பார்த்தது.

காலையில் பல் தேய்க்கும்போது, காபி குடிக்கும்போது வாசலில் வந்து நிற்கும்போது, குளிக்கும்போது, தலைவாரிக் கொள்ளும்போது, சாப்பிடும்போது, ரேடியோ கேட்கும் போது, படுத்துக் கொள்ளும்போது, பாதி தூக்கத்தில் கூட திடீரென்று அந்தக் குரல் கேட்கும்:

'வரச் சொன்னாய், வந்தேன்; போகச் சொல்கிறாய், போகிறேன்...வரச் சொன்னாய்...போகச் சொல்கிறாய்... வரச்...'

வித்யா உதறிவிட்டுக் கொள்வாள். அந்தச் சொற்களை யெல்லாம் உதிர்த்துக் கொண்டு திரும்பப் படுத்துக்கொள் வாள். காதுக்கருகில் அதே குரல்...

ரமணி அவளைக் கவனித்துக் கொண்டு வந்தான். அவளது நிலையில்லாத செயல்கள், வருத்தமான முகம், ராத்திரி தூக்கமில்லாமல் படுக்கையில் புரளும் புரளல், திடீரென்று எழுந்து உட்கார்ந்துவிட்டுத் திரும்பப் படுத்துக்

கொள்ளும் படுக்கை—எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான். வாய் திறந்து ஒன்றும் கேட்கவில்லை. கேட்கத் தயக்கமாக இருந்தது. அன்று சங்கரை அனுப்ப, சினிமாவுக்குப் பண்ணிக் கொண்டு வந்திருப்பதாகச் சொன்ன பொய்யை அவள் கண்டுபிடித்து விட்டது. அவனுக்குத் தெரியாது. தன் மனத்தில் இருக்கும் சந்தேகம் அவளுக்குத் தெரியாது என்றே நினைத்துக் கொண்டிருந்தான். அதனால் எதையாவது கேட்டு ஒன்றுமில்லாமல் இருந்து விட்டால் அதன்பின் வித்யா தன்னைத் திரும்பிக் கூடப் பார்க்கமாட்டாள் என்பது அவனுக்குத் தெரியும். அவளுக்கு எந்தவிதமான போலித் தனங்களும் கிடையாது. அவள் மனசு சுத்தமானது. மனத்தில் இருப்பது தான் பேச்சில் வரும். எல்லாரிடமும் தாராளமாகப் பேசுவாள். சுலபமாகப் பழகுவாள் என்பதெல்லாம் தெரியும். அதனால் சங்கர் வருவதையும், பேசுவதையும் தனிப்படுத்திப் பார்த்து எந்த அர்த்தத்தையும் புரிந்து கொள்ள முடியாமல் தவித்தான். வாய் திறந்து கேட்டுத் தெளிவு படுத்திக் கொள்ளாதனாலேயே மனசு எருமை இறங்கின குட்டையாகிக் கொண்டிருந்தது.

'சங்கர் தினமும் வருகிறானோ? வந்து என்ன செய்கிறான்? வெறும் பேச்சுதானா? பேச்சு மட்டும்தானா? இதை எப்படித் தெரிந்து கொள்வது? கேட்டு, வித்யா ஒன்றுமில்லை என்பதைக் காட்டிவிட்டால் அவள் மனசிலிருந்து கீழே சரிந்து எங்கோ போய் விழுந்துவிட வேண்டியதுதான். அதன் பின் திரும்ப ஏறுவது என்பது கனவில் கூட நடக்காது. வித்யாவின் மனசின் உயரத்திற்கு ஏறி இடம் பிடித்துக் கொள்வதென்பது அவ்வளவு சுலபமான விஷயம் இல்லை. இந்த சங்கர் மட்டும் எப்படி இடம் பிடித்தான்? தன் உருவத்தால் மட்டுமா? அந்த உயரமும், வெள்ளை நிறமும், எடுப்பான முகமும்தான் காரணமா? அவள் மனசில் அவன் இருப்பது நிஜம்தானா? இதை எப்படி அறிவது? வேலைக்காரர்களைக் கேட்டுத் தான் அவர்கள் எப்படிப் பழகுகிறார்கள் என்பதைக்

தெரிந்து கொள்ள முடியும். சி! அது எவ்வளவு கேவலமான செய்கை. கூடாது. மெதுவாக வித்யாவின் மனசைத் தூண்டிப் பார்த்தால் என்ன? உண்மை வெளிப்படுமா? 'வித்யா, நீ உண்மையைச் சொல்வாயா? தயவு செய்து சொல்லேன். உண்மை என்னவாக இருந்தாலும் என்னால் உன்னை விட முடியாது. உன்னை மன்னிக்க, நடந்தவற்றை மறக்க எனக்கும் மனப்பக்குவம் உண்டு. உண்மையைச் சொல்லி, எனக்குள் எரியும் நீயை அணை.'

அவளோடு பேசி மூன்று நாட்கள்கின்றன என்பதை நினைத்துக் கொண்டபோது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'எப்படி இருக்க முடிந்தது என்னால்? அவளோடு பேசாமல் இருந்தது நானா? நான் தானா? எப்படி முடிந்தது?' உடனே அவளோடு பேச வேண்டும் போலிருந்தது. அந்த உடம்பை அணைத்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. அதன் மென்மையில் தன்னைப் புதைத்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது.

மெதுவாகத் திரும்பிப் பார்த்தான். வித்யா தூங்கவில்லை என்பது அவளது உடம்பு அசைவதிலிருந்து தெரிந்தது. பக்கத்துத் தலையணையிலிருந்த அவள் தலையை எடுத்துத் தன் தோள்மேல் வைத்துக் கொண்டான். தலையைத் தடவிக் கொடுத்தான். கன்னத்தில் உதடுகள் உரசக் காதருகில் போய் "வித்யா..." என்று தடுமாறினான்.

"ம்..."

"இரண்டு நாளாக ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?"

"ஒன்றுமில்லையே...."

"என்கிட்டே சொல்லக் கூடாதா?"

"இரண்டு நாளாக நீங்கள் ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்?"

"அதனாலா, அதனால் மட்டும்தானா வித்யா?"

அவள் தன் மார்பில் முகத்தைத் தேய்த்துக் கொண்டு அழ வேண்டும் என்று அவன் எதிர்பார்த்தான். 'நான் என்ன தப்பு பண்ணினேன் ரமணி? நீங்கள் ஏன் இப்படி முகத்தைத் திருப்பிக் கொண்டு போகிறீர்கள்? எதுவானாலும் என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் செய்ய மாட்டேன். என்னோடு பேசுங்கள் ரமணி. தயவு செய்து பேசுங்கள்' என்று கெஞ்ச வேண்டுமென்று ஆசைப்பட்டான். ஆனால் வித்யா அந்த மாதிரியெல்லாம் நடந்து கொள்கிறவள் இல்லை. அவளால் அப்படி இறங்கி வர முடியாது. அவள் இது கேட்டதே அதிசயம்தான். அவள் மனசிலிருக்கும் எது தான் பேச்சாக வெளிவந்திருக்கிறது?

ரமணி அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்: "ஸாரி வித்யா. இனிமேல் உன்னிடம் கோபப்பட மாட்டேன். பேசாமல் இருக்கமாட்டேன். சரியா?..."

அவன் அவளை நிமிர்ந்து பார்த்து இலேசாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் அவன் மனம் குளிர்ந்து போனாலும் உள்ளே நெருடல் இருந்து கொண்டே இருந்தது. சங்கர் தினமும் வருகிறானா என்று தெரிந்து கொண்டு விட வேண்டுமென்ற துடிப்பு. வந்து என்ன செய்கிறான் என்ற உறுத்தல். வெறும் பேச்சுமட்டும்தான் என்றால் ஒரு பேச்சுக்காகவா ஒருவன் ஓடிவருவான்? ரமணியால் நம்ப முடியவில்லை. ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் வெறும் பேச்சில் மட்டும் இத்தனை ஆழமான அன்பும், நட்பும் ஏற்பட்டுவிட முடியாது என்பதில் அவன் நிர்மானமாக இருந்தான். ஆம், அவனைப் பொறுத்தவரை அது முடியாது தான். வித்யாவைத் தூர வைத்தே இத்தனை நாட்கள் பேசிக் கொண்டிருந்திருக்க முடியாது. வெறும் மனசை மட்டும் நெருங்கி விட்டுச் சும்மா இருக்க அவனால் முடியாது. அதனால் மற்றவர்கள் விஷயத்திலும் அது சாத்தியமில்லை என்று மட்டுமே நினைக்க முடிந்தது. அது ஏன் சாத்தியமாக இருக்கக் கூடாது என்று எண்ணிப் பார்க்க மறுத்தது.

அதுவும் சங்கரின் உயரமும், சிவப்பும், முன் நெற்றியில் வந்துவிழும் முரட்டு முடியும், எழுத்தும், புகழும் வித்யாவைப் போன்ற ஒரு புத்தகப் பைத்தியத்தைச் சலனப்படுத்தாமல் இருக்கவே முடியாது என்று திடமாக நம்பினான். அதே போல் அவளுடைய அழகும், அது மற்றவர்களை அலைக் கழித்த விதத்தையும் நேரில் பார்த்திருக்கிறான் அவன்.

காலேஜுக்குப் போகும்போது அவள் பின்னால் போன வர்களின் வரிசை அவனுக்குத் தெரியும். காரையும் ஸ்கூட்டரையும் வைத்துக் கொண்டு லிஃப்ட் கொடுக்கப் போட்டி போட்டுக் கொண்டு தெருக்கோடியிலேயே தவம் கிடந்த சுரேஷை, ஜெயராமனை, அவள் வாசலுக்கு வர மாட்டாளா என்று ஏங்கிக் கொண்டு நின்ற எதிர் வீட்டு ராம கிருஷ்ணனை, அவள் டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்டில் சேர்ந்தாள் என்பதற்காகவே அதே நேரத்தில் சேர்ந்து உருப்படியாக டைப்ரைட்டிங்கும் கற்றுக் கொள்ளாமல், அவள் காதலும் கிடைக்காமல் தவித்த ஸ்ரீராமை, அவளது டெலிபோன் நம்பரைத் தெரிந்து கொண்டு தினமும் காலையிலும் மாலையிலும் அவளுக்கு போன் பண்ணி 'ஐ லவ் யூ பேபி' என்று உளறிக் கொண்டிருந்த பெயர் தெரியாத அந்த மனிதனை இன்னும் அவள் பார்வைக்காக அவள் போன இடங்களுக்கெல்லாம் பின்னாலேயே போன ஒரு பெரிய கூட்டத்தையே அவனுக்குத் தெரியும். அவள் அவர்களையெல்லாம் எப்படி அலட்சியப்படுத்தி முட்டாளாக்கினாள் என்பதும் தெரியும்.

"ஐ லவ் யூ வித்யா, ப்ளீஸ் டெல் மி தட் யு ஆல்ஸோ லவ் மீ' என்று காலேஜ் விலாசத்திற்கு எழுதினவனின் விலாசத்தோடு வந்திருந்த ஒரு இன்லண்ட் லெட்டரைக் கொண்டு வந்து அவனிடமே காட்டியிருக்கிறாள் அவள். 'யு வில்லி' என்று பதில் எழுதி அதை போஸ்ட் பண்ணப் போவதாகவும் சொன்னாள். "வேண்டாம் வித்யா. எதற்கு வீண் வம்பு? இவையெல்லாம் ஒரு சின்ன இடம் கிடைத்தால் போதும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள். இந்த பதிலை

வைத்துக் கொண்டே ஊர் முழுசும் வித்யா எனக்கு லவ் லெட்டர் எழுதியிருக்கா என்று சொல்லிக் கொண்டே போவான்" என்றி தடுத்ததும் ஞாபகமிருந்தது.

"சொன்னால் சொல்லட்டுமே! சொல்கிறானா என்று தான் பார்ப்போமா..." என்று தைரியமாக அனுப்பியும் வைத்தாள். அதன்பின் அந்த ஆள் அட்ரஸையே காணோம். இப்படி சாமர்த்தியமாக எல்லாரையும் தவிர்த்துக் கொண்டு, ஒரு சிரிப்பில் அலட்சியப்படுத்தி, மேலே ஏறி நின்று ஒரு கர்வத்தோடு பார்த்த அவளுடைய அழகு அந்த சங்கரை மட்டும் வெறுமையாக விட்டுவிடுமா. அவனுக்கு நம்பிக்கை இல்லை. அவன் எதை எதையோ கற்பனை பண்ணிப் பார்த்துத் தவித்துக் கொண்டிருந்தான். அதெல்லாம் நடந்திருக்கக் கூடாது என்பதைவிட நடக்காமல் போய்விட்டால் தான் இன்னும் அதிக ஏமாற்றமடைவான் போல் தெரிந்தது. அந்த அளவிற்கு அவன் மனத்தில் வித்யாவையும், சங்கரையும் பற்றின கணிப்பு ஆழமாக இறங்கிப் போயிருந்தது.

அதே சமயத்தில் மார்பின் குறுக்கில் கிடந்த அவளது தந்தம் போன்ற கையும், உடம்பை அழுத்திக்கொண்டிருந்த அந்த உடம்பின் மென்மையும், எப்போதும் வரும் சந்தன வாசனையும் ரமணியை நான்கு நாட்களுக்கு முந்தின ரமணியாக, அவள் உடம்பை மூர்க்கமாகக் காதலிக்கும் ரமணியாக, அவள் வேண்டும் என்ற ஆர்வத்தில், "வித்யா ... ப்ளீஸ்" என்று கெஞ்சும் ரமணியாக ஆக்கிக் கொண்டிருந்தது. அந்த மயக்கத்தையும் மீறினதாக சங்கர் அவன் மனத்தை உறுத்திக் கொண்டு நிற்கவே, மெதுவாகக் கேட்டான். தன் கேள்வியில் எந்த நோக்கமும் வெளிப்படாமல் ஜாக்கிரதையாகக் கேட்டான்:

"சங்கர் வருவதே இல்லையா வித்யா?"

வித்யா, 'இல்லை' என்று தலையாட்டினாள்.

"எத்தனை நாளாக?"

"இரண்டு மூன்று நாளாக..."

"நீயும் அவன் வீட்டுக்குப் போகவில்லையா?"

"இல்லை..."

"ஏன்?"

"நேரம் கிடைக்கவில்லை."

"போன் பண்ணியாவது பேசினாயா?"

"இல்லை..."

"ஏன்?"

"போன் பண்ணவும் தோன்றவில்லை..."

"ஐ.ஸி. திங்கட்கிழமை அவன் நம் வீட்டை விட்டுப் போகும்போது தான் நான் உள்ளே வந்தேன்..."

இதை எதற்காகச் சொல்லவேண்டுமென்று யோசித்தாள் அவள். அன்று அவன் வந்துவிட்டுப் போனது எனக்குத் தெரியும் என்று தெரியப்படுத்தவா? எதற்காக?

"அன்று தான் கடைசியாக வந்திருந்தார்."

ரமணி பேசாமல் இருந்தான். 'நேற்று மத்தியானம் நான் வீட்டுக்கு வந்து, ஒரு வேளை அவனைப் பார்க்க முடிந்திருந்தால் நேற்றுதான் கடைசியாக வந்தான் என்று சொல்லியிருப்பாய்.' அவளிடமிருந்து வந்த பதில்களிலிருந்து புதுசாக எதையும் தெரிந்து கொள்ள அவனது தவிப்பு இன்னும் அதிகமாயிற்று.

சில நிமிஷங்களில் வித்யா தூங்கி விட்டாள். ரமணிக்குத் தூக்கம் வரவில்லை. பால்கனியில் போய் நின்று கொண்டான். மழை வரும் மூட்டம் வானத்தில் தெரிந்தது. வெறும் கறுப்பு. நட்சத்திரங்கள் ஒன்றுகூட இல்லை. காற்றின் சிலு சிலுப்புடன் ஒரிரண்டு தூறல்கள் அவன்மேல் தெறித்தன. அவன் கைகளைக் கட்டிக் கொண்டு விவேகானந்தர் போஸில் எதன் மீதும் பொருந்தாத வெறுப்புப் பார்வையுடன் நின்று கொண்டிருந்தான். மழை, ஊசிகளாக தடித்து பின் ஆணிகளாகப் பூமியைக் குத்தின. சாரல், பாதி பால்கனி வரை

அடித்தது. அவன் நின்ற இடத்தை விட்டு நகரவில்லை. பைஜாமாவும், ஜிப்பாவும் ஈரமானது கூட தெரியவில்லை.

"வித்யாவுக்குத் துணை என்று யாரையாவது வரவழைத்தால் என்ன? அவளுக்கு உதவியாகவும் இருக்குமே? யாரை அழைப்பது? அப்பாவும், அம்மாவும் ஊரைவிட்டு வரமாட்டார்கள். பின் யாரை வரவழைப்பது?

ஊரில் இருக்கும் தன் ஒன்றுவிட்ட அத்தையின் ஞாபகம் வந்தது. அவள் தனியாகத்தான் இருக்கிறாள். வேளைக்கு ஒரு வீட்டில் சாப்பிட்டுக் கொண்டு, சொல்லும் வேலைகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறாள். 'அவளை வரவழைத்தால் என்ன? வித்யாவிடம் என்ன சொல்லி வரவழைக்க முடியும்? உனக்கு உதவியாக இருக்கட்டுமென்று வரவழைத்தேன் என்று சொல்லிவிட வேண்டியதுதான்...'

"என்ன ரமணி இது? இந்தச் சாரலில் வந்து நின்று கொண்டிருக்கிறீர்கள்?"—வித்யாவின் குரல் பின்னால் கேட்டது. அவன் திரும்பவில்லை. அவள் பக்கத்தில் வந்து அவனைத் தொட்டுப் பார்த்தாள். "உடை முழுசும் நனைந்து, தெப்பமாகி விட்டது. அதுகூடத் தெரியாமல் நின்று கொண்டிருக்கிறீர்களே...உள்ளே வாருங்கள்..."

அவன் உள்ளே வந்தான். அவள் விளக்கைப் போட்டுத் துடைத்துக் கொள்ள டவலும் வேறு உடையும் எடுத்துக் கொடுத்தாள். அவன் குளிரில் நடுங்கினான். வித்யா ஏர்கண்டிஷனரை ஆஃப் பண்ணினாள். அவனது ஈர உடைகளைச் சுருட்டி வைத்துவிட்டு, அவன் படுத்துக் கொண்டதும் போர்வையை எடுத்துப் போர்த்தினாள்.

"கீழே போய் சூடாகக் காப்பியோ, போர்ன்விடாவோ கொண்டு வருகிறேன் இருங்கள்..."

அவன் மறுக்கவில்லை. அவள் கொடுத்த சூடான போர்ன்விடா, உடம்புக்கும், மனசுக்கும் இதமாக இருந்தது. குடித்து விட்டுப் படுத்துக் கொண்டபோது நெஞ்சில் ஒரு நெகிழ்ச்சி: இவளா? 'இவளையா...?' அவனால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

மறுநாள் அத்தையை அனுப்பச் சொல்லி அம்மாவுக்குக் கடிதம் எழுதிப் போட்டுவிட்டு வித்யாவிடம் சொன்னான். அவள், அவனை ஒரு நிமிஷம் நிதானமாகப் பார்த்துச் சிரித்து விட்டு உள்ளே போய்விட்டாள்.

25

சிங்கரின் இரண்டு வாரக் கதையையும் ஒன்றாகச் சேர்த்துப் படித்து முடித்த வித்யா, சந்தோஷம் தாங்காமல் அவனுடைய ஆபீசுக்கு போன் பண்ணினாள்.

'என்ன எழுத்து சங்கர்!' எப்படி இந்த மாதிரி எழுத வருகிறது? எழுதினால் இப்படிப்பட்ட எழுத்தாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பேனாவை இரண்டாக ஒடித்துத் தூக்கி எறிந்துவிட்டு, பேசாமல் மூலையில் உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும். உடம்பு முழுசும் உங்களுக்கு ரசனையாகவே, இருக்குமோ! இலையிடுக்குகளின் வழியாக எட்டிப் பார்க்கும் வெயில், மழை பெய்து ஓய்ந்த பின்னால் பால்கனியில் நின்று பார்க்கும்போது வெளியிலிருந்து வீட்டுக்கு வரும் மின்சார ஒயர்களில், கம்பியில் கோர்த்த முத்துக்களாக ஒட்டிக் கொண்டிருக்கும் மழைத் துளிகள், அவை ஒவ்வொன்றாகக் கீழே சொட்டும் அழகு—என்ன சின்ன அப்சர்வேசன் சங்கர்! இந்த சின்னச் சின்ன விஷயங்களையெல்லாம் பார்வையிலிருந்து தப்பவிடாமல் அணுஅணுவாக ரசிக்க வேண்டுமென்று தோன்றுகிறதே! அது ஒரு கவிஞனின் பார்வை—அவனால் மட்டுமே பார்க்க முடிந்த நுணுக்கமான பார்வை! பூதக் கண்ணாடி பார்வை!'

தன் மனத்தில் வழிந்து கொண்டிருக்கும் சந்தோஷத்தை போனில் அவனிடம் இறக்கத் துடித்தாள்.

"ஒரு வாரமாக சங்கர் ஆபீசுக்கே வரவில்லை. அவருக்கு உடம்பு சரியில்லையாம்..." என்ற ஆபரேட்டரின் பதிலைக்

கேட்டதும் உடனே அவன் வீட்டுக்குப் போன் பண்ணினாள். சங்கரின் அம்மாதான் பேசினாள்:

"அவன் ஒரு வாரமாகக் கண்ணையே திறக்கலை வித்யா. நூத்தி நாலு டிகிரிக் காய்ச்சல். டாக்டர் வந்து பார்த்துக் கொண்டிருக்கிறார். டைபாய்டாக இருக்குமோ என்று சந்தேகப்பட்டார். நல்ல வேளையாக அது இல்லை. இப் போது கொஞ்சம் தேவலை."

"நீங்கள் ஏம்மா எனக்குத் தெரியப்படுத்தவில்லை?"

"என்னவோ தோணலை இப்போதுதான் வாயேன்."

"இதோ வருகிறேன்."

வித்யா போனபோது சங்கர் விழித்துக் கொண்டுதான் இருந்தான். கண்களும், முகமும் நல்ல காய்ச்சலால் சிவப்பில் மின்னின. வரண்டு போன உதடுகளை அடிக்கடி ஈரப் படுத்திக் கொண்டான்.

"எனக்கு ஏன் சங்கர் தெரியப்படுத்தவில்லை? ஒரு போன் பண்ணி இருக்கக்கூடாதா?" என்று வித்யா கோபித்துக் கொண்டாள்.

அவன் பதில் சொல்லாமல் சிரித்தான்.

"இப்போது கூட உங்கள் கதையைப் படித்து முடித்த சந்தோஷத்தில் ஆபீசுக்கு போன் பண்ணியிருக்காவிட்டால் எனக்கு எதுவும் தெரிந்திருக்காது..."

"இது என்ன, பெரிய விஷயமா வித்யா? மேலும் நீயே வருகிறேன் என்று சொல்லி இருந்தாயே என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன்."

"ஸாரி சங்கர், வரமுடியவில்லை.

"கதையைப் படித்தாயா?"

"ஓ! அதற்காகத்தான் ஆபீசுக்கு போன் பண்ணினேன். மார்வலஸ் சங்கர்."

"சில வசதிகளின் பொருட்டு இந்த நாவலை அத்தியாய மாய் எழுதித்தர ஒப்புக் கொண்டேன். அதுவே இப்போது வசதிக்குறைவாக இருக்கிறது. அடுத்த அத்தியாயத்தை எழுதிக் கொடுத்தாக வேண்டும். இன்றுதான் காய்ச்சல் கொஞ்சம் விட்டிருக்கிறது. எழுதவேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். முடியவில்லை."

"வேண்டாம் சங்கர். இன்னும் இரண்டு நாட்கள் ஓய்வாக இருங்கள். அப்புறம் எழுதலாம்."

"எனக்கு இப்படிப் படுக்கையில் கிடக்கவும் பிடிக்க வில்லை. மனசு 'துரு துரு'வென்று அலைகிறது. வேலைகளை மாற்றிச் செய்து கொண்டிருப்பதே பெரிய ஓய்வு என்று நினைப்பவன் நான்."

வித்யா சிரித்தாள். சங்கருக்கு அன்று ரமணியிடம் அதையே சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

"ரமணி எப்படி இருக்கிறார்?" என்று கேட்டான்.

"நீங்கள் ஏன் வீட்டுக்கு வருவதில்லை என்று கேட்டார். நான்தான் எதையோ தவறாகப் புரிந்து கொண்டு உங்களிடம் உளறியிருக்கிறேன் போலிருக்கிறது."

"அன்றைக்கு நான் உங்கள் வீட்டை விட்டு வெளியே வருவதற்கும், அவர் காரில் உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது."

"சொன்னார்."

டெலிபோன் அப்போது அடித்தது. வித்யாதான் எடுத்துப் பேசினாள். அவனுடைய ஆபீஸிலிருந்து அடுத்த அத் தியாயத்து கதைக்காக போன் பண்ணினார்கள். "அவருக்கு இன்னும் காய்ச்சல் குறையவே இல்லை. திங்கட் கிழமையன்று அனுப்புவதாகச் சொல்லச் சொன்னார்" என்ற பதிலை அவளே சொல்லி வைத்துவிட்டாள்.

"சொல்ல மறந்து விட்டேனே வித்யா. வருகிற ஞாயிற்று கிழமை ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் இலக்கியக்

கூட்டம் ஒன்று நடக்கப் போகிறது. 'இன்றைய கதைகள்' என்ற தலைப்பில் நான் பேசப் போகிறேன். நீ வருவாயா?"

"ஓ. எஸ். கட்டாயம் வருவேன். எத்தனை மணிக்கு சங்கர்?"

"சாயந்திரம் ஆறரை மணிக்கு."

"இந்த உடம்போடு எப்படிப் பேசுவீர்கள்?"

"இது என்ன பெரிய உடம்பு? ஞாயிற்றுக் கிழமைக்கு இன்னும் இரண்டு நாட்கள் இருக்கிறதே... அதற்குள் எல்லாம் சரியாகி விடும்."

"ஆபீஸிலிருந்து கதைக்காக வேறு, போன் பண்ணி விட்டார்களே...?"

"ம்...இதற்கு இரண்டு மூன்று தரம் கேட்டுவிட்டார்கள். நீதான் திங்கட்கிழமை அனுப்புவதாகச் சொல்லி விட்டாயே... ஞாயிற்றுக்கிழமை கூட்டம் முடிந்து வந்ததும் தான் எழுத வேண்டும். இந்த இரண்டு நாட்கள் கூட்டத்தில் பேச வேண்டிய விஷயங்களை யோசிக்க வேண்டும்."

"அதிகமாக உடம்பையும் மனசையும் போட்டு அலட்டிக் கொள்ள வேண்டாம். நான் நாளைக்கு போன் பண்ணுகிறேன். வரட்டுமா சங்கர்?" — வித்யா எழுந்தாள்.

அவள் வீட்டுக்குப் போனபோது அத்தை, "இத்தனை நேரமாக எங்கே போய்விட்டாய்? ரமணி இரண்டு தரம் போன் பண்ணி விட்டான். போன இடத்தைக்கூட சொல்லாமல் போய்விட்டால் எப்படி?" என்று கேட்டாள். வித்யா அவளுக்குப் பதில் சொல்லாமல் ரமணிக்கு போன் பண்ணினாள்.

"எங்கே போயிருந்தாய் வித்யா?"

"சங்கரின் வீட்டுக்கு. அவருக்கு உடம்பு சரியில்லை என்று போய்ப் பார்த்துவிட்டு வந்தேன்."

"ஓஹோ..." — என்ன உடம்பு என்று அவன் — கேட்க வில்லை. வித்யாவும் சொல்லவில்லை. "அதற்கு இவ்வளவு நேரமா?" என்று மட்டும் கேட்டான்.

"பேசிக் கொண்டிருந்தேன் ரமணி."

பேச்சு பேச்சு! அவனுக்கு எரிச்சல் வந்தது.

"நீங்கள் இரண்டு தரம் போன் பண்ணி விட்டீர்களாமே! என்ன விஷயம்?"

"ஒன்றுமில்லை. சும்மாதான் பண்ணினேன். சரி வைத்து விடட்டுமா?"

"ஓ. கே"—அவள் போனை வைத்தாள்.

ஞாயிற்றுக் கிழமை காலையிலேயே ரமணியிடம் அந்த இலக்கியக் கூட்டத்தைப் பற்றிச் சொன்னாள்.

"இன்று சங்கர் பேசப் போகிறார் ரமணி. அவர் நன்றாகப் பேசுபவர் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். இது வரை கேட்டதில்லை. போகலாமா? நீங்களும் வருகிறீர்களா?"

அவன் 'இல்லை' என்று தலையாட்டினான். அவனுக்கு இதிலெல்லாம் ஆர்வம் கிடையாது என்று தெரிந்திருந்ததால், அவனை அவள் வற்புறுத்தவில்லை.

"நான் போய்விட்டு வரட்டுமா?"

"எத்தனை மணிக்கு?"

"ஆறு மணிக்கு?"

"எங்கே?"

"ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில்."

"போய்த்தான் ஆக வேண்டுமா?"

"போகலாமென்றுதான் இருக்கிறேன். ஏன்?"

"ஆனந்தில் ராயன்ஸ் டாட்டர். இன்று உன்னோடு போகலாமென்று பார்த்தேன்."

"சினிமா எப்போதும் இருக்கும். என்று வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் இந்தக் கூட்டம் இன்று மட்டும்தானே ரமணி...?"

"சீ...என்ன பெரிய கூட்டம்? இன்றைக்கு விட்டால் இனிமேல் எனக்கு அடுத்த ஞாயிற்றுக்கிழமைதான் லீவு. நடுவில் போகவும் ஒழியாது. பட்டம் வெள்ளிக்கிழமை மாறினாலும் மாறிவிடும்..."

வித்யா பேசாமல் நின்றாள். அவன் 'என்ன சொல்லுகிறாய்' என்பதைப்போல் அவளைப் பார்த்தான்.

"தயவு செய்து இன்றைக்கு மட்டும் போய்விட்டு வந்து விடுகிறேன். நாம் நாளைக்கு நைட் ஷோ கூடப் போகலாம்..."

"இன்றைக்கு நீ என் கூட வரவேண்டுமென்பது என் ஆசை. அதன்பின் உன் இஷ்டம்..."

ரமணி எழுந்து போய்விட்டான்.

ஆறு மணிக்கு ஆனந்தில் ரமணியின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள் வித்யா. படம் அவளுக்குப் பிடித்தது. கதைக்குக் கொஞ்சம்கூட சம்பந்தமில்லாத அந்த ஊமையின் நடிப்பு அவளைக் கவர்ந்தது. ஜெர்மன் படைகளின் காப்டனாக வந்த அந்த இளைஞனின் எக்ஸ்பிரஷன்-லெஸ் எக்ஸ்பிரஷன் அந்த ஊமைக்கு அவன் கடைசியில் சிகரெட் கொடுக்கும் இடம், அவளுக்கு சங்கு எடுத்துக் கொடுத்து, அணைத்தபடி அழைத்துக் கொண்டு போவது—கடற்கரை மணலில் பதிந்த காலடிகளைக் காட்டும் அழகு, இரவில் தன் மனைவி அந்த ஜெர்மானிய காப்டனிடம் ஓடிப் போய் அவனது அணைப்பில் காணும் சுகத்தை ஜன்னல் வழியாகப் பார்க்கும் கணவன்...படம் ரமணிக்குப் பிடிக்கவில்லை. தன்னை அந்தக் கணவனாக மாற்றிப் பார்த்து, வித்யாவை அவளாக நினைத்து 'ஓ! காட்!'...அப்படியானால் சங்கர் அந்த—?

அதற்கு மேல் அங்கே உட்காரும் பொறுமை அவனுக்கு இல்லை.

"தலையை வலிக்கிறது. வா, வித்யா போகலாம்."—அவன் பாதியில் அவளை எழுப்பப் பார்த்தான்.

"முழுசும் பார்த்துவிட்டுப் போகலாம்" என்று அவள் கிளம்ப மறுக்கவே, அவனும் உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டியதாயிற்று. இந்தப் படத்திற்குப் போய் இவளை அழைத்துக்கொண்டு வந்தோமே என்று வருத்தப்பட்டுக் கொண்டே உட்கார்ந்து இருந்தான்.

படத்தில் மூழ்கிப் போனாள் வித்யா. ஊர் முழுசும் அந்த கதாநாயகியை வெறுத்து, வீட்டைச் சூழ்ந்து கொண்டு அடித்து, ஆடைகளைக் கிழித்து, தலைமுடியைக் கத்தரித்து அலங்கோலப் படுத்தினபோதும் அவளைத் தன் அன்பால் அரவணைத்து, ஊரைவிட்டே அழைத்துக் கொண்டு போகும் கணவன்; அவனுடைய பெருந்தன்மையான அன்பு, அவர்கள் ஊரைவிட்டுப் போகும்போது ஜன்னலிலிருந்தும் வாசல் வழியாகவும் எட்டிப் பார்த்து விசிலடித்துச் சிரிக்கும் ஊர் ஜனங்கள்.

மனிதர்கள் எந்த நாட்டிலும் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள்...

வித்யா கைக்குட்டையால் முகத்தை ஒரு தரம் அழுத்தித் துடைத்துக் கொண்டாள். அதைப் பார்த்த ரமணி கேட்டான்:

"அழுகிறாயா?"

"இல்லையே...!"

அவள் அவனைப் பார்த்து மெதுவாகச் சிரித்தாள்.

"அந்தக் கணவன், அந்த மனைவி, அந்தக் காதலன், அந்த ஊமை யாரையுமே மறக்க முடியாது என்று தோன்றுகிறது ரமணி."

அவன் அதற்குப் பதில் சொல்லவில்லை.

படம் முடிந்து காரில் திரும்ப வரும்போது வித்யா கேட்டாள்:

"படம் உங்களுக்குப் பிடிக்கவில்லையா?"

அவன் 'இல்லை' என்று தலையாட்டினான்.

"உனக்குப் பிடிக்கும் என்றுதான் நினைத்தேன். முடிவு மட்டும்தான் எனக்குப் பிடித்தது. இந்த மாதிரி கணவனை ஏமாற்றுபவர்களுக்கு நல்ல பாடம்."

வெளியே பார்த்துக் கொண்டு வந்த வித்யா சடாரென்று திரும்பி அவனைப் பார்த்தாள். இதற்கு நல்ல பதிலாகச் சொல்ல மனசு துடித்தது. தன் துடிப்பை அடக்கிக் கொண்டு பேசாமலிருந்து விட்டாள்.

ஐந்தரை மணியிலிருந்து ஒவ்வொரு நிமிஷமும் சங்கர், வித்யாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். யார் யாருடனோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தாலும் அவன் கண்கள் வாசலில் வரும் புடவைகளில் அவளை ஆர்வத்தோடு தேடியது. அவன் பேசப் போகிறானென்றுதான் அன்று அவ்வளவு கூட்டம். அவனுக்கென்று இலக்கிய வட்டத்தில் தனிப்பட்ட வாசகர்கள் உண்டு. பொறுக்கி எடுத்த மாதிரி விஷயம் தெரிந்த வாசகர்கள். அவர்கள் கேட்கும் சாமர்த்திய மான கேள்விகள். எப்போதும் அவனைச் சுற்றி ஒரு கூட்டம் இருக்கும். அன்றும் இருந்தது. அவர்களிடம் கலகலப்பாகப் பேசும் சங்கர், தன் பதில்களில் கொஞ்சம் அலட்சியத்தைச் சேர்த்துச் சொல்லும் சங்கர், அன்று அதிக விஷயங்களில் மௌனமாகவே இருந்துவிட்டது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'இன்னும் ஏன் வித்யா வரவில்லை? கட்டாயம் வருவேன் என்று சொன்னாளே...ஒரு வேளை வராமலேயே இருந்து விடுவாளோ? எதற்கும் போன் பண்ணிப் பார்க்கலாமா?' அவர்களிடமிருந்து தப்பித்துக்கொண்ட சங்கர் டெலிபோன்

இருந்த இடத்துக்குப் போய் வித்யாவின் நம்பர்களைச் சுற்றினான். "அவள் இல்லை. வெளியே போயிருக்கிறாள்" என்ற பதில்தான் கிடைத்தது. இங்கே தான் வந்து கொண்டிருப்பாள் என்று நினைத்தான். அவள் கடைவரை வராதது அவனுக்கு வருத்தமாக இருந்தது. அதே வருத்தத்துடன் பேசப் போனான் அவன்.

தன்னுடைய பேச்சை ரசித்துக் கூட்டத்தினர் சிரித்த போதெல்லாம், மயங்கித் தலையாட்டி கைதட்டின போதெல் லாம் இதை எழுதக் காரணமாக இருந்த அவள் இங்கே இல்லையே என்று தோன்றியது. பேச்சின் நடுவில், பார்வை அவளை நாற்காலிகளில் தேடி ஏமாந்தது. பேசி முடித்த பின் ஐந்து நிமிஷங்கள் வரை ஓயாத கை தட்டல், மேடையை விட்டு இறங்கினதும் சூழ்ந்து கொண்டு பாராட்டினவர்களிட மிருந்து 'அவசர வேலை இருக்கிறது' என்று சொல்லித் தவிர்த்துக் கொண்டு இளம்பி விட்டான் அவன்.

காரில் வரும்போது வித்யா ஏன் வரவில்லை என்று யோசித்துப் பார்த்தான். ரமணியோடு எங்காவது வெளியே போய் இருக்கலாம்; திடீரென்று அவசர வேலை ஏதாவது வந்திருக்கலாம். இல்லாவிட்டால் அவள் வராமல் இருந்திருக்க மாட்டாள். 'வித்யா...! நீ கேட்கப் போகிறாய் என்ப தனால் இன்னும் அதிக ஆர்வத்துடன் நான் பேச வேண்டியதைத் தயாரித்தேன். பட்...இட்ஸ் ஆல் ரைட்...'

சங்கர் நினைவை எங்கோ அலைய விட்டதனால் எதிரில் வேகமாக வந்த லாரியை ஒரு நிமிஷத்துக்குப் பின்புதான் கவனித்தான். காரின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. பிரேக் பிடிக்கவில்லை. சட்டென்று ஸ்டியரிங்கை ஒடித்துத் திருப்பி, பிளாட்பாரத்தில் ஏற்றி, அங்கே உட்கார்ந்து கெரெட் பிடித்துக் கொண்டிருந்த ரிக்ஷாக் காரர்கள் மேல் மோதாமலிருக்க விளக்குக் கம்பத்தில் மோதி னான். ஒரு பெரிய சத்தத்துடன், கண்ணாடிகள் நொறுங்கும் ஓசையுடன் நின்றுவிட்டது கார். லாரிக்காரன் நிறுத்தாமல்

போய் விட்டான். பின்னால் வந்து கொண்டிருந்த கார்க் காரர் மனிதத்தனத்தை இழக்காமல் காரை நிறுத்திவிட்டு இறங்கி வந்து பார்த்தார். அதற்குள் ரிக்ஷாக்காரர்தவிர எல்லாம் எழுந்து ஓடி வந்தார்கள். சங்கரின் தலை ஸ்டியரிங்கில் சாய்ந்திருந்தது. கதவைத் திறந்தவுடன் ரத்தத்தில் நனைந்திருந்த கை, வெளியே தொய்ந்து தொங்கியது.

அது அவனுடைய வலது கை.

26

சங்கரின் விபத்தைப் பற்றிய விஷயம் வித்யாவுக்குத் தெரிந்தபோது மறுநாள் காலை ஒன்பது மணி. சங்கரின் அப்பா, ஆஸ்பத்திரியிலிருந்து போன் பண்ணிச் சொன்னார்.

"அவனுடைய அம்மா ரொம்ப ஆடிப் போயிருக்கிறாள் வித்யா. அவள் அழுது தன்னை வெளிப்படுத்திக் கொண்டு விட்டால்கூடத் தேவலாம் போலிருக்கிறது நெருப்பை விழுங்கின மாதிரி அத்தனை துக்கத்தையும் அடக்கிக்கொண்டு அவன் படுக்கைக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறாள். எனக்கு அதைப் பார்க்க சகிக்கவில்லை. நீ வந்தால் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும். வருகிறாயாம்மா?"

"என்ன கேள்வி மாமா இது? உங்களுக்குத் தெரிந்த வுடனேயே எனக்கு போன் பண்ணியிருக்கக் கூடாதா? உடனே வந்திருப்பேனே! இப்போது அவருக்கு எப்படி இருக்கிறது?"

"இன்னும் நினைவு வரவில்லை, தலையில் கொஞ்சம் அடி பட்டிருக்கிறது. அது ஒன்றும் பலமானதில்லை என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். ஆனால் வலது கை மட்டும் எக்கச்சக்கமாக எங்கோ மாட்டிக்கொண்டு முறிந்து போயிருக்கிறது. திரும்ப அந்தக் கை எழுதுவதற்கு உதவுமா என்பது தான் சந்தேகம். எழுத்துதான் அவனுக்கு உயிர். அது போய் விட்டால்...."

"அப்படியெல்லாம் ஒன்றும் ஆகாது மாமா. கவலைப் படாதீர்கள். நான் இப்போதே கிளம்பி வருகிறேன்."

தெருக்கோடிக்கு வந்து டாக்ஸி பிடித்து ஆஸ்பத்திரிக்கு போகும்வரை அவள் ஒரு தவிப்பில் இருந்தாள்.

'ஆக்ஸிடெண்ட் ஆகும்படியான அஜாக்கிரதை உங்களிடம் எப்படி வந்தது சங்கர்? ஏன் வந்தது! உங்கள் கவனம் எங்கே இருந்தது? எப்போதும் கான்ஷியஸாக இருக்கும் நீங்களா இப்படி...? அப்பா சொன்ன மாதிரி உங்கள் வலது கை எழுத முடியாமல் ஆகி விடுமோ? இனிமேல் உபயோகப் படாததாகப் போய்விடுமோ? அந்த மாதிரியெல்லாம் ஆகக் கூடாது சங்கர். நீங்கள் எழுத வேண்டும், நிறைய எழுத வேண்டும். இதே மாதிரி ரசனையைத் தூண்டிவிடுகிற எழுத்தாக—மனத்தைக் கவருகிற எழுத்தாக அந்தக் கை எழுதிக்கொண்டே இருக்கவேண்டும். அது நிற்கக்கூடாது. ஓய்ந்து விடக்கூடாது...'

வித்யா ஸ்பெஷல் வார்டில் அவன் இருந்த மூன்றாம் நம்பர் அறையைத் தேடிக்கொண்டு போனாள். அரசாங்க ஆஸ்பத்திரிகளில், கேட்கப்படும் கேள்விகளுக்கு யார் சரியாகப் பதில் சொல்கிறார்கள்? அங்கே, இங்கே என்று அலைக்கழித்தார்கள். அப்படியே கொஞ்சம் நேரம் அலைந்துவிட்டு அவளாகக் கண்டுபிடித்துக் கொண்டாள்.

அவள் போனபோது ஆக்ஸிஜன் ட்யூப்கள் எடுக்கப்பட்டு விட்டன. ரத்தம் செலுத்தி முடிக்கப்பட்டு விட்டிருந்தது. சலைன் வாட்டர் மட்டும் ஏறிக்கொண்டிருந்தது. அறையின் நிசப்தம் அதிகமாக, பயங்கரமானதாகத் தெரிந்தது. சங்கரின் நெற்றி முழுவதையும் மறைத்துத் தலையில் கட்டுப் போட்டிருந்தார்கள். வலது கை, பாண்டேஜ் மூட்டையாக மார்பின் மேல் வைக்கப்பட்டிருந்தது. கன்னங்களின் சிவப்பு மறைந்து, இலேசான மஞ்சள் அடித்தது. உதடுகளின் வறட்சி, மூடிய கண்கள், அசைவே இல்லாமல் போர்வைக்குள் இருந்த உடல்...வித்யா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

அவளைப் பார்த்ததும் அவனுடைய அம்மா, 'வா' என்று கூப்பிட்டாள். குரல் கரகரத்துப்போய் மனசின் துக்கத்தை இலேசாக வெளிக்காட்டியது.

"இவன் உயிரோடு எழுந்து வந்து விட்டால் போதும் வித்யா. எழுத்து வேண்டாம். பெயர் வேண்டாம். புகழ் வேண்டாம். இந்தக் கைக்கூட வராவிட்டால் போகட்டும். என் பிள்ளை எனக்குத் திரும்பக் கிடைத்துவிட்டால் போதும்."

'ஓ! இந்த அம்மாவுக்காக, இப்படிப்பட்ட அப்பாவுக்காக, தங்கள் உருகல்களில் உடைந்துபோய் விடாமல், திடமான ஒரு நம்பிக்கையோடு நிற்கும் இவர்களுக்காகப் பிழைத்து எழுந்து விடுங்கள் சங்கர். அப்புறம் எனக்காக—இந்த வித்யாவுக்காக—உங்களின் முதல் வாசகிக்காக, கைக்கு எந்தச் சேதமும் இல்லாமல் எழுதத் தொடங்குங்கள் சங்கர்!'

அவன் எழுத வேண்டும் என்பதே அவளின் முதல் ஆசையாக, ஒரே நினைவாகத் திரும்பத் திரும்ப மனசில் நின்றது.

அவனுடைய ஆபீசுக்குத் தெரிந்ததும் எல்லோரும் வந்து பார்த்தார்கள். எல்லார் கவலையும் அவனுடைய கை மீதே இருந்தது. சாதாரணக் கையா? எழுதுகிற கையாயிற்றே! அதிலும் எப்படிப்பட்ட எழுத்து! அது நிற்கலாமா? எல்லாரும் திரும்பிப் போனதும் கடைசியாக சுடரின் ஆசிரியர் சிவசங்கரன் வந்திருந்தார். சங்கரின் முகத்தை, கையை வேதனையோடு பார்த்தார். அவன் அப்பாவிடம் பேசினார். ஆஸ்பத்திரி பெரிய டாக்டர் அவருடைய நண்பராம். அவரோடு போனில் பேசி நிலைமையை சரியாகத் தெரிந்து கொண்டார். அந்தக் கையைப் பற்றின எதையும் சரியாகச் சொல்ல முடியாத நிலையில் இருந்தார்கள் அவர்கள். உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்பதை உறுதியாகச் சொன்னார்கள். சிவசங்கரன், அறைக்குத் திரும்பி வந்தார்.

வித்யாவிடம் தனியாகப் பேசினார். சங்கர் எழுதிக் கொண்டிருக்கும் நாவலைப்பற்றிச் சொன்னார்: "என்னை

அற்புதமாக எழுதிக்கொண்டு வந்தார். மேலே எழுத முடியாமல் இப்படி ஆகிவிட்டதேம்மா! இந்த வாரத்தில் வர வேண்டிய கதைக்குப் பதிலாக ஒரு பக்கத்தில் சங்கருக்கு நடந்த விபத்தைப் பற்றி எழுதி, மேலே நாவலைத் தொடர முடியாததற்கு வருத்தம் தெரிவித்து விட வேண்டியதுதான்!'

அவருடைய பேச்சு வித்யாவை யோசிக்க வைத்தது. அந்தக் கதை அப்படிப் பாதியில் நிற்பதில் அவளுக்கு இஷ்டமில்லை. முழு நாவலையும் சங்கர் அவளிடம் சொல்லியிருந்தான். எழுத வேண்டிய சின்னச் சின்ன விஷயங்களைக்கூட விடாமல் சொல்லியிருந்தான். எப்படி எழுத வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தானோ அதை அப்படியே சொல்லியிருந்தான். சங்கருக்கு நினைவு திரும்புகிறவரை கதையை அவர் போக்கின்படியே எழுதிக் கொடுத்தால் என்ன என்று தோன்றியது. அதைச் சிவசங்கரனிடம் சொன்னாள்:

"என் எழுத்தில் உங்களுக்கு நம்பிக்கை இருக்குமானால் என்னை எழுத விடுங்கள்" என்று கேட்டாள். சிவசங்கரன் உடனே "சரி" என்று சொல்லிவிடவில்லை, நன்றாக யோசித்துத்தான் சம்மதித்தார்.

"உன்னுடைய பேட்டி, கவிதை இரண்டையும் நானும் படித்தேன். உன் எழுத்தில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. சங்கருக்கும் இதில் ஒரு ஆட்சேபணையும் இருக்காதென்று நினைக்கிறேன். எழுதும்மா. ஆனால் ஒன்று, இது சங்கரின் எழுத்து இல்லை என்பது வாசகர்களின் மனசுக்குப் பட்டு விடக்கூடாது. நீ அவருக்குப் பதிலாக எழுதுகிற விஷயம் வெளியே போகவும் கூடாது. இந்த வாரத்துக்கான கதை நாளைக்குள் எங்கள் கைக்குக் கிடைத்தால்தான் படம் போட்டு அச்சுக்கு அனுப்ப முடியும். காலையில் வீட்டுக்குப் பியூனை அனுப்பவா? அதற்குள் எழுதி விட முடியுமா?"

"ஓ.எஸ்! பத்து மணிக்குமேல் அனுப்புங்கள். தயாராக முடித்து வைத்திருக்கிறேன்."

சிவசங்கரன் போனதும் வித்யா, திரும்ப சங்கரின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். அவன் முகத்தைப் பார்த்தாள். 'எழுது வித்யா, உன்னால் நிச்சயமாக நன்றாக எழுத முடியும் என்று சொல்வீர்களே சங்கர். எழுதப் போகிறேன். உங்களுடைய கதையை நான் தொடரப் போகிறேன். எழுத்தில் என்னையும் மிஞ்சி விடுவாய் என்பீர்களே —உங்கள் எழுத்தை விட்டு எங்கோ தூரத்தில் நிற்காமல் கொஞ்சமாவது நெருங்கி வந்தால் போதும், முடியுமா சங்கர்?'

முடியுமென்றுதான் தோன்றியது.

அவனுடைய அம்மாவும், அப்பாவும் வீட்டுக்குப் போய்க் குளித்துச் சாப்பிட்டுவிட்டுத் திரும்பி வருகிற வரை வித்யா, சங்கரின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் பசியில்லை என்று சொன்னதையே காதில் போட்டுக் கொள்ளாமல், "போய் சாப்பிட்டுவிட்டு வாம்மா" என்று தங்கள் காரிலேயே அனுப்பி வைத்தார்கள். "சாப்பிட்டு விட்டு உடனே வந்து விடுகிறேன்" என்றாள் வித்யா.

"எதற்கு? இங்கு வந்து மட்டும் என்னம்மா செய்வது? நீ கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டு சாயந்திரமாக வா. அப்போது அவன் கண்ணைத் திறந்தாலும் திறப்பான்" என்றார்கள். அது சரி என்று பட்டவே, வித்யா மறுப்புச் சொல்லாமல் வீட்டுக்கு வந்தாள். உடனே ரமணிக்கு போன் பண்ணினாள். "உயிருக்கு ஒரு ஆபத்தும் இல்லையே?" என்று கேட்டான் ரமணி.

"இல்லை. ஆனால் அவர் எழுதுகிற கை எலும்புகள் முறிந்து இனிமேல் உருப்படியாகுமா என்று சந்தேகப்படும்படி இருக்கிறது. இன்னும் நினைவு திரும்பவில்லை. நான் சாயந்திரமும் போய்ப் பார்க்கலாமென்று இருக்கிறேன். நீங்களும் வருகிறீர்களா?"

அவன் 'சரி' என்றதும் அவள் போனை வைத்தாள். 'ஒரு விபத்துக்கு இவ்வளவு சக்தியா!'

அன்று ரமணி, தொழிற்சாலையிருந்து கொஞ்சம் சீக்கிரமாக வந்தான். இரண்டு பேரும் ஆஸ்பத்திரிக்குப் போனார்கள். அப்போது சங்கர் கண் திறந்து அரைப்பார்வையில் அவர்களைப் பார்த்தான். எதுவும் பேச முடியவில்லை. அவன் பார்வை கொஞ்ச நேரம் வித்யாவின் முகத்தில் நிலைத்தது.

வித்யாவும் ஒரு புன்னகையுடன் அவனையே பார்த்தாள். "ஐயாம் ஸாரி சங்கர். வெறுமனே 'ஸாரி' என்று ஒரு வார்த்தையில் சொன்னாலும் அதனுள் புதைந்து கொண்டிருக்கும் என் மனத்தைப் புரிந்து கொள்ளுங்கள். இந்த விபத்தின் கோளாறுகள் முழுவதும் சரியாகிறவரை நான் உங்களுக்கு எல்லா உதவிகளையும் செய்கிறேன்..." —அவன் முகத்துக்கு நேராகக் குனிந்து, "எப்படி இருக்கிறீர்கள் மிஸ்டர் சங்கர்? என்னைத் தெரிகிறதா?" என்று கேட்டான் ரமணி.

சங்கர் தெரிகிறதென்று இசைசாகத் தலையாட்டினான். பின் அந்த வலியின் சுளிப்பு முகத்தில் தெரிந்தது. அதன் பின் ரமணி, சங்கரின் அப்பாவோடு அறை மூலையில் நின்று பேசிக் கொண்டிருந்தான். பார்வை வித்யாவின் மேல் இருந்தது. அவள் ஹார்லிக்ஸை ஸ்பூனால் எடுத்து சங்கரின் வாயில் கொஞ்சம் கொஞ்சமாக விடுவதைப் பார்த்தான். பின் மெதுவாக உதடுகளை முகத்தை ஒற்றி எடுப்பதைப் பார்த்தான். குனிந்து, "எல்லாம் சீக்கிரம் சரியாகிவிடும். கவலைப்படாதீர்கள் சங்கர்" என்று சொல்வதும் கேட்டது. என்ன பரிவு அவள் முகத்தில்? ஒரு குழந்தையைப் பார்க்கிற மாதிரி எத்தனை கனிவு அவள் பார்வையில்! குளிர்ச்சியான அந்த வார்த்தைகளில் எவ்வளவு அன்பு...! ரமணி தன்னையும் மீறிப் பெருமூச்சு விட்டான்.

"வித்யா, இதற்கெல்லாம் தனி அர்த்தம் உண்டா? இல்லையா?'

அவனுக்கு அப்போதும் ஒன்றும் தெளிவுபடவில்லை.

வீட்டுக்கு வருகிற வழியில் வித்யா, சங்கரின் நாவலை, தான் தொடரப் போகும் விஷயத்தைச் சொன்னாள். ரமணி பேசாமல் இருந்தான். வந்து சாப்பிட்டு முடித்ததும் மாடிக்குப் போனாள் வித்யா. சிவசங்கரன் காலையில் பத்து மணிக்கெல்லாம் பியூனை அனுப்பி விடுவார் என்பது நினைவுக்கு வந்தது. முந்தின மூன்று வாரக்கதையையும் திரும்பப் படித்தாள். மேலே எழுத வேண்டியதை யோசித்தாள். வரிக்கு வரி யோசித்து எழுத வேண்டும் என்று அடிக்கடி சங்கர் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. வார்த்தைக்கு வார்த்தை யோசித்தாள். அவன் எழுதின மூன்று அத்தியாயங்களின் லயம் தவறிவிடக் கூடாதே என்பதில் ஜாக்கிரதையாக இருந்தாள். இது 'சங்கரின் கதை' என்ற எண்ணம் எப்போதும் மனத்தில் இருந்து கொண்டே இருந்தது. அது அவனுடைய நடையிலேயே கதையைக் கொண்டு போக உதவி செய்தது.

ஒரு தரம் ஆரம்பிக்கப் போகும் முதல் வார்த்தையில் இருந்து அந்த வாரத்தை முடிக்கப் போகும் கடைசி வரிவரை மனத்திலேயே எழுதிப் பார்த்துக் கொண்டாள். காகிதத்தில் எழுதும்போது அடித்துத் திருத்தி மாற்ற வேண்டிய இடங்களைச் சரிப்படுத்தி எழுதி முடித்தாள். பின் படித்துப் பார்த்தாள். முழு திருப்தியுடன் வந்திருந்தது கதை.

'சங்கர், நீங்கள் படிக்க வேண்டும் இதை. எவ்வளவு சந்தோஷப்படுவீர்கள்! நீங்கள் எழுதினாலும் இதை இப்படித் தான் எழுதி இருப்பீர்கள். உங்கள் எழுத்துக்கும் என் எழுத்துக்கும் வித்தியாசமில்லை சங்கர். உடம்பு கொஞ்சம் சுமாராகட்டும். இதை நானே உங்களுக்குப் படித்துக் காட்டுகிறேன். அடுத்து எழுத வேண்டியதை நீங்கள் சொல்லுங்கள். நான் எழுதிக் கொடுக்கிறேன். கை சரியாகிறவரை நீங்கள் சொல்லச் சொல்ல நான் எழுதிக் கொண்டே வருகிறேன்...'

மறுநாள் காலையில் கதையைக் கொடுத்தனுப்பிவிட்டு ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினாள். சங்கரிடம் தான் கதையை

எழுதிக் கொடுத்த விஷயத்தைச் சொன்னாள். அவன் கண்களில் ஏற்பட்ட பிரகாசத்திலிருந்து அவனுக்கு அதில் எத்தனை சந்தோஷம் என்பது தெரிந்தது.

அவள், வீட்டுக்குத் திரும்பி வந்ததும் சிவசங்கரன் போன் பண்ணினார்.

"இதோடு மூன்று தரம் போன் பண்ணி விட்டேன். நீ இல்லை. ஆஸ்பத்திரியில்தான் இருப்பாய் என்று நினைத்தேன். கதையைப் படித்தேன். கன்கிராஜுலேஷன்ஸ். உன்னால் எழுத முடியும் என்று நம்பிக்கை இருந்தாலும் இந்த மாதிரி எழுதுவாய் என்று நான் நினைக்கவே இல்லை. எழுத்தில் சங்கருக்குச் சரியாகப் போட்டிபோடக் கூடிய முதல் ஆள் நீதானம்மா. ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது..."

வித்யா பதில் சொல்ல முடியாமல் திணறிப் போனாள். இத்தனை பாராட்டுகள் அவளுக்குக் கிடைக்கக் காரணமாக இருந்தவன், எழுத முடியுமென்ற நம்பிக்கையை அவளுக்குக் கொடுத்தவன், உள்ளுக்குள் இருந்த திறமையைத் தூண்டிவிட்டு வளரச் செய்தவன் அவன். அந்த உருவம் அவள் மனத்தில் வந்து போயிற்று.

இரண்டு நாட்களுக்கு அப்புறம் சங்கரின் முகத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டது. மெதுவாகப் பேசினான். அவள் எழுதுவதைப் படிக்கச் சொன்னான். வித்யா படித்துக் கொண்டே போனபோது அவன் ஆச்சரியப்படவில்லை. அவள் எழுத்தைப் பற்றி அவனுக்கிருந்த கணிப்பு அது தான். அவளுடைய ரசனைகளில்தான் தன்னைப் பார்க்க முடிந்ததென்றால் இப்போது எழுத்திலும் பார்க்க முடிகிறதே...?

"உன்னிடம் ஒரு நிச்சயமான பேனா இருக்கிறதென்று சொல்லவில்லையா நான்? உன் ரசனைகளைப் பார்த்து, கவிதையைப் படித்து, ஊட்டியிலிருந்து நீ போட்ட கடிதமும் கிடைத்த பின்னால் அது எனக்குள் உறுதியாகி விட்டது.

உன் பேனாவிற்கு இனிமேலி நீ முழு வேலை கொடுக்க வேண்டும் வித்யா....." என்று திரும்பச் சொன்னான். தான் ஒரு நல்ல எழுத்தாளி என்பதை அவள் வெளிப்படுத்திக் காட்டிவிட வேண்டுமென்ற அவனுடைன் ஆசை இப்போது அதிகமாகியது.

வித்யா சிரித்தாள்; வழக்கமான சிரிப்பு.

27

சிங்கரைக் கேட்காமலேயே சுகுமாரனுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டாள் வித்யா. கடிதம் கிடைத்த மறு நான் அவன் கிளம்பி வந்துவிட்டான். ஆஸ்பத்திரிக்குப் போனான். அப்போது வித்யா அங்கே இல்லை.

"என்ன அஜாக்கிரதை சங்கர் உனக்கு? இது உன் வலது கைடா! எழுதுகிற கை. அந்தக் கையை ஒடித்துக் கழுத்தோடு கட்டிக்கொண்டு இப்படி படுத்திருக்கிறாயே...?" என்று கோபமும், வருத்தமுமாகப் பேசினான் சுகுமாரன்.

சங்கர் சிரித்தான்:

"இந்தக் கை போனால் என்ன சுகுமார்? இதைவிட மேலான ஒரு கை எனக்கு உதவி செய்கிறது!" என்று சொல்லி, நாவலின் மூன்று வாரத் தொடர்ச்சியை வித்யா தான் எழுதினாள் என்பதைத் தெரியப்படுத்தினான்.

"நிஜமாகவா சங்கர்! அதில் உன்னைத்தான் நான் பார்த்தேன். ஒவ்வொரு வரிகளிலும், வார்த்தைகளிலும் உன் மேதைத்தனம் அப்படியே பளிச்சிடுகிறது. விஷயங்களை நீ பார்க்கும் அதே கூர்மையான பார்வை தெரிகிறது. உன்னைத் தவிர வேறு யாராவது எழுதியிருக்கக் கூடும் என்று நான் நினைக்கவே இல்லை."

"நீ தான் அடுத்த ரயிலிலேயே ஊருக்குப் போக வேண்டுமென்கிறாயே சுகுமாரா? அவள் இனிமேல் சாயந்திரமாகத் தான் வருவாள். அந்தப் புத்திசாலியை நீ அவசியம் பார்க்க வேண்டும். ஒன்று செய். அவளுடைய வீட்டு விலாசத்தைத் தருகிறேன். போய் பார்த்துவிட்டு ரயிலேறு.

சங்கர் எதையும் சொல்லாவிட்டாலும், அவனுடைய ஆழமான பாதிப்புகளுக்குக் காரணமானவள் இந்த வித்யாவாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தான் சுகுமாரன். வீட்டுக்குப் போய் அவளைப் பார்த்ததும் அது இன்னும் உறுதிப்பட்டது. அப்போது ரமணியும் வீட்டில் இருந்தான். ரமணியை முதல் பார்வையிலேயே சுகுமாரனுக்குப் பிடிக்காமல் போய்விட்டது. ரமணியும் அவனிடம் சரியாகப் பேசவில்லை.

'எப்படிப்பட்டவர்களின் பிரிவுக்கு நீங்கள் காரணமாகிவிட்டீர்கள் ரமணி. உங்களுக்கு அழகான எந்தப் பெண் வேண்டுமானாலும் மனைவியாக இருந்திருக்கலாம். ஆனால் இந்த வித்யா...? உங்களின் இரண்டு நிமிஷப் பேச்சிலேயே எழுதுகிறவர்கள் மேலும் எழுத்தின் மீதும் இருக்கும் ஒரு வெறுப்பை வெளிப்படையாகக் காட்டும் உங்களிடம் இந்த வித்யா எப்படி இருக்கிறாள்!'

அரை மணி நேரம் இருந்துவிட்டு அவன் கிளம்பினான்: "சங்கரின் கையைப் பார்த்ததும், நான் பதறிப் போனேன். ஆனால் எந்தக் கவலையும் படவேண்டாம் என்பது உங்களைப் பார்த்த பின்னால்தான் தெரிகிறது. வலது கையாக நீங்கள் இருக்கும்போது என்ன குறை சங்கருக்கு?" என்று வித்யாவிடம் சொல்லிவிட்டுப் போனான்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த ரமணியின் முகம் மாறியது. 'சங்கரின் வலது கையாக நீங்கள் இருக்கும் போது என்ன குறை?' 'இதை ஒரு மூன்றாம் மனிதன் வந்து சொல்லிவிட்டுப் போகிறான். வித்யா இருக்கும் போது சங்கருக்கு என்ன குறை என்பதைச் சுட்டிக் காட்டிவிட்டுப் போகிறான். ஒரு அரை மணி நேரப் பார்வையில் அவனால் புரிந்து

கொள்ள முடிந்திருக்கிறதென்றால்....? நான்தான் இத்தனை நாட்களாகப் புரிந்து கொள்ளாமல் இருந்திருக்கிறேன். தூக்க மில்லாமல், நிம்மதியில்லாமல் அலைந்திருக்கிறேன். தவியாய்த் தவித்திருக்கிறேன். அவனோடு மணிக்கணக்கில் நீ பேசும் பேச்சுகளுக்கு, அவனுக்காக உருகும் உருகல்களுக்கு, ஒரு ரயான்ஸ் டாட்டரைப் பார்த்து அழும் அழுகைக்கு, இப்போது ஆஸ்பத்திரியே கதி என்று இருக்கும் இருப்புக்கு என்னால் எல்லா அர்த்தங்களையும் புரிந்து கொள்ள முடிகிறது. அவனைக் கவனித்துக்கொள்ள நர்ஸ் இருக்கிறாள். அவனுடைய அம்மாவும் அப்பாவும் இருக்கிறார்கள். இன்னும் நீ ஏன் போக வேண்டும்? அவன் பக்கத்தில் மணிக் கணக்கில் உட்கார்ந்திருக்க வேண்டும்? அன்று கண்ணைத் திறந்ததுமே அவன் உன்னைப் பார்த்த பார்வையில் இருந்த பரிவும், கனிவும், அன்பும்.....மைகாட்! இன்னும் எத்தனை நாளைக்கு உன்னால் என்னை ஏமாற்ற முடியும்? நான் விழித்துக்கொண்டு விட்டேன் வித்யா. எல்லாவற்றையும் புரிந்து கொண்டு விட்டேன்...''

'நீங்கள் இருக்கும்போது சங்கருக்கு என்ன குறை?'

''காரில் போகும்போது, தொழிற்சாலையில் வேலை செய்யும்போது, டெலிபோனில் பேசும்போது, திரும்பத் திரும்ப சுகுமாரனின் குரல் கேட்டுக்கொண்டே இருந்தது. வேலை செய்ய முடியாமல் போயிற்று. சாயந்திரம் அவன் தொழிற்சாலையிலிருந்து வீட்டுக்கு வந்தபோது வழக்கப்படி அவள், ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டிருந்தது அவன் கோபத்தையும், எரிச்சலையும் அதிகப்படுத்தியது. மனசின் பட்ட அடியைத் தாங்கிக்கொள்ள முடியாமல் நேராக மாடிக்கு வந்து படுக்கையில் படுத்துக் கொண்டு விட்டான் அவன்.

சுகுமாரன் ஆஸ்பத்திரிக்கு வந்துபோன உடனேயே சிவசங்கரன் ஆஸ்பத்திரிக்கு வந்தார். கையைத் தவிர

சங்கருக்கு எல்லாம் குணமாகி விட்டாலும் தலையின் ரணம் இன்னும் ஆறவில்லை. அந்த அடியின் காரணமாக மூளைக்கு அதிக வேலை கொடுக்கக்கூடாது. எதையும் யோசிக்கக் கூடாது என்று டாக்டர் கண்டிப்புடன் சொல்லியிருந்ததால் வித்யாவே கதையின் இன்னும் இரண்டு அத்தியாயங்களையும் எழுதி முடிக்க வேண்டியதாயிற்று. அந்த நான்கைந்து அத்தியாயங்களுக்கு வந்திருந்த பாராட்டுக் கடிதங்களோடு சிவசங்கரன், சங்கரின் பக்கத்தில் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.

''எப்படியிருக்கிறீர்கள் மிஸ்டர் சங்கர்? டாக்டர் என்ன சொல்லுகிறார்? எப்போது டிஜ்சார்ஜ் ஆகப் போகிறீர்கள்?''

''தலையின் ரணம் ஆறிக் கொண்டு வருகிறது. இன்னும் ஒரு வாரத்தில் நன்றாக ஆறிவிடும். கைக்கு மட்டும் அடிக்கடி வந்து கட்டுப் போட்டுக் கொண்டு போனால் போதுமென்கிறார் டாக்டர். அநேகமாகக் கையும் இன்னும் கொஞ்ச நாட்களில் சரியாகி விடும் என்று சொல்கிறார்.''

''ஐ.ஸி. அப்படியானால் சீக்கிரமே வீட்டுக்குப் போய் விடுவீர்கள் இல்லையா?''

''நாளைக்கே டிஸ்சார்ஜ் ஆகிப்போகலாமென்று டாக்டர் சொல்லிவிட்டார். நாளையோடு என் ஒரு மாத ஆஸ்பத்திரி அனுபவம் முடிந்து போகிறது.''

''வெரி குட். நீங்கள் பழைய சங்கராகத் திரும்ப வேண்டுமென்று நாங்கள் வேண்டிக்கொண்டது வீணாகவில்லை. கூடிய சீக்கிரம் கையும் சரியாகி, நீங்கள் ஆபீசுக்கு வர வேண்டும்?''

''தேங்க்யூ சார்'' என்று சிரித்தான் சங்கர். ''இந்தக் கடிதங்களைப் பார்த்தீர்களா மிஸ்டர் சங்கர்?''—அவர் கைப்பையைத் திறந்து சில கடிதங்களை எடுத்துக் கொடுத்

தார். சிரித்துக் கொண்டே சொன்னார்: ''வித்யா, எழுத்தில் உங்களைத் தூக்கி மூலையில் தள்ளிவிடுவாள் போலிருக் கிறது. படித்துப் பாருங்கள். எல்லாம் உங்களுடைய வழக்க மான வாசகர்களின் கடிதங்கள்தான். அவர்களாலேயே வித்தியாசம் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படி உங்கள் லெவலில் நின்று எழுதியிருக்கிறாள். அவளைத் தனியாக ஒரு நாவல் எழுதித் தரச் சொல்லிக் கேட்கலாமா என்று நினைக் கிறேன். என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?''

சங்கரின் மனத்திலிருந்த சந்தோஷம் சிரிப்பாக முகத் துக்கு வந்தது. ''தாராளமாகக் கேட்கலாம். வித்யாவால் நிச்சயமாக ஒரு நல்ல நாவலை எழுத முடியும். அவள் 'மாட்டேன்' என்று மறுப்பாள். வற்புறுத்தி எழுத வைத்து விடவேண்டும். இத்தனை திறமையும் யாருக்கும் தெரியாமல் அணைந்து விடக்கூடாது.''

அவர் சிரித்தார்: ''ஆகட்டும், நானே போன் பண்ணிக் கேட்கிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

வித்யா வந்ததும் கடிதங்களை எடுத்துக் கொடுத்தான் சங்கர். ஒவ்வொன்றாகப் படிக்கச் சொன்னான். எல்லாரும் அவனுக்கு வழக்கமாகக் கடிதமெழுதும் வாசகர்கள். சிலர் அவனுடைய நண்பர்கள். அவர்களால் கூட அந்த எழுத்து அவனுடையதில்லை என்று கண்டு பிடிக்க முடியவில்லை! ஏன் சுகுமாரனாலேயே கண்டு பிடிக்க முடியவில்லையே! அவன் அவளைப் பெருமையாகப் பார்த்தான்: ''அன்று ஒரு நாள் நீ என் வீட்டுக்கு வந்து விட்டுத் திரும்பி வரும்போது உங்களைப் பார்த்தால் எனக்குப் பொறாமையாக இருக்கிறது என்று சொன்னாயே, நினைவிருக்கிறதா வித்யா? இப்போது உன்னைப் பார்த்தால்தான் எனக்குப் பொறாமையாக இருக்கிறது'' என்றான் அவன் சிரித்துக்கொண்டே.

வித்யா பேசாமல் அவனையே பார்த்தாள். 'இது உங்களால் எனக்குள் வளர்ந்த திறமை சங்கர். உன்னால் நன்றாக எழுத முடியும் என்று அடிக்கடி சொல்லி என் மனத்தில் திடமான ஒரு நம்பிக்கையை வளர்த்தது நீங்கள் தானே! இந்த பாராட்டு முழுதும் உங்களுடையவை. உங்களைச் சேர வேண்டியவை!'

வித்யா ஒரு புன்னகையோடு தொடர்ந்து கேட்டாள்.

''நாளைக்குக் காலையில் டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்குப் போகிறீர்கள் இல்லையா?'' அவன் தலையாட்டினான்.

''வெளி வாழ்க்கையை விட இங்கே உலகம் அழகாக இருக்கிற மாதிரி எனக்குத் தோன்றுகிறது வித்யா. உண்மை யான மனுஷத்தனம் இங்கே இருக்கிறது. இன்ஃபாக்ட், எனக்கு இந்த இடத்தைவிட்டு வெளியே வரப் பிடிக்க வில்லை...''

''நான் நினமும் காலையில் பத்து மணிக்குமேல்' வீட்டுக்கு வருகிறேன் சங்கர். நீங்கள் சொல்லிக்கொண்டே வாருங்கள். நான் எழுதித் தருகிறேன். கதை முழுவதையும் அதே மாதிரி முடித்து விடுவோம்!''

'சரி' என்று தலையாட்டினான் அவன். சிவசங்கரன் அவளை ஒரு நாவல் எழுதச் சொல்லிக் கேட்கப் போவதாகச் சொன்னதைச் சொல்லவில்லை.

அவள் ஒரு மணி நேரத்திற்கு மேல் அவனோடு பேசிக் கொண்டிருந்தாள். சுகுமாரன் வந்ததைப் பற்றிச் சொன் னாள். கடைசியில் அவன் சொல்லிவிட்டுப் போனதையும் சொன்னாள்.

''ரமணியின் எதிரில் அவர் இப்படிப் பேசியிருக்க வேண்டாம் சங்கர். ரமணி அதைத் தவறாக எடுத்துக் கொண்டு விடப் போகிறாரே என்று கவலையாக இருக்கிறது. ரமணியும் அவரிடம் சரியாகப் பேசவில்லை. எழுதுகிறவர் களையே எனக்குப் பிடிக்காது என்ற தொனி அவர் பேச்சில் வெளிப்பட்டது. அதனாலேயே சுகுமாரன் வேண்டுமென்றே இப்படி பேசித் தன் கோபத்தைக் காட்டிவிட்டுப் போயிருக்க வேண்டும்...''

"இருக்கலாம், வித்யா. பிடிக்காத பேச்சுக்களையும் மனிதர்களையும் சகித்துக்கொண்டு போகத் தெரியாத முரட்டு மனிதன் அவன். இப்படிப் பேசுவான் என்று தெரிந்திருந் தால் நான் அங்கே அனுப்பியே இருக்க மாட்டேன். ஐயாம் ஸாரி வித்யா..."

"ஓ! தட்ஸ் ஆல் ரைட் சங்கர். அதற்கு இவ்வளவு வருத்தப்பட வேண்டிய அவசியமில்லை. லீவ் இட்..."

சங்கருடைய அம்மா இரவு சாப்பாட்டுடன் வந்ததும் அவர்களோடு கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்த பின், வித்யா கிளம்பினாள். அவனுடைய அப்பா அன்று வீடுவரை அவளோடு கூட வந்தார். தானே காரை ஓட்டிக்கொண்டு வந்தார். வரும்போது வழியில் தன் மனசைக் கொஞ்சம் திறந்து காட்டினார்.

"ஒரு பெண் இல்லையே என்ற சராசரித் தனமான குறை எங்களுக்கும் இருந்தது வித்யா....வீட்டுக்கு வரப்போகும் பெண்ணிடமாவது அந்த அன்பைக் காட்டி, குறையைத் தீர்த்துக்கொள்ளலாம் என்று நினைத்தோம். அது நடக்க வில்லை. நடக்காவிட்டாலும் பரவாயில்லை. சங்கரும் நானும் எப்படிப் பழகுகிறோம் என்பது உனக்குத் தெரிந் திருக்கும். அவனைச் சரியாகத் தெரிந்து வைத்திருக்கும் எனக்கு அவன் இப்படி இருக்கிறானே என்ற வருத்தமில்லை. உன் அறிமுகம் அவனுக்குக் கிடைத்தது, நீ எங்களோடு பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டதே....இப்போது ஒரு பெண் இல்லாத குறையும் எங்களுக்கு இல்லை; நீ அதை தீர்த்து வைத்து விட்டாய் வித்யா..."

அவரின் மன நெகிழ்ச்சியும் குரலின் தொனியும் வித்யாவை உருக்கின. மௌனமாகவே வீட்டு வாசலில் வந்து இறங்கினாள்.

"உள்ளே வாருங்கள் மாமர்" என்று அவரைக் கூப்பிட்டு உட்கார வைத்தாள்.

"அவர் மாடியில் இருப்பார். நீங்கள் வந்திருப்பதைத் தெரியப்படுத்திவிட்டு வருகிறேன்" என்று மேலே போனாள்.

விளக்கைப் போட்டு ரமணி தூங்குவதாக நினைத்து அவனைத் தட்டி எழுப்பினாள்; "சங்கரின் அப்பா வந்திருக் கிறார். கீழே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். உங்களைப் பார்க்க வேண்டுமாம், வருகிறீர்களா?"

"நான் யாரையும் பார்க்க வேண்டாம். எனக்கு இப் போது யாரைப் பார்க்கவும் பிடிக்கவில்லை."

ஒரு நிமிஷம் பதில் சொல்லாமல் நின்றாள் அவள். பின், கீழே இறங்கி வந்தாள்.

"அவர் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார் மாமா."

"பரவாயில்லை அம்மா. எழுப்பாதே!" என்று எழுந்தார் அவர்.

அவரை அனுப்பி விட்டு உள்ளே வந்த வித்யாவின் மனத்தில் ஒரு வலி.

திரும்ப மாடிக்குப் போனாள்: "நீங்கள் சாப்பிட்டு விட்டீர்களா ரமணி?" என்று கேட்டாள்.

நான் சாப்பிட்டேனா, தூங்கினேனா, உயிரோடு தான் இருக்கிறேனா என்பதையெல்லாம் கவனிக்க உனக்கு நேரம் கூட இருக்கிறதா?"

அந்த பதிலின் எரிச்சல் அவளுக்குப் புரிந்தது. அவனு டைய அப்போதைய மன நிலைக்கு எதுவும் பேசாமல் இருப்பதுதான் நல்லது என்று நினைக்கவே, மௌனமாகக் கீழே இறங்கி வந்தாள்.

28

இருக்கிற இடத்தைக் கலகலப்பாக்குவதென்பது சாதாரண விஷயமில்லை. எல்லோருக்கும் வந்துவிடக் கூடியதும் இல்லை. வீடு 'கல கல' வென்று இருக்கிற போதெல்லாம் வித்யாவுக்கு தன்னோடு படித்த சுரேகாவின் ஞாபகம் வரும். எந்த இடம் நிலுநிலுத்தாலும் அவள் ஞாபகம்தான். சுலபமாகப் பேசி, சுலபமாகச் சிரித்து, சுலபமாகப் பழகி எல்லாமே சுலபம் அந்த சுரேகாவுக்கு. அவளுடைய சரிப்பும், பேச்சும், பழக்கமும் ஒடுகிற ஆறு மாதிரி. எந்தவிதமான பேதமும் கிடையாது. ஆண் பெண் வித்தியாசம் எதுவும் இல்லை. மனிதர்கள் என்ற ஒரே அபிமானம் மட்டும்தான். எல்லா இடமும் எல்லாச் சூழ்நிலைகளும் ஒன்றுதான். ஆற்றுக்காவது சில சமயம் வெறி பிடிக்கும்; அணை கட்டி அடக்கப் பார்ப்பார்கள். சுரேகாவுக்கு எந்த அணையும் தேவையில்லை. அது தன் வேகத்தில் குழந்தையாக ஓடிக்கொண்டே இருக்கும். கடலையில் கடலில் கலக்கிற முடிவு கூடக் கிடையாது. ஓடி, ஓடி எப்போது அடங்குமோ தெரியாது. கேட்டால் ஒரு சிரிப்பு வரும். பின் பதிலும் வரும் ஒரு வார்த்தை பதில்: "ஐ லிவ் ஃபார் திஸ் மூமெண்ட்..."

அவளை விட்டு ஒதுங்கிப் போக யாராலும் முடியாது. அவளுக்கு முன்னால் உம்மணா மூஞ்சியா, சிரிக்காமல் நின்று கொண்டிருப்பதும் நடக்காத காரியம். ஒரு நிமிஷத்தில் தோள் மேல் கை போடுகிற உரிமை வந்துவிடும். எடுத்துக் கொண்டு விடுவாள். நெருங்கி நின்று அணைத்துக் கொண்டு, கண், வாய், முகம் எல்லாம் சிரிப்பு வழிய... எப்படி அவளால் அந்த மாதிரி இருக்க முடிகிறதென்று ஆச்சரியப்பட்டிருக்கிறாள் வித்யா. ஒரு தரமில்லை, இரண்டு தரமில்லை, அவளைப் பார்க்கிறபோதெல்லாம் வரும் அந்த ஆச்சரியம். ஓர் இடத்தை, சுற்றி நிற்கும் மனிதர்களை கலகலக்கச் செய்வது எத்தனை பெரிய வித்தை!

அதே போல் தெருக்கோடியில் வரும் போதே, கார் ஹாரன் ஓசையிலேயே வீட்டை அடக்கி விடுவதும் ஒரு வித்தைதான். அந்த வித்தை அப்பாவுக்கு நன்றாக வரும். அவரிடம் ரஹிமான் என்று வயதான ஒரு டிரைவர் இருந்தான். அப்பாவின் கோபம் பழகிப் போன காரணத்தால் தெருக்கோடியிலிருந்தே அழுத்தி அழுத்தி ஹாரனை அடித்துக் கொண்டு வருவான்; 'அப்பா வராரு, ஜாக்கிரதை' என்று சொல்கிற மாதிரி. வாரிச் சுருட்டிக் கொண்டு ஆளுக்கு ஒரு மூலையில் ஐக்கியமாகி விடுவார்கள். அதன் பின் எப்போதாவது யாருடைய குரலாவது மெதுவாகக் கிசுகிசுக்கும். மறு நாள் காலை ஒன்பது மணி வரை அந்தக் கிசுகிசுப்பு மட்டும்தான் கேட்கும். அப்பாவின் ஒரு பார்வையில்— பார்வை கூட வேண்டாம். வெறும் காலடிச் சத்தம் போதும்; சிரிப்பும், பேச்சும், கலகலப்பும் கலைந்து நிசப்தமாகி விடும்.

அந்த மாதிரி ஒரு நிசப்தத்தில்தான் கொஞ்ச நாளாக அந்த வீடும் இருந்தது. வித்யா அடிக்கடி அப்பாவை நினைத்துக் கொண்டாள். ஆனால் அப்பாவைப் போல் ரமணி கடுமையான பார்வையில், பேச்சில் அந்த நிசப்தத்தை ஏற்படுத்தவில்லை. அவனது மௌனம் மட்டுமே அதற்குக் காரணமாக இருந்தது. அவளோடு பேசுவதைக் குறைத்துக் கொண்டு, தன்னை ஒரு வட்டத்திற்குள் இறுக்கிக் கொண்டு ஒரு வாரமாகி விட்டது. அந்த ஒரு வாரத்தை வாழ்க்கையில் இழந்து விட்டோம் என்பது தெரியாமல் இருந்தான் அவன்.

வித்யா மட்டும் சாதாரணமாக அவனோடு பேசிக் கொண்டிருந்தாள்: "எமரால்டில் ஒரு நல்ல இந்திப் படம் வந்திருக்கிறது. போகலாமா ரமணி? இன்று மௌண்ட் ரோட் பக்கம் போயிருந்தேன். உங்களுக்கு பிடித்த ஒரு ரெகார்ட் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன. என்ன ரெகார்ட் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்? ரோஜாச் செடியில் ஒரு மொட்டு

விட்டிருக்கிறது. இன்னும் இரண்டு நாளில் பெரிய பூவாகி விடும்!" இப்படி எத்தனையோ! ரமணியிடமிருந்து வெறும் தலையாட்டல்தான் பதில். இரண்டு, மூன்று நாட்களுக்குப் புறம் தான் அது வித்யாவுக்குப் புரிந்தது. அதன்பின் அவளும் அநாவசியமாகப் பேசுவதைக் குறைத்துக் கொண்டாள். ஒரு வாரமாக வீட்டில் நடந்த எல்லாமே மௌன நாடகமாக இருந்தது. ஓரோர் சமயம் அதை அவள் ரசிக்கவும் செய்தாள்.

நடுவில் ஒரு நாள் சங்கரின் வீட்டுக்குப் போயிருந்தாள். "வா, வித்யா" என்று முகம் மலரச் சிரித்தான் அவன். மேஜை மேலிருந்த ஒரு புத்தகத்தை எடுத்துக் கொடுத்தான்.

"நான் ரொம்ப நாளாகத் தேடிக் கொண்டிருந்த புத்தகம் இது. நேற்று தான் கிடைத்தது. ராத்திரி முழுசும் உட்கார்ந்து இன்னொரு தரமும் படித்து முடித்தேன். இது தான் எழுத்து வித்யா! லாரென்ஸ் என்று ஒரு கேரக்டர் வருகிறது. உலகம் முழுசையும் அன்பால் நிறைத்து விட வேண்டும்: எல்லாரையும் சிரிப்பால், பேச்சால் தடவிக் கொண்டுவிட வேண்டும்; யாரையும் வெறுக்கத் தெரியாமல். எதற்கும் கோபப்படாமல்... இட் ஈஸ் எ வெரிகுட் கேரக்டர், நீ படிக்க வேண்டும் இதை" என்றான்.

அவள் அதை வாங்கி ஒரு தரம் புரட்டினாள். நடுவில் ஓரோர் வரிகளைப் படித்தாள். பின் அவனைப் பார்த்தாள்:

"எல்லாருமே அந்த மாதிரி இருந்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் சங்கர்?"

அவன் சிரித்தான்:

"அப்படி இருப்பது கஷ்டமே இல்லை வித்யா. எதற்கும் கோபப்படாமல் இருக்கப் பழகிக் கொண்டால் எல்லாமே சுலபம்."

"மனசுக்குள் வருகிற கோபத்தைத் தடுத்துக் கொள்ள முடியவில்லையே சங்கர்!"

"அந்தக் கோபம் வரத்தான் வரும். அதை எரியவிடாமல் சட்டென்று அணைக்கவும் தெரிந்து கொள்ள வேண்டும். சிரிப்பாக்கி ஓட்டுகிற வழி தெரிந்து விட்டால் போதும். எப்படிப்பட்ட விஷயத்துக்கும் அப்புறம் சிரிக்கத்தான் தோன்றும். மனசுக்குள் அந்தச் சிரிப்பு மட்டும் இடம் பிடித்துக் கொண்டு விட்டால் அதன்பின் அந்தச் சிரிப்புதான் கோபம்."

கொஞ்ச நேரம் அவன் அதைப் பற்றியே பேசினான். அந்தப் பேச்சையெல்லாம் கேட்டபோது வித்யாவுக்கு உடல் சிலிர்த்தது. உணர்ச்சிப் பூரிப்பில் கண்ணில் ஒரு முத்து பளிச் சிட்டது. அன்பால் உலகம் முழுசையும் வளைத்துக் கொண்டு விடவேண்டுமென்ற ஆசை தோன்றியது. ரமணியை, அம்மாவை, அப்பாவை, தங்கைகளை, அடுத்த வீட்டு மனிதர் களை, எதிர்வீட்டுக் குழந்தைகளை எல்லாரையுமே...

அவளிடமிருந்து பதில் எதுவும் வராமல் போகவே சங்கர் நிறுத்திவிட்டுக் கேட்டான்:

"என்ன வித்யா, பேசாமல் இருக்கிறாய்?"

அவள் அப்போதுதான் அவனைப் பார்ப்பதுபோல் பார்த்தாள். ஒரு நிமிஷத்துக்குப் பின் சொன்னாள்:

"ஒன்றுமில்லை சங்கர். நீங்கள் சொன்னதையெல்லாம் யோசித்துப் பார்த்தேன்."

அவன் புன்னகை செய்தான்.

"உலகம் அழகானது வித்யா. எல்லா மனிதர்களும் அழகானவர்கள். அழகில்லாதது என்று ஒன்றுமேயில்லை. நமக்கு ரசிக்கத் தெரிய வேண்டும். எதையும் ஒரு பொறுமை யோடு பார்க்கிற கண்ணும், மனசும் வேண்டும். எப்போதும், எந்த இடத்திலும் சந்தோஷமாக இருக்கத் தெரிய வேண்டும்." அதைச் சொன்னபோது அவன் கண்ணில் ஒரு சின்ன பிரகாசம். அதைப் பார்த்துக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தாள் வித்யா. கொஞ்ச நேரம் அப்படியே போயிற்று.

அன்று எழுதவில்லை. எழுதத் தோன்றவில்லை. ஏதேதோ அலை அலையாக வந்து நெஞ்சைத் தொட்டு விட்டுப் போயிற்று. அவன் வீட்டுக்குப் போக கிளம்பிய போது, "நாளைக்கு வா வித்யா. கதையை எழுதலாம்" என்றான் அவன். அவள் வருவதாக தலையசைத்துவிட்டு வந்தாள்.

ஆனால் மறுநாள் போகவில்லை. போக முடியவில்லை. அதிசயமாய் ரமணி லீவு போட்டுவிட்டு வீட்டில் இருந்தான். அவன் வீட்டிலிருக்கும்போது தான் மட்டும் வெளியே போவது நாகரிகமில்லை என்று நினைத்ததால் பேசாமல் இருந்துவிட்டாள். சங்கருக்குப் போன் பண்ணி அன்று வர முடியாததைத் தெரியப்படுத்த வேண்டுமென்று நினைத்தாள். அவள் வராமலிருந்ததை அவன் தவறாக எடுத்துக்கொள்ளப் போவதில்லை. அதனால் போன் பண்ணும் எண்ணத்தை விட்டுவிட்டாள்.

முதலில் ரமணியை சமாதானம் படுத்த வேண்டும். அவனுடைய அநாவசியமான தவிப்பைத் தணிக்க வேண்டும். சங்கர் சொன்ன 'அன்பால் உலகம் முழுசையும் அணைத்துக் கொள்ள வேண்டும்' என்பதை அவனுக்குப் புரிய வைக்க வேண்டும். ஒருத்தர் மேல் மட்டும் வைத்துவிட்டுப் படும் சங்கடமான அன்பில்லை. எல்லார் மீதும் காட்டுகிற அன்பு. எல்லாரையும் பேச்சால், சிரிப்பால் தழுவுகிற அன்பு. எதற்கும் கோபப்பட வராத அன்பு. யாரையும் வெறுக்க முடியாத அன்பு. அப்படிப்பட்ட ஓர் அன்பை பிரியத்தை அவன் புரிந்து கொள்ள வேண்டும். அந்தப் புத்தகத்தைக் கொடுத்து படிக்க வைக்க வேண்டும்.....

அன்று முழுவதும் அவனோடு நிதானமாக மனம் விட்டுப் பேசக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதிலேயே கவனமாக இருந்தாள் வித்யா. மனதைப் போலவே பார்வையும், பேச்சும்கூட அதிகக் குளுமையாக வெளிப்பட்டது. பாரத்தை உதறித் தள்ளின மாதிரி நிம்மதியாய் இருந்தது. எந்தக் கோபமும் இல்லாமல் எந்தச் சலனமும் இல்லாமல் மனசு குழந்தையாகக் கிடந்தது.

"இன்று ஏதாவது சினிமாவுக்குப் போகலாமா ரமணி? நாம் வெளியே போய் ரொம்ப நாளாகிவிட்டதே!" பகல் சாப்பாடு முடிந்ததும் கேட்டாள்.

அதற்கு மட்டும் பதில் சொன்னான் அவன்:

"எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. சில முக்கிய மான ஃபைல்களைப் பார்க்க வேண்டும். நீ வேண்டுமானால் போய்விட்டு வா."

அவ்வளவுதான்; வேறு பேச்சு எதுவுமில்லை. டிபன் காபி, ராத்திரி சாப்பாடு எல்லாம் அப்படியே கழிந்தது.

ராத்திரி எட்டு மணி இருக்கும். ஹாலில் மட்டும் விளக்கு எரிந்தது. ரேடியோகிராமில் கிடாரில் ஓர் இசை ஒடிக் கொண்டிருந்தது. ரமணிக்குப் பிடித்தது. அதன் சோகமான இனிமை மெல்லிய இழையால் ஹாலில் மிதந்தது. வித்யாவும் ரமணியும் எதிர் எதிர் சோபாவில் உட்கார்ந்து கொண்டிருந் தார்கள். ரமணி ஃபைல்களைப் புரட்டி பால்பாயிண்ட் பேனாவால் ஏதோ குறித்துக் கொண்டிருந்தான். வித்யா, சங்கர் கொடுத்த புத்தகத்தில் மூழ்கிப் போய் விட்டாள்.

கதையில் வந்த அந்த வரென்ஸைப் படித்தபோது உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை அன்பைத் தோய்த்துக் கொண்டு ஓர் உருவம் கண்முன் வந்து நின்றது. உடம்பு சிலிர்த்தது. மனசை உலுக்கின மாதிரி ஓர் உதறல். ஏதேதோ உதிர்ந்து கீழே விழுந்து சுத்தமாகி விட்டதைப் போல் ஒரு பரவசம். அதில் அவள் லயித்துக் கிடந்தாள்...

அப்போது டெலிபோன் அடித்தது. ஓர் அடங்கிய சத்தத்துடன் 'என்னை யாராவது எடுங்களேன், இந்த அமைதியைக் கலைக்கிறேனே...' என்று கெஞ்சுவது போல் ஒலித்தது. அருகில் இருந்த ரமணிதான் அதன் கெஞ்சலை நிறுத்தினான். அந்தப் பக்கத்திலிருந்து வந்த குரலுக்கு அவன் உடனே பதில் சொல்லவில்லை. பார்வை ஒருதரம் எதிரே உட்கார்ந்திருந்த வித்யாவின் முகத்திற்கு ஏறிப் பின்

தாழ்ந்தது. ஒன்றும் பேசாமல் ரிஸீவரை டெலிபோன் மீது வைத்து விட்டுத் திரும்ப ஃபைலைப் பார்க்க ஆரம்பித்தான்.

அது சங்கராக இருக்கலாம் என்று தோன்றியது வித்யாவுக்கு. இன்று ஏன் வரவில்லை என்பதைக் கேட்க போன் பண்ணி இருக்க வேண்டும். அந்தக் குரலைக் கேட்டதுமே ரமணி டெலிபோனை வைத்து விட்டிருக்கிறான்.

"ரமணி, காண்ட் யு பி லிட்டில் மோரி ஸாப்ட்...?"

திரும்பப் புத்தகத்தில் கண்ணை ஓட்டியபோது சில வரிகள் அவனைக் கவர்ந்தன:

'Just for today, I will not show anyone that my feelings are hurt; that may be hurt, but today I will not show it. Just for today—

மறுபடியும் டெலிபோன் அடித்தது. ரமணி அசையக் கூட இல்லை. வித்யா படித்துக் கொண்டிருந்த பக்கத்தின் மூலையைச் சின்னதாக மடித்து மூடி வைத்துவிட்டு எழுந்து போய் ரிஸீவரை எடுத்தாள்.

சங்கரே தான்!

"என்ன வித்யா, முதல் தரம் ரிஸீவரை எடுத்துப் பேசாமல் வைத்து விட்டாய்?"

"இல்லையே...டெலிபோன் அடிக்கவேயில்லை சங்கர்."

"அப்படியா, இடது கையால் டயல் பண்ண வேண்டியிருக்கிறதா, நம்பர் தவறி விடுகிறது போலிருக்கிறது. இப்போது முனுசாமியைக் கூப்பிட்டு டயல் பண்ணித் தரச் சொன்னேன்..."

(உங்களுக்கு எதிலும் தப்பு கண்டுபிடிக்கவே வராதா சங்கர்? கோபப்படவே தெரியாதா? இந்த நிஜ வாழ்க்கையில் நீங்கள் இன்னொரு லாரென்ஸ்!)

"இன்றைக்கு ஏன் வித்யா வரவில்லை? ஒவ்வொரு தரமும் 'கேட்' சத்தப்படும் போதெல்லாம் நீ தானோ என்று

பால்கனிக்கு ஓடிப்போய்ப் பார்ப்பேன். கதையின் இந்த அத்தியாயம் முழுசையும் மனசில் ஒருதரம் எழுதிப் பார்த்தாகி விட்டது...."

"ஸாரி சங்கர். வரமுடியவில்லை. உடம்பு கொஞ்சம் சரியில்லை."

"உடம்பு சரியில்லையா, என்ன வித்யா?"

"கொஞ்சம் தலைவலி, டெம்ப்ரேச்சர்கூட இருக்கும் போலிருக்கிறது."

"அப்படியானால் நீ ரெஸ்ட் எடுத்துக் கொள். நான் நாளைக்கு வந்து பார்க்கிறேன்."

"வந்து பார்க்கும்படியாக எந்த உடம்புமில்லை சங்கர்." அவள் சிரித்தாள்.

"நான் ஆஸ்பத்திரியில் இருந்தபோது தினமும் ஓடி வந்தாயே. இப்போது உன்னை வந்து பார்க்க எனக்கு என்ன கஷ்டம்?"

('புரிந்து கொள்ளுங்களேன் சங்கர். இப்போது நீங்கள் இங்கே வரவேண்டாமென்று நான் மறைமுகமாகச் சொல்லுவதைப் புரிந்து கொள்ளுங்களேன்.')

"என்ன வித்யா, பேசாமல் இருக்கிறாய்? கதைக்காக நீ உன்னைச் சிரமப்படுத்திக் கொள்ள வேண்டாம். நான் ஆபீஸிலிருந்து யாரையாவது வரவழைத்து எழுதிக் கொள்கிறேன்."

"நோ! நாளைக்கு நானே வந்து எழுதித் தருகிறேன். வேறு யாரையும் எழுதச் சொல்ல வேண்டாம்."

"பரவாயில்லை. உடம்பு முடியவில்லை என்றால் ஏன் வருத்திக் கொள்ள வேண்டும்?"

"ப்ளீஸ் சங்கர். நானே வந்து எழுதித் தருகிறேன். நாளைக்குப் பத்து மணிக்கெல்லாம் வந்து விடுகிறேன்."

அவன் சிரித்தான். அதற்குமேல் மறுக்க முடிய வில்லை.''

''சரி வித்யா. அந்தப் புத்தகத்தைப் படித்து முடித்து விட்டாயா?''

''படித்துக்கொண்டே இருக்கிறேன். அநேகமாக நாளை அங்கு வருவதற்குள் முடித்து விடுவேன்.''

''ஓ கே. நேரில் அதைப் பற்றி பேசலாம்.''

''குட் நைட் சங்கர்.''

அவள் ரிஸீவரை வைத்துவிட்டுத் திரும்பியதும் ரமணி ஒருதரம் அவளை நிமிர்ந்து பார்த்தான். எதுவும் கேட்க வில்லை. காகிதங்களை அடுக்கி ஃபைலில் வைத்துக் கொண்டு மாடிக்குப் போனான். வித்யா புத்தகத்தை எடுத்து மடித்து வைத்த பக்கத்தைத் திருப்பினாள்.

Just for today, I will adjust myself to what is, not try adjust everything to my own desires...

அதைத் திரும்பத் திரும்ப நாலைந்து தடவை படித்தாள். 'எஸ். ஐ வில் அட்ஜஸ்ட் மை செல்ஃப்' என்று சொல்லிக் கொண்டாள். நினைவு புத்தகத்தைவிட்டு நகர ஆரம்பிக்கவே மூடி வைத்து விட்டு எழுந்தாள். ரேடியோகிராமை நிறுத்தி ஹால்விளக்கையும் அணைத்து விட்டு மாடிப்படிகளில் ஏறின போது மனத்தில் ஒரு பாரம் கவிழ்வதை உணர்ந்தாள். உள்ளே வந்து படுத்துக் கொண்டு அலாரத்தின் பச்சை முட்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு வினாடி நேரம் வரை பார்வை அதில் நிலைக்கும். பின்னர் சின்ன நீலநிற விளக்கில், 'கிர்'ரென்று கத்தும் ஏர்கண்டிஷனரில், டிரஸ்ஸிங் டேபிள் கண்ணாடியில் மாறி மாறி இடம் பெயர்ந்து திரும்ப அலாரத்துக்கே போகும்.

ஆனால் மனம் மட்டும் ஒரு விஷயத்திலேயே அழுந்திக் கொண்டு நின்றது. ரமணியின் மௌனம் தாள முடியாத தாகத் தோன்றியது. பெரிய தண்டனையாகவும் இருந்தது

அவனை நினைக்கும்போது ஒரு கஷ்டம். தானாக ஒரு முள்ளை எடுத்து நெஞ்சில் குத்திக் கொண்டு அவன் படும் அவஸ்தை அவளுக்குப் புரிந்தது. அது ஒரு பெரிய ஹிம்ஸை. அப்படி எத்தனை பகல், எத்தனை ராத்திரியைத் தள்ள முடியும்? மனசு அலைய அலைய, பார்வை வெறிக்க வெறிக்க உட்கார்ந்திருக்க முடியும்? குத்திக் கொண்டிருக்கும் முள்ளை அவசரப்படாமல், பொறுமையாக எடுக்கவேண்டும்.

அவள் அவனிடம் பேசியாக வேண்டும். நிதானமாகப் பேச வேண்டும். முரண்டு பிடிக்கும் குழந்தையைச் சமாதானப்படுத்துகிற மாதிரி ஓர் அதிகமான நிதானத்துடன்... அவள் திரும்பிப் பார்த்தாள். பக்கத்தில் ரமணி இல்லை. 'இன்னும் வந்து படுத்துக் கொள்ளவில்லையா? என்ன செய்கிறார்?'— எழுந்து அறையை விட்டு வெளியே வந்தாள். பால்கனியின் ஓர் ஓரத்தில் ரமணி சுவரில் சாய்ந்து கொண்டிருப்பது தெரிந்தது. அந்த நிலையில் அவனைப் பார்த்த போது வித்யாவுக்கு வேதனையாக இருந்தது.

'ஏன் இப்படி உங்களையும் வருத்திக்கொண்டு என்னையும் வருத்துகிறீர்கள் ரமணி?'

அவனுக்கு எதிரில் போய்க் கைப்பிடிக் கம்பியில் சாய்ந்து கொண்டு நின்றாள்.

''இன்னும் தூக்கம் வரவில்லையா ரமணி?''

பதிலில்லை.

''உள்ளே வாருங்கள். இங்கே தனியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்களே...?''

அதே மௌனம்.

''தென், லெட் மி கிவ் யு கம்பெனி'' என்று சிரித்தபடி தன் கூடை நாற்காலியை இழுத்து அவனுக்கு எதிரில் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

ரமணி என்ன செய்வதென்று தெரியாதவனாக தென்னையின் சலசலப்பையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்படி ஒரு நிமிஷம் போயிற்று இரண்டு நிமிஷங்களும் தாண்டின. செய்ய வேண்டியதை முடிவு செய்து விட்ட வனைப் போல் திடீரென்று எழுந்தான். ஈஸிசேர் கொஞ்சம் கிறீச்சிட்டது அவனும் அப்படித்தான் பேசினான். தொண் டையைப் பிடித்து இறுக்கின மாதிரி:

"எனக்குத் தூக்கம் வருகிறது. நான் உள்ளே போகி றேன்."

சட்டென்று உள்ளே போய் விட்டான்.

வித்யா ஒரு விநாடி அசந்து போனாள். உதட்டை அழுத்திக் கடித்துக் கொண்டாள். எதிரே தெரிந்த இருட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள். வலை நாற்றமும், கடல்வாடையும் காற்றோடு கலந்து வந்தது. அந்த நேரத்தில் உற்றுக் கேட்கும்போது சமுத்திரத்தின் இரைச்சல்கூட காதில் விழுந்தது. கணவன், மனைவி சண்டையைப்போல் தென்னை ஓலைகள் சர சரப்பதும் அடங்குவதுமாக இருந்தன.

வானத்தைப் பார்த்தாள் அவள். மணல் மணலாகத் திரிந்து போன வெள்ளை மேகங்கள் கண்ணுக்கெட்டிய தூரம் வரை தென்பட்டன. முன்பெல்லாம் வானம் இப்படி மாறும் அழகைப் பார்த்து விட்டுத் தங்கைகளையும் கூப்பிட்டுக் காட்டுவாள். "சமுத்திரத்து மணலெல்லாம் மேலே போய்த்தான் இப்படி ஆகிறது வானம்?"— அம்மா எப்போதோ சின்ன வயசில் சொன்னது. அப்படி எத்தனை சொல்லியிருக்கிறாள் அம்மா. 'சாதத்தை எறிந்தால் அது சாக்கடையில் போய் அழும். பொய் சொன்னால் சாமி கண்ணைக் குத்திடும். ஆம்பளைப் பசங்களோடு விளையாடி னால் காது அறுந்து போகும்...?'

கண் அகல அதையெல்லால் கேட்டுக் கொண்ட வயசு அது. எல்லாமே உண்மை என்று நம்பின வயசு. எதைக் கேட்டாலும் நிஜமாக நினைத்த வயசு. இப்போதுதான் பற்றின சந்தேகம்; பூதத்தைப் பற்றின சந்தேகம்; மனிதர்களைப் பற்றின சந்தேகம்...

கூர்க்கா முதல் தரம் வந்து, இரண்டாவது தடவையும் தட்ட ஆரம்பித்துவிட்டான். எல்லாரும் தூங்குகின்ற ஒரு ராத்திரியில் அந்தத் தனிமையான தெருவில் தன் கைத்தடி யால் ஒவ்வொரு காம்பௌண்ட் சுவராகத் தட்டிக்கொண்டு போகும் ஒருவன். ஒரு காக்கி நிற உடைக்குள் தன் குள்ளமான உருவத்தை ஒடுக்கிக் கொண்டு, பயமில்லாமல், கவலையில் லாமல், முகம் முழுக்க சிரிப்புடன், தெருக் குழந்தைகள் கேட்கும் 'துமாரா நான் க்யாஹை'க்கு 'தன் பஹதூர்' என்ற பதிலை அலுக்காமல் சலிக்காமல் திருப்பித் திருப்பிச் சொல்லும் ஒரு நேப்பாளத்து இளைஞன். தன் அழகான மனைவியை வீட்டில் தனியாக விட்டுவிட்டுப் பிறர் சொத்தைக் காக்க புறப்பட்டிருக்கும் கடமை வீரன்...

வித்யா ஒரு நீண்ட மூச்சை உள்ளிழுத்து விட்டாள். பின் ஈஸிசேரை மடித்து வைத்து விட்டுப் படுக்கை அறைக் குள் நுழைந்தபோது தெருக்கோடியில் அந்தக் கூர்க்காவின் கைத்தடிச் சத்தம் லேசாக உயர்ந்து, தேய்ந்து, கரைவது கேட்டது.

29

அது ஒரு மாலை. வானம் தெளிவான நீலத்தில் இருக்கும் மாலை. வழக்கமான பரபரப்பில்லாத நாளின் அவசரங்கள் செத்துப்போன அமைதியான மாலை. மாடி யின் பால்கனியில் நின்று பார்த்தபோது அந்த அழகு இன்னும் நன்றாகத் தெரிந்தது. இருபது வருஷமாய் பார்த்துப் பழகிவிட்ட ஒரு காட்சிதான். அதே உடம்பில் உறைக்காத இலேசான வெயில். எதிரே தெரிந்த மஞ்சள் சரக் கொன்றை, தார் ரோடின் எண்ணெய்க் கறுப்பு, வெளிர் நீலத்தில், வெளிர் பச்சையில், வெளிர் மஞ்சளில், வெள்ளையில்,

சாம்பல் நிறத்தில் நிற்கும் கட்டடங்கள், மரங்கள், மனிதர்கள் - எல்லாம் அதேதான். ஆனால் அன்று எல்லாம் புதிதாய் இருந்தன. அந்தக் கோணத்தில் அப்போதுதான் முதன் முதலாகப் பார்க்கிறார்போல் புதிதாகத் தெரிந்தது. எதிரே திடீரென்று விரியும் அந்தப் பச்சைப் புல்வெளிக்கூட சற்று முன்னால் தோட்டக்காரனின் குளிப்பாட்டலில் நாலைக்குக் கல்யாணம் ஆக இருக்கும் பெண்ணைப்போல் குளிர்ச்சியாய் சிரித்தது ஏன், அந்தத் தோட்டக்காரனே புதுசாய்த் தெரிந்தான். அவனைப் பார்த்தால் அன்று ராஜா மாதிரி தெரிந்தது. 'இந்தத் தோட்டத்திலிருக்கும் அத்தனை செடிகளும் நான் வளர்த்ததாக்கும்!' என்ற கர்வம் அவன் முகத்தில் தெரிவதுபோல் தெரிந்தது. இருந்தாலும் அவன் ஒரு பெண்ணுக்கே உரிய அரவணைப்பில் அவற்றை வளர்த்து வருகிறான். பூத்து சிரிக்கும் அந்தச் செடிகளின் அசைவு, கட்டற்கரை ஓரத்துக் காற்றில் நடக்கும் பெண்களின் புடவைத் தலைப்பின் அசைவை ஞாபகப்படுத்தியது.

'இன்று இந்த நாளுக்கு என்ன வந்துவிட்டது? இந்த தரிசனங்கள் எப்படிச் சாத்தியமாயிற்று? எனக்கு நானே புதுசாய்த் தெரியும் இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது? இந்த விழிப்பு...?'

'ஆம்; நான் விழிப்பாய் இருக்கிறேன். ஒவ்வொரு நிமிஷமும் என் பார்வை கவனமாய் என்னையும், என் உலகத்தையும் சேர்த்துப் பார்த்துக் கொண்டிருக்கிறது, நான் என் சுயப் பிரக்ஞையில் இருக்கிறேன். இந்தக் கவனமான விழிப்பில் இருக்கும் எனக்கு, ஒவ்வொரு நிமிஷமும் புதுசுதான். இந்தத் தெரு, இந்த காம்பௌண்ட் சுவர், இந்த மரங்கள், செடிகள், புல்வெளி, தோட்டக்காரன், எதிர் வீடு, பக்கத்து வீடு, வானம், நகரும் மேகம் எல்லாமே புதுசுதான். எல்லாம் அழகுதான்.....

'ஆனால் வித்யாதான் இல்லை. அவள் இல்லாததனால் ராம் வித்யா மாதிரி அழகாய்த் தெரிகிறதோ? அல்லது

இவை அழகாய்த் தெரியும் பொருட்டுதான் அவள் இல்லையோ...?'

சங்கரி கைப்பிடிச் சுவரில் உட்கார்ந்து கொண்டான். பக்கத்து வீட்டு ரேடியோவில் இருந்து ஓர் அபத்தமான சினிமாப் பாட்டு இரைந்தது. காலால் தாளம் போட்டபடி அதையும் ரசித்தான். அன்று அவன் உற்சாகமாய் இருந்தான். தெளிவாய் இருந்தான். அந்த நிமிஷத்தில் தான் ஒரு குழந்தையாகிவிட்ட மாதிரி தோன்றியது. இந்த உலகத்தில் எந்தப் பிரச்னைகளுமே இல்லாமல் போய்விட்டதைப் போல் - எல்லாருமே அன்பு ஒன்றை மட்டும் புரிந்து கொண்டு, அதை மட்டுமே காட்டத் தெரிந்தவர்களாக ஆனதைப்போல் - எல்லாமே ரம்மியமானதாக இருப்பதைப்போல் உணர்ந்தான். அப்படியே அதே உணர்வோடு அங்கேயே உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும் போல் இருந்தது. இறங்கிப் போய் எல்லாரையும் பார்த்து, பேசி, சிரித்து சந்தோஷப்படுத்த வேண்டும் என்றும் தோன்றியது. சந்தோஷமாக இருக்கத் தான் நாம் பிறந்திருக்கிறோம்; பிறரைச் சந்தோஷப்படுத்தத் தான் பிறந்திருக்கிறோம்...

அவன் மெதுவாக மாடிப்படிகளின் வழியே கீழே இறங்கி வந்தான். ஹாலில் ரேடியோகிராமில் வயலின் இசை மெதுவாக ஓடிக் கொண்டிருந்தது. அம்மா போட்டிருக்க வேண்டும். அம்மா நன்றாக வயலின் வாசிப்பாள். அவளது இழுப்பில் ஒவ்வொரு ராகமும் எங்களால் இன்னும் குழைய முடியாது என்று கெஞ்சுகிற மாதிரி இழையும். எப்போதோ கல்யாணம் ஆவதற்கு முன்னால் பாலையங்கோட்டையில் இருந்தபோது கற்றுக் கொண்டது. ஆனால் அம்மாவுக்கு ஒரு மானசிக குரு உண்டு. அவருடைய வாசிப்பை ரெகார்டில் கேட்டுக் கேட்டு அம்மாவுக்கும் அதே பாணி, அதே லயம் எல்லாம் வந்துவிட்டது. அபூர்வமாய் எப்போதாவது வயலினை எடுத்து வைத்துக்கொண்டு

உட்கார்ந்தால் கண்ணில் தளும்பிவிடும். எத்தனையோ தரம் அப்பாவும் அவனும் அந்த மாதிரி மனசு ஒன்றுமே இல்லாமல் பஞ்சாக ஆவதை அனுபவித்துக் கொண்டே உட்கார்ந்திருக் கிறார்கள்.

அப்போது அம்மாவின் அந்த மானஸிகக் குரு, ரெகார்டில் கற்றிக் கொண்டிருந்தார். ஷண்முகப் ப்ரியாவை இப்படி இழுக்க அவரால் மட்டும்தான் முடியும் என்று அம்மா சொல்வது நினைவுக்கு வந்தது. உண்மைதான், என்ன வசிப்பு அது! அதை ரசித்துக் கொண்டே வாசலுக்கு வந்தான். இசை இலேசாய், சன்னமாய் காதில் விழுந்தது.

அவன் தெருவைப் பார்த்தான். கலர் கலராய்ப் பட்டாம் பூச்சிகள்போல் நாலைந்து பெண்கள் போய்க் கொண்டிருந் தார்கள். பெல்பாட்டம், குர்த்தா, லுங்கி, புடவை. இப்போது எல்லாப் பெண்களுமே தங்களை அழகானவர்களாகக் காட்டத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தி உரக்கச்சிரிப்பது கேட்டது. நுனி நாக்கின் அமெரிக்க ஆங்கில உச்சரிப்பு இலேசாகக் காற்றோடு சேர்ந்து வந்தது. சங்கர், புன்னகை செய்தான். அவனுக்கு வித்யாவின் சிரிப்பு ஞாபகத்துக்கு வந்தது. தெளிவான நல்ல சிரிப்பு அது, இயல் பாக வெளிப்படும் சிரிப்பு; பளிச்சென்று வெள்ளைப் பற்களின் வரிசை அழகாகத் தெரியும் சிரிப்பு.

அவன் வராந்தாவில் போடப்பட்டிருந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து கொண்டான். மூபாயின் மேல் இருந்த வாரப் பத்திரிகை ஒன்றை எடுத்துப் புரட்டினான். இரண்டு மூன்று வாரங்கள் அவன் அந்தப் பத்திரிகையைத் தொடக் கூட இல்ல. சேர்த்து எல்லாவற்றையும் படித்துவிட்டு நிமிர்ந்த போது தோட்டம் இருளில் அமிழ்ந்து போய்விட்டது. வயலின் இசை நின்று போயிருந்தது. புல்வெளியின் நடுவில் இருந்த நீல நிற டும் விளக்கு எரிந்தது. குளிர்ச்சியான வெளிச்சம் அடித்தது. அவன் எழுந்து ஒரு தரம் சோம்பல் முறித்தான். ஹால் கடிகாரத்தில் மணி பார்த்தான்.

"வித்யா ஏன் வரவில்லை?"

ஹாலுக்குப் போனபோது டெலிபோன அடித்தது. ராங் நம்பர். ரிஸீவரை வைக்கும்போது வித்யாவுக்கு 'போன்' பண்ண வேண்டுமென்று தோன்றியது. பண்ணினான். அந்தப் பக்கத்திலிருந்து பதில் வராமல் போகவே முனுசாமியைக் கூப்பிட்டுத் திரும்ப 'டயல்' பண்ணச் சொல்லிப் பேசிவிட்டு வாசலுக்கு வந்தபோது, அப்பாவின் ஆபீஸ் அறையில் விளக்கு எரிவது தெரிந்தது. அப்பா இப்போதெல்லாம் ராத்திரி பன்னிரண்டு வரைகூட வேலை செய்கிறார். காலையிலும் ஒத்திரம் எழுந்து போய் விடுகிறார்...

அவன், ஆபீஸ் கட்டடத்தை நோக்கி நடந்தபோது அப்பா வெளியே வந்து கொண்டிருந்தார். இவனைப் பார்த்ததும் இதமாக ஒரு புன்னகை வெளிப்பட்டது.

"என்ன, பொழுது போவது கஷ்டமாக இருக் கிறதா?"

அவன் பதில் பேசாமல் சிரித்துக் கொண்டே தலை யாட்டினான். அப்பா, தோட்டக்காரனிடம் இரண்டு நாற்காலிகளை அந்தம் புல்தரைக்கு நடுவில் போடச் சொன்னார்.

"இப்படி உட்காருவோமா?"

"ஓ, எஸ்."

"இஃப் யு டோன்ட் மைண்ட். நான் உள்ளே போய்க் கொஞ்சம் ரிஃப்ரெஷ் பண்ணிண்டு வந்து விடுகிறேன். கொஞ்சம் உட்கார்ந்து கொண்டு இருக்கிறாயா?"

அவன் 'சரி' என்றான். அவர் நடந்து போவதையே பார்த்துக் கொண்டிருந்தான். அப்பாவுக்கு நன்றாகப் பேச வருகிறது. நாகரிகமாய், இதமாய் தடவிக் கொடுப்பது போல் பேசுகிறார். அவர் இன்னும் ஏதோ பேசப்போகிறார்.

இப்போது உள்ளே போவது, முகத்தைக் கழுவி, உடை மாற்றிக் கொண்டு வருவது— எல்லாம் எதற்கோ தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் பீடிகை.

அவர் ஐந்தே நிமிஷத்தில் திரும்பி வந்து அவன் எதிரில் உட்கார்ந்தார். பின்னாலேயே வந்த ஒரு வேலைக்காரன் பிரம்பு மூபாயை இழுத்து அவர்களுக்கு நடுவில் போட்டான். உள்ளே போய் இரண்டு கண்ணாடிக் கோப்பைகளையும் சோடா, விஸ்கி பாட்டில்களையும் கொண்டு வந்து வைத்தான். பாட்டில்களைத் திறந்து கொடுத்துவிட்டுப் போனான். அப்பா, கோப்பையில் ஊற்றத் தொடங்கினார்.

"ஸே வென் ..."

சங்கர் பாதிக் கோப்பையில் நிறுத்தச் சொல்லிக் கை காட்டினான். அப்பா தன்னுடையதை நிரப்பிக் கொண்டார். இன்னும் கொஞ்சம் சௌகர்யமாய் சாய்ந்து உட்கார்ந்து கொண்டார். சியர்ஸ் சொல்லிவிட்டுக் கோப்பையிலிருந்து துளித்துளியாகப் பருக ஆரம்பித்தார். சங்கர் அதற்குள் காலிக் கோப்பையை மூபாயின் மேல் வைத்தான். அவர், அவன் வேகத்தைப் பார்த்துச் சிரித்தார்:

"டோண்ட் பீ ஸோ :பாஸ்ட் சங்கர்."

"திஸ் வில் டு ஃபார் மீ..."

ஒரிரு நிமிஷங்கள் மௌனமாக ஊறின. அப்பா மறுபடியும் கோப்பையை நிரப்பிக் கொண்டு அவனைப் பார்த்தார்:

"ஸோ, இப்போ எப்படி இருக்கே?"

"ஓ, ஃபைன். தேங்க் யு."

வீட்டுக்கு வந்த நண்பனை உட்கார்த்தி வைத்துப் பேசுவதுபோல் இருந்தது. இனிதமான ஆரம்பம்...

"டாக்டரைப் போய்ப் பார்த்தியா? எப்போ கட்டைப் பிரிக்கப் போறாராம்?"

"நாளன்னைக்கு."

"ஐ. எம்... அப்புறம் கைக்குச் சில எக்ஸர்ஸைஸ் எல்லாம் கொடுக்கணும். அது உயிர் போகிற மாதிரி வலிக்கும். ஐ நோ இட் பிகாஸ் ஐ ஹேட் தட் எக்ஸ் பீரியன்ஸ் ஒன்ஸ்..."

அதைத் தாங்கிக் கொள்ள முடியும் என்கிற மாதிரி சிரித்து விட்டுப் பேசாமல் இருந்தான் சங்கர்.

"இன்னிக்கு வித்யா வரலையா ?"— மறுபடியும் அவரேதான் கேட்டார்.

"இல்லை. இப்போதான் போன் பண்ணினேன். அவளுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லையாம்..."

"என்ன உடம்பு சங்கர்?"

"ஸ்லைட் டெம்ப்ரேச்சர். நாளைக்கு நானே அங்கு போகலாமென்று இருக்கிறேன்."

"போய்விட்டு வா. அநாவசியமாய் ஸ்ட்ரெய்ன் பண்ணிக் கொள்ளாமல் அவள் இரண்டு நாளாவது ரெஸ்டில் இருக்கட்டும்..."

அவன் பேசாமல் இருந்தான். அவர், கோப்பையை வைத்து விட்டு சிகரெட்டு ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டார். இன்னொன்றைப் பற்ற வைத்து அவனிடம் நீட்டினார். மரியாதைக்காக அவன் அதை வாங்கிக் கொண்டான். அவர் கால்மேல் கால்போட்டுக் கொண்டு, நாற்காலியின் பின்னால் நன்றாகச் சரிந்து கொண்டார். மேலே பேச்சை ஆரம்பிக்கத் தினறினார்.

அதை அவன் புரிந்து கொண்டான். சிகரெட்டை அணைத்துப் போட்டு விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். செஸ் விளையாடுகிற மாதிரி உற்சாகமாய் இருந்தது. அப்பா எப்படி நகர்த்துவது என்பது தெரியாமல் தினறுகிறார்;

யோசிக்கிறார். யோசிக்கட்டும், நன்றாக யோசித்து நிதான மாய் நகர்த்தட்டும்...

அவன் வாசல் பக்கம் பார்த்தான், வெள்ளைப் பொமெரேனியன் நாய் ஒன்று குதித்துக் கொண்டு ஓடி வந்தது தாவி, சங்கரின் மடிமேல் ஏறி உட்கார்ந்தது. அவன் சட்டை கை எல்லாம் நக்கிக் கொடுத்தது. அதன் நாக்கு சில்லென்று இருந்தது. அவன், அதன் உடம்பைத் தடவிக் கொடுத்தான். அந்த வீட்டுப் பையன், நாயைத் தேடிக் கொண்டு பின்னாலேயே வந்து விட்டான். சிந்திக்காரப் பையன். செக்கச் செவேலென்று அழகாக இருந்தான். கண்ணில் மை இட்ட மாதிரி கறுப்பு.

"பப்பி, கமான்..."

அவன் குரலைக் கேட்டதும் அது குதித்து அவனிடம் ஒடிற்று. அவன் அதை தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டான்.

"குட் நைட் அங்கிள்."

அப்பா திரும்பி குட் நைட் சொன்னதும் போய் விட்டான். சங்கர் அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன பார்க்கறே?" —அப்பா.

"அந்த நாய் எவ்வளவு அழகாக இருக்கிறது! அதையே நாள் பூரா பார்த்துக் கொண்டு இருக்கலாம் போல...."

அப்பா சிரித்தார். ஒரு விநாடிக்குப் பின் கேட்டார்:

"இப்படிப் பார்ப்பதிலெல்லாம் மனசைப் பறி கொடுத்து விட்டு உட்கார்ந்திருந்தால், நிகழ்காலம் என்ன ஆவது சங்கர்?"

"இதுவே நிகழ்காலம் தானே!"

"இருக்கலாம். ஆனால் இதுபோல் பார்ப்பதும், பின் பார்த்ததில் நம்மைப் பறி கொடுப்பதற்காகவும் மட்டும் நாம் பிறக்கவில்லை."

சில மணி நேரங்களுக்கு முன்னால் மாடி பால்கனியில் உட்கார்ந்து கொண்டு 'நாம் எதற்காகப் பிறந்திருக்கிறோம்?' என்று யோசனை பண்ணியது நினைவுக்கு வந்தது. அப்பா இப்படி மாற்றிச் சொல்கிறார். பேச்சைத் தன் வழியில் திருப்புவதற்காக மட்டுமே இப்படிச் சொல்கிறார். அவர் மேல் அவனுக்கு அனுதாபம் ஏற்பட்டது.

உடனே அவருடைய புத்திசாலித் தனத்தைப் பாராட்டிக் கொள்ளவும் முடிந்து. அவனை எங்கே பிடிக்க வேண்டும் என்று நினைத்தாரோ அங்கே பிடித்து விட்டார். அவனும் அவரை அதேபோல் மடக்கவேண்டும். அதே புத்திசாலித் தனத்துடன்...

"அப்படினால் வாழ்க்கை வேறே எதற்கு? கல்யாணம், குழந்தை குட்டிகள்... இதற்கு மட்டும்தானா?"

"சங்கர்! அதை அவ்வளவு சுலபமாகச் சொல்லிவிடாதே. குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதே ஒரு தர்மம். இன்ஃபாக்ட், ஒரு சந்நியாசியாக இருக்கிறதை விட இது கஷ்டம். நீ சொல்லும் சுவைகள்— பார்க்கிற பார்வைகள் எல்லாம் இந்த வாழ்க்கையிலும் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் — இட் வுட் பி சம்திங் மோர் இன்ட் ரஸ்டிங் தேன் வாட்ச்சிங் எ டாக்." (It would be something more interesting than watching a dog.)

"அஃப்கோர்ஸ்! ஆனால் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ளவோ, பார்க்கவோ அதில் நான் ஒருத்தனாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லையே. ஐ நீட் நாட் பி எ பார்ட் ஆஃப் இட். பிளஸ் இட் ஈஸ் எ பார்ட் ஆஃப் மைன். எது இல்லாமலும் என்னால் அதைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியும் அப்பா."

"எதையுமே தள்ளி நின்று பார்ப்பதில் சில வசதிகள் உண்டு சங்கர். ஏனென்றால் உனக்கு அதில் பொறுப்பில்லை. சுலபமாக விமரிசித்து விடலாம். இல்லையா?"

"இல்லை. அது அப்படி அர்த்தம் ஆகாது."

ஒரு நிமிஷத்திற்குப் பின் அப்பா திரும்பப் பேச ஆரம்பித்தபோது அவர் குரல் மிகவும் மென்மையாக ஒலித்தது:

"வாழ்க்கையில் சில கஷ்டங்கள் வந்து கொண்டுதான் இருக்கும் சங்கர். யு ஷுட் நெவர் கெட் டிஸப்பாய்ன்டட். மனசில் ஏதோ புண் ஏற்பட்ட மாதிரி தழும்பு விழுந்து விட்ட மாதிரி ஃபீல் பண்ணுவதில், யு ஆர் ஸ்பாய்லிங் யுவர் ரெஸ்ட் ஆஃப் தி லைஃப்."

சங்கர் அதற்கு உடனே பதில் சொல்லவில்லை. மெதுவாக ஒரு புன்னகையுடன் அவரைப் பார்த்தான் "நீங்கள் கூட சில சமயங்களில் சாதாரண அப்பாவாக மாறி விடுகிறீர்கள். நாம் இருவரும் எதைப்பற்றிப் பேசுகிறோம் என்பது நம் இருவருக்குமே தெரிந்த பின்னால் ஏன் இந்த நிழல்விளையாட்டு? ஒய் டோன்ட் யு பி ஃபிராங்க்?"

அப்பா நிதானமாகச் சிரித்தார்:

"எஸ். அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். உன்னைக் கொஞ்ச நாளாகப் பார்த்துக் கொண்டு வருகிறேன். ராத்திரியில் சரியாகத் தூங்குவதில்லை. எங்கேயாவது வெறிக்கப் பார்த்துக் கொண்டு உட்கார்ந் திருக்கிறாய். நிறைய சிகரெட் பிடிக்கிறாய். எதையோ பறி கொடுத்தவன் மாதிரி.... இதெல்லாம் வாழ்க்கையில் சகஜம். எதிர்த்து நின்று போராடத் தெரிய வேண்டும். அதிலிருந்து தப்பித்துக் கொள்ளப் பார்ப்பது அபத்தம். முதலில் எதையும் அதன் போக்கோடு ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை வரவழைத்துக் கொள்ளவேண்டும்..."

"குட். நீங்கள் சொன்னதை நான் ஒப்புக் கொள்கிறேன். இதையே நானும் வித்யாவிடம் நிறையத் தரம் சொல்லியிருக் கிறேன். நீங்கள் அவளைப் பற்றித்தான் பேசுகிறீர்கள் இல்லையா? எஸ்! ஐ லவ்ட் ஹர். நீங்கள் சொன்னமாதிரி தூக்கமில்லாமல், நிறைய சிகரெட் பிடித்துக் கொண்டு, வானத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்ததை என்னால் மறுக்க முடியாது. ஒரு சத்தியஜித்ரேயின் படத்தை மேலே பார்க்க முடியாமல் பாதியிலேயே எழுந்துகூட வந்தி ருக்கிறேன். அந்த மாதிரியெல்லாம் கொஞ்சம் சாதாரணமாக நடந்து கொண்டதை சொல்லிக் கொள்ள இப்போது நான் வெட்கப்படவில்லை. பட், காதலில் தோல்வி அடைந்த தமிழ் சினிமாக் கதாநாயகன் மாதிரி நான் இருப்பதாக— வாழ்க் கையை வெறுத்துவிட்டு, காவியைக் கட்டிக் கொண்டு சாமி யாராகப் போய்விடப் போவதாக நீங்கள் நினைக்கிறீர்களே, அது சரி இல்லை. நான் தோல்வி அடையவில்லை என்பதை நானே ஒருநாள் திடீரென்றுதான் புரிந்து கொண்டேன். ட்ரூ லவ் ஈஸ் நாட் பெய்ன்ஃபுல் என்பது புரிந்தது. அதை நீங்களும் புரிந்து கொள்ள வேண்டும். நாம் விரும்பின - நமக்குப் பிடித்த எல்லாவற்றையும் நாமே ஆக்கிரமித்துக் கொள்ள முடிந்தால்தான் வெற்றியா? இட் ஈஸ் நாட் ஸோ. அந்த ஆக்கிரமிப்பு எனக்குப் பிடிக்கவில்லை. அதற்காக நான் வருத்தப்பட்டால் - என்னுடையது ஒரு கேவலமான சுயநல மான எண்ணம்தான் - அவள்மீது எனக்கு இருக்கும் அன்பு உண் மையானதில்லை என்று ஆகிவிடும். 'வித்யா' என்பது ஒரு நல்ல அனுபவம் எனக்குள் இன்னும் சில வழிகளைத் திறந்துவிட்டி ருக்கிறது. என்னை இன்னும் மென்மையானவனாக மாற்றி யிருக்கிறது. நான் இப்போது ஃப்ரீயாக இருக்கிறேன். சந்தோஷமாய் உணர்கிறேன்; தெளிவாக இருக்கிறேன்..."

சிறிது நேர இடைவெளிக்குப் பின் அவன் இன்னும் தாழ்ந்த குரலில் நிதானமாகச் சொன்னான்.

"இன்ஃபாக்ட், எனக்கு அவள் கிடைத்திருந்தால்கூட நான் இவ்வளவு சந்தோஷப்பட்டிருக்க மாட்டேன்."

"வாட் டு யு மீன்?"

"இதற்கு நிறைய அர்த்தம் உண்டு. அது யோசித்துப் பார்த்தால் உங்களுக்குப் புரியும். சில விஷயங்களைப் புரிந்து கொள்ள பாஷை உதவுவதில்லை. யு ஹேவ் டு ∴பீல் இட். ஐ டோன்ட் வாண்ட் டு கிவ் ஏன் எக்ஸ்பிளனேசன் டு ஏன் எக்ஸ்பிளனேசன்."

அப்பா மௌனமானார் அவருக்கு அவன் சொல்வது புரிந்தது; அவனைப் புரிந்தது. அவர் முகத்தில் பெருமை தெரிந்தது. 'இவன் எனக்குப் பிள்ளை!' என்ற கர்வம் தெரிந்தது. அவனுக்கு முன்னால் தான் சராசரியாகப் போய் விட்ட மாதிரித் தோன்றியது. ஆனால் அதில் அவருக்கு வருத்தமில்லை.

'இனி இது பற்றி நாம் கவலைப்பட வேண்டாம். இவனுக்கு எந்த ஆறுதலும் தேவை இல்லை. இவன் தெளிவாகத்தான் இருக்கிறான். சந்தோஷமாகவும் இருக்கிறான்....'

சங்கர் ஒரு நிமிஷம் வானத்தின் அழகில் லயித்துப் போன போது அப்பா சொன்ன 'நிகழ் காலத்தை மறந்து விடக் கூடாது இல்லையா?' ஞாபகத்துக்கு வந்தது. அவர் முகத்திற்குப் பார்வையைத் திருப்பினபோது அவர் ஒரு புன்னகையோடு அவனையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

"என்ன பார்க்கிறீர்கள்?"

'ஒன்றுமில்லை...."

"இப்படிப் பார்ப்பதில் எல்லாம் மனசைப் பறி கொடுக்கக் கூடாது அப்பா."

அவர் கொஞ்சம் பெரிதாகச் சிரித்தார். அவனும் சிரித்தான்.

"நாழியாகி விட்டதே. சாப்பிடப் போகலாமா சங்கர்?"

"ஓ. எஸ்! நிகழ் காலத்தை மறக்கக் கூடாது இல்லையா?"

திரும்பவும் இரண்டு பேரும் சிரித்துக் கொண்டே எழுந்தார்கள்.

வேலைக்காரன் நாற்காலிகளை இழுத்து வராந்தாவில் போட்டுவிட்டு பாட்டில்களையும், கோப்பைகளையும் எடுத்துக் கொண்டு உள்ளே வந்தான்.

புல் வெளியின் நடுவில் இருந்த டூம் விளக்கு அணைந்து போர்டிகோவின் சின்ன மங்கல் விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது...

30

அந்தச் சுறுசுறுப்பான சாலையின் சந்தடியை அலட்சியப்படுத்துகிற மாதிரி உள்ளே தள்ளியிருந்தது அந்தக் கட்டடம். பார்வைக்கு ஒரு ஆபீஸ் சூழ்நிலையை விட்டு விலகியிருப்பது போல் தெரிந்தது. வாசலில் இரண்டு பெரிய தூங்குமூஞ்சி மரங்கள் விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. பக்கத்தில் இரண்டு மாமரங்கள் காற்றின் சலசலப்பில் பேசிக் கொண்டிருந்தன. வேப்பமரத்தின் குளுமை. பிஞ்சுக் காய்களுடன் ஒரு சின்ன சப்போட்டா மரம். தென்னையின் 'என்னைப் பார்!' என்று சொல்லும் உயரத்தின் அழகு. நிழல். எல்லா மரங்களும் சேர்ந்து சூரியனுக்கெதிராக ஒப்பந்தம் செய்து கொண்டதைப் போன்ற ஒரு பரவலான நிழல். கூடவே ஓர் அமைதி. ஓர் அணிலின் கத்தல்கூட மிகப் பெரிதாகக் கேட்கும் அமைதி...

சங்கருக்குப் பிடித்தது. ஜன்னல் வழியாக வேப்பமர அசைவைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன். ஒரு சின்ன இடைவெளிக்குப் பின் நிரும்பவும் ஆபீஸ் வேலை உற்சாகமாய் இருந்தது. பிரஸ்ஸுக்கும், மாடிக்கும், தன் அறைக்கும் அலைவது பிடித்திருந்தது. புதிதாக வேலையில் சேர்ந்ததைப் போல் ஒரு கறுகுறுப்பு. ஒரு சுவாரஸ்யம்...

எதிரே மேஜையின் நடுவில் ப்ரூஃப்கள் திருத்தத்திற்காக வைக்கப்பட்டிருந்தன. பிரசுரிக்க ஏற்றதாய்க் கருதப்பட்ட கதைகள் பார்வைக்கு வந்திருந்தன. அவசரமாய்ப் பதில் எழுத வேண்டிய கடிதங்கள், கையெழுத்து மட்டும் போட வேண்டிய லெடைப் அடிக்கப்பட்ட காகிதங்கள். அடிக்கடி உள்ளே வந்து ஏதாவது கேட்டுக் கொண்டு போகும் துணை ஆசிரியர்கள். ப்ரூஃப் ரீடர்கள். விட்டுவிட்டு அடித்துக் கொண்டிருக்கும் டெலிபோன்...

அந்த வாரச் சுடரின் அட்டையைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போனார் சாரங்கபாணி. அது ஒரு நல்ல மாடர்ன் ஆர்ட். 'மௌனம்' என்று தலைப்பிட்டிருந்தார் ஓவியர். கூர்மையான பார்வைக்கூட இதற்கு மேலும் ஏதாவது அர்த்தம் இருக்குமோ?' என்று தேடவைக்கும் திறமை. வரையப்பட்ட போதே சங்கரின் கவனத்தை அதிகம் கவர்ந்தது. அது அச்சில் இன்னும் நன்றாக இருந்தது. அந்த அழகு கலைந்து விடக் கூடாது என்பதற்காக 'சுடர்' என்ற பெயரைக்கூட ஒரு மூலையில் சின்னதாக எழுதச் சொல்லியிருந்தான். ஒரு முழு திருப்தியுடன் அதை பேப்பர் வெயிட்டின் அடியில் வைத்தான்.

கதவு திறந்தது.

"இந்தக் கதை ஏழரைப் பக்கம் வர்றது சார். இதைக் குறைச்சால்தான் இதே இஷ்யுவிலே அந்த மலையாளக் கவிஞரோட பேட்டியைப் போட முடியும்."

சங்கர் அதை வாங்கிப் பார்த்தான்.

"நோ...நோ. இதைக் குறைக்க முடியாது. குறைக்கவும் கூடாது. அந்தப் பேட்டியை நிறுத்திடுங்க. அடுத்த இஷ்யுவிலே போட்டுக்கலாம். இதை அப்படியே போட்டுடுங்க."

"சரி. அப்போ அந்தக் கவிதையை கம்போஸ் பண்ணச் சொல்ல வேண்டியதுதானே?"

"ம். பண்ணச் சொல்லுங்க."

'அப்புறம், ஜெயராமன் நேத்திக்கே அந்த போட்டோஸ் எல்லாத்தையும் அனுப்பரேன்னார். இன்னும் அனுப்பலே..."

"இப்ப நான் போன் பண்றேன். நீங்க போறபோது பிரகாசத்தைக் கொஞ்சம் வரச் சொல்லுங்களேன்."

கதவு மூடிக்கொண்டது.

சங்கர், போட்டோகிராபருக்கு போன் பண்ணியபோது பிரகாசம் உள்ளே வந்தான். பேசி முடித்துவிட்டு அவனைப் பார்த்தான்.

"இன்னிக்கு ராத்திரி எத்தனை நாழியானாலும் இந்தக் கதையின் ப்ரூஃப்பை மட்டும் வீட்டிலே கொண்டு வந்து கொடுத்துடச் சொல்றியா பிரகாசம்?"

"சரி, சார்."

"இப்ப எத்தனாவது பாரம் ஓடிக்கிட்டிருக்கு?"

"மூணாவது."

"மூணாவதா? சரி, ப்ரூஃபை மறக்காம அனுப்பிடு."

பிரகாசம் போனதும் அந்தக் கதைகளை ஒவ்வொன்றாய்ப் புரட்டிக் கொண்டு வந்தான். நடுவில் சுகுமாரனின் பெயர் கண்ணில் பட்டது. முதலில் அதைப் படிக்க ஆரம்பித்தான். ஆரம்பமே நன்றாக இருந்தது. சுகுமாரனுக்கு மனசுக்குள் ஒரு சபாஷ் போட்டுக் கொண்டே மேலும் தொடர்ந்தான்.

சுகுமாரனின் போனா அவனை என்றும் ஏமாற்றின தில்லை. அந்தக் கதையில் அவனுக்கு விஷயத்தைத் தெளிவாகச் சொல்லும் ஒரு பகீருவம் வந்திருந்தது. அன்றாட வாழ்க்கையின் நடைமுறை அந்த எழுத்தில் மாறிப் போயிருந்தது. நிச்சயம் அது ஒரு நல்ல கதை என்ற பாராட்டைப்பெறும்...கதையின் கடைசி வரிகள் அவனுக்குப் பிடித்திருந்தன. மீண்டும் ஒரு முறை படித்தான்:

'...எனக்குப் புரிந்துவிட்டது. இந்த உலகம் எனக்கு வாயக்கில்லை. நான் 'தனி'யானவன். இங்கு எவரும் என்னோடு முழுசாக ஒட்டவில்லை. ஒட்ட முடியாதவர்கள் முறிந்து போனார்கள். நான் இவர்களிலிருந்து அந்நியப் பட்டு நிற்கிறேன்...நான் இருக்க வேண்டிய இடம் வேறு ஏதோ. எந்த இடம் என்பது தெரியவில்லை. ஆனால் நிச்சயமாய் இது இல்லை...ஆனாலும் இந்த உலகம் எனக்குப் பிடித்திருக்கிறது. இதன் மனிதர்கள் பிடித்திருக்கிறார்கள். அன்பாய் என்னால் பார்க்க முடிகிறது. பேச முடிகிறது. பழக முடிகிறது...'

'வெல் ஸெட் சுகுமார்!'—அவனுக்கு எப்போதோ எழுதின தன் டைரியின் ஒரு பக்கம் ஞாபகத்துக்கு வந்தது. ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு அந்த வரிகளைப் பற்றியே மீண்டும் யோசித்தான். பின் அது பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு அடையாளமாக ஒரு கையெழுத்தைப் போட்டு எதிரேயிருந்த ட்ரேயில் போட்டான்.

அப்போது டெலிபோன் அடித்தது:

"ரமணி என்பவர் உங்களுடன் பேச வேண்டுமாம்" என்றாள் ஆபரேட்டர்.

ரமணி! ரமணியா?

"ஓ. எஸ். கனெக்ட் பண்ணுங்கள்."

"மிஸ்டர் சங்கர்?"

"குட்மார்னிங் மிஸ்டர் ரமணி."

"குட்மார்னிங். ஹௌ ஆர் யு மிஸ்டர் சங்கர்?"

"ஃபைன். நெவர் பீஃபோர்; நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?"

"கொய்ட் ஆல்ரைட்."

"....."

"நாம் பார்த்து எத்தனையோ நாளாகி விட்டது. இல்லையா?"

"ஆமாம்."—சங்கர் சிரித்தான்.

"ஒய் நாட் வி மீட் திஸ் ஈவினிங்?"

"திஸ் ஈவினிங்? ஒ. எஸ். வித் ப்ளெஷர் மிஸ்டர் ரமணி... எனி நிங் இம்ப்பார்ட்டெண்ட்...?"

"...இன் எ வே...எஸ்!"

"ஓ.கே. சாயந்திரம் ஆபீசிலிருந்து நேராக உங்க வீட்டுக்கு வருகிறேன்."

"வீட்டுக்கா...' ஒய் நாட் வி மீட் இன் தி பீச்...?"

"பீச்சுக்கா!"

"ஆமாம் சங்கர்."

"சரி. வருகிறேன். எத்தனை மணிக்கு?"

"ஸிக்ஸ் ஓர்ட்டி. காந்தி சிலை பக்கத்தில். மறந்து விடாதீர்கள்."

"நோ. நோ. மறக்கமாட்டேன்."

போனை வைத்ததும் சங்கர் யோசித்தான். ரமணி முதல் தடவையாக அவனுக்கு போன் பண்ணியிருக்கிறான், பார்க்க வேண்டுமென்கிறான். வீட்டுக்கு வரச் சொல்லாமல் பீச்சுக்கு வரச் சொல்லியிருக்கிறான். ஏதோ முக்கியமாகப் பேசப் போகிறான். வித்யா இல்லாமல் தன்னிடம் எதையோ

பேசப் போகிறான். அந்த 'இன் எ வே...எஸ்!' என்னவாக இருக்கும்...?

'எதுவாக இருந்தாலும் கவனமாக இருக்க வேண்டும். நிதானமாய் இருக்க வேண்டும். ரமணியிடம் பொறுமையாகப் பேச வேண்டும். யோசித்துப் பதில் சொல்ல வேண்டும்...என்னவாக இருக்கும்?'

திரும்பவும் டெலிபோன். சிவசங்கரன். அவர் இந்த இதழ் சம்பந்தமாக ஏதோ பேசினார். ஒரு காகிதத்தில் குறித்துக் கொண்டான். பின், தன் அறையின் கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு பிரஸ் கட்டடத்துக்குப் போனான். மெஷின்களின் சத்தம் திடீரென்று செவியைத் தாக்கின. சப்தங்களைக் கடந்து கம்பாளிடரிடம் அந்தக் காகிதத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பினான்.

கூரிந்தி சிலை. பக்கத்தில் ரமணி காத்துக் கொண்டிருந்தான். காரை நிறுத்திப் பூட்டிவிட்டு நடந்து வந்தான் சங்கர். பத்து நிமிஷ தாமதம். அதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

"ஐயம் ஸாரி டு ஸே ஸாரி..."

"பரவாயில்லை மிஸ்டர் சங்கர். உள்ளே மணலில் உட்காருவோமா?"

"ஓ. எஸ்."

இடது பக்கமாய் நடந்து போய்க் கூட்டம் அதிகம் இல்லாத இ_த்தில் உட்கார்ந்து கொண்டார்கள். கொஞ்ச தூரத்தில் ஒரு குழந்தை தனியாக, சுதந்திரமாக ஓடிக்கொண்டிருந்தது. அதையே பார்த்துக் கொண்டிருந்தான் சங்கர். ஒரு நிமிஷம் மௌனமாய் போயிற்று. பின் அவன்தான் அதைக் கலைத்தான்.

"வித்யா வரலையா?"

மணலைத் தடவி அதில் தன் கையெழுத்தைப் போட்டு அழித்துக் கொண்டிருந்த ரமணி, நிமிர்ந்து பார்த்தான். 'இல்லை' என்று தலை ஆட்டினான்.

"நான் பேக்டரியிலிருந்து நேராக இங்கே வந்து விட்டேன். உங்களிடம் தனியாக மனம் விட்டுப் பேச வேண்டும். என் மனசில் இருப்பதைச் சொல்லியாக வேண்டும். வித்யா இருந்தால் என்னால் பேச முடியாது. நீங்கள் ப்ரீயாக இருக்கிறீர்கள் இல்லையா...?"

"ஐயம் அட் யுவர் டிஸ்போஸல் மிஸ்டர் ரமணி. சொல்லுங்கள். எதுவானாலும், ஐயம் ஹியர் டு ஷேர் இட்..."

"தேங்க் யு மிஸ்டர் சங்கர்..."

ரமணி ஷர்ட் பாக்கெட்டிலிருந்து சிகரெட் கேஸை எடுத்துத் திறந்து சங்கரிடம் நீட்டினான். அவன் ஒன்றை எடுத்துக் கொண்டதும் தானும் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு லைட்டரை அவனிடம் கொடுத்தான். லைட்டரை எரிய வைத்துக் கொண்டே சங்கர் கேட்டான்:

"டு யு ம்மோக்...?"

"ம்...அகேஷனலி."

சிகரெட் பாதி எரியும் வரை ரமணி ஒன்றும் பேசவில்லை. எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான். பேச்சை எங்கே ஆரம்பிப்பது என்று அவன் யோசிப்பது சங்கருக்குப் புரிந்தது. அவனும் மௌனமாக இருந்தான். பக்கத்தில் வந்த ஒரு முறுக்கு, சுண்டல்காரர் அவன் கவனத்தைக் கலைத்தார். அவன் ரமணியைப் பார்த்தான். 'ரமணி வேண்டாமென்று தலையாட்டினான்.

"வேண்டாம் பெரியவரே..." சங்கர் சிரித்துக் கொண்டே சொன்னான். அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான். தன்னால் அந்த மாதிரி முறுக்கு, சுண்டல் விற்க

முடியுமா என்று யோசித்தான். எப்போதோ தன்னுடன் படித்த சிவராமனை நினைத்துக் கொண்டான்: அவன் மாலை நேரங்களில் சில ஆபீஸ்களுக்குப் போய் முறுக்கும், மிளகு வடையும் விற்பான். அது தெரிந்ததும் அவன் பெயர் 'முறுக்கு மிளகு வடை' என்றே மாறியது. அதற்காக அவன் சங்கரிடம் வந்து வருத்தப்பட்டிருக்கிறான். 'அது எப்படி ஒரு கௌரவ மான வேலை' என்பதை சங்கர் அவனுக்கு எடுத்துச் சொல்லி யிருக்கிறான். அப்படி அவனைக் கூப்பிடுபவர்களைவிட அவன் எப்படி உயர்ந்தவன் என்பதை விளக்கியிருக்கிறான். அந்த சிவராமன் இப்போது எங்கே இருக்கிறானோ...!

''வித்யாவை உங்களுக்கு நன்றாகத் தெரியும் இல்லையா, மிஸ்டர் சங்கர்?''

''வாட்...''—சங்கர், ரமணியைப் பார்த்தான்.

''ஐ மீன்...எனக்கு நன்றாகப் பேச வராது மிஸ்டர் சங்கர். எதையும் இம்ப்ளைடாகச் சொல்ல வராது. சொல்ல வந்ததை வெளிப்படையாகச் சொல்லி விடுகிறேன். வித்யா ஈஸ் நாட் ஹேப்பி வித் மி. நான் அவளுக்குத் தகுதியானவன் இல்லை. எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் ஒரு சாதாரண மனிதன். அவளுடைய சந்தோஷங்களையெல்லாம் புரிந்து கொள்ள முடியாத—தடுத்துக் கொண்டிருக்கிற வெகு வெகு சாதாரணமான மனிதன். அவள் எங்கோ இருக்க வேண்டி யவள். ஆனால் என்னுடைய சுயநலம், ஒரு மூர்க்கமான பிடிவாதம் அவளை என்னுடையவளாக்கிக் கொண்டுவிட்டது. ஐ ரியலி ஃபீல் பார் இட் மிஸ்டர் சங்கர். ஒரு நாள் இதே பீச்சில் உட்கார்ந்து அவள் 'வேண்டாம் ரமணி. நாம் எல்லா விஷயங்களிலும் மாறுபடுகிறோம். நம்மால் சந்தோஷமாக இருக்க முடியாது' என்று சொன்னது இப்போதுதான் புரிகிறது. நான் எங்கே நிற்கிறேன் என்பது தெரிகிறது. நான் முன் போல் இல்லை மிஸ்டர் சங்கர். ஐ கேன் ஆல்ஸோ அண்டர்ஸ்டாண்ட் ஹி யூமன் ஃபீலிங்க்ஸ். ஐ வாண்ட் ஹர் டு பி ஹேப்பி சங்கர்; ஹேப்பி சம்வேர்...''

சங்கர் ரோடைப் பார்த்துக் கொண்டிருந்தான். தெரு வின் எல்லா விளக்குகளும் ஒரே சமயத்தில் எரிய ஆரம் பித்தன. தூரத்தில் நான்கு விளக்குகள் மட்டும் மென்மை யான நீலத்தைவிட்டுத் தனியாக ஒரு நிறத்தில் நின்றன. 'ஐ வாண்ட் ஹர் டு பி ஹேப்பி சம்வேர்...' ரமணி என்ன சொல்ல வருகிறான் என்பது அவனுக்குப் புரிந்தது. உடம்பு ஒரு தரம் சிலிர்த்தது. அவன் பேசியதெல்லாம் அபத்தம் என்று பட்டது. இருந்தாலும் அவனைப் புரிந்து கொள்ள முடிந்தது.

'என்ன மனிதன் இவன்! அவள் மீது எத்தனை அன்பு! இந்த மாதிரிகூட ஓர் அன்பா! இவனுக்கு இவனுடைய அடி மனசு பிடிபடவில்லை சில விஷயங்கள் தெளிவுபடவில்லை. அதற்குக் காரணமே இவன் செலுத்தும் இந்த அன்புதான் என்பதைப் புரிய வைக்க வேண்டும். இவன் மனசைத் தெளிய வைக்க வேண்டும்...'

சங்கர் அவனைப் பார்த்தான். குளிப்பாட்டுகிற மாதிரி ஒரு பார்வை. பின் மெதுவாகச் சிரித்தான்:

''வெல்... நீங்கள் 'முன்போல் இல்லை' என்று சொன்னதன் அர்த்தம் எனக்குப் புரிகிறது. உங்கள் பேச்சின் எல்லா அர்த்தங்களுமே எனக்குக் கிடைக்கிறது. பட், ஆரம்பத்தில் நீங்கள் ஏன் அப்படி ஒரு பொய்யைச் சொன் னீர்கள் என்பதுதான் புரியவில்லை.''

''பொய்யா...?''

''எஸ்!''

''என்ன பொய் மிஸ்டர் சங்கர்?''

''எனக்கு நன்றாகப் பேச வராது என்ற பொய்...''

ரமணி சிரித்து விட்டான்.

''கடலை சார், சூடான வேர்க்கடலை...?

சங்கர் வேண்டாமென்று தலை ஆட்டினான்.

"விக்கவே இல்லை சார். ஒரு பத்து பைசாவுக்கு வாங்கிக்கங்க சார்..."

சங்கர் அவனைப் பார்த்தான். சின்னப் பையன். பத்து வயசு இருக்கலாம். அந்த வயசில் மூன்று நான்கு சிறுவர்கள் சற்று முன்புதான் அவனிடம் வந்து பிச்சை கேட்டுவிட்டுப் போனார்கள். அவன் ஒரு நாலணாவுக்கு வாங்கினான். பொட்டலத்தை நடுவில் வைத்தான். பையன் போனதும் பேச ஆரம்பித்தான்.

"நீங்கள் நன்றாகப் பேசுகிறீர்கள் ரமணி. நீங்கள் சொல்ல வந்த விஷயத்தை இதைவிட நன்றாக வேறு யாராலும் சொல்லியிருக்க முடியாது. வித்யாவின் மேல் நீங்கள் வைத்திருக்கிற அதிகமான அன்பைத்தான் அது காட்டுகிறது. ஒரு கணவன் தன் மனைவியை நேசிப்பதை - இப்படி நேசிப்பதை தப்பு என்று யார் சொல்ல முடியும்? ஆனால் நீங்கள் 'நான் மாறி விட்டேன்' என்று சொல்லி உங்களை மாற்றிக் கொள்ள நினைக்கிறீர்களே, அதைத்தான் என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை..."

ரமணி மணலில் கிறுக்குவதை நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தான்.

"எஸ்! நீங்கள் எப்பவும் போல்தான் இருக்கிறீர்கள். நீங்கள் நீங்களாகவே இருக்கிறீர்கள். அதுதான் உங்களை எனக்குப் பிடிக்க வைத்தது. முன்பு இருந்த கோபமும், எரிச்சலும் இப்போது என்னிடம் இல்லை என்பதைத்தான் நீங்கள் 'முன்போல் இல்லை' என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் ஒரு விரக்தி இருக்கிறது. அந்த விரக்திதான் இவ்வளவும் பேச வைக்கிறது. எனக்கு எந்த கோபமுமில்லை என்பதை ஒரு அதிகமான கோபத்துடன் அமைதியாகச் சொல்லியிருக்கிறீர்கள். வெல்... இவ்வளவு தூரம் நீங்கள் பேசியபின் நானும் மனம் விட்டுப் பேசுவது தான் நியாயம் பேசுகிறேன்.

"நீங்கள் சொன்ன எதுவுமே சரி இல்லை என்பதுதான் நான் நினைக்கிறேன். வித்யா ஈஸ் நாட் ஹேப்பி வித் யு?

தட் இட்ஸெல்ஃப் ஈஸ் ராங். ஒரு வேளை முதலில் அவன் அப்படி இருந்திருக்கலாம் சில விஷயங்கள் புரியாத போது, மனசுக்குப் பிடிபடாதபோது. இப்போதும் அப்படி இருக்க நியாயம் இல்லை. உங்களுக்குச் சில விஷயங்கள் புரிகிற மாதிரி அவளுக்கும் புரிந்து போயிருக்கிறது. ஆனால் நீங்கள் இரண்டு பேருமே மனசுவிட்டுப் பேசிக் கொள்ளவில்லை என்பது தெரிகிறது. ஒருதரம் அப்படிப் பேசியிருந்தால் இப்போது நான் இங்கே வந்து உட்கார்ந்து உங்களுடன் பேசிக் கொண்டிருக்க மாட்டேன். எனக்குப் பதில் இந்த இடத்தில் வித்யா உட்கார்ந்திருப்பாள். பேசிக் கொண்டிருப்பாள்...

"அவளை அடையும் தகுதி உங்களுக்கு இல்லை? ப்ளீஸ். டோண்ட் எவர் ஸே தட். டோண்ட் ஈவன் :பீல் தட் அவளை அடைந்திருப்பதிலிருந்தே— அவள் உங்களுக்குக் கிடைத்திருப்பதிலிருந்தே—உங்களிடம் ஏதோ ஒரு அதிகப்படியான தகுதி இருக்கிறது என்பதுதான் அர்த்தம். அதனால்தான் அவள் உங்களுக்குக் கிடைத்திருக்கிறாள். அவளை அடைகிற தகுதி உங்களை விட வேறு யாருக்கும் இல்லை என்று தான் இதற்குப் பொருள். நமக்குக் கிடைத்துள்ள ஒன்றுக்கு நாம தகுதியில்லை என்று நினைப்பதே ஒரு பாவம் ரமணி. சில நல்ல விஷயங்கள்— அபூர்வமான— விஷயங்கள்— எல்லாத் தகுதியும் உடைய ஒருவனிடம்தான் போய் சேர வேண்டுமா? அந்த மாதிரி எல்லாத் தகுதியும் உடையவன் யார்? எனக்குக் காட்ட முடியுமா? நான் ஒன்றுமே தெரியாதவன் என்று சொல்லிக் கொள்கிறீர்கள்... ஒன்றுமே தெரியாதவன் தான் இவ்வளவு நன்றாகப் பேசுவானா? ஒன்றுமே தெரியாதவன் என்று உலகத்தில் ஒருத்தருமே கிடையாது. உங்களுக்கு இலக்கியம் தெரியாமல் இருக்கலாம். எழுதத் தெரியாமல் இருக்கலாம். எழுதியதை ரசிக்கத் தெரியாமல் இருக்கலாம். அதைத் தவிர உங்களுக்கு வேறு எவ்வளவோ விஷயங்கள் தெரியும். எனக்கு உங்கள் என்ஜினீரிங் தெரியாது. என் ஆபீசில் நான் எழுதினதை லட்சம் லட்சமாக அச்சடிக்கும்

ஒரு மெஷின் நின்று போனால் ஒட வைக்கத் தெரியாது. அதற்கு நான் ஒரு மெக்கானிக்கைத்தான் வரவழைக்க வேண்டும். அவ்வளவு தூரம் போவானேன். அதோ அந்த பானிப் பூரிக்காரன் நிமிஷத்துக்கு நாலு கட்லெட் செய்து கொடுத்து விடுகிறான். நம்மால் வாங்கித்தான் சாப்பிட முடியுமே தவிர, அந்த வேகத்தில் அந்த மாதிரி செய்ய முடியாது...

"ஒன்றுமே தெரியாதவன் என்று யாரைச் சொல்ல முடியும்? அப்படி யாருமே இருக்கவும் முடியாது. எல்லாருக்குமே ஏதாவது ஒரு விஷயம் தெரிந்துதான் இருக்கும். அதற்காக நாம் மதித்துதான் ஆக வேண்டும்; ஸோ— நீங்கள் 'ஒன்றும் தெரியாதவன்' என்று சொல்லிக் கொள்வதில் அர்த்தமே இல்லை.

"கமிங் டு யுவர் பாயிண்ட், முதல் முதலாக வித்யாவைப் பார்த்தபோது எனக்குள் ஒரு ஆச்சரியம். இந்த மாதிரி ஒரு புத்திசாலித்தனமா என்ற ஆச்சரியம். அந்த புத்திசாலித்தனம் எனக்குப் பிடிக்கும். அதை ஒரு பெண்ணிடம்—அதுவும் அந்த வயசுப் பெண்ணிடம் பார்த்த போது ரொம்ப சந்தோஷமாக இருந்தது. அந்த சந்தோஷத்தில் மனசில் ஒரு குழப்பம். அவளோடு பழக ஆரம்பித்த பின்னால் அவளைப் புரிந்து கொண்ட பின்னால்— நான் கஷ்டப்படவே இல்லை. எந்தப் போராட்டமும், எந்தத் தாகமும் இல்லாததனால் தான்— ஒரு வேளை அதையெல்லாம் மீறி வந்து விட்டதால் தானோ என்னவோ இதோ இங்கே இவ்வளவு சகஜமாய், தெளிவாய் என்னால் பேசிக்கொண்டிருக்க முடிகிறது.

"நல்ல காலமாய் வித்யாவை நீங்கள் இங்கே அழைத்துக் கொண்டு வரவில்லை. இப்போது நீங்கள் பேசினதைக் கேட்டிருந்தால் எவ்வளவு கஷ்டப்பட்டுப் போயிருப்பாள் தெரியுமா? பட், ஒன் திங்... இவ்வளவு பேச்சுக்கும் அவள் மீது நீங்கள் வைத்திருக்கிற அன்புதான் அடிப்படைக் காரணம்.

அதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அந்த மாதிரி அன்பு செலுத்துவது ஒரு பெரிய விஷயம். அந்த ஒரு தகுதி மட்டும் போதுமே மிஸ்டர் ரமணி..."

சங்கர் தன் பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். ரமணியிடம் நீட்டியபோது அவன் வேண்டாம் என்று மறுத்துவிட்டான். ஓர் ஐந்து நிமிஷம் மௌனம். திரும்பவும் சங்கர்தான் பேசினான் குரலை இன்னும் தாழ்த்திக் கொண்டு, இன்னும் நிதானமாக அப்படியே அந்தப் பேச்சில் எதிரே இருப்பவனைக் கரைத்து விடுகிற மாதிரி...

நாம் சந்தோஷமாக இருக்கத்தான் பிறந்திருக்கிறோம். பிறரை சந்தோஷப்படுத்தத்தான் பிறந்திருக்கிறோம். எல்லாரிடமும் அன்பு செலுத்த... அந்த அன்பைத் திரும்பப் பெற்றுக் கொள்ள... இது மட்டும் தான் வாழ்க்கை என்று நான் நினைக்கிறேன். இதற்காகத்தான் வாழ்க்கை."

சட்டென்று ரமணி, சங்கரின் கையைப் பிடித்துக் கொண்டான். மனசின் உணர்ச்சிகளையெல்லாம் தன் கையின் வழியாக சங்கருக்குத் தெரிவித்துவிட வேண்டுமென்ற ஒரு வேகம் அந்தப் பிடியில் தெரிந்தது.

"ப்ளீஸ் சங்கர். டோண்ட் டாக் எனிதிங் மோர். ப்ளீஸ்..."

சங்கர் பேசாமல் இருந்தான். ரமணியும் பேசவில்லை. ஐஸ் க்ரீம் வண்டியை இழுத்துக் கொண்டு ஒருவன் அவர்களுக்குப் பக்கத்தில் வந்தான்.

"பிஸ்தா, சாக்கோபார்..."

"ஐஸ் க்ரீம் சாப்பிடுவோமா?"—ரமணி கேட்டான்.

"ஐ டோண்ட் மைண்ட்."

இரண்டு கப் ஐஸ் க்ரீம்கள் கேட்டான் ரமணி. கொடுக்கும்போது ஒரு கப் தவறி அவன் மடியில் விழுந்தது. பாண்டிற்குள் கால் சில்லிட்டது.

"மன்னிச்சுக்குங்க சார். கை தவறி விட்டது சார்..."—அந்தப் பையன் பதறிப் போனான்.

'பரவாயில்லைப்பா...இன்னொரு கப் கொடு."—ரமணி கை குட்டையால் பாண்ட்டைத் துடைத்துக் கொண்டான். ஒன்றுமே நடக்காதது போல் சிரித்தான். கப்புக்கான பணத்தை நீட்டினான்.

"இல்லை, சார்...அந்த கப் பணத்தை நானே..."

"வேணாம்பா, வாங்கிக்கோ."

அந்தப் பையன் அவனை ஆச்சரியமாகப் பார்த்து கொண்டே நகர்ந்தான்.

"நீங்கள் சொன்ன ஒரு விஷயம் எனக்கு நன்றாகப் புரிகிறது சங்கர். சந்தோஷமாக இருக்கத்தான் நாம் பிறந்திருக்கிறோம். பிறரை சந்தோஷப் படுத்தத்தான் பிறந்திருக்கிறோம். ஒய் யு நோ! வி ஆர் கமிட்டட் டு இட்!"

சங்கர் சிரித்தான்.

ரமணி இன்னும் ஏதோ நிறையப் பேச வந்தவன் மாதிரியும், பின் அதற்கு அவசியம் இல்லாமல் திரும்பிவிட்ட மாதிரியும் உணர்வதை சங்கர் புரிந்துக்கொண்டான்.

"இப்போ கை எப்படி இருக்கிறது!"

"முன்னைவிட இன்னும் பலமாக ஆகிவிட்ட மாதிரி இருக்கிறது. நிறைய வேலை செய்கிறேன். நிறைய எழுதுகிறேன்."

"அப்படியா உங்கள் கதைகளில் ஒன்றைக்கூட நான் படித்ததில்லை சங்கர். ஒவ்வொன்றாய்க் கொடுங்களேன். படித்துவிட்டுத் தருகிறேன்."

"வித்யாவிடம் எல்லாம் இருக்கிறதே..."

"அப்படியானால் நான் அவளிடமிருந்தே வாங்கிக்கொள்கிறேன். இப்போது ஏதாவது எழுதுகிறீர்களா?"

"ம்....ஒரு நாவலைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன். அதில் நீங்கள் கூட வருகிறீர்கள்..."

"நானா?" என்று கேட்டுவிட்டு ரமணி சிரித்தான். பின் காலியான ஐஸ் க்ரீம் கப்பைத் தூக்கி எறிந்தான். கர்சீப்பால் வாயைத் துடைத்துக்கொண்டான்.

சங்கர், தன் பாண்ட் பாக்கெட்டுகளில் கைகுட்டைக் காகத் தேடுவதைப் பார்த்ததும், "இஃப் யு டோண்ட் மைண்ட், டேக் திஸ்" தன்னுடையதை நீட்டினான். அதை வாங்கிக் கைகளைத் துடைத்துக் கொண்டு திருப்பிக் கொடுத்தான் சங்கர்.

"உங்கள் ஜாப் எப்படி இருக்கிறது? உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?"

"ஐ லவ் மை ஜாப். ரொம்ப ச்சேலன்ஜிங்காக இருக்கிறது. மூச்சு விடக்கூட நேரமில்லை."

"ஒரு நாள் உங்கள் தொழிற்சாலைக்கு வந்து பார்க்க வேண்டும் ரமணி..."

"ஓ. எஸ். வாருங்களேன். உங்களுக்கு எப்போது நேரம் கிடைக்கிறதோ சொல்லுங்கள். நானே அழைத்துக்கொண்டு போகிறேன்."

"எனி சண்டே வில் சூட் மி."

"ஓ.கே. அப்படியானால் அடுத்த ஞாயிற்றுக்கிழமை போவோம்."

சிறிது நேரத்துக்குப் பின் இரண்டு பேரும் எழுந்தார்கள். பீச் அநேகமாய் வெறுமையாகக் கிடந்தது. அங்கேயும், இங்கேயுமாக சில கும்பல்கள், சில கார்கள். பாவிப்பூரிக்காரன் கடையை மூடிக்கொண்டிருந்தான். அந்த ஐஸ் க்ரீம் பையன் இவர்களைப் பார்த்ததும், சிரித்தான்.

வீட்டுக்குப் போவதும் டைரி எழுத வேண்டும் என்று நினைத்துக் கொண்டான் சங்கர். இன்று நன்றாக எழுத வரும்...எழுதவேண்டிய சில வரிகளை யோசித்துக் கொண்டே வானத்தைப் பார்த்தான்.

தூரத்தில் ஒரு சின்னச் சாய்வுக் கோட்டில் நட்சத்திரங்கள் பளிச்சென்று தெளிவாய்க் கண்ணில் அடித்தது.

அவை அவனுக்குப் பிடித்தமான அந்த மூன்று நட்சத்திரங்கள்.

31

பாரீஸ் கார்னருக்குப் போய் கொண்டிருந்த பஸ்களில் அதுவும் ஒன்று வழக்கம்போல் ஆபீசுக்குப் போகும் கூட்டத்தின் நெரிசல். அந்த நேரத்தில் அநேகமாய்த் தினமும் பார்த்துப் பழக்கப்பட்டுப் போன முகங்கள். 'எங்கே போகணும்?' என்ற கேள்வி இல்லாமல் டிக்கட்டைக் கிழித்துக் கொடுக்கும் கண்டக்டர். கசங்கல் எதுவும் இல்லாத உடைகள், சுறுசுறுப்பான காலை நேரத்தின் 'பளிச்'சென்ற சிரிப்பு, பைல்கள், பத்திரிகைகள், கைப்பைகள், பேச்சுக்கள்...

இரண்டு கல்லூரி மாணவர்கள், நேற்று பார்த்த ஒரு படத்தை விமரிசித்துக் கொண்டிருந்தார்கள். 'தமிழில் நல்ல படங்களே வருவதில்லை' என்ற தன் ஏக்கத்தை மற்றவர்களின் எரிச்சலாக மாற்றினான் ஒருவன். ஒரு நாற்பது

வயதுக்காரர், மேலே தொங்கின தோல்பட்டையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, இந்துவில், 'லெட்டர்ஸ் டு தி எடிட்டர்' படித்துக்கொண்டிருந்தார். ஒரு கம்பெனியின் 'ரெப்ர சென்டேடிவ்' தன் பெரிய தோல்பையை ஒரு கையால் தூக்கிக் கொண்டு நிற்க முடியாமல் சிரமப்பட்டான். தமிழ் வாரப் பத்திரிகை ஒன்றின் வரிகளைச் சுவாரஸ்யமாய் மேய்ந்து கொண்டிருந்தாள் ஒரு பெண். ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த ஓர் அழகான பெல்பாட்டத்தை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் ஒரு நடுத்தரக் குடும்பஸ்தர். பக்கத்தில் இருந்தவரின் காலைத் தன் ஷூவால் மிதித்துவிட்டு திட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள் ஓர் ஆங்கிலோ இந்தியக் கிழவி.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாள் வித்யா. எல்லாம் சுவாரஸ்யமாக இருந்தது. உற்சாகமாய் இருந்தது, சந்தோஷமாய் இருந்தது. திரும்பவும் அவளுக்குப் பிடித்த ஆபீஸ் வாழ்க்கை காலையில் பஸ், மாலையில் கார். ரமணி, ஆபீஸ் வாசலில் காரில் வந்து தயாராய் நிப்பான்; ஏதாவது ஒரு ரெஸ்டாரெண்டில் டிபன் சாப்பிட்டுவிட்டு, நேராக பீச். உள்ளே மணலில் வழக்கமான இடத்தில் உட்கார்ந்து கொஞ்ச நேரம் பேச்சு. பின் வீடு. காலையில் ரமணி சிக்கிரம் கிளம்பிப் போய்விடுவதால், பஸ் பிரயாணம்.

பஸ் பிரயாணம் அப்படியே மாறாமல் இருந்தது, அதே மனிதர்கள். அதே நிகழ்ச்சிகள். இருந்தாலும் அவை சுவையானவை. பார்க்கத் தெரிந்தால் அலுக்காதவை. கடைசி ஸ்டாப்பிங் வந்ததும் எல்லோரும் இறங்கினார்கள். இறங்கும் போது அவளுடைய சூபர்வைஸர் மற்றொரு பஸ்ஸிலிருந்து இறங்கி வருவதைக் கவனித்தாள் வித்யா.

"குட்மார்னிங் மேடம்."

"குட் மார்னிங் வித்யா." —சூபர்வைஸர் சிரித்தாள். இந்த இடைவெளியில் சூபர்வைஸர் சிரிக்கப் பழகிக்

கொண்டிருக்கிறாள். எரிந்து விழுவதைக் குறைத்துக் கொண்டு, முகத்தில் எந்த எரிச்சலையும் காண்பிக்காமல்...

"ஆபீஸ் இப்போ எப்படியிருக்கு?"

"ரொம்ப இன்ட்ரஸ்டிங்கா இருக்கு."— சிரித்துக் கொண்டே பதில் சொன்னாள் வித்யா.

"ஈஸிட்?"— சூபர்வைஸர் மேலே பேசினாள். "நேத்து ராத்திரி ஒரு சினிமாவுக்குப் போனேன். ஊரில் இருந்து தங்கை வந்திருந்தாள். அங்கே தமிழ் சினிமாவே வராதாம். அதனால் வற்புறுத்தி அழைத்துக் கொண்டு போனாள். இப்போ தூக்கம் கண்ணைச் சுத்தறது."

"என்ன படம்?"

சூபர்வைஸர் படத்தின் பெயரோடு கதையையும் சொல்ல ஆரம்பித்தாள். வித்யா நடுநடுவே தலை ஆட்டிக் கொண்டு, சிரித்துக்கொண்டும் வந்தாள். அந்தப் படத்தின் கதாநாயகியின் முடிவுக்காக சூபர்வைஸர் மிகவும் வருத்தப் பட்டாள். வித்யா அந்தப் படத்தை நிச்சயம் பார்க்க வேண்டும் என்று சிபாரிசு செய்தாள்.

அதற்குள் ஆபீஸ் வந்துவிட்டதால் சூபர்வைஸர் தன் பேச்சை நிறுத்திக்கொண்டாள். வித்யா தன் இடத்தில் போய் உட்கார்ந்தாள். இன்னும் கொஞ்ச நேரம் இருந்தது. ஆபீஸ் பியூன் எல்லா மேஜைகளையும் தன் நீல டஸ்டரால் துடைத்துக் கொண்டிருந்தான். சிகரெட்டை அணைத்து ஜன்னல் வழியாகச் சுண்டி எறிந்துவிட்டு உள்ளே வந்த கிருஷ்ணமூர்த்தி, 'குட்மார்னிங்' சொன்னான். பக்கத்து செக்ஷன் கலோசனா வந்து சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுப் போனாள். பின், வித்யா தன் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

எல்லா செக்ஷனும் வேலையைத் தொடங்கிவிட்டன. ஆபீஸ் அதற்கே சொந்தமான சுறுசுறுப்பில் இயங்கிக் கொண்டிருந்தது. கம்ப்யூட்டர் மெஷின்களின் பஞ்ச்சிங் சத்தம் ஒரு நல்ல லயம் தவறாத தாளத்துடன் கேட்டது. வித்யா அந்த கொலேட்டரின் முன்னால் நின்று கொண்டிருந்தாள். கார்டுகளை வரிசையாக அடுக்கி வைத்து ஆன் பண்ணினாள். அந்த மெஷினோடு தனக்கு வெகு காலம் பரிச்சயம் இருப்பதைப் போல் உணர்ந்தாள். அது ஒரு குழந்தை மாதிரியும் தெரிந்தது. ராட்சசன் மாதிரியும் தெரிந்தது. அதோடு அவள் சில சமயங்களில் தடவிக் கொடுப்பாள். இப்போதெல்லாம் அந்த மெஷின் தன் சிவப்புக் கண்ணை அடிக்கடி காட்டுவதில்லை. தனக்கு ஏற்பட்ட ஒரு தெளிவுதான் அதற்குக் காரணமோ? அல்லது அப்பாவைப் போல் கொஞ்சம் நிதானமாகவும், ரமணியைப்போல் சற்று அமைதியாகவும் இருக்க அதுவும் தானாகவே தெரிந்து கொண்டு விட்டதோ?

ரமணி...!

அவனிடம் ஏற்பட்டிருந்த மாறுதல்களை ஒரு திருப்தியுடன் நினைத்துப் பார்த்துக் கொண்டாள் அவள். அவனுடைய அந்த வளர்ச்சி அவளுக்குச் சந்தோஷமாய் இருந்தது. அவளைப் புரிந்துகொண்டு, அவளுக்குச் சரியாக அவளை நெருங்கி வந்து...

"வித்யா, ப்ளீஸ், இதைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்களேன். எனக்கு போன் வந்திருக்கிறதாம். பேசிவிட்டு வந்து விடுகிறேன்."

வித்யா டெபுலேட்டரின் எதிரில் போய் நின்றாள். இப்போது டெபுலேட்டரின் பொறுப்பு ஜமுனாவிடம். அவள் புதியவள். புதிதாக இன்னும் நிறையப் பேர்கள். வித்யாவுக்கு ஷோபாவின் ஞாபகம் வந்தது. திரும்ப அவள் அந்த ஷோபாவைப் பார்க்கவே இல்லை. அவள் ரூர்கேலாவில்

இருப்பதாக ஆபீசுக்கு வந்த முதல் நாள் சூபரிவைஸர்தான் சொன்னாள். ஒரு குழந்தைகூட இருப்பதாகச் சொன்னாள்.

"தேங்க்யூ வித்யா"— ஜமுனா திரும்பி வந்து விட்டாள். வித்யா மறுபடியும் கொலேட்டரிடம் வந்தாள். கொலேட்டர் இயங்க ஆரம்பித்தது.

சாப்பாட்டு நேரம் வந்தது. மெயினை ஆ:ப் பண்ணி யாகி விட்டது. எல்லாரும் புதிதாகக் கட்டியிருந்த டைனிங் ரூமில் நுழைந்தார்கள்.

"யு கோ அண்ட் பிரிங் யுவர் கேரியர் வித்யா!"

அவர்கள் அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவள் கீழே இறங்கி வந்தாள். சாப்பாட்டு கேரியர்கள் கூடை கூடையாய் வந்து இறங்கியிருந்தன. அலுமினியம், பித்தளை, எவர்சில்வர்... எல்லாம் 'இப்போது எங்களுக்குள் சண்டை எதுவும் இல்லை' என்று சொல்வதுபோல் தோன்றியது. அவள் தன் கேரியரை எடுத்துக் கொண்டு மேலே வந்து, அவர்களோடு சாப்பிட உட்கார்ந்தாள்.

'கம்' மென்று ஒரு வாசனை. எல்லாரிடமிருந்தும் கொஞ்சம் கொஞ்சம் பரிமாறிக் கொள்ளப்பட்டது. பேச்சு இடையிடையே சிரிப்பு. வித்யாவும் அவர்களோடு கலந்து கொண்டு பேசினாள். மனம் விட்டுச் சிரித்தாள்.

'வாழ்க்கை சுவாரஸ்யமானது— வாழத் தெரிந்தவர் களுக்கு' என்று சொல்லிக் கொண்டாள்.

"முன்னாலேயே இருந்த வித்யாவுக்கும் இப்ப இருக்கிற வித்யாவுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு இல்லையா?"

"அப்படியா?"— வித்யா சிரித்தாள்.

"ஆமாம். முன்பெல்லாம் இப்படி எங்கிட்டே 'கலகல'ன்னு பேசமாட்டியே!"

"எங்களால் நம்ப முடியலை வித்யா. ஆச்சரியமா யிருக்கு!"

நம்ப முடியவில்லைதான்! அவளுக்கு இப்போது வாழ்க்கை மிகவும் சுலபமாக இருந்தது. ரம்மியமானதாக இருந்தது உலகமே அன்பாக மாறிவிட்டதுபோல், சங்கர் சொல்வானே அன்பால் அப்படியே எல்லோரையும் கரைத்து விட வேண்டுமென்று, அதுபோல் இருந்தது. இப்போது யார் மேலும் கோபப்பட முடிவதில்லை. எவர் பேச்சும் கஷ்ட மாக இல்லை திடீரென்று ஒரு தெளிவு ஏற்பட்டது போல், ஏதோ ஒரு விடுதலை கிடைத்ததுபோல் இருந்தது.

ஆச்சரியம்தான்! திரும்பவும் இதே இடத்தில் இதே வேலையைச் செய்து கொண்டிருப்போம் என்று அவள் கனவு கூடக் கண்டதில்லை. அது முடியாதது என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தாள். பத்து நாளுக்கு முன்னால் கூட இந்த மாதிரி பஸ் பிரயாணத்தையும் ஆபீஸ் வாழ்க்கை யையும் எதிர்பார்க்கவில்லை. திடீரென்று ஏற்பட்ட திருப்பம். இது சுலபமாக, வெகு சாதாரணமாக நிகழ்ந்துவிட்ட திருப்பம்.

கேடற்கறையில் ரமணியோடு உட்கார்ந்து கொண் டிருந்தபோது பேச்சுக்கு நடுவில் சிவகுமாரைச் சந்தித்ததைச் சொன்னாள்:

"ஹி ஹேஸ் கிரேட் ரிகார்ட்ஸ் டு மி ரமணி. இப்போ கூட நான் வேலைக்கு வருவதாக இருந்தால் வரலாம் என்றார். என்னுடைய பழைய வேலை காலியாகத்தான் இருக்காம்..."

ரமணியிடமிருந்து பதில் இல்லை.

"உங்க கௌரவம் தடுக்கும்னு நீங்க ஃபீல் பண்ணினால் வேண்டாம். ஒரு பெரிய ஆபீசரோட மனைவி இன்னொரு கம்பெனியில் ஒரு சாதாரண வேலையில் இருப்பது அவமானம் என்று நினைத்தால் வேண்டாம். ஆனால் இந்த வேலை ஒரு மாற்றத்துக்குத்தான். என்னால் இந்த மத்தியான நேரத்தை இப்படித் தூங்கியே கழிக்க முடிவதில்லை. நான் எதுக்குமே உபயோகப்படாமல் போய் விடுவேனோ என்று எனக்கே பயமாக இருக்கு. இந்த வேலை ஒரு சின்ன பயிற்சிதானே தவிர, முன்பு மாதிரி ஒரு எஸ்கேப் இல்லை...."

ரமணி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். 'இவளை எவ்வளவு தூரத்துக்கு வருத்தியிருக்கிறோம்' என்று வருந்தினான். அவளை அப்படியே மடியில் சாய்த்துக் கொண்டு கொஞ்ச வேண்டும்போல் இருந்தது. அவள் எது செய்தாலும் அது சரியாகத்தான் இருக்கும் என்று ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. அவனுக்கு அவளைப் புரிந்தது. நன்றாகப் புரிந்தது, புரிய வைத்தவன் சங்கர். அன்று நிதானமாக உட்கார்ந்து மனசைத் தெளிய வைத்தவன் அவன்தான். அந்தத் தெளிவு கிடைத்ததும் பெருக்கித் துடைத்த மாதிரி மனம் சுத்தமாகி விட்டது. எந்தக் கோபமும் இல்லாமல் எந்த எரிச்சலும் இல்லாமல் இருக்க முடிந்தது.

அதன் பின்னால் உலகத்தின் அழகுகள் எல்லாம் கண்ணில் பட ஆரம்பித்தன. சின்னச் சின்ன விஷயங்களை ரசிப்பதில் ஏற்படும் சின்னச் சின்ன சந்தோஷங்களை அவன் புரிந்து கொண்டான். வானம், அதன் நீலம், உருமாறும் மேகங்கள், நட்சத்திரங்கள், மரங்களின் பசுமை.... எல்லாம் கண்ணில் பட ஆரம்பித்தது. எல்லோரிடமும் பேச முடிந்தது; சிரிக்க முடிந்தது. இலக்கியத்தைப் பற்றிக்கூடத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. சங்கரின் புத்தகங்கள் எல்லாவற்றையும் படிக்க வேண்டும் என்று தோன்றவே அக்கினிக் கனவை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தான்.

படித்து முடித்ததும் ஒருநாள் முழுதும் ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. அந்த நந்தினியை, கிருஷ்ணனை மறக்கவே முடியாது என்று நினைத்துக் கொண்டான். அந்த எழுத்து வித்யாவைக் கவர்ந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை என்று சொல்லிக் கொண்டான். அதிலிருந்து அவனால் சங்கரைப் பற்றி இன்னும் நிறையத் தெரிந்து கொள்ள முடிந்தது. 'சங்கரைப் போன்ற ஜென்மம் உலகத்தில் எங்கேயாவது ஒன்று இரண்டுதான் இருக்க முடியும். எல்லாரையும் நேசிக்கக் கூடியதாக, எல்லாரிடமும் அன்பு காட்ட முடிந்ததாக... அந்த மனசைத் தன்னால் முன்னாலேயே ஏன் புரிந்துகொள்ள முடியாமல் போயிற்று? அந்த மாதிரி ஒரு நிதானமும், தெளிவும் யோசித்துப் பார்க்கும் தன்மையும் தன்னிடம் ஏன் இல்லாமல் போயிற்று?'

அந்த மாதிரி ஒரு மன முதிர்ச்சியைத்தான் வித்யா எதிர் பார்த்தாள் என்பது அவனுக்குத் தெரிந்தது. வாழ்க்கையில்— அவளிடத்தில் அவள் தேடி ஏமாந்த விஷயங்கள் அவனுக்குப் பிடிபட்டன. சங்கருடன் எதனால் அவளால் மணிக்கணக்கில் பேச முடிந்தது என்பது தெரிந்தது. தன்னுடன் ஏன் இப்படிப் பேச முடியாமல், பழக முடியாமல் மனசுக்குள் ஒடுங்க நேர்ந்தது என்பதும் புரிந்தது. அவன் வருத்தப்பட்டான். அவளுக்காக, சங்கருக்காக, தன் செய்கைகளுக்காக, எல்லாவற்றிற்குமே வருத்தப்பட்டான்.

அன்று வித்யாவிடம் சங்கரைப்பற்றிப் பேசினான். மனம் விட்டுப் பேசினாள். அவனுடைய எழுத்து தன்னைக் கவர்ந்த விதத்தைப் பற்றிச் சொன்னான்.

"என்ன எழுத்து அது! ஹி ஈஸ் ரியலீ கிரேட் வித்யா!"

ஒரு புதிய பார்வையில் உலகத்தைப் பார்க்கத் தெரிந்து கொண்ட ரமணி அவன். எல்லாரையும் நேசிக்க முடிந்த,

எல்லாவற்றையும் ரசிக்கக் கற்றுக் கொண்டிருந்த ரமணி. அந்த ரமணிக்கு அவள் வேலைக்குப் போவதில் எந்த ஆட்சேபணையும் இல்லை.

அவன், அவளை ஒரு தரம் நிதானமாகப் பார்த்தான். அவள் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். நீள நீளமாக எத்தனை அழகான விரல்கள்! அப்படியே கடித்துச் சாப்பிட்டுவிடலாம் போல... ஒரு தரம் தடவிக் கொடுத்தான். அந்த மென்மையான தடவலில் அவனது சம்மதம் பளிச்சிட்டது.

வித்யா வேலைக்குப் போக ஆரம்பித்தாள்.

சீப்பிட்ட பின்னாலும் இன்னும் கொஞ்சம் நேரம் இருந்தது. ஏதோ ஒரு பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தாள் வித்யா. யாரோ அவளை டெலிபோனில் கூப்பிடுவதாக இந்திரா வந்து சொன்னாள். பத்திரிகையை மூடி, அது இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு எழுந்து போய் ரிஸீவரை எடுத்தாள் அவள்.

'எஸ்...'

"வித்யா?"— ரமணி.

"ம்..."

"இன்னிக்கு சாயந்திரம் கொஞ்சம் சீக்கிரம் வருவேன். மூணு மணிக்கெல்லாம் வந்து விடுவேன். பர்மிஷன் கேட்டுக் கொண்டு வர முடியுமா?"

"என்ன விஷயம் ரமணி?"

"கொஞ்சம் ஷாப்பிங் போகணும்?"

ஷாப்பிங்கா?"

"ஆமாம். நாளைக்கு நம் வீட்டில் ஒரு சின்ன பார்ட்டி. உன் அப்பாவுக்கு போன் பண்ணி எல்லாரையும் அழைத்துக் கொண்டு வரச் சொன்னேன். 'என்னாலே முடியாதப்பா... எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. அவா வந்தா அழைச்சுண்டு போ' என்ற வழக்கமான பதில்தான் கிடைத்தது."

"....."

"என்ன வித்யா?"

"ஐயாம் ஸாரி ரமணி."

"ஒ—தட்ஸ் ஆல்ரைட். அது அவரோட நேச்சர் டோண்ட் ஃபீல்ஃபார் இட்."

"....."

"அப்புறம் சங்கருக்கு போன் பண்ணினேன். ஹ ஈஸ் கமிங் டுமாரோ."

"அப்படியா? நாளைக்கு என்ன விசேஷம் ரமணி."

"அதுகூட நினைவில்லையா? கோ அண்ட் ஸீ தி காலண்டர்."

அவன் போனை வைத்துவிட்டான். ஃபான் காற்றில் ஆடிக் கொண்டிருந்த காலண்டரின் அருகே போய்ப் பார்த்தாள் வித்யா. சின்னச் சின்ன பச்சை எண்கள் மறுநாள் தேதி பதினைந்து என்பதைக் காட்டின.

நாளைக்கு தேதி பதினைந்து; ஏப்ரல் 15. வெகு வேகமாக ஓடிப் போய் விட்ட முந்நூற்று அறுபத்தைந்து நாட்கள். விதவிதமான மனநிலையில் அவளிடம் நெருங்கி, பின் அவளைக் கடந்து போய்விட்ட நாட்கள். மறக்க நினைக்கிற சில வருத்தமான நாட்கள். மறக்கவே முடியாத சில ரம்மியமான நாட்கள். அத்தனை நாட்களும் ஒரே ஒரு நாள் மாதிரி தோன்றியது. நேற்றுதான் சத்திரத்தைக் காலி பண்ணிக்

கொண்டு வந்ததுபோல் இருந்தது. வீட்டில் இறைபட்டுக் கிடந்த அட்சதை, ரோஜா இதழ்கள், பட்சணத் துணுக்குகள், அவற்றைச் சுற்றின எறும்புகள், சந்தன வாசனை, பன்னீர் வாசனை, காலில் ஒட்டிக்கொண்ட தரையின் அழுக்கு ... அவள் குனிந்து தன் காலைப் பார்த்துக் கொண்டாள்.

இதற்குள் ஒரு வருஷம் முடிந்து விட்டது.

வித்யாவின் உதட்டில் ஒரு புன்னகை படர்ந்தது. போன் பண்ணி திரும்ப ரமணியிடம் பேசவேண்டும்போல் இருந்தது. ஆனால் கிருஷ்ணமூர்த்தி போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தான். அவன் பேசி முடிக்க, குறைந்தது ஐந்து நிமிஷமாவது ஆகும். அதுவரை அவளால் காத்துக் கொண்டிருக்க முடியாது.

"ஒரு வருஷம்! எவ்வளவு சீக்கிரம் ஓடிப் போய் விட்டது!

"என்ன வித்யா சிரிப்புத் தாங்கலை...?"

"நத்திங்..."

வித்யா தன் இடத்தில் வந்து நின்றாள். கொலேட்டரையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். அது அப்போது ஒரு சின்ன குழந்தையாகத் தெரிந்தது. அதை ஒரு தரம் தடவிக் கொடுத்தாள். பின் இயக்குவதற்கான பட்டனை அழுத்திவிட்டு மணி பார்த்தாள்.

இன்னும் இரண்டு மணி நேரம் வேலை செய்யவேண்டும். அதன்பின் ரமணி வந்து விடுவான். சூபர்வைஸரிடம் பர்மிஷன் வாங்கிக் கொள்ள வேண்டும். அப்படியே நாளைக்கு லீவு எடுக்கப் போவதையும் சொல்லிவிட வேண்டும்....

பிரிந்து விழுந்த கார்டுகளை அடுக்கி வைத்துவிட்டு மெஷனை நிறுத்தினாள். கர்சீப்பை எடுத்து முகத்தை ஒரு தரம் அழுத்தித் துடைத்துக் கொண்டாள்.

பின் அவள் சூபர்வைஸரைப் பார்க்கப் போனாள்.

(முற்றும்)

ANNA PUBLIC LIBRARY